இணைமணிமாலை = வெண் பாவும் அகவலும், வெண் பாவும் கட்டளைக்கலித் துறையும் இரண்டிரண் டாக இணைந்துவர மாலை போலக் கோத்துப் பாடப் படுவது. வெண்பா அக வல் இணைந்து அந்தா தித் தொடைப் பாடல் களால் பாடப்படுவது வெண்பா அகவல் இணை மணிமாலை என்றும், வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் இணைந்த பாடல்கள் அந்தாதித் தொடையுடன் நூறு கொண்டு வருமாறு வெண்பாக் கலித்துறை இணைமணிமாலை என்றும் கூறப்படும்.

இயல் மொழி வாழ்த்து = இந்திந்தக் குடியில் பிறந்த வர்க்கு இந்திந்த இயல் புண்டு என்றுகூறி, இந்த இயல்பு உனனிடம் இருப் பதனால், அன்னார் இந்தப் பெருமைத் தன்னை அவர்களைப்போல் நீயும் தருக என உயர்ந்தோர் வாழ்த்திக் கூறல். (உ-ம்) புறநானூற்றில் உள்ள பாடல்கள்.

இரட்டைமணிமாலை = இரண்டிரண்டு மணிகளை இடைத்துக் கட்டப்பட்ட மாலைபோல் வெண்பா வும், கலித்துறையும் முறையே அமைய இரு பது பாடல்கள் பொருந்த அந்தாதித் தொடையில் பாடப்படுவது (உ-ம்) மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை.

இரட்டைமணிமாலை = நேரிசைவெண்பா பத்தும் ஆசிரியவிருத்தம் பத்தும் அந்தாதித் தொடையில் அமைவது மற்றொரு வகையான இரட்டை மணிமாலை.

இருபாஇருபஃது = பத்து வெண்பாவும் பத்து அகவல்பாவும் அந்தாதித்தொடையாக அமைய இருபது பாடல்களால் பாடி முடிப்பது (உ-ம்) அருணாந்தி சிவாசாரியார் பாடிய இருபா இருபஃது.

ஊ

ஊசல் = இளையும் அழகும் வாய்ந்த தலைமகன் வீதி வழிய பவனிபோம் போது, பேதை முதலிய ஏழுவகைப் பருவமங்கையர் கண்டு மயங்கிக் காமுற்றவகைகளைக் கலிவெண்பாவால் பாடுவது. (உ-ம்) திருக்கைலாய ஞானஉலா.

ஊசலாடல் = கனவின்கண் ஒருபெண்ணைக் கூடி இன்புற்ற ஒருகலைமகன் விழித்தபோது அத்தகையவளை மணக்க மடல் ஊர்வேன் என்று மூபன்றைதைக் கலிவெண்பாவால் பாடியமைப்பது.

ஊர்த்திப்பாட்டு = கடவுள் வணக்கம் அமைய மூத்தபள்ளி, இளையபள்ளி ஆகிய இவ்விருவர்களின் வரவு, அவர்கள் பெருமை நாட்டுவளம், மழைவேண்டித் தெய்வம் வேண்டல், மழைக் குறி கவனித்தல், ஆற்றின் வரவு, பண்ணைத் தலைவன் வரவு, அவனிடம் முறையிடு, பள்ளன் வரவு, ஆயரை வருவித்தல், மூத்தபள்ளி உணவு கொண்டுவரல், காளை விருளல், நாற்றுநடல், ஏசல், முதலான மற்றும் பல உறுப்புக்கள் அமையப் பாட்டுடைத்தலைவன் புகழ் விளங்கச் சிந்தும் விருத்தமும் கலந்துவரப் பாடப்படுவது, (உ-ம்) முக்கூடற்பள்ளு.

ஊழிஞாயிறுமாலை = பகையரசனது ஊரின் வெளிப்புறத்தைச் சூழ உழிஞை மலரைச் சூடிப் பகைவரது மதிலைப்புறத்தைப் படைகள் வளைத்துக்கொண்டு சிறப்பிக்கச் சிறப்பித்துப் பாடுவது.

உற்பவமாலை = மகாவிஷ்ணுவின் அவதாரம் பத்தினையும் ஆசிரிய விருத்தத்தால் பாடுவது.

ஊ

ஊசல் = ஆசிரியவிருத்தத் தாலேனும் கலித்தா ழிசையாலேனும் சுற்றத் துடன் பெ ா லி க என ஆடீர் ஊசல், ஆடாமோ ஊசல் எனப் பாடப்படு வது (உ-ம்) திருப்பொன் னூசல் (திருவாசகத்தி லுள்ளது).

ஊரின்னிசை = பாட்டுடைத் தலிவனது ஊரைச்சார இன்னிசைவெண்பாவால் தொண்ணூறேனும், எழு பதேனும் ஐம்பதேனும் அமையப் பாடப்படுவது.

ஊர்நேரிசை = பாட்டுடைத் தலிவன் ஊரைச்சார்ந்து நேரிசை வெண்பாக்கள் தொண்ணூறேனும், எழு பதேனும் ஐம்பதேனும் பாடப்படுவது.

ஊர்வெண்பா = வெண்பா வால் ஊரைப் புகழ்ந்து பத்துச் செய்யுள் பாடு வது.

எ

எண்செய்யுள் = பாட்டுடைத் தலிவனது ஊ ரை யு ம் பெயரையும் பத்து முதல் ஆயிரம் அளவு பாடி முடிப்பது.

எழுகூற்றிருக்கை = ஏழுறை யாகக் குறுமக்கள் முன் னின்றும் புக்கும் போந் தும் விளையாடும் தன்மை யில் ஒன்று முதலாக ஏழ் இறுதியாக முறையானே பாடுவது. (உ-ம்) திருஞான சம்பந்தர் பாடிய திரு எழுக்கூற்றிருக்கை.

ஐ

ஐந்திணைச்செய்யுள் = புணர் தல், பிரிதல், ஊடல், இரங்கல், இருத்தல் என் னும் ஐந்து உரிப்பொருள் தோன்றக்குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், முல்லை ஆகிய ஐந்து திணைகளின் உரிப்பொருள்களைப் பொ ருத்திப் பாடப்படுவது.

ஒ

ஒருபாவொருபஃது = அக வல்பாவாலேனும் வெண் பாவாலேனும், கட்டளைக் கலித் துறையாலேனும் தனித்தனிப் பாடல்கள் பத்து அந்தாதித்தொடை யையப்பாடுவது. (உ-ம்) பட்டினத்தார் பாடிய ஒருபாவொருபஃது.

ஒலியலந்தாதி = வெண்பா, அகவல், கட்டளைக் கலித் துறை முறையே பத்துப்

பத்தாக அமைய அந்தாதித் தொடை பொருந்த மூப்பது பாடல்களைக் கொண்டு விளங்குவது.

க

கடிகைவெண்பா = தேவரிடத்தும் அரசரிடத்தும் நடக்கும் காரியம் கடிகை அளவில் தோன்றி நடப்பதாக மூப்பத்திரண்டு நேரிசை வெண்பாவால் பாடப்படுவது.

கடைநிலை = வாயில் காவலரிடம் தன் வருகையைக் கூறுமாறு வாயிற்கடைக்கண் கூறும் முறையில் பாடப்படுவது.

கண்படைநிலை = அரசரும், அரசரைப் போன்றவரும், சபையில் நீண்ட நேரம் தங்கி இருப்பதை அறிந்த அமைச்சரும் மருத்துவரும் அரசரும் ஏனையோரும் உறங்கவழிவகுத்துக் கூறுவதைப் பாடுவது.

கலம்பகம் = ஒரு பொருள் வெண்பாவும், கலித்துறையும் முதற்கவி உறுப்பாக முன் கூறப்பெற்று, பல வகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் ஆகிய பதினெட்டு உறுப்புக்களுடன் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாவிருத்தம், துறை ஆகிய பாடல்களைப் பெற்று அந்தாதித் தொடையில் அமையப் பெறுவது தேவர்மீது பாடப்படின் நூறும் அந்தணர்மீது பாடப்படின் தொண்ணூற்றைந்தும், அரசர்மீது பாடப்படின் தொண்ணூறும், வைசியர்மீது பாடப்படின் ஐம்பதும் சூத்திரர்மீது பாடப்படின் மூப்பதும் ஆகப் பாடப்படுவதும் (உ-ம்) அருணகலம்பகம், திருவரங்கக் கலம்பகம்,

கா

காஞ்சிமாலை = பகைவரது ஊர்க்கு வேளியே இருந்து காஞ்சிமலரைச் சூடித் தாக்குதலைக் கூறுவது.

காப்புமாலை = தெய்வம் காப்பதாக என்றுமூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு, செய்யுள்களில் பாடுவது.

கு

குழமகன் = மாதர்கள் தம் கையில் கண்ட குழமகனை (இளங் குழந்தையை) புகழ்ந்து கலிவெண்பாவால்பாடுவது.

குறத்திப்பாட்டு = தலைவன் பவனிவருதல், மகளிர் காமுறுதல், மோகினி வரவு, பாங்கிவினவல், தலைவிகூறல், தெனறல், மதி இவற்றை வெறுத்தல், பாங்கிபழித்தல், தலைவி புகழ்தல், தூது வேண்டல், குறத்திவரல், குறத்தி மலைவளம் கூறல் குறிகூறல், பரிசுதரல், குறவன் வரவு, குறத்தையைக் காமுற்றுத் தேடல், முதலானமற்றும் பல துறைகள் அமைய அகவல் வெண்பா, தரவு, கொச்சகம் கலித்துறை, கழிநெடிலடி விருத்தம கலிவிருத்தம், முதலியன அமையப் பாடப்படுவது. இது குறம் என்றும் பெயர் பெறும் (உ-ம்) மீனாட்சியம்மை குறம், குற்றலக் குறவஞ்சி.

கே

கேசாதிபாதம் = முடி முதல் பாதம் வரையில் உள்ள உறுப்புக்களைச் சிறப்பித்துக் கலிவெண்பாவால் பாடப்படுவது.

கை

கைக்கிளை = ஒரு தலைக் காமத்தினை ஐந்து விருத்தத்தாலேனும் முப்பத்திரண்டு வெண்பாவாலேனும் பாடுவது.

கையறுநிலை = கணவனும் மனைவியும் ஏனையரும் இறந்துபட்டபோது, தாயத்தாரும் விறலியரும் மற்றோரும் துன்புற்று வருந்திச் செயலற்று வருந்தும் நிலையைக் கூறுவது. (உ-ம்) புறத்தில் சில செய்யுட்கள்.

ச

சதகம் = ஒரு பொருளைப் பற்றியோ பல பொருள் களைப்பற்றியோ நூறுசெய்யுட்கள் அமையப் பாடப் பெறுவது. (உ-ம்) குமரேச சதகம், வைராக்கிய சதகம், திருச்சதகம்.

சி

சிறுகாப்பியம் = பெருங்காப்பியத்தில்கூறப்பட்ட உறுப்புக்களுள் சில குறைந்து, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளிலும் ஒன்றிரண்டு

குறைந்து வரப்பாடப் படுவது. (உ-ம்) சூளா மணி.

சின்னப்பூ = நேரிசை வெண்பாவால் அரசனது சின்னமாகிய தசாங்கத் தினைச் சிறப்பித்து விரித்து நூறு, தொண் ணூறு, எழுபது ஐம்பது மூப்பது என்னும் எண் படப்பாடுவது. (உ-ம்) தத்துவராயர் பாடிய சின்னப்பூ வெண்பா.

செ

செருக்களவஞ்சி = போர்க் களத்தில் வீரரும், யானை யும், குதிரையும் பட்டுக் கிடக்க அவ்விடலங்களை நாயும், பேயும், கழுகும், காகமும் உண்டு ஆர வரிக்க; பூத பைசாசங்கள் பாடியாடும் சிறப்பைப் பாடுவது. இதனைப் பறந் தலைச் சிறப்புப்பாட்டு என்பர்.

செவியறிவுறூஉ = பெரியோர் தம் அனுபவத்தில் உண் மையெனக் கண்டவற்றை உபதேசமுறையில் பாடப் பாவால் பாடுவது.

த

தசாங்கத்தியல் = அரசனது தசாங்கத்தினை ஆசிரிய விருத்தம் பத்து அமை யப் பாடப்படுவது.

தசாங்கப்பத்து = நேரிசை வெண்பாவால் அரசன் படைத்த தசாங்கத் தினைப்பத்துச் செய்யு ளால் கூறுவது.

தண்டகமாலை = இதுவெண் புணர்ச்சிமாலை என்றும் கூறப்படும் இதுவெண்பா மூன்நூறு அமையப் பாடப்படுவது (உ-ம்) திருவாசகத்தில் உள்ள திருத்தசாங்கம்.

தா

தாண்டகம் = இருபத்தேழு எழுத்து முதலாக உயர்ந்த எழுத்துக்களை யுடைய அடியினைத் கொண்டுவருவது. இவ் வாறு வருவதை அளவி யல் தாண்டகம் என்பர். எழுத்துக்கள்குறைந்தோ அதிகப்பட்டோ வரும் அடியினைக் கொண்டுவரு வதை அளவழித்தாண்ட கம் என்பர். (உ-ம்) அப் பர் பாடியுள்ள திருத் தாண்டகங்கள்.

தாரகைமாலை = அருந்தி போன்ற கற்புடை ய

குணங்களை வகுப்பது என்னும் பாடல் அமையப் பாடப்படுவது.

தானைமாலை = ஆசிரியப்பாவால் முன்னர் செல்லும் கொடிப்படையைப் புகழ்ந்து பாடப்படுவது.

தும்

தும்பைமாலை = தும்பை மலரைச் சூடிப் பகைவரோடு போரிடலைக் கூறுவது.

துயிலெடைநிலை = பாசறையில் எந்தவித தக்கவலியும் இன்றி உறங்கிய மன்னருக்கு நற்புகழ் உண்டாக எண்ணிய சூதர் அம்மன்னரைத் தூக்கத்திலிருந்து எழுப்புவதைப் பாடுதல்.

தூ

தூது = காதல் கொண்ட தலைவனும் தலைவியும் தம்தம் காதற் குறிப்பையும் அவத்தையையும் கூறுமாறு பாணர் இளி முதலானவர்களைத் தூதாக அனுப்புவது போல் கலிவெண்பாவால் பாடுவது (உ-ம்) கச்சி ஆனந்த ருத்ரேசர் வண்டுவிடு தூது, தமிழ்விடுதூது.

தொ

தொகைநிலைச் செய்யுள் = ஒரேவகையான பாவால் தொடுக்கப்பட்ட பாடல் களையுடையது, (உ-ம்) கலித்தொகை.

ந

நாளைப்பத்து = கண் மலரினைக் குறித்துப் பத்துப் பாடலில் பாடுவது.

நவமணிமாலை = ஒன்பது மணிகள் கோக்கப்பட்ட மாலைபோல வெண்பா முதலில் அமைய, பின்னர் வேறுபட்டபாவும், பாவினமும் ஆக ஒன்பது செய்யுள் அந்தாதித் தொடையாகப் பொருந்தப் பாடப்படுவது கட்டளைக் கலித்துறையாலும் பாடப்படும். (உ-ம்) பிட்சாடர் நவமணிமாலை.

நா

நாமமாலை = அகவலடியும் கலிப்பாவடியும் வரப் பெற்ற வஞ்சிப்பாவால், மகனைப் புகழ்ந்து பாடப்படுவது.

நாற்பது = காலத்தைப் பற்றியேனும் இடத்தைப் பற்றியேனும், பொருள் பற்றியேனும் நாற்பது வெண்பாக்களால் பாடப்படுவது, (உ-ம்) கார்

நாற்பது, களவழி நாற்பது, இன்னு நாற்பது, இனியவை நாற்பது.

நான்மணிமாலை = நான்கு மணிகளைத் தேர்ந்தெடுத்து ஒன்றன்பின்ஒன்று கத்தொடுத்து மலர்களை இணைத்து மாலையாகக் கட்டுவதுபோலவெண்பா கட்டளைக் கலித்துறை விருத்தம் அகவல் ஆகிய நான்கு பாடல்களைக் கொண்டு, அந்தாதித் தொடையில் பாடப்படுவது. (உ-ம்) நால்வர் நான்மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை.

நூ

நூற்றந்தாதி = வெண்பா நூறு கொண்டேனும், கட்டளைக் கலித்துறை நூறு கொண்டேனும், அந்தாதித் தொடை அமையப் பாடப்பட்டு வருவது. அந்தாதி எனபது ஒருபாட்டின் சுற்றுச் சீரோ, அசையோ, எழுத்தோ அடுத்த பாட்டின் முதலாகத் தொடங்கப் பெறுவது (உ-ம்) கந்தரந்தாதி, அற்புதத் திருவந்தாதி.

நெ

நொச்சிமாலை = நொச்சிமலர் சூடிப்பகைவர் தம் நாட்டு எதிலேக் கவராதிருக்க அதனைக்காக்கும் திறப்பைக் கூறுவது.

ப

பாதாதிகேசம் = பாதம் முதல் முடிவரை சிறப்பித்துக் கலிவெண்பாவால் பாடுவது.

பதிகம் = ஒரு பொருளைக் குறித்துப்பத்துப்பாடலால் பாடப்படுவது. (உ-ம்) தேவாரப் பதிகங்கள்.

பதிற்றுந்தாதி = பத்துவெண்பாக்களாலேனும், பத்துக் கட்டளைக் கலித்துறைப் பாடல்களாலேனும் அந்தாதித் தொடை அமையப் பாடப்படுவது.

பரிபாடற்பத்து = முதலியனைக் குறித்துப் பத்துப் பாடல் பாடுவது,

பரணி = போரில் ஆயிரம் யானைகளைக்கொன்றுதன் வெற்றியை நிலைநாட்டிய வீரனது புகழ் தோன்ற ரடித் தாழிசைகளால் பாடப்படுவது. இதில் கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, பல வர்ணனை கூளி காளிக்குக் கூறுவதும், காளி கூளிக்குக் கூறுவது, போர்க்கள

வர்ணனையும், காளி கோவில் வர்ணனையும் இராச பாரம்பரியம் தலைவன் சிறப்பு, இயல்பு, வெற்றி முதலிய வன விளக்கமாகக்கூறப்படும். பாடும் புலவன் மனப்போக்கிற் கேற்ப இந்நூல் தன்னகத்துப் பல பிரிவுகளைக் கொண்டிருக்கும். காளிக்குரிய நட்சத்திரம் பரணி. அந்நட்சத்திரத்தில் பேய்கள் கூழ் சமைத்து அக்காளியைவழிபட்டுஉண்டு மகிழும் ஆதலின் பரணி எனப்பட்டது என்றும், இப் பிரபந்தம் பாடும் புலவன் வேலாலும் வளாலும் அமைந்த பரணி மீது இருந்து பாடுதலின் இப்பெயர் பெற்றது, என்றும் கூறுவர். (உ - ம்) கலிங்கத்துப் பரணி, தட்சயாக பரணி.

புலசந்தமாலை = பத்துப் பத்துப் பாடல்கள் ஒவ்வொரு சந்தமாக நூறு பாடல்களைக் கொண்டு வருவது.

பவனிக்காதல் = மாதர்கள் கட்டழகன் ஒரு வன் தெருவில் உலாவந்த போது காதற்கொண்டு அவனைத்தம்தோழியருடனும், தம்மைச் சார்ந்தவருடனும் உரைத்துக் காதலுணர்த்தும்முறையில் பாடப்படுவது.

பன்மணிமாலை = ஒருபோகும் அம்மானையும், ஊசலும் இன்றி மற்றைய கலம்பக வுறுப்புக்களைப் பெற்றுப் பாடப்படுவது. இதனைக் கலம்பகமாலை என்றும் கூறுவர்.

பி

பிள்ளைத்தமிழ் = இது பிள்ளைக்கவி என்றும் பெயர் பெறும். இதன் வகை இரண்டு. ஒன்று ஆண்பால் பிள்ளைத் தமிழ். மற்றொன்று பெண்பால் பிள்ளைத் தமிழ். புலவன் தான் வழிபடும் தெய்வத்தினையோ, அன்றித்தன் மதிப்புக்குரிய பெரியோர்களையோ குழந்தையாகப் பாவித்துப் பத்துப் பருவங்களில் நூறு விருத்தப்பாவால்பாடப்படுவது. ஆண்பால் பிள்ளைத் தமிழ்க்குரிய பத்துப் பருவங்கள், 1. காப்பு, (தெய்வங்கள் குழந்தையைக் காக்க வேண்டுமென்று துதித்தல். 3. இரண்டாம் மாதத்தில்பாடப்படுவது) 2. செங்கீரை, (செம்மையான சொற்களைப் பேசு

மாறு குழந்தையைக் கேட்டல். அல்லது இருகைகளிலத்தில் ஊன்றி ஒருகாலின் முட்டியையும் பூமியில்ஊன்றி,ஒருகாலைப் பின்னீட்டித் தலையைத் தூக்கி அசைந்து அசைந்து ஆடுமாறு வேண்டல். இது ஐந்தாம் மாதத்தில் நிகழ்வது) 3. தால், (குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுதல். இது எட்டாம் மாத நிகழ்ச்சி) 4. சப்பாணி (குழந்தையை இருகைகளைச் சேர்த்துத் தட்டுமாறு வேண்டல். ஒன்பதாம் மாத நிகழ்ச்சி) 5. முத்தம் (குழந்தையை முத்தம் கொடுக்குமாறு வேண்டல், பதினோராம் மாதநிகழ்ச்சி.(6) வாராஅன குழந்தையை அருகே வருகஎன்று அழைத்தல். இது பன்னிரண்டாம்மாத நிகழ்ச்சி (7) அம்புலி (சந்திரனை நோக்கிக் குழந்தையுடன் விளையாடவருமாறு வேண்டல். இந்தப் பருவத்தில் சந்திரனைச் சாமபேத தான தண்டம் என்னும் சதுர்வித உபாயங்களாலும் திறம்பட அழைக்கும் முறையில் புலவன் பாடலைப் பாடுவன். சாம முறையில் அழைத்தலாவது சமரானமுறைப்படி சந்திரனை அழைத்தல், பேத முறையாவது, சந்திரனுக்குப் பரட்டுடைத்தலிவனது சிறப்பினை உணர்த்திச்சந்திரன் அச்சங் கொள்ளும் வகையில் பேதித்து அழைத்தல். தானமுறையாலது, பாட்டுடைத் தலைவனுடன் விளையாட வந்தால் அவனுல் இந்திந்தப் பேறு கிடைக்கும் எனக்கூறி அழைத்தல். தண்ட முறையாவது சந்திரன் பாட்டுடைத் தலைவனுடன் வந்து விளையாடாமறுத்தால், தண்டனை கிடைக்கும் எனக் கூறல். இது பதினெட்டாம் மாத நிகழ்ச்சி), 8. சிறுபறை (குழந்தையிடம் சிறிய பறை என்னும் வாத்தியத்தைக் கொடுத்து வாசிக்கும்படி வேண்டல். இது இரண்டாம் ஆண்டில் நிகழ்வது.) 9. சிறுதேரில் சிதைத்தல் (பெண் பால் குழந்தைகள் தெருவில் மணல் வீடுகட்டி விளையாடும்போது, அதனைக் கலைத்துவிடுதல். இது மூன்றும் ஆண்டில் நிகழ்வது). 10. சிறுதேர் உருட்டல் (குழந்தை மரச்

தால் செய்யப்பட்ட சிறிய தேரை உருட்டி விளையாடுதல் இது நான்காம் ஆண்டில் நிகழ்வது (உ-ம்) முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், சேக்கிழார் பிள்ளைத் தமிழ்.

பெண்பால் பிள்ளைத் தமிழ்க் குரிய பருவங்கள் மேலே குறிப்பிடப் பட்ட முதல் ஏழு பருவங்களுடன் அம்மானை, நீராடல், ஊசல் என்ற பருவங்களைக் கூட்டிப் பத்தாகக் கொள்ளவேண்டும். அம்மானையாவது அம்மானை என்னும் காய்களைக் கொண்டு மேலே விசி எறிந்து பிடித்து ஆடும் ஆட்டம், நீராடல் என்பது குளித்து விளையாடுதல், ஊஞ்சல் ஆடுதல் ஊசல். (உ-ம) மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்.

பு

புகழ்ச்சிமாலை = மாதர்களின் சிறப்பைஎடுத்துப் பாடப்படும் முறையில் அமைவது. அகவலடியும் கலியடியும், கலந்துவரும் வஞ்சிப்பாவால் பாடப்படுவது.

புறநிலை = வழிபடு தெய்வம் காப்ப, வழி வழி சிறக்க எனவாழ்த்திக்கூறுவது.

புறநிலைவாழ்த்து = வழிபடு தெய்வம் காக்க எனவும், செல்வம் நாளும் நாளும் சிறக்க வாழ்க எனவும், வாழ்த்தி மருட்பாவால் பாடப்படுவது ஒருவெண் பாவாகி வருதலின்றிப் பல உறுப்புக்களோடு தொடர்ந்து ஒருபாட்டாகி முடிவது மருட்பா.

பெ

பெயரிசையளவை = பாட்டுடைத்தலைவன்பெயரினைச் சார இன்னிசை வெண்பாவால் தொண்ணூற்றேறும் எழுபதேனும் ஐம்பதேனும் பாடல்கள் அமையப் பாடப்பெறுவது.

பெயர்நேரிசை = பாட்டுடைத்தலைவன்பெயரினைச் சார நேரிசை வெண்பாவால்தொண்ணூற்றேறும், எழுபதேனும், ஐம்பதேனும் அமையப் பாடப்படுவது.

பெருங்காப்பியம் = தெய்வ வணக்கம் செய்யப்படு பொருள், அமைய, அறம் பொருள், இன்பம் வீடு ஆகிய இவற்றின் பயனை அறிவிப்பனவாய்த் தன்னேர் இல்லாத் தலைவனைக்கொண்டு, போர், முடிசூட்டுவிழா, மகப்பேறு, பல விதவர்ணனைகள் முத

லான மற்றும்பல அமைப் புக்கள் அமைய இலம்ப கம் பரிச்சேதம், சருக்கம் என்னும் பிரிவுடன் ஒன் பான் சுவையும் பொருந் தப்பாடப்படுவது. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்குபொருளை நிச்சயமாகப் பயப்பதாய் அமைதல் வேண்டும். (உ-ம்) சிவக சிந்தாமணி, பெரியபுராணம், கம்பரா மாயணம்.

பெருமகிழ்ச்சிமாலை = தலை மகனை அடைய அழகு, குணம், ஆக்கம், சிறப்பு இவற்றைக் கூறிப் பாடப் படுவது.

பெருமங்கலம் = இனமும் மேற்கொள்ளும் சிறைவிடு செய்தல், நீக்கல், பிறந்த நாள் சிறப்பு முதலான வற்றைக் கூறல்.

பே

பேர்க்கெழுவஞ்சி = பகை வர் மேல் செல்லும் மன் னன் வஞ்சிப்பூவைச் சூடிப் புறப்படுகையில், படை யெழுச்சி செல்லும் சிறப் பை ஆசிரியப்பாவால் பாடுவது.

ம

மங்கலவள்ளை = உயர்குலத் தில் பிறந்த மாதினை ஒன்பது வெண்பாவாலே னும், ஒன்பது வகுப்பாலே னும் புகழ்ந்து பாடுவது.

மணிமாலை = எந்தப் பொரு ளைப் பற்றியாவது இரு பது வெண்பாக்களைக் கொண்டும், நாற்பது கட் டளைக் கலித்துறைகளைக் கொண்டும் பாடப்பட்டு வருவது.

மு

முது காஞ்சி = இளமை கழிந்து அறிவில் மிக்க பெரியோர்கள் இளமை கழியாது அறிவின்றி இருக்கும் மக்கட்கு நல் லுபதேசங்கள் கூறும் முறையில் பாடப்படுவது. (உ-ம்) முது மொழிக் காஞ்சி.

மும்மணிமாலை = மூன்று மணிகள் ஒன்றன்பின் ஒன்றாக இணைத்து மாலை கோப்பது போல, வெண்பா, கட்டளைக்கலித் துறை, அகவல் பாடல் கள் ஒன்றன்பின் ஒன்றாக அமைய, அந்தாதித்தொ டையில் முப்பது பாடல் களால் பாடப்படுவது.

மும்மணிக்கோவை = மூன்று மணிகளைத் தேர்ந் தெடுத்து ஒன்றன்பின் ஒன்றாக வைத்துக் கோத்துக் கோவைப்படுத் துவது போல ஆசிரியப்

பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகியபாடல் கள் ஒன்றன்பின் ஒன்றாக அந்தாதி முறைப்படி முப்பதுபாடலால் அமைவது. (உ-ம்) திருப்பரமும் மணிக்கோவை, திருவிடை மருதூர் முப்பதிரைக் கோவை.

நெ

நெய்க்கீர்த்திமாலை = சொற் சிரடி. எண்ணும் கட்டுரைச் செய்யுளில் குலமுறையில் விளங்கியவர்களின் பிறப்பை எடுத்து மொழிவது. (உ-ம்) கல்லாட்டி.

நொ

நாந்தகம்பாடல் = நிதன்றும் காதலுப் புகழ்ந்து பாடுவது

நாலாந்நிலைஞ்சி = குலமுறை பிறப்பு முதலிய சிறப்பி யல்புகளை வஞ்சிப்பாவால் பாடுவது.

நாருக்கக்கோவை = ஆசை முதலானிய எழுத்துக்கள் முதலில் அமையக் கட்டளைக் கலித்துறையில் பாடப்படுவது. (உ-ம்) நெல்லை நாருக்கத்கோவை.

நாருக்கமாலை = மொழிக்கு முதலாகும் நாருக்க எழுத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு செய்யுள் பாடப்பட்டு வருவது. (வருக்கக் கோவையில் அமையும் செய்யுட்கள் கட்டளைக்கலித்துறையில் இருத்தல்வேண்டும்).

நாவளமடல் = அறம் பொருள் இன்பம் ஆகிய இவற் றிலும்பயனிலவற்றிலும், மங்கையரால்பெறும் காம இன்பத்தை பெரிதெனவும் பயனுடைய தெனவும் கொண்டு பாட்டுடைத் தலைவனது இயற்பெயர்க் கும் பொருத்தானனை தாதுகையாக அமைத்துத் தனிச்சொல் இன்றி இன் னிசை வெண்பாவால் தலைமகன் கெஞ்சிக் கேட் டல், தன்னெண்ணம் நிறை வெய்தாது கன்றி அவன் மடல் ஏறுவதாக ஈரடி தானை வரப்பாடப் படுவது (மடலிலுறுதி லாளது தலைமகன், தான் காதலித்த தலைமகளைப் பெற அவளது உருவத் தை ஒரு கிழியில் எழுதி வைத்துக்கொண்டு உடல் முழுவையும் திருநீற்றை அணிந்து கொண்டு, மானத்தை மறைக்கச் சிறு ஆடையை மட்டும் அணிந்துகொண்டு, பனங் கருக்கால் செய்த குதிரை யில் ஏறிக்கொண்டோ, அதன் இழத்துக்

கொண்டோ அத்தலைம கள் வசிக்கும்ஊர் வழியே வருவதாம். இவ்வாறு மடல் ஊர்ந்து வரும் போது,உடலில் செந்தீர்க் குப்பதிலாக வீரியம் வரக் கண்டால், அங்குள்ளார் அத்தலைமகன் தலைமகள் மீதுஉண்மையான காதல் கொண்டுள்ளான் என்று அறிந்து அவன் காத லித்த பெண்ணை மண முடித்து வைப்பார்.

வா

வாகைமாலை = பகைவரை வென்று வெற்றி கண்ட தை ஆசிரியப்பாவால் பாடுவது.

வாதோரணமஞ்சரி = மத யானையை அடக்கினவனது வீரத்தைப்பற்றியும், எதிர்த்த யானையை அடக்கினவனது வீரத் தைப்பற்றியும், யானையை பற்றிப் பிடித்துவந்த வீர னது வெற்றியைப் பற்றி யும் வஞ்சிப்பாவால் பாடு வது.

வாயுறைவாழ்த்து = பயன் தரும் மெய்ப்பொருளை வெண்பா முதலும் ஆசிரி யம் பின்னும் அமைந்த மருட்பாவால் பாடப்படு வது.

வி

விளக்குநிலை = வேலோடு விளக்கு ஒன்று பட்டு ஓங்குமாறு பாடுவது.

விருத்தவிலக்கணம் = வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு ஊர், கொலை இவற்றைத் தனித்தனிப் பத்துவிருத் தப்பாவால் பாடுவது. (உ-ம்) திருத்தணிகைக் கந்தப் பையர் பாடிய வேல் விருத்தம்

வீ

வீரவெட்சிமாலை = சுத்த வீரன் வெட்சிமலர் சூடிப் பகைவர் நாடு புகுந்து பசுக் கூட்டங்களைக் கவர்ந்து வரும்போது அவன்முன் தசாங்கங்களை யும் வைத்துப் போற்றி அவன் மீண்டுவந்த வெற்றியைப் பாடுவது.

வெ

வெற்றிக் கரந்தை மஞ்சரி = பகைவர் கொண்ட பசுக் கூட்டங்களை மீட்க வீரன் கரந்தை மலரைச் சூடிச் சென்று அப்பசுக்கூட்டங் களை மீட்டு வந்ததைப் பாடுவது.

வே

வேனில்மாலை = இளவேனில் முதுவேனில் சிறப்பைப் பாடுவது;

நூல் அகராதி

அகத்தியம் = இது அகத்திய முனிவரால் எழுதப் பட்டது. தமிழ் இலக்கண முறைகளைப் பற்றிக் கூறுவது. ஆனால், இந் நூல் முற்றமுடிய கிடைத்திலது. அங்கங்கே உரை ஆசிரியர்களால் மேற் கோளாக எடுத்துக் காட்டப்பட்ட சூத்திரங்களே அறியப் படுகின்றன. இவரது காலம் முதற் சங்க காலமும், இடைச் சங்க காலமும் ஆகும்.

அகத்தியர் தேவாரத் திரட்டு = இது அகத்திய முனிவரால் அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவர் பாடிய தேவாரங்களினின்றும் சிவாலய முனிவர் பொருட்டுத் திரட்டிக் கொடுக்கப்பட்ட நூல். இத் திரட்டினுள் 25 பதிகங்கள் உள்ளன. அப் பதிகங்கள் குருவருள், பரையின் (திருநீற்றின்) வரலாறு; அஞ்செழுத்து உண்மை, கோயில் திறம், சிவனுருவம், திருவடி, அருச்சனை, அடிமை என எட்டுப் பிரிவினைக்கொண்டு திகழ்வன, இதில் சம்பந்தர் பதிகம், 10. அப்பர் பதிகம், 8. சுந்தரர் பதிகம், 7 உள்ளன. அகத்தியர் இருந்த காலத்திற்கும் மூவர் முதலிகள் இருந்த காலத்திற்கும் எத்தனையோ நூற்றாண்டுகள் இடைவெளி இருப்பினும், தேவாரப் பதிகங்களுள் சிலவற்றைத் தொகுத்து அகத்தியர் தேவாரத் திரட்டு என்று கூறப்பட்டு வருதலின் குறிப்பு, அகத்தியர் என்ற பெயருடன் தேவார காலத்துக்குப் பின் இருந்த ஒருவரால் திரட்டப்பட்டுக் கொடுத்திருக்க வேண்டுமெனக்கொள்ளல் வேண்டும். அகத்தியச் சித்தர் ஆதலின் பன்னெடுங் காலம் வாழ்ந்த காரணத்தால் இங்ஙனம் திரட்டிக் கொடுத்தார் என்று கூறினும் அமையும். காலம் குறிப்பிடற்கில்லை.

அகத்தியர் சதகம் = இந் நூல் 19-ஆம் நூற்றாண்டில் திகழ்ந்த குணங்குடி மஸ்தான் சாகிப்பு அவர்களால் பாடப்பட்டது. நூறு பாடல்களைக் கொண்டது.

அகநானூறு = சங்க இலக்கிய நூல்கள் எட்டுத் தொகை நூற்களுள் இதுவும் ஒன்று. இன்பத்தைப் பற்றிக் கூறும் 400 அகவற் பாக்களையும், கடவுள் வாழ்த்துப்பாடல் ஒன்றையும் கொண்டது. இப்பாடல்கள் ஒரு புலவரால் பாடப்பட்டவை அல்ல. 145 புலவர்களால் அவ்வப்போது பாடப்பட்டுப் பின்னர்த் தொகுக்கப்பட்ட பாடல்களின் தொகுதியே இந்நூலாகும். பெண்பாற்புலவர்கள் பாடிய பாடல்களும் இதில் உண்டு. இதற்கு நெடுந்தொகை என்ற பெயரும் உண்டு. இதனைத் தொகுத்துமாறு வேண்டியவர் உக்கிரப் பெருவழுதிப் பாண்டியராவர். தொகுத்துத் தந்தவர் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திரசன்மனார். இந்நூல் அன்று பிரிவுகளையுடையது. அவை, களிற்றுயானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக் கோவை என்பன. செய்யுட்களில் அமைந்துள்ள நடையைக் கருதி இவ்வாறு பாகுபடுத்தினர். ஒன்று முதல் நூற்றிருபது பாடல்கள் களிற்றியானை நிரையைச் சார்ந்தவை. 121 முதல் 300 பாடல்கள் மணிமிடை பவளத்தைச் சார்ந்தவை. மூன்றாம் நூற்றொன்று முதல் நானூறு வரையில் உள்ளவை, நித்திலக்கோவையைச் சார்ந்தவை. இவையனைத்தும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகளைப் பற்றிய இன்பப் பகுதிகளை அறிவிக்கும் இன்ப நூல். கடைச் சங்க காலம்.

அகப்பொருள் விளக்கம் = நாற்கவி ராச நம்பி என்பவரால் இயற்றப்பட்டது. தமிழ் மொழியில் உள்ள எழுத்து, சொல், பொருள் யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களுள் அகப்பொருள் இலக்கணங்களைப் பற்றி அறிதற்குப் பெருந்துணை செய்வதல்லது. இதன் காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு. இது அகத்திணை இயல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்ற ஐந்து பிரிவுடையது. 252 சூத்திரங்களைக் கொண்டது. இந்நூல் வாயிலாக ஐந்திணை

களின் விளக்கங்களையும், மக்களது ஒழுகலாற்றை யும், காதல் மணம், கற்பு மணங்களைப் பற்றிய செய்திகளையும் உணரலாம்.

அசதிக்கோவை = இது ஔவை மூதாட்டியாரால் எழுதப்பட்டது. ஔவையைப் பிராட்டியார் ஒரு காட்டு வழியே போய்க்கொண்டிருக்கையில் கோப்பு மேமிட, அதுபோது, அங்கு ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த இடையன் இவ்வம்மையாருக்கு ஊத்தான்வைத்திருந்த கூழைக் கொடுத்துப் பருகுமாறு செய்தான். அந்நன்றியைப்பாராட்டிப்பாட ஔவையார் அவனது பெயரைக் கேட்டனர். அவனுக்குத் தன் பெயர் நினைவுவரவில்லை. அவன் அசதி என்று கூறிவிட்டான். ஔவையார், அசதி என்ற பெயரையே பெயராகக் கொண்டு, அசதிக்கோவை என்னும் இந்நூலைப் பாடினர். ஔவையார் பலர் ஆதலின் எவ்வையார் இதனைப் பாடினர் எனத்திட்டமாகக் கூறுவதற்கு இன்னமின் காலமும் குறிப்பிடற்கு இல்லை.

அஞ்ஞான வைதப் பரணி = இதன் ஆசிரியர், அத்துவைராய சுவாமிகள். இது ஒரு வேதாந்த நூல். பரணி நூல் போர்க்களத்தையும், அப்போர்க்களத்தில் வெற்றி பெற்றவர்களையும் வர்ணிப்பது. இங்கு அஞ்ஞானத்தை அரசனுக்கு அகங்கார முதலிய வற்றை நால் வகைப் படைகளாக்கி அவற்றை ஞானமாகிய வாள் அழிப்பதாக உருவகப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் சொரூபானந்தர் சிறப்பையும் சித்தியையும் நன்கு உணரலாம். காலம் கி.பி. 15 - ஆம் நூற்றாண்டு.

அடங்கன்முறை = சம்பந்தர், அப்பர், சுந்தரர், பாடிய தேவாரங்கள் ஆகிய முதல் ஏழு திருமுறைகள் அடங்கிய நூல். முதல் மூன்று திருமுறைகள் சம்பந்தருடையவை. நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள், திருநாவுக்கரசருடையவை, ஏழாம் திருமுறை சுந்தரருடையது. இம்முறைப்படி தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பிகள். ஆகவே, இது தொகுக்கப்பட்ட காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டு.

ஷ்ட பிரபந்தம் = இது அழகிய மணவாள தாசர் என்னும் பிள்ளைப் பெருமாள், ஐயங்காரால் இயற்றப்பட்டது. இதில் எட்டு நூல்கள் அடங்கியுள்ளன. அவையே திருவரங்கக் கலம்பகம், திருவரங்கத்தந்தாதி ஸ்ரீ ரங்க நாயகர் ஊசல், திருவரங்க மாலை, திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கடமாலை, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, அழகர் அந்தாதி, என்பன. "அஷ்டபிரபந்தம் படித்தால் அரைப்பண்டிதர்" என்னும் பழமொழி இந்நூற் பெருமையை உணர்த்தும். இத் தொகுப்பு நூலால் திருமாலின் சிறப்பு, வைணவத்தின் மேன்மை முதலியவற்றை அறியலாம். இதற்குச் சிறந்த முறையில் திருவல்லிக்கேணி சடகோப ராமானுஜாச் சாரியார் உரை எழுதியுள்ளார். இதன் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு.

அஷ்டாங்க நிந்தாமணி = இந்நூல் சிங்காரவேலு முதலியாரால் எழுதப்பட்டது. இந்நூலில் தமிழ் நூல்களைப்பற்றிய குறிப்புக்களையும், புலவர்களின் வரலாற்றுக் குறிப்பையும் நன்கு உணரலாம். ஆங்கிலத்தில் உள்ள என்ஸைக்ளோபீடியாவைப் போன்று தமிழ் என்ஸைக்ளோபீடியா என்றும் இதனைக் கூறலாம். ஆனால் இது சுருங்கிய அளவில் உள்ளது. இது கி. பி. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொகுக்கப்பட்டது.

அபிராமி அந்தாதி = அபிராமிபட்டரால் இயற்றப்பட்ட நூல். இது திருக்கடவூர் தேவியாம், அபிராமி அம்மையார் மீது பாடப்பட்டது. தேவியின் திருவருள் பெறுதற்குப் பெருந்துணை செய்ய வல்லது. இதன் காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு. இது 102 செய்யுட்களை உடையது. இந் நூலைப்பாடி அமாவாசையைத் தினத்தன்று பூரணசந்திரனை இந்நூல் ஆசிரியர் காட்டியுள்ளார்.

அழுதாம்பிகை பிள்ளைத் தமிழ் = இது குளத்தூர் அழுதாம்பிகை அம்மையார் மீது பாடப்பட்ட நூல். சிவஞான முனிவரால் இயற்றப்பட்டது.

காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு. இதில் திருஞான சம்பந்தருக்குத் தேவியார் பாலை வள்ளத்தில்பெய்துகொடுத்தமைக்குக் கூறப்பட்டுள்ள காரணம் மிகவும் சுவை பயப்பதாகும்.

அம்பிகாபதி கோவை = கம்பருடைய மகனை அம்பிகாபதி என்பவனைல் பாடப்பட்டது. எனைய கோவை நூற்களுக்கும் இதற்கும் பெரிதும்வேறு பாடு உண்டு. மற்றைய கோவைகள் காதறு பாடல்களைக் கொண்டும், யார்மீது பாடப்பட்டதோ, அவர்களின் சிறப்பையும் தலத்தின் மாண்பையும் அறிவிக்கும் முறையில் அமைந்திருக்கும். ஆனால், இக்கோவை நாதாற்றிற்கு மேற்பட்ட பாடல்களையும், பல புதிய துறைகளையும் கொண்டு, பாட்டுடைத் தலைவன் இல்லாத காரணத்தால் முழுப் பாடலும் அகப்பொருளை அமையப் பாடப் பட்டது. காலம் 12-ஆம் நூற்றாண்டு.

அரிச்சந்திர புராணம் = அரிச்சந்திரனுடைய வரலாற்றைக் கூறுவது. வீரகவிராயர் இதனை இயற்றினர். இதில் உள்ள சந்தரமதி புலம்பல் கண்ணைருரையும் கரையும் படி செய்யும். காலம் 16-ஆம் நூற்றாண்டு.

அருட்பா = இதுவே 'திருவருட்பா' எனப்படும். இது ஆறு திருமுறைகளாகத் திருவருட்பாவின் அன்பர்கள் பிரித்துள்ளனர். இராமலிங்க சுவாமிகள் இதனைப் பாடியவர். கடவுள் திருவருளைப் பெறுதற்கு உரிய நூல். இதில் சிவபெருமான் உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியர், திருமால் மாரியம்மன், சரஸ்வதி, இலட்சுமி முதலானவர்கள் மீது பாடப்பட்ட பாடல்கள் உள்ளன. பெரிதும் சிவபெருமானையும், சுப்பிரமணியரையும் பாடிய பாடல்களே உள்ளன. நாமாவளிகளும், தோத்திரங்களும், நங்கைமார் பாடுதற்குரிய பாடல்களும், பலவகைச் சனங்களும் இதில் அடங்கியுள்ளன. காலம் 19-ஆம் நூற்றாண்டு.

அருணாசல புராணம் = இது திருவண்ணாமலையைப் பற்றிக் கூறுவது.

இதனைச் சைவ எல்லப்ப நாவலர் பாடியுள்ளார். வல்லாள மகா ராசன் சரித்திரம் இந்நூலில் தான் காணப்படுகிறது. கி. பி. 17-ஆம் நூற்றாண்டு. இதனை கண்ணுர்த் திகை நீப லைலாற்றைக் காணலாம். இதற்கு மழவை மகாலிங்கையர் உரை எழுதியுள்ளார்.

அருணாசல புராணம் = அண்ணாமலையார் பெயரால் பாடப்பட்ட புராணம். பல சுவைகளும் பொருந்தப் பெற்றது. சிவபரத்துவம் மிகுதியும் பேசப்படுவது. இதன் ஆசிரியர் சைவ எல்லப்ப நாவலர். காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு.

அவிநோத உந்தியார் = இது சாந்தலிங்க சுவாமிகளால் இயற்றப்பட்டது. இந்நூலில் உள்ள பாடல் ஒவ்வொன்றும் உந்தியார் என்று முடிதலின் இப்பெயர் பெற்றது. ஆர்விகுதி கொடுத்திருப்பதால் உந்தியார் எனப்பட்டது. ஞான பரமான நூல். எவர்க்கும் விரோதமற்ற முறையில் செய்ந்ஞானத்தை உணர்த்துவது. 100 பாடல்களைக் கொண்டது. காலம் கி.பி. 18-ஆம்நூற்றாண்டு. இதற்குச் சிதம்பர சுவாமிகள எழுதிய உரை உண்டு.

அழகர் அந்தாதி = மதுரையை அடுத்த கல்லழகர் பெருமான் மீது பாடப்பட்ட நூல். இதன் ஆசிரியர் பிள்ளைப் பெருமான் ஐயங்கார். வில்லிபுத்தூராரும் இப்பெயராலும் அந்தாதி பாடியுள்ளார். காலம் முறையே கி.பி. 17-ஆம்நூற்றாண்டு. 15-ஆம் நூற்றாண்டு.

அறநெறிச் சாரம் = தருமமார்க்கங்களில் சாரமான வற்றைக் கூறும் நீதி நூல். இந்நூலாசிரியர் முனைப்பாடியார், இதில் 222 வெண்பாக்கள் உள்ளன. இதில் காட்சி, ஒழுக்கம், ஞானம் என்னும் மூன்று பிரிவுகள் உள்ளன. அருகதேவன் சிவபெருமான் என்று கூறப்பட்டுள்ளது நோக்கத் தக்கது. காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

அறப்பளீசுரர் சதகம் = சதகம் என்பது நூறு பாடல்கள் அடங்கிய நூல். இந்நூலில் உள்ள பாடல்கள் அறப்பளீசுரதேவனை என்று

முடிதலின், இப் பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் அம்பலவாணக் கவிராயர். காலம் கி.பி.18-ஆம் நூற்றாண்டு. இது நீதி நூல். ஆதலின், மக்கள் மேற்கொண்டொழுகவேண்டிய நீதிகள் பலவற்றை இதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

அற்புதத் திருவந்தாதி = இது காரைக்கால் அம்மையாரால் சிவபெருமான் மீது பாடப்பட்டதோர் நூல். முற்றிலும் வெண்பாவால் ஆனது. பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டது. காலம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு. அம்மையார் இறைவனோடு பேய் வடிவு வேண்டுமெனக் கேட்டு, அவ்வாறே பெற்று, அதன் பின் இந்நூலைப் பாடியுள்ளார்.

அனுமார் பின்னேந்தமிழ் = ராம தூதனான அனுமார் மீது அருணாசலக் கவிராயர் பாடியுள்ள பிரபந்தம். காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

ஆ

ஆசாரக் கோவை = மக்கள் ஒழுக்க முறைகளைத் தொகுத்துக் கோவைப்படுத்திக் கூறும் நீதி நூல். பதினெண் கீழ்க்கணக்கு நூற்களில் ஒன்று. இந்நூலாசிரியர் பெருவாயின் முள்ளியார். நீராடல், உண்ணல், துயிலல், வழிபடல் முதலான வைகள் சம்முறையில் செய்தல் வேண்டும் என்பனவற்றை விளக்கமாக இந் நூலில் காணலாம். காலம் கடைச்சங்க காலம்.

ஆசிரிய நிகண்டு = சொற்களுக்குரிய பொருளை அறிய ஆசிரியப்பாவால் பாடப்பட்ட நூல். ஆசிரியர் ஆண்டிப் புலவர். காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு.

ஆண்டவர் பின்னேந்தமிழ் = இந்நூல் மொய்தீன் ஆண்டவர் மீது பாடப்பட்ட முஸ்லிம் சமய நூல். சவ்வாது புலவரால் இயற்றப்பட்டது. காலம் 17-ஆம் நூற்றாண்டு.

ஆத்திசூடி = ஔவையாரால் பாடப்பட்டது. அருமையான நீதிகளைச் சிறு சிறு வாக்கியங்களில் கூறும் நீதி நூல். இளமையில் இனிஞர்கள் உள்ளத்தில் பதியுமாறு செய்யப்பட்டது. இது சங்க கால ஔவையாரால் பாடப்பட்டதோ, அன்றிப்

பிற்பட்ட காலத்து ஔவையாரால் பாடப் பட்டதோ என்ப தை உறுதியாகக் கூறுதற் கின்மையின், காலமும் உறுதியாகக் குறிப்பிட இயலவில்லை. ஆத்திசூடி என் றும் முதற் கண் அமைந்து செய்யுள் பாடப் பட்டிருத்தலால் இப் பெயர் பெற்றது.

ஆத்திசூடி வெண்பா = இது வெண்பாவால் இயன்ற நூல். ஒவ்வொரு வெண் பாவிலும் ஆத்திசூடி யின் வாக்கியங்கள் அமைந்து காணப்படும். அவ்வாக்கியத்தின் கருத் துக்கு ஏற்ற உதாரணக் கதைக் குறிப்புக்களையும் கொண்டு திகழ்வது. இராம பாரதி என்ற புல வரால் பாடப்பட்டது. காலம் கி.பி.19-ஆம் நூற் றாண்டு.

ஆயிரத்தெண்ணூற்றுஆண்டு கருக்கு முற்பட்டதமிழ் = இது ஓர் உரை நூல். இந் நூலாசிரியர் கலைக சபைப் பிள்ளையாவார். இந்நூலால் புலவர்களின் பெருமையும், தமிழ் நூல்களின் பரப்பும், தமிழ் நாட்டின் பெருமை யும் பலர் அறிய நேர்ந் தது. முதலில் ஆங்கிலத் தில் எழுதப்பட்டு மெட் ராஸ் ரெவ்யூ என்னும் பத்திரிகையில் பல கட் டுரைகளாக வெளி வந் தது. காலம் 19-ஆம் நூற்றாண்டு.

ஆழ்வார்கள் காலம் = இது மு. ராகவையங்காரால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். இந்நூலில் ஆழ் வார்கள் திகழ்ந்த காலத்தை அறிந்து கொள்ளலாம். காலம் கி.பி.20-ஆம் நூற்றாண்டு.

இ

இரட்டுறமொழிதல் = இது முத் தமிழ் இலக்கண நூல்க ளுள் இசைத்தமிழ் இலக் கண நூலாகும். இதன் ஆசிரியர் சிகண்டி என்ப வர். அடியார்க்கு நல்லா ரால் மேற்கோள் காட்டப் பட்டிருத்தலின் அவர் காலத்துக்கு முற்பட்ட நூலாகத் தெரிகிறது. அடியார்க்கு நல்லார் காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு. ஆகவே, இரட்டுறமொழிதல் அதற்கு முற்பட்டது என்று மட் டும் அறிதல் வேண்டும்.

இயற்பா = இது வைணவ சமயத் தோத்திர நூலான நாலாயிரப் பிர

பந்தத்தில் ஒரு பிரிவு. இதில் பொய்கையார் பாடிய முதல் திருவந்தாதி நூறு பாடல்களும், பூதத்தார் பாடிய இரண்டாம் திருவந்தாதி நூறு பாடல்களும், பேயார் பாடிய மூன்றாம் திருவந்தாதி நூறு பாடல்களும், திருமழிசைப் பிரான் பாடிய நான்முகன் திருவந்தாதி தொண்ணூற்றொரு பாடல்களும், நம்மாழ்வார் பாடிய திருவிருத்தம் நூறு பாடல்களும், திருவாசிரியம் ஒன்றும், பெரிய திருவந்தாதி எண்பத்தேழு பாடல்களும், திருவங்கையாழ்வார் பாடிய திருவழுகூற்றிருக்கையும், திரிய திருமடல் ஏழுபத்தேழு பாடல்களும், பெரிய திருமடல் நூற்று நாற்பத்தெட்டுப் பாடல்களும் அடங்கிய தொகுப்பு நூல். இது வெவ்வேறு காலத்து ஆழ்வார்கள் பாடிய தொகுப்பு நூல் ஆதலின் காலம் குறித்தற்கு இல்லை.

இரட்சணிய யாத்திரிகம் = இது ஆங்கிலத்தில் உள்ள பில்கிரிம்ஸ்ப்ராக்ரஸ் என்னும் நூலைத் தழுவி எழுதப் பட்டது. கிறிஸ்துவர் சமய நூல். ஆசிரியர் கிருஷ்ணபிள்ளை. கிறிஸ்தவ விவிலிய நூல் கருத்துக்கள் இதில் அமைந்துள்ளன. வீரமா முனிவர் வருணனைகள் அற்றது. எளியநடையில் உள்ளது. வட மொழி கலப்பு பெரிதும் உபயோகிக்கப்பட்ட நூல். நாற்பத்தேழு காண்டங்களையும் காலாயிரம் பாடல்களையும் உடையது. காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு.

இரண்டாம் திருவந்தாதி = இது நாலாயிரப் பிரபந்தத்தில் இயற்பா என்ற பிரிவில் இரண்டாவதாக உள்ளது. 100 பாடல் களைக் கொண்டது. திருமால் புகழைப் புகழ்வது. பூதத்தாழ்வாரால் பாடப் பட்டது. முற்றிலும் வெண்பாவால் ஆனது. பொய்கையார் பாடிய முதல் திருவந்தாதிக்குப் பின்னர் இது அமைந் திருத்தலின், இரண்டாம் திருவந்தாதி என்ற பெயரைப் பெற்றது. இதன் சிறப்பு நோக்கித் திருவென்னும் அடை கொடுக்கப்பட்டது. காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டு.

இரங்கேசர் வெண்பா = இது ஒரு நீதி நூல். ஒவ்வொரு வெண்பாவின் ஈற்றி லும் ஒவ்வொரு திருக்குறள் அமைத்து விளங்குவது. அத்திருக் குறட்கு விளக்கம் தந்து விளங்குவது. கதைக் குறிப்பும் கொண்டது. இதனைப் பாடியவர் சாந்த கவிராயர். காலம் 18-ஆம் நூற்றாண்டு.

இரத்னச் சுருக்கம் = இது புகழேந்திப் புலவர்பாடிய நூலாகக் கூறப்படு கிறது. வெண்பாவால் அமைந்தது. உறுப்புக் களுக்கு இன்னின்ன, உவமைகளாகக் கூறக் கூடியவை என்பனை விளக்கும் நூல். காலம் 13-ஆம் நூற்றாண்டு.

இராம நாடகம் = இராமாயணக் கதையை நாடக அமைப்பில் எழுதப் பட்ட நூல். இதன் ஆசிரியர் அருணாசலக் கவிராயர். கீர்த்தனைகள் சுவைபடுக்குக் காணப் படும். காலம் 18-ஆம் நூற்றாண்டு. வாத்தியம் "தும்தம் தின்தோம்" என ஒலித்தது என்பது துன்பம் தீர்ந்தோம் என்ற குறிப்பைக் காட்டியது என்னும் கீர்த்தனையும் இதில் உண்டு.

இராமாயணம் = தமிழில் கம்பரால் பாடப்பட்ட நூல். இதில், பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம, சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்ற ஆறு காண்டங்கள் உண்டு. இந்நூல் வடமொழிக் கதையைத் தழுவி எழுதப் பட்டதேனும், தமிழ் நாட்டின் நாகரிகத்தைச் சமயம் வந்தபோது இடையிடையே புகுத்தி எழுதப் பட்டதாகும். இதன் இறுதிக் காண்டமாகிய உத்தர காண்டம் ஒட்டக் கூத்தரால் பாடப் பட்டது. காலம் 12-ஆம் நூற்றாண்டு.

இராமாநுச நூற்றந்தாதி = இது திருவரங்கத் தமுதனாரால் எழுதப்பட்டது. இராமாநுச சாச்சாரியார் மீது பாடப்பட்டது. 108 கட்டளைக் கலித்துறையால் அமைந்தது. காலம் 13-ஆம் நூற்றாண்டு. இந்நூலுக்குப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், அப்பாவு முதலியார் செய்த உரைகள் உண்டு.

இரிபுகேதை = இது சிவபரத் துவம் கூறும் நூல். வேதாந்த பரமானது. இரிபு முனிவரால் நிதாகர் என் னும் முனிவருக்கு உபதேசிக்கப்பட்ட நூல். இதனை வட மொழியி னின்று தமிழில் மொழி பெயர்த்தவர். திருவிடை மரு தூர் உலோகநாத கவியாவார். காலம் 19-ஆம் நூற்றாண்டு.

இருபா இருபஃது = சைவ சித்தாந்த சாத்திரம் பதி னான் நூல்கள் ஒன்று. வெண்பாவும், ஆசிரியப் பாவும், ஒன்றன்பின் ஒன் றாகத் தனித்தனி அமைய 20 பாடல்கள் தொ டர்ந்து பாடப்பட்டிருத்த லின், இப்பெயர் பெற் றது. இது திருத்துறைப் பூர் அருள் நந்தி சிவா சாரியரால் பாடப்பட்டது. இது தமக்குச் சித்தாந்த அறிவினைத் தெளிவு படுத்திய ஆசிரியர் மெய் கண்டாரை முன்னிலைப் படுத்தி வினவுதலும், அவ் வினாவுக்கு அவர் விடை கூறுதலும் ஆன முறை யில் அமைந்து காணப் படுவது. காலம் 13-ஆம் நூற்றாண்டு. இதற்குத் திருவாவடுதுறை மடத்து நமச்சிவாயத் தம்பிரான் உரை எழுதியுள்ளார்.

இலக்கணக்கொத்து = இதன் ஆசிரியர் சுவாமிநாத தேசிகர். இவரை ஈசன தேசிகர் என்றும் கூறு வர். இந்நூல் அரிய இலக்கணக் குறிப்புக்களை யும் நுட்பங்களையும் அறி விப்பது. 151 சூத்திரங் களைக் கொண்டது. வேற் றுமை, வினை, ஒழிபு என்ற மூப்பெரும் பிரிவுடையது, காலம் 17-ஆம் நூற்றாண்டு. இது தொல்காப்பிய இலக்கண நூலினும் அரு கிக் கிடந்த இலக்கண வினை விதிகளைக் கூறுவது. வடமொழி இலக்கணங் களும் சில கூறப்பட்டுள் ளன. இதில் சொல்லிலக் கண நுட்பமும் காணப் படும்

இலக்கணவிளக்கச் சூருவளி = இது சிவஞான முனிவரால் எழுதப்பட்ட உரை வடிவமான நூல். இது வைத்திய நாதர் தேசிகர் எழுதிய இலக் கண விளக்கத்திற்கு மறுப்பு நூலாக எழுதப் பட்ட நூல். காலம் 18-ஆம் நூற்றாண்டு.

இலக்கண விளக்கம் = இதனைக் குட்டித் தொல்காப் பியம் என்றும் கூறுவர். இதில் ஐந்திலக்கணங் களும் தெளிவுறக் கூறப்பட்டிருக்கின்றன,

இது தோல் காப்பியம் நன்னூல், தண்டி அலங்காரம் அகப்பொருள், வெண்பாமாலை முதலான வற்றிலிருந்து பல இலக்கணப்பகுதிகளைத் தழுவி நூலாசிரியர் எழுதிய சூத்திரங்களுடன் விளங்குவது. இது ஐந்து இலக்கணங்களைக் கூறுவதாயினும், எழுத்து, சொல், பொருள் என்ற முப்பிரிவினைக் கொண்டு விளங்குவது. பொருளதிகாரத்தில் அணி, இலக்கணம், யாப்பிலக்கணம், பாட்டியல் பகுதிகள் அடங்கியுள்ளன. இந்நூலுக்கு நூலாசிரியரே உரையும் எழுதியுள்ளார். ஆகவே, இவ்விலக்கண நூல் புதுமையும் பழமையும் கலந்த இலக்கண நூல். இதன் ஆசிரியர் திருவாரூர் வைத்தியநாத தேசிகர் 17-ஆம் நூற்றாண்டு.

இலக்கிய வரலாறு = இது ஒரு சிறந்த உரை நடை நூல். இதில் ஆசிரியர் வரலாற்றையும், தமிழ்வரலாற்றையும் காணலாம். நூல்களின் வரலாற்றையும் 20-ஆம் நூற்றாண்டு வரை உள்ள புலவர்களைப்பற்றிய குறிப்பையும் காணலாம். தமிழ் நாட்டின் தொன்மை, பெருமைகளை அறிதற்குத் துணைசெய்யும் நூல். இதன் ஆசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ, எம். எல், காலம் 20 - ஆம் நூற்றாண்டு. இது ஆறு அதிகாரங்களை உடையது.

இளம்பூரணம் = இளம்பூரணரால் எழுதப்பட்ட உரை நூல். இளம்பூரணம் எனத் தொல் காப்பியத்திற்கு எழுதப் பட்ட முதல் உரை நூலாகிய இதனையே கூறுவர். இவ்வுரையாசிரியர் தாம் உரையாசிரியர் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர். காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

இறையனர் அகப்பொருள் = தமிழ் மக்களின் இன்ப வாழ்வு பற்றிக் கூறுவது அகப்பொருளாகும். பாண்டிய நாட்டில் பன்னிரண்டு யாண்டுகள் பஞ்சம் தலைபுறுத்தியதால், மக்கள் பல இடங்களுக்குச் சென்றனர். அப்படிச் சென்றவர்களுள் புலவர்களும் அடங்குவர். மீண்டும் நாடு செழிப்புற்றபோது சென்றவர்கள் மீண்டனர். அப்படி மீண்ட புல

வர் இனத்தில் எழுத்தும், சொல்லும் அறிந்த புலவர்களாக இருந்தனரே அன்றிப் பொருள் இலக்கணம் அறிந்த புலவர்கள் இருந்திலர். இதன் பொருட்டுப் பாண்டியன் வருந்தினன். அவனது வருத்தம் நீங்க மதுரை ஆலவாய்ப் பெருமானர் அறுபது சூத்திரங்களைச் செப்புப் பட்டயத்தில் எழுதித் தம்பீடத்தின் கீழ் வைத்திருந்தனர். கோயில் அர்ச்சகர் அதனை எடுத்துச் சென்று, மன்னன் கையில் கொடுத்து அது கிடைத்த விதத்தைகூறினர். மன்னன் அதனைப் பெற்று மகிழ்ந்தான். அதுவே இறையனர் அகப் பொருள் என்றும், களவியல் என்றும் அன்பின் ஐந்திணை என்றும் கூறப்படுவது. இதற்கு உரை கண்டார் கடைச் சங்கப் புலவர் நாற்பதின் மரும் ஆவர். மதுரை கணக்காயனர் மகனர் நக்கீரர் கண்ட உரையே சாலச் சிறந்தது. கடைச் சங்க காலம்.

இறையனர் அகப்பொருள் உரை = இஃது ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானர் இயற்றித்தந்த களவியல் நூலுக்குப்பலர்உரை கண்டனர். அவர்களுள் கணக்காயனர் மகனர் நக்கீரர் உரையே இந்நூலாகும். இதன் கண் முச்சங்கங்களின்வரலாறுகளைக் காணலாம். தூய செந்தமிழ் நடைக்கு இவ்வுரைநூல் ஓர் எடுத்துக் காட்டாகும். இது கடைச்சங்கக்கால நூல். நக்கீரர் இந் நூலுக்கு உரை கூறி வந்தபோது ஊமையாய் இருந்த உருத்திர சர்மர் கேட்டுத் தம் உணர்ச்சியினை மயிர் சிலிர்த்தல் மூலமும், கண்ணீர் சொரிதல் மூலமும் காட்டினர்.

இனியது நாற்பது = இது சங்கம் மருவிய பதினெண் கீழ்க் கணக்கு நூற்களுள் ஒன்று. இன்னின்னது இனிது இனிது என்று பாடப்பட்டிருத்தலின் இப் பெயர் பெற்றது. 40 இன்னிசை வெண்பாக்களை யுடையது. இதனை இனியவை நாற்பது என்றும் கூறுவர். இதனை மதுரைத் தமிழ் ஆசிரியர் கணி பூதஞ்சேந்தனர் இயற்றினர். கடைச்சங்க காலம்.

ஐங் நாற்பது = இது ஒரு நீதி நூல். இது பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. கபிலர் இயற்றியது. இந்த இந்தச் செயல்கள் இன்ன தன்வன என்று கூறும் முறையில் அமைந்த வெண்பாவைப் பெற்றது. கடவுள் வாழ்த்துப் பாடலும் சேர்ந்து 41 இன்னிசைவெண்பாக்கள் இதில் காணப்படும். கடைச்சங்க காலம்.

இன்னிலை = இந்நூலைச் சங்க காலப் பொய்கையார் என்ற பெயருடையார் பாடியநூல் என்பர். இது அறத்துப்பால், பொருட்பால், இன்பப் பால், வீட்டிலக்கப்பால் என நான்கு பிரிவுடையது. இந் நூலாசிரியர் சைவர். இந் நூலைத் தொகுத்தவர் மதுரை ஆசிரியர் பூதனர் என்பவர். இந்நூலில் பாரதம் பாடிய பெருந் தேவனார் பாடிச் சேர்த்த கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்று உண்டு. அறத்துப் பாலில் பத்தும், பொருட் பாலில் ஒன்பதும், இன்பத்துப் பாலில் பன்னிரண்டும் வீட்டிலக்கப்பாலில் பதினைந்தும் ஆக, 45 வெண்பாக்கள் உண்டு. வீட்டிலக்கணப் பாலில் இல்லற இயல், துறவற இயல் என்ற இரண்டு பிரிவு உண்டு. இது நீதி நூல் வகையைச் சார்ந்த கடைச்சங்க காலத்தது.

ஈ

ஈசுரகீதை = இது ஒரு மொழி பெயர்ப்பு நூல். இந் நூலைத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்தவர் தத்துவராயர் என்னும் சைவ முனிவர். இது பரசிவ மூர்த்தி சனத்குமாரர் முதலிய முனிவர்கட்கு உபதேசம் செய்யப்பட்டது. இதன் கண், சாங்கிய யோகம், பரபத்தி, விசுவ ரூபம், சிவசத்தி, தத்துவநிசம், விபூதி. பிரபஞ்சம், தத்துவ தரிசனம், யோகம் ஆகிய இவற்றைப்பற்றிய அரிய செய்திகள் காணப்படும். காலம் 15-ஆம் நூற்றாண்டு.

சிட்டி எழுபது = இந்நூல் ஒட்டக்கூத்தரால் பாடப் பட்டது. இந்நூல் செங்குந்த மரபின் பெருமையை உரைப்பது. எழுபது வெண்பாவால் அமைந்தது. ஒட்டக்கூத்தர் இந்நூலைப் பாடி

வெட்டுண்ட மக்களை எழுப்பியதாகக் கூறுவர். இந் நூலின் ஈற்றுப் பாடல் கலிமகளை வேண்டும் முறையில் பாடப்பட்டபோதுதான் வெட்டுண்டவர் எழுந்தனர் என்பர். 12-ஆம் நூற்றாண்டு. செங்குந்தர்கள் தம் மரபின் மாண்பைப் பாடுமாறு கேட்டனர். அதுபோது ஒட்டக்கூத்தர் அவர்களின் குலத்தில் எழுபது தலைப்பிள்ளைகளின் தலைகளைப் பரிசாகக் கேட்டனர். அவர்கள் அவ்வாறே எழுபது தலைகளை வெட்டிக் கொணர்ந்தனர். அத் தலைகளைக் கண்ட சோழராசன் "இது என்ன கூத்து?" என்றனன். பின் புலவர்காரணம் கூறி அத்தலைகளையே சிங்காதனம் ஆக்கி அதன் மீது அமர்ந்து பாடிக்கலிமகளை வேண்டி வெட்டுண்ட தலைகளும் உடலும் ஒட்டிக் கொள்ளுமாறுசெய்தார். இதனால் தான் இவர் ஒட்டக்கூத்தர் என்ற பெயரையும் பெற்றார். இதுவே இந் நூல் எழுக் காரணம்.

ஒ

உண்மை நெறி விளக்கம் = இது மெய்கண்ட சாத்திரம் எனப்படும் சைவ சித்தாந்த நூல்கள் பதினான்கனுள் ஒன்று. ஆறு திரு விருத்தங்களையுடையது. உமாபதி சிவாசாரியரால் எழுதப்பட்டது. இந்நூலில் தத்துவ ரூபம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்மதரிசனம், தத்துவ சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், தத்துவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் தசகாரியங்கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. 14-ஆம் நூற்றாண்டு உண்மை. மார்க்கம் இன்னது என்று நன்கு விளங்கும் ஞான நூலாதலின் இப்பெயர் பெற்றது.

உண்மை விளக்கம் = இது சித்தாந்த சாத்திர நூல்கள் 14 கனுள் ஒன்று. சிவஞான போதம், சிவஞான சித்தியார் என்னும் நூறு பெரு நூல்களின் உண்மைப் பொருளைச் சுருக்கமாக அறிவிப்பது. இதன் ஆசிரியர் திருவதிகை மனவாசகம்கடந்தார் ஆவார். இவ்ஆசிரியர் இதில் தம் ஞானசிரிய

ராகிய மெய்கண்ட சிவாசாரியாரை முன்னிலையாகக் கொச் சித்தாந்தம் கூறும் தத்துவ சொபம் முதலிய வற்றைத் தெளிவுற எடுத்துவிளக்கியுள்ளார். பாயிரம் உட்பட ஐம்பத்தைந்து வெண்பாக்களை யுடையது. 12-ஆம் நூற்றாண்டு.

உதயணகுமார காவியம் = இது உதயணன் கதை என்றும் கூறப்படும். வச்ச தேசத்து மன்னனை உதயணனது வரலாற்றைக் கூறும் நூல். 367 பாடல்களைக் கொண்டது. கி. பி. பதினேராம் நூற்றாண்டு.

உத்தரகோசமங்கைபுராணம் = இது மாசிலாமணி தேசிகர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் மாசிலாமணிச் சம்பந்தர் என்றும் கூறப்படுவர். இத்தலம் மாணிக்க வாசகரால் பாடப்பட்டது. கி. பி. 16 - ஆம் நூற்றாண்டு.

உபதேசகாண்டம் = ஒட்டக் கூத்தரால் பாடப்பட்ட உத்தரகாண்டம் எப்படிக் கம்ப ராமாயணத்தோடு இயைந்துக் கூறப்பட்டுவருகின்றதோ, அது போலக் கந்தபுராணத்தோடு ஏழாவது கண்டமாக இணைத்துக் கூறப்படும்நூல். இது கோனேரியப்ப முதலியாரல் இயற்றப்பட்டது. இது 41சருக்கங்களையும் 4360 பாடல்களையும் கொண்டது. கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு. இதில் சைவ மக்கள் அறிந்து ஒழுகவேண்டிய பலசெய்திகள் கூறப்பட்டுள்ளன.

உரிச்சொல்நிகண்டு = காங்கேயர் என்பவரால் இயற்றப்பட்டது. இது 12-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சூளாமணி நிகண்டிற்கு முன்னர் எழுந்த நூல். உரிச் சொல்லுக்குரிய பொருள்களை எடுத்துக் கூறும் நூல்.

உறையூர்ப்புராணம் = இதுவே முக்கிச்சுரம் எனப்படும். சோழனது யானையை இவ்வூர்ச்சேவல் வென்ற காரணத்தால் இது கோழியூர் என்றும் கூறப்படும். இந்த வரலாறும் இந்நூலில் உண்டு. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களால் எழுதப்பட்டது. கி. பி. 19 - ஆம் நூற்றாண்டு.

ஊ

ஊசிமுறி = இடைக்காடரால் இயற்றப்பட்டது. கடைச் சங்க காலம். இந்நூல் சங்கப் புலவர்களின் சிலரின் பொருட்டு ஆத்திரங் கொண்ட இடைச்சங்கம் அழியப்பாடிய நூல் என்பது சிலர்கொள்கை.

எ

எடுத்துயென்னும் சொல்லுக் கிட்டவைரக்குப்பாயம் = இது ஒரு வசன நூல். சிவஞான முனிவரால் எழுதப்பட்டது. இது சிவஞான சித்தியார் சுபக்கத்தில் வரும், 'என்னை இப்பவத்தில் சேரா வகை', என்று தொடங்கும் செய்யுளில் உள்ள எடுத்து என்னும் சொல்லின் சிறப்பை விளக்கிக் கூறும் உரை நடை நூல். சித்தாந்தக் கருத்துக்களைக் கொண்ட கருவூலம். காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

ஏ

ஏகபாதநூற்றந்தாதி = இதனைப் பாடியவர் சிறந்த இலக்கண இலக்கியப் புலவர் அரசஞ் சண்முகனார் என்பவர். காலம் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு. நூறு பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலிலும் அமைந்தநான்கடிகளும் ஒரே மாதிரியாக இருக்கும். அதன் பொருட்டே இது ஏகபாதம் எனப்பட்டது. மடக்கு, திரிபு அணி அமைய பாடப்பட்ட நூல்.

ஏகம்பரூஞ்சு = கம்பரால் பாடப்பட்டது. வேளாளர் மாண்பைக் கூறும் நூல். உழவுத் தொழிலின் சிறப்பையும் கூறுவது. காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு.

ஏலாதி = இது பதினெண் கீழ்க்கணக்கு நூற்களுள் ஒன்று. இந்நூல் ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு என்னும் ஆறு மருந்துச் சரக்குகளில் செய்த சூரணம் நன்மை தருதல் போல, இந்நூலும் மேற் சொன்ன மருந்து போலும் கருத்துக்களை மக்களுக்குப் புகட்டி நன்மை செய்வது என்ற காரணத்தால் ஏலாதி என்ற பெயருடன் விளங்குகிறது. இதன் ஆசிரியர் மரக்காயனார் மகனார், கணிமேதாவியார். மரக்காயனார் இவரது ஆசிரியர் என்றும் கூறுவர். 83 பாடல்களைக் கொண்டது. கடைச்சங்க காலம்.

ஏழாம் திருமுறை = சுந்தர மூர்த்தி சுவாமிகளால் பாடப்பட்டது. இது சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஏழாம் திருமுறையாக அமைந்திருத்தலால் இப்பெயர்பெற்றது. இது தோத்திர நூல். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு. சிறந்த இலக்கியச் சுவை மிகுந்தது. 100 பதிகங்கள் இதில் உண்டு. 63 நாயன்மார்களைப் பற்றிய குறிப்புக்களை முதல் முதல் அறிதற்கு இத்திருமுறை யில் உள்ள பதிகம் ஒன்றே துணையாய் உள்ளது.

ஐ

ஐங்குறுநூறு = சங்கம் மருவிய எட்டுத் தொகை நூற்களுள் ஒன்று. ஐந்நூறு அகவற்பாக்களால் ஆன நூல். ஐந்திணைகளைப்பற்றி அகப்பொருள் சுவை ததும்பப் பாடப்பட்டது. மருதத்திணையினை ஓரம்போகியாரும், நெய்தல் திணையினை அம்மூவனாரும், குறிஞ்சித் திணையினைக் கபிலரும், நெய்தல் திணையினை ஓதல் ஆந்தையாரும், முல்லைத் திணையினைப் பேயன் என்பாரும் தனித்தனி 100 பாடல்களால் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். இந்நூலைத் தொகுக்குமாறு செய்தவர் யானைக்கண் சேய்மாந்தரஞ்சேரல் இரும்பொறை. காலம் கடைச் சங்க காலம். இதற்குப் பழைய உரை உண்டு.

ஐந்திணையெழுபது = இது பதினெண் கீழ்க்கணக்கு நூற்களுள் அகப்பொருளைத் தழுவிய நூல். இது ஒவ்வொரு திணைக்கும் பதினைந்து வெண்பாக்களைக் கொண்டு திகழும் நூல். இதன் ஆசிரியர் மூவாதியார் என்பவர். கடைச்சங்க காலம்.

ஐந்திணை ஐம்பது = இது முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை நெய்தல் என்ற முறை வைப்பில் ஒவ்வொரு திணைக்கும் தனித்தனி பத்து வெண்பாக்களைக் கொண்டநூல். சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றும் உண்டு. அகப்பொருட் சுவையுடையது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூலைச் சார்ந்தது. இதன் ஆசிரியர் மாறன் பொறையனார். கடைச்சங்க காலத்தது

ஒ

ஒருதுறைக்கோவை = கோவை என்பது 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்று. இதில் பல அகப் பொருள் துறைகள் உண்டு. அவற்றுள் ஒன்று மானிக்கவண் புனைதற்றுறையாம்பது. இவ்வொரு துறையின் கருத்தையே தாது பாடல்களில் சுவைபட அமைத்து கவிராயர் பாடி முடிப்பது நூலே இந்நூலாகும். காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

ஒழிவிலொடுக்கம் = இது வேதாந்த சித்தாந்த சார புடைய நூல். எண்ணுடைய வள்ளலாரால் பாடப்பட்டது. பத்து இயல் கருடன் பற்றி வெண்பாக்களை யுடையது. காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு. இந்நூலின் சிறப்புப்பாயிரச் செய்யுட்குத் திருவருட்பா சாமிநாத விங்க சுவாமிகள் பிறந்த விருந்த வையாபுரி னை எழுதி யுள்ளார்.

ஓ

ஓங்கார உண்மை = இது பிரணவத்தின் உண்மைப் பொருளை விளக்கும் நூல். இதில் ஓம் என்னும் ஓர் எழுத்து ஒருமொழி தமிழில் அமைந்த மொழி என்ற உண்மை தெற்றத் தெளியக் கூறப்பட்டுள்ளது. இது உரை நடை நூல். இதன் ஆசிரியர் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள். காலம் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு.

க

கச்சிக்கலம்பகம் = காஞ்சி ஏகாம்பரநாதர்மீது பாடப்பட்ட பிரபந்தம். இப்பெயரால் இருவர் பாடியுள்ளார். ஒருவர் காஞ்சி ஞானப்பிரகாசர். கி. பி. 16-ஆம் நூற்றாண்டினர். மற்றொருவர் பூண்டி சங்கரதாச முதலியார். எம். எ. கி. பி. 19-ஆம் நூற்றாண்டினர்.

கச்சிப்பதிற்றுப் பத்தந்தாதி காஞ்சிபுர ஏகாம்பரநாதர் மீது பாடப்பட்ட நூறு பாடல்களைக் கொண்ட பிரபந்த நூல். இதனை இயற்றியவர் கச்சியப்ப முனிவர். காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

கச்சியானந்தருத்திரேசர் பதிகம் = இதன் ஆசிரியர் சிவஞான முனிவர். பத்துப் பாடல்களைக் கொண்டது. காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

ஞானந்த ருத்திரேசர் வண்டுவிடு தூது = ருத்திரேசரிடம் வண்டை தூதாக அனுப்பும் முறையில் பாடப்பட்ட நூல். பாடியவர் கச்சியப்ப முனிவர். இதில் வண்டுக்குரிய பல வேறு பெயர்களும் அழகுறக் கூறப்பட்டுள்ளன. தூது செல்வதற்கு வண்டே தகுதியுடையது என்பதற்குரிய காரணமும் இதில் இகழும். காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

டம்பவன புராணம் = மதுரைமா நகரைப்பற்றிய தல புராணம். இதனை வீமநாத பண்டிதர் என்பவர் பாடியுள்ளார். இதன் காலம் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு. முன்னர்க் கடம்பக் காடாய் இருந்து பின் மதுரையென்ற பெயர் பெற்றமைக்குரிய காரணங்களை இதன் மூலம் அறியலாம்.

கந்தபுராணக் கீர்த்தனை = இராமாயணக் கீர்த்தனை போலக் கந்தபுராணத்தில் அடங்கிய கதைகள் கீர்த்தனை முறையில் அமைந்த நூல். இதனைப் பாடியவர் கவிக் குஞ்சர பாரதியார் என்பவர். காலம் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு.

கந்த புராணச் சுருக்கம் = கந்தபுராணம் பதிகாயிரத்திற்கு மேற்பட்ட கவிகளையுடையது. அங்ஙனம் பரந்துபட்ட நூலை ஒருசிலரே படித்து வருகின்ற காரணம் பற்றிப் பலரும் படிக்க வேண்டுமெனச் சுருங்கிய முறையில் 1019 செய்யுட்களில் சம்பந்த சரணாலயர் என்பவர் அப்பரந்த நூலின் கதைத் தொடர்பு சிறிதும் வழுவா வண்ணம் இந்நூலைப் பாடியுள்ளார். கந்த புராணத்தில் காண்டங்களும், அக்காண்டங் கட்குப் பல படலங்களும் அமைந்துள்ளன. இந்நூலில் காண்டங்கள் மட்டும் அடங்கியுள்ளன. கி.பி.16-ஆம் நூற்றாண்டு.

கந்த புராணம் = இது கச்சியப்ப சிவாசாரியாரால் பாடப்பட்டது. முருகப் பெருமான், 'திகடச் சக்கரம்' என்று தொடங்கிக் கொடுக்க அதனையே முதலாகக் கொண்டு இந்நூல் பாடப்பட்டுள்ளது. இது 1. உற்பத்தி காண்டம், 2.. அசுர காண்டம் 3. மகேந்திர காண்டம்,

4. யுத்த காண்டம், 5. தேவகாண்டம், 6. தட்ச காண்டம் என்ற ஆறு காண்டங்களைக் கொண்டது. இதில் 10346 செய்யுட்கள் உண்டு. கந்தப் பெருமானது வரலாற்றை அறிவிக்கும் பரந்த நூல். இது சைவ சமயச் சிறப்பினையும் சிவ பரத்துவத்தையும் பல நீதிகளையும் கொண்டு திகழ்வது. காம லீலைகளைப் பற்றிய சில குறிப்புக்களும் இதில் உள்ளன. இதன் நடையும் சுவையும் கதலி பாகம் போன்றது. காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு. கச்சியப்ப சிவாசாரியார் தினம் தினம் பாடல்களைப்பாடிக் குமரப் பெருமான் திருவடிகளில் வைத்துத் திருக்கோயிலைத் தாளிட்டுச் சென்று மறுநாள் கோவிலைத்திறந்து அப்பாடல்களைப் பார்க்கும் போது அப்பாடல்கள் முருகப் பெருமானால் திருத்தப் பட்டிருக்கும்என்று கூறப் படுவதால் இந்நூலின் பெருமையினை மேலும் கூறவேண்டுமன்றே?

கந்தரந்தாதி = இந்நூல் வில்லிபுத்தூர் ஆழ்வாருக்கும், அருணகிரிநாதருக்கும் கல்வி சம்பந்தமானவாதம் நடந்தபோது அருணகிரிநாதரால் பாடப் பட்டநூல் என்பர். இதில் உள்ள பாடல்கள் மடக்கு என்னும் அணியால் அமைந்தவை. இவற்றிற்கு வில்லிபுத்தூரார் உரை கூறிக்கொண்டு வந்தும், 'திதத்தத்த' என்று தொடங்கும் திருப்பாட்குப் பொருள் கூற இயலாதுவிழித்தனர்என்பர். இதன் காலம் 15-ஆம் நூற்றாண்டு. இதில் 100 பாடல்கள் உள்ளன. இந்நூலுக்குரிய உரை வில்லிபுத்தூராருடையது என்பது ஆன்றோர் துணிபு.

கந்தரலங்காரம் = அருணகிரிநாதரால் பாடப்பட்டது. காலம் கி. பி. 15-ஆம் நூற்றாண்டு. முருகனது பெருமை, வேலின்மாண்பு மயிலின் சிறப்பு முதலியன இதில் பாடப்பட்டுள்ளன. செந்தமிழில்தன்னை வைதவர்களையும் முருகன் வாழ வைப்பவன் என்னும் குறிப்பு இந்நூலில் தான் உண்டு. முருகன் திருவருளைப் பெறுதற்கு இது உகந்த நூல்.

கந்தரனுபூதி = இது அருணகிரிநாதரால் பாடப்பட்டது. 51 பாடல்களையுடை

யது. பின்னல் சில பாடல்கள் எவராலோ பாடப்பட்டு இவற்றுடன் இணைக்கப்பட்டன. அவை அருணகிரியார்பாடல்கள் அல்ல என்பது அறிஞர் துணிபு. இந்நூல் நித்தம் பாராயணத்திற் குரியது. இதன் காலம் கி. பி. 15-ஆம் நூற்றாண்டு. கந்தன் அனுபூதிபெறத் துணை செய்ய வல்லது.

கந்தர் கலிவெண்பா = குமர குருபர சுவாமிகளால் பாடப்பட்டது. குமரகுருபரர் ஐந்து வயதுவரை ஊமையாக இருந்தனர். இதனைக் கண்ட பெற்றோர் திருச்செந்தூரை அடைந்து முருக வேண்ட முருகன் அருளால் குழந்தை பேசத் தொடங்கியது. அத்தருணம் இந்த நூலைப்பாடியருளினர் குமரகுருபரர். முருகனதுபிறப்புவளர்ப்பு பெருமை முதலியவற்றை இந்நூல் அழகு படக் கூறுகிறது. தினசரிபாராயணத்திற்குரியது. சைவசித்தாந்தக் குறிப்புக்கள் பலவற்றைக்கொண்டது. காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு.

கந்தர் சஷ்டி கவசம் = இது தேவராய சுவாமிகளால் பாடப்பட்டது. இதனை நித்தமும் நியமத்தோடு பாராயணம் செய்து வரின், பேய் பிசாசு ஆண்டா. வினைகள் தீமை செய்யா. மற்றும் எந்த விதமான இடுக்கண்களிலிருந்தும் விடுபடலாம். இதில் பல மந்திர எழுத்துக்களும் அடங்கியுள்ளன. காலம் 19-ஆம் நூற்றாண்டு.

கந்தர் நாடகம் = இராமாயணத்திற்கு ஒரு நாடகம் அமைந்ததுபோலவே கந்தன் வரலாற்றிற்கும் ஒரு நாடக நூலாக அமைந்தது. இது பால சுப்பிரமணிய கவி என்பரால் பாடப்பட்ட நூல். காலம் கி.பி.20-ஆம்நூற்றாண்டு.

கபிலரகவல் = இது கபிலர் என்பவரால் பாடப்பட்டது. ஆனால் இவர் சங்ககாலக் கபிலர் அல்லர் என்பது இந்நூலின் நடை கண்டுஅறியலாம். இதில் வள்ளிவருடன் பிறந்தவர் யார் யார் என்ற குறிப்பை அறியலாம். இது நல்லஉபதேசமொழிகளை உலகத்தார்க்கு உணர்த்துகிறது. மக்கள் வாழ்க்கை நிலையற்றது என்று கூறி உடனே நல்லது செய்ய வேண்டும்

என இது தூண்டுகிறது. காலத்தினைத் திட்டமாகக் கூறுதற்கு இல்லை.

கப்பற் கோவை = புதுக் கோட்டைக் கப்பலூர் என்னும் ஊரின் தலைவனான கருமாணிக்கன் என்பவன் மீது பாடப்பட்ட அகப் பொருட் சுவை அமைந்தநூல். இந்நூலாசிரியர் பெயர் தெரிந்திலது. இந்நூலில் உள்ள பாடல்களில் சில இலக்கண விளக்க உரையில் உதாரணமாக எடுத்தாளப்பட்டுள்ளன.

கம்பராமாயண முதற் செய்யுள் சங்கோத்தரவிருத்தி = இது ஒரு சைன நூல். காஞ்சிபுர வாசிகள் சிவஞான முனிவரிடம் கம்பராமாயணக் கவிகளின் சிறேஷ்டத்தைச் சிறப்பித்துப் பேசினர். அது கேட்ட சிவஞான முனிவர் அவர்களின் கொட்டத்தை அடக்கக் கம்பராமாயணத்திலுள்ள 'நாடிய பொருள் கைகூடும்' என்னும் செய்யுட்கு உரை கூறப்புகுந்து, அச்செய்யுளில் அமைந்த பொருள் முற்றிலும் தவறானது. என எடுத்துக்காட்டியுள்ளார். பின்னர்க் கம்பராமாயண அன்பர்கள் தாம் கம்பராமாயணக் கவியினைச் சிறப்பித்துக் கூறியது தவறு என்று கூறினர்க்குயாறு சிவ ஞான முனிவரை வேண்டினர். அதன்பின் அவரே அச் செய்யுளுக்கே சிறப்புடைய பொருள் உண்டு என்பதையும் இந்நூலில் எடுத்துக் காட்டி இனியாகிலும் அவ்வாறு கம்பராமாயணக் கவிதான் சிறப்புடையது என்றுகூறுதிருக்க அறிவு தொனுத்தினர். இத்தகைய சந்தர்ப்பத்தில் எழுதப்பட்ட நூலே இது. இதன் காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

கம்பராமாயணம் = கம்பரால் பாடப்பட்ட நூல். ராமனது வரலாற்றை அறிவிப்பது. பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம் சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களை யுடையது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட கவிகளையுடையது. இராமாவதாரம் என்னும் பெயரும் இந் நூலுக்கு உண்டுகாலம்கி.பி.12 ஆம் நூற்றாண்டு. இதுகற்றோர் இதயத்தைக் களிக்கச்

செய்யும் நூல். இந்நூலில் நாலாயிரப்பிரந்தக் கருத்துக்கள், சைவத் திருமுறைகருத்துக்கள், பஞ்சகாவிய கருத்துக்கள், திருக்குறட் கருத்துக்கள் அடங்கியுள்ளன. அதனால்தான் இந்நூல் கற்றவர்க்குச் சுவைதருகிறது. அது அதில் ஓர் அகப்பை முகந்து கொண்டேன் என்று கம்பரே கூறியுள்ளார்.

யோகசார் நிகண்டு = இது பழைய நிகண்டுகளில் ஒன்று. நிகண்டு என்பது சொற்களுக்குப் பொருள் உணர்த்தும் நூல். இது இக்காலத்திலுள்ள அகராதி போன்றது. ஆனால் இதுசெய்யுள் அமைப்பில் பொருளை அறிவிக்கும் முறையில் அமைந்தது. யோகசாரரால் இயற்றப்பட்டது. காலம் தெரிந்திலது.

கழிலோதி காளத்தி பதிகம் வெண்பா = இது சுக்கிரரால் பாடப்பட்டது. சுக்கிரர் இறைவனைத் வாதம் இட்டுக் குட்டை கோய் கொண்டு அது திரக் கயிலைக்குச் சென்றபோது இடையில் திருக்காளத்தி மலையில் தங்கி, இந்நூலைப் பாடினார். இது சைவத் திருமுறை 12 இல் 11-ஆம் திரு முறையில் இணைக்கப் பட்டுள்ளது. இதன் காலம் கடைச் சங்க காலம். ஆனால் இதில் கருத்து வேறு பாடு உண்டு. அதாவது இந்நூல் சங்கச் காலத்தைச் சுக்கிரரால் எழுதப்பட்டதன்று என்பது.

கருவூர் புராணம் = கணக்கர் மரபினர்களின் பூர்வ வரலாற்றை உணர்த்தும் நூல். இதனை அங்கு சாமிப்பிள்ளை என்பார் பாடியுள்ளார். காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு.

கலிங்கத்துப்பரணி = இது சயங்கொண்டார் என்பவரால் பாடப் பட்டது. பரணி என்பது போரில் 1000 யானைகளைக் கொன்ற வீரனைப் பற்றிப் பாடப் படும் நூல். முதற் குலோத்துங்கன் கலிங்கத்தை வென்ற வெற்றிச் சிறப்பைக் கூறும் நூல். இதில் பதினொன்று பகுதிகள் உள்ளன. உன்மையில் படை இரட்டிச் சென்று போர் செய்து வெற்றி கண்டவன் கருணாகரத் தொண்டைமான் என்னும் வீரனை முதல் அமைச்சனுவான். மந்திரியின் வெற்றியினை மன்னன் வெற்றியாக இங்

நூல்சிறப்பித்துக் கூறும். இதன் மூலம் சோழர் பரம்பரையினர் வரலாற்றுக் குறிப்பைக் காணலாம். போர்க்கள வர்ணனை பாலைநில வர்ணனை பேய்களின் தோற்றம், அவற்றின் சேஷ்டைகள் காளிகோயில் சிறப்பு, முதலானவற்றைக்காணலாம் இது பரணி நூற்களில் சிறந்தது. காலம் கி. பி. 11 - ஆம் நூற்றாண்டு. இதில் கடை திறப்பு, காளிக்குக் கூளி கூறியது, கூளிக்குக் காளி கூறியது, களம் பாடியது முதலான தலைப்புக்கள்உண்டு. இதில் 596 தாழிசைகள் உள்ளன. ஒவ்வொரு தாழிசையையும்புலவர் பாடிப்பொருள் விரித்தபோது கேட்ட குலோத்துங்க சோழன் ஒவ்வொரு பொன் தேங்காயைஉருட்டி புலவரைச் சிறப்பித்தான் என்பர்.

கலித்துறையந்தாதி = இது சுந்தரர் பாடியுள்ள திருத்தொண்டத் தொகையில் குறிப்பிடப்பட்ட சிவனடியார்களைப் பற்றித் தனித்தனிக் கலித்துறையாப்பில் பாடித் துதிசெய்த நூலாகும். இந்நூல் சேக்கிழார் பெரிய புராணம் பாடுதற்குப் பெருந்துணை செய்தது. இதனால் இந்நூல் பெரிய புராணத்திற்கு வழிநூல் என்று கூடக் கூறப்படுகிறது. பெரிய புராணத்தைநோக்க இது வகை நூலாகவும் உள்ளது. இதனைப் பாடியவர் நம்பியாண்டார் நம்பிகள். இந்நூல் சைவத் திருமுறை 12 னுள் 11 வதாகத்திகழும் பெருமை 10-யுடையது. காலம் கி.பி. 10ம் நூற்றாண்டு.

கலித்தொகை = 'கற்றார் ஏத்தும் கலி' என்னும் சிறப்புப்பெற்ற நூல். இது சங்கம் மருவிய எட்டுத்தொகைகளுள் ஒன்று. 150 கலிப்பாவால் இயன்றது. அகப் பொருள் சுவைமிக்க ஐந்திணைகளைப்பற்றிய செய்திகளை அறிவிப்பது. பாலைக் கலியினைப் பெருங்கடுங்கோனும், குறிஞ்சிக் கலியினைக் கபிலரும், மருதக் கலியினை மருதன் இளநாகனும், முல்லைக் கலியினைச் சோழன் நல்லுருத்திரனும், நெய்தல் கலியினை நல்லந்துவனாரும் பாடியுள்ளார். இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் நல்லந்துவனார்.

உரை எழுதியவர் நச்சினார்க்கினியர். கடைச்சங்க காலம். இதில் கூறும் குறளும் கூடிப்பேசும்பேச்சும், பட்டிமைகளும் ஆறும்பும், மற்றும் பல குறிப்புக்களும் படிக்கப் படிக்கச் சுவை தருவனவாகும்.

திருக்கோட்டுத்தண்டு = இது நிகண்டு நூல். இதில் சொற் பொருள் விளக்கம் காணப்படும். இது இப்போது கிடைத்திலது. இறந்து பட்ட நூற்களுள் ஒன்று. இலக்கண உரை நூற்களில் பெயர் அளவில் மேற்கோளாக எடுத்துக்காட்டப் பட்ட நூல். காலம் அறிதற்கு இல்லை.

திலைச் சிலேடை வெண்பா = இது சுப்பிரமணிய முனிவரால் பாடப் பட்டது. இதில் உள்ள சிலேடைகளென அமைந்த சொற் றொடர்கள் தமிழ் அறிவைப் பெருக்கிக் கொள்ளுதற்குத் துணைசெய்யவல்லன. இதில் வரும் சிலேடைத் தொடர்களில் "கண்டகரச் சாடும் கலிங்கையே" என்பது ஒன்று. அத்தொடர் கண்டகர் அச்சஞ்சாடும் கலிங்கையே என்றும், கண்டகரச்சாடும் கலிங்கையே என்றும் பிரித்து பொருள் தருதல் காண்க. காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு.

கலிங்கைப் பரணிப் பந்தந் தாதி = சிவஞான முனிவரால் பாடப்பட்டது. 100 பாடல்களைக் கொண்டது. காலம் கி.பி.18-ஆம் நூற்றாண்டு.

கல்லாடம் = இது கல்லாடர் என்பவரால் இயற்றப் பட்டது. 'கல்லாடம்படித் தவரோடு மல்லாடாதே', என்ற பழமொழியினால் இதன் அருமை பெருமைகளை அறியலாம். இதில் 100 அகவல் பாக்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலும் கேட்டபோது மதுரைச் சொக்கலிங்கப் பெருமானைத் தலை யசைத்து அசைத்து இன்புற்றார் என்று கூறப்படுகிறது. மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவையார் பாடல்களில் 100 பாடல்களைத் தேர்ந்து எடுத்துக் கொண்டு, அப்பாடல் களுக்குரியவிளக்கம்போல் இந் நூலைப்பாடியுள்ளார். இதற்கு யாவிலும் பெருமாள் பிள்ளை 30 பாடல் களுக்கு உரை எழுதியுள்ளார். மிகுதியான 63 பாடல்களுக்குப் புதுவை சுப்பராயமுதலியார் உரை

எழுதியுள்ளார். இந்நூலாசிரியர் சங்ககாலப் புலவரா, அன்றிவேறுளவரா என்பது ஆராய்தற்குரியதாக இருக்கிறது. ஆகவே, காலத்தை வகுக்க இடமில்லை.

கழுக்குன்றப்புராணம் திருக்கழுக்குன்றத் தலத்தின் வரலாற்றைக் கூறுவது. அந்தகக் கவி வீரராகவ முதலியாரால் பாடப்பட்டது. இதன்மூலம் அங்கு வந்து தினமும்சர்க்கரைப் பொங்கலே உண்டு செல்லும் இருகழுகுகளின் வரலாற்றை அறியலாம். மலையினமாண்பையும், தீர்த்த விசேடத்தையும், தலத்தின் பெருமையையும் அறிய இந்நூல் துணை புரியும்.

கழுமல மும்மணிக்கோவை = சீர்காழிப்பதியின்மீது பட்டினத்தடிகளால் பாடப்பட்டநூல். கழுமலம் என்பது சீர்காழிக்குரியபெயர்களில் ஒன்று. 30 பாடல்களைக் கொண்டது. பதினேராம் திருமுறையில் இணைக்கப்பட்டது. காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு. இது தோத்திர நூல்.

களவழி நாற்பது = சோழன் செங்கணான், சேரமான் கணைக்கால் இரும்பொறையைச் சிறையிட்டனன். இச்சிறையினின்றும் விடுதலைசெய்யப் பொய்கையார் என்னும் புலவர் இந்நூலைப் பாடினர். இந்நூல் 41 வெண்பாக்களைக் கொண்டது. இதில் செங்கணான் வீரம், போர்க்களவியல்பு முதலியன அழகுறப் பாடப்பட்டுள்ளன. காலம் கடைச்சங்ககாலம்.

க.ரி

காக்கை பாடினியம் = இது யாப்பு இலக்கண நூல். காக்கை பாடினியார் என்பவர் ஆசிரியர். யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாக எடுத்தாளப்பட்டநூல். காலம் கி. பி. 10 ஆம் நூற்றாண்டு.

காசிக்காண்டம் = இதுகாசியின் மான்மியத்தை அறிவிக்கும்நூல். அதிவீரராம பாண்டியர் இதனைப்பாடினர். கங்கை யாற்றின் மாண்பை இதில் அறியலாம். ஆசாரம். கற்புமுதலானவற்றைப் பற்றிய குறிப்புக்கள் இதில் உண்டு. காலம் கி.பி. 16-ஆம்நூற்றாண்டு. புராண வகையைச்சார்ந்த நூல்.

காசிக் கலம்பகம் = குமரகுரு பர சுவாமிகளால் பாடப்பட்டது. காலம் கி.பி. 17

ஆம் நூற்றாண்டு. இது தோத்திர நூல்.

நூறி ரகசியம் = மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையால் பாடப்பட்டது. காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு. சிதம்பர ரகசியம் போல் காசிரகசியம் அறிய இந்நூல் துணை செய்யும்.

காஞ்சி புராணம் = இதன் முற்பகுதி சிவஞான முனிவராலும் பிற்பகுதி அவர் மாணவர் கச்சியப்ப முனிவராலும் பாடப்பட்டது. இந்நூலில் பல சித்திரக் கவிகள் அமைந்துள்ளன. இந்நூலால் தொண்டை நாட்டுச் சிறப்பினை நன்கு தெளியலாம். திணைமயக்கச் செய்யுட்களின் பொருட் செறியும், ஐந்திணை வளங்களைப்பற்றிய செய்யுட்களின் பொருட் சிறப்பும், சுவை மிகவுடையன வாகக்காணப்படும். காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு. காஞ்சிபுரத்தின் மாண்பை அறிய இது துணைபுரியும் நூலாகும்.

காரெட்டு = மேகத்தைப் பற்றிய எட்டுப் பாடல்களைக் கொண்டநூல். இது பதினோராம் திருமுறையில் இணைக்கப் பட்டுள்ளது. பாடியவர் நக்கீரர். கடைச் சங்க காலம் என்பர்.

கார்நாற்பது = பதினெண் கீழ்க்கணக்கு நூற்களுள் ஒன்று. முல்லைத்திணைக் குரிய இருத்தல் என்னும் உரிப்பொருள் அமையப் பாடப்பட்டநூல். இதில் கார்கால வர்ணனை அழகுறப் பாடப்பட்டுள்ளது. நாற்பது பாடல்களைக் கொண்டது. இதனை மதுரைக் கண்ணங்கூத்தனார் என்பவர் இயற்றினார். கடைச்சங்க காலம்.

காவடிச்சிந்து = நல்ல இசையோடுகூடிய பாடல்களைக் கொண்டநூல். முருகப் பெருமானைப் பாடப்பட்டது. இதனைப் பாடியவர் அண்ணாமலை செட்டியார். காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு. இவரே அல்லாமல் துர்க்கை முத்துப் பிள்ளை என்பாரும் இவருக்குப்பின் ஒரு காவடிச்சிந்தைப்பாடியுள்ளார். ஆனால் செட்டியார் சிந்துக்குள்ள பெருமையினைப் புலவர் சிந்து பெறவில்லை. பூ என்பது எப்படித் தாமரையைக் குறிக்குமோ, அதுபோலக் காவடிச்சிந்து என்றால் செட்டியார் பாடலையே குறிக்கும்.

காவேரி புராணம் = திருச்சிற்றம்பல முனிவரால் பாடப்பட்டது. இதில்

காவிரியாறு உற்பத்தியான விதமும், இப்பெயருடன் அவ் ஆறு விளங்குதற்குரிய காரணமும் கூறப்பட்டுள்ளன. காலம் கி.பி. 19-ஆம்நூற்றாண்டு.

காழிக்கோவை = இது சீர்காழித் தலத்தின மீது பாடப்பட்டது. இதைப் பாடியவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு. இது அகப்பொருள் நூல்.

காளத்திநாதர்உலா = சேறைக் கவிராசபிள்ளையால் பாடப்பட்டது. இதன் மூலம் ஸ்வர்ணமுகியாற்றின் மேன்மை, காளத்தி மலையின் மாண்பு முதலானவற்றை அறியலாம். காலம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு.

காளத்திபுராணம் = இதனைக் கருணைப்பிரகாசர், சிவப்பிரகாசர், வேலையதேசிகர் ஆகியமூவரும் பாடிமுடித்துள்ளனர். கருணைப்பிரகாசர் பாயிரம் உட்பட முதல் ஐந்து சருக்கங்களையும், சிவப்பிரகாசர் கண்ணப்பர் சருக்கம், நக்கீரர் சருக்கம் ஆகிய இரண்டு சருக்கங்களையும், வேலையதேசிகர் இறுதியிலுள்ள சருக்கங்களையும் பாடியுள்ளனர். இதில் சிலந்தியும், யானையும் பாம்பும் இறைவனைத்துதித்த வரலாறும், நக்கீரர் வரலாறும், கண்ணப்பர் வரலாறும், வேசிப் பெண்கள் இருவர் பேறுபெற்ற வரலாறும் உண்டு. இதனைச் சிகாளத்தி புராணம் என்றும்கூறுவர். காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

கு

குசேலோபாக்கியானம் = இதனை வல்லூர் தேவராசப் பிள்ளை என்பவர் பாடினர். வல்லூர் தேவராசப்பிள்ளை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர். ஆதலின், திரு. பிள்ளை அவர்களே இந் நூலைப் பாடித் தம் மாணாக்கரது வேண்டுகோளுக் கிணங்கித் தம் பெயரால் வெளியிடாது தம் மாணவர் பெயரால் வெளியிட்டதாகக் கூறுவர். குசேலரது வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல். இவ் வரலாறு பாகவதத்தில் ஒரு கிளைக் கதையாக இருத்தலின், குசேலோபாக்கியானம் எனப் பட்டது. உபாக்கியானம் கிளைக்கதை. காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு.

குட்டித் தொல்காப்பியம் = இதுவே இலக்கண விளக்கம் ஆகும். இதன் குறிப்பினை இலக்கண விளக்கம் என்ற இடத்துக் காண்க.

குண்டலகேசி = குண்டல கேசி என்பவள் ஒரு வணிகக் கன்னிகை. அவள் புத்த குருவின் உபதேசம் பெற்று அருகசமயத்தை வாதில் வென்றவள். புத்தமதத்தை யாண்டும் பரவச் செய்தவள். இத் தகைய குறிப்புக்களை எல்லாம் இந்நூல் அறிவிக்கும். பௌத்த மத நூல்களுள் ஒன்று. இது சிவகசிந்தாமணிக்கு முன்னர் எழுந்த நூல் எனக் கருதப்படுகிறது. ஆகவே, இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது.

குமரேசசதகம் = நூறு அகவல் விருத்தத்தால் ஆன நூல். இதில் நீதி போதனைகள் கூறப்பட்டுள்ளன. இதில் காணப்படும் பாடல்களின் ஈறு மலை மேவு குமரேசனே என்று முடிதலின் இது குமரேச சதகம் எனற பெயரினைப்பெற்றது. குமரேசன் ஆவான், முருகன் என்பதைக் கூறவேண்டா அன்றே? இதன் ஆசிரியர் குருபாததாசர். காலம் கி. பி. 18 ஆம் நூற்றாண்டு.

குமாரசாமியம் = சைவ சித்தாந்தசரபம் என்ற பெயர் பெற்ற பரம்பன் சுவாமிகளால் பாடப்பட்டது. குமாரப் பெருமானுடைய வரலாற்றைக் கூறுவது. இந்நூலில் அருணகிரிநாதரைப்பற்றி அடிக்கடி கூறப்பட்டிருத்தலைக் கொண்டு இந் நூலாசிரியர் அருணகிரிநாதர்மீது கொண்டிருந்த அன்பின் பெருக்கை அறிந்து கொள்ளலாம். காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

குமாரதேவர் சாத்திரம் = இது ஒரு தொகுப்பு நூல். இதில் அத்துவித உண்மை. விஞ்ஞானசாரம். பிரமாணபூதி விளக்கம், மகாராசா துறவு, ஆகம நெறியகவல், வேதநெறி அகவல், பிரமாணுபவ அகவல், வேதாந்த தசா அவத்தைக் கட்டளை, வேதாந்ததச காரியக்கட்டளை. ஞான அம்மானை, பிரமசித்தி அகவல். உபதேச சித்தாந்த கட்டளை, சிவதரிசன அகவல், சமரச அகவல், சுத்தசாகம், சகசநிட்டை ஆகிய நூல்கள் உள்ளன. இவற்றுள் மகாராசா

துறவு என்னும் நூலே பலராலும் படிக்கப்படுவது. இவற்றின் ஆசிரியர் குமார தேவர் ஆவார். காலம் 18 ஆம் நூற்றாண்டு.

கும்பகோணப் புராணம் = ஒப்பிலாமணிப்புலவர். இதன் ஆசிரியர். கி. பி. 18 ஆம் நூற்றாண்டு. மகாமக தீர்த்த விசேடத்தை அறியலாம்

குருபரம்பரை = பின்பு அழகியபெருமாள்சியர் இதன் ஆசிரியர் வைஷ்ணவப் பெருமக்களின் வாலாறு கூறும்நூல். காலம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு.

குருபூசை மான்மியம் : சைவ சமயப் பெரியோர்கள் இறைவன் திருவடியடைந்தநாளே குருபூசை தினம் எனப்படும். அந்நாளில் அவர்களோடிணைந்து வழிபடலும், அடியார்களுக்கு அன்னம் இடலும் குருபூசை நாளில் செய்யவேண்டிய செயல்களாகும். இப்படிச் செய்வதனால் ஏற்படும் பயனையும் பெருமையையும். கூறுவதே இந்நூல். இந் நூலாசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. காலம். கி.பி. 19ஆம்நூற்றாண்டு.

குலால புராணம் = மச்சமுனி என்பவரால் பாடப் பட்டது. மட்பாண்ட வகுப்பினர் மாண்பைக் கூறுவது. காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு.

குலோத்துங்கசோழன் கோவை

குலோத்துங்கன் உலா

குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்

= ஒட்டக் கூத்தரால் பாடப்பட்டது. காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

குறிஞ்சிப் பாட்டு = சங்கம் மருவிய பத்துப் பாட்டு என்னும் தொகை நூல்களுள் ஒன்று. இதனைப் பெரிய குறிஞ்சி என்றும் கூறுவர். வடமொழி உணர்ந்த வடநாட்டு மன்னன் பிருகதத்தன் தமிழ்மொழியின்சுவையை உணரக்கபிலரால் பாடப்பட்ட நூல். இதனுல் பல வகை மலர்களின் பெயரை அறியலாம் 261 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆனது. இது கடைச்சங்க காலத்தது. மாலைக்காலத்தில் பறவைகளும் விலங்குகளும் தம்தம் இருப்பிடம் வந்து சேரும் நிகழ்ச்சிகளையும் அப்போதுமக்கள்செய்யும்

செயல்களையும் படிக்கும் போது இன்பம் ஊட்டுவன வாகக் காணப்படும். இதில் 99 வகை மலர்களின் பெயர்களைக் காணலாம்

நற்றிரட்டு = இது ஒரு தொகுப்புநூல். இதனைத் திரட்டியவர் தத்துவராய சுவாமிகள். திரட்டிய காலம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு. இதில் உள்ள பாடல்கள் வேதாந்த பரமான கருத்துக்களைக் கொண்டது. சித்தாந்த சுவாமிகள் தாம் எழுதிய உரைகளில் பெரிதும் இந்நூலில் உள்ள பாடல்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

நற்றொகை = சங்கம் மருவிய எட்டுத்தொகை நூற்களில் ஒன்று. இதில் 400 பாடல்கள் உண்டு. இது அகப் பொருட் சுவையினைத் தழுவியது. இந்நூலில் 205 புலவர்கள் பாடிய பாடல்கள் உள்ளன. அனைத்தும் அகவற் பாவால் இயன்றவை. கடவுள் வாழ்த்துப்பாடல் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப்பட்டது. இதுபூரிக்கோ என்பவனது வேண்டுகோளால் தொகுக்கப்பட்டது. இந்நூலிற்குப் பேராசிரியர் உரை உண்டு என்பர். அவ்வுரை யுள்ளும் 20 பாடல்கட்கே அவர்உரை எழுதினர் என்பர். அவ்விருபது செய்யுட்களுக்குப்பின்னர் நச்சினார்க்கினியர் உரை எழுதினர் என்பர். இவ்வுரைகள் இதுபோது கிடைத்தில. ஆகவே, டாக்டர். சுவாமிநாத ஐயர் இதற்குச் சிறந்த உரை எழுதியுள்ளார். செளரிப் பெருமாள் அரங்கசாமி ஐயங்காரும் இதற்கு உரை எழுதியுள்ளார். கலாநிலையம் என்னும் பத்திரிகையில் இராமரத்தின ஐயர் என்பவரும் உரை எழுதி முடித்துள்ளார். இந்நூல் கடைச் சங்ககாலத்தது. நாலடி சிறுமையும் எட்டடி பெருமையும் கொண்ட பாடல்களைப்பெற்றது. அதனால் தான் இது குறுந் தொகை எனப்பட்டது. இதில் தருமி என்பவனுக்குச் சிவபெருமான் பாடித்தந்த "கொங்கு தேர்" என்று தொடங்கும் பாடலும் உள்ளது. இயற்கையின் விழைதங்களை அறியப் பெருந்துணை செய்யும் நூல் இது.

குற்றாலத்தலபுராணம் = திரிகூட ராசப்பக் கவிராயரால் பாடப்பட்டது, காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு. இதன் வாயிலாக அங்குள்ள நீர்வீழ்ச்சிகளின் அருமை பெருமைகளையும், அந்நீர் வீழ்ச்சிகள் தோன்றும் மலைகளின் வளங்களையும் நன்கு உணரலாம். இந்நூலில் உள்ள நாட்டு வளனும் நகர வளனும் படித்து இன்புறுதற் குரியவை. இந்நூலில் கற்பனைநிகழ்ச்சியும் உண்டு.

கூ

கூர்ம புராணம் : அதிவீர ராம பாண்டியர் என்பவரால் இயற்றப்பட்டது. இதன் காலம் கி. பி. 16 ஆம் நூற்றாண்டு. இதனை வரதுங்க பாண்டியர் இயற்றினர் என்றும் கூறுவதுண்டு. இது சைவ பரத்துவம் கூறும் நூல்களில் ஒன்று.

கூவப் புராணம் = கூவம் என்பது கூவரம் என்னும் சொல்லேயாகும். கூவரமாவது தேரின் ஏர்க்கால். சிவபெருமான் திரிபுரம் எரித்தபோது, அமைந்திருந்த தேரின் ஏர்க்கால் இத்தலத்தில் உடைந்த காரணத்தால் இப்பெயர்பெற்ற தென்பர். இதுபோன்ற வரலாறுகள் பல இதில் கூறப்பட்டுள்ளன. துறை மங்கலம் சிவப் பிரகாச சுவாமிகளால் பாடப்பட்டது. காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

கூளப்பநாயக்கன் காதல் = இது ஒரு சிற்றின்பநூல். இதில் தாசிகளின் சாகசம் இன்னின்ன என்பன விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. தாசிகளின்சேர்க்கையால் ஏற்படும் துன்பங்களும் இதில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. படிக்கச் சுவை தருவது. இதன் ஆசிரியர் அட்டாவதானி சுப்பிரதீபக் கவிராயர். காலம கி.பி. 18 ஆம் நூற்றாண்டு.

கை

கைந்நிலை = இதனைப் பதினெண் கீழ்க்கணக்கு நூற்களுள்ஒன்று என்பர். இந்நூலாசிரியர் மாறோக்கத்து முள்ளி நாட்டு நல்லூர் காவிதியார் மகனார் புல்லங்காடனார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீதிநூல்வகையைச் சார்ந்தது. இது கடைச் சங்க காலத்து நூல்.

கைலாசநாதர் சதகம் = நூறு பாடல்களையுடைய ஒரு நீதி நூல். ஆசிரியர் சிதம்பரவாணர் என்பவர். கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

கைலைக்கலம்பகம் = குமரகுருபரசுவாமிகளால் எழுதப்பட்ட நூல். காலம் கி. பி. 18 ஆம் நூற்றாண்டு

கைவல்லிய நவநீதம் = இது ஒரு வேதாந்த நூல். இதனை இயற்றியவர் தாண்டவராய சுவாமிகள். காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு. உலகில் உள்ள பொருள்கள் நிலையுள்ளவை அல்ல என்பதை வெண்ணெய் போல் எளிதாகப் புரியும் வகையில் எடுத்துக் கூறிப் பரம் பொருள் ஒன்றே நிலையுள்ளது என்ற கருத்தை நிலைநாட்டிச் செல்வதால் இது இப்பெயர்பெற்றது.

கொ

கொங்குமண்டல சதகம் = இது விசயமங்கலம் காரமேகக் கவிஞர் என்பவரால் பாடப்பட்டது. இச் சதகத்தால் கொங்கு நாட்டிற்குத் தொடர்புடைய புலவர்களைப் பற்றிய குறிப்பு முதலானவற்றை அறியலாம். காலம் அறிதற்கு இல்லை

கொங்கு வேள்மாக்கதை = இந்நூல் கொங்கு நாட்டில் வாழ்ந்த வேளாளர் தலைவருள் ஒருவரால் இயற்றப்பட்டநூல். இதனைப் பெருங்கதை என்றும் கூறுவர்- இதன் முதன் நூல் குணாட்டியர் என்பவரால் பைசாசமொழியில் இயற்றப்பட்டது. கோசம்பி நகரத்தரசன் உதயணன் என்பான் வரலாற்றைக் கூறுவது. காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டு. இந்நூல் ஆசிரியர் பெயர் தெரிந்திலது. கொங்கு வேள் என்பது அவரது பெயராக இருக்கலாமோ என்று ஐயுறுகிறது. இவர் ஊர் விசயமங்கை.

கொடிக்கவி = இது சைவசித்தாந்த சாத்திர நூல்களில் பதினான்கனுள் ஒன்று. கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியரால் பாடப்பட்டது. சிதம்பரப் பெருவிழாவில் துஜஸ் தம்பத்தில் கொடியேற இந் நூலைப் பாடினார். காலம் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு.

கொடுந்தமிழ் = ரெவரெண்டு பெஸ்கி என்பார் வீரமா முனிவர் என்ற பெயருடன் தமிழ் நாட்டில் திகழ்ந்தபோது எழுதிய நூல். காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

கொலை மறுத்தல் = சிவகாருண்யத்தை மேற்கொண்டு நற்கதிபெற விரும்பின், கொலை செய்தல் கூடாது என்பதை விளக்கமுற அறிவிக்கும் நூல் இதுவேயாகும். ஆசிரியர் சாந்தலிங்க சுவாமிகள். இந்நூலுக்குத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் உரை எழுதியுள்ளார். காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

கொன்றை வேந்தன் = நீதிகளை அறிவிக்கும் நூல். ஔவையாரால் பாடப்பட்டது என்று கூறப்பட்டு வருகிறது. ஔவையார் பலர் இருந்தவராகக் கருதப்படுதலின், எந்த ஔவையார் இதனை எழுதியவர் என்பதைக் கூறமுடியவில்லை. இந்நூலின் கடவுள்வாழ்த்துக் 'கொன்றை வேந்தன்' எனத்தொடங்கின் இப்பெயர் பெற்றது.

கோ

கோகிலாம்பாள் கடிதங்கள் = தூய செந்தமிழ் நடையில் மறைமலையடிகளால் எழுதப்பட்ட உரை நடை நூல். காலம் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு. ஆங்கிலத்தில் பல கடிதங்கள் இலக்கியங்களாக உள்ளன. அம்முறையினைப் பின் பற்றி இந்நூல் எழுதப்பட்டது.

கோடகூரக் கோவை = கும்பகோணத்திற்கு அருகேயுள்ள பாடல்பெற்ற தலமாகிய கொட்டையூர் மீது சிவக்கொழுந்து தேசிகரால் பாடப் பட்டது. காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு. அகப்பொருள் தழுவிய நூல்.

கோபிநாதர்ப் புராணம் = மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையால் பாடப்பட்டது. காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு.

கோயில் நான்மணி மாலை = சிதம்பரத்தின்மீது பட்டினத்தடிகளால் பாடப்பட்டது. நாற்பது பாடல்களையுடையது. காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு.

நாயில் புராணம் = சிதம்பரத்தைப் பற்றிய புராணம். கொற்றவங்குடி உமாபதி சிவாசாரியரால் பாடப்பட்டது. கி. பி. 14-ஆம் நூற்றாண்டு. நடனச் சிறப்பு. சிதம்பர மான்மியம் முதலான வற்றை அறிய இது துணை செய்யும்.

நாயில் திருப்பண்ணியர் விருத்தம் = சிதம்பர நடராஜர் மீது பாடப்பட்ட நூல். ஆசிரியர் நம்பியாண்டார் நம்பிகள். காலம கி. பி. 11 ஆம் நூற்றாண்டு. 11-ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்ட நூல்களுள் ஒன்று. இது தோத்திர நூல்.

நாப் பிரசாதம் = நக்கீரர் சொக்கலிங்கப் பெருமானுடன் வாதாடிய காரணத்தால் குட்டநோய் பெற்றபோது இறைவனுக்கு எழுந்த கோபம் தணிய இது பாடப்பட்ட நூல். ஆசிரியர் நக்கீரர். 11-ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்ட நூல்களுள் ஒன்று. சிவபெருமானது வீரச்செயல்களும், அவர் அன்பர்கட்குச் செய்த அருட் செயலும் இதில் பாடப்பட்டுள்ளன.

கோவிந்த சதகம் = இதனை நாராயணபாரதி என்பார் பாடினர். காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு. இது நீதிநூல்.

ச

சங்க இலக்கியம் = இது ஒரு தொகுப்பு நூல். சங்க நூற்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்துப் பதிப்பித்து வெளியிடப் பட்ட நூல். இதனைச் சைவ சித்தாந்த சமாஜத்தார் வெளியிட்டனர். காலம் 20-ஆம் நூற்றாண்டு.

சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும் = இது ஓர் உரை நடை நூல். தமிழ்ச் சங்க வரலாற்றுச் சுருக்கத்தையும் முத்தமிழ் இயல்புகளையும் மற்றும் பல தமிழ் மொழியினைப் பற்றிய சிறந்த குறிப்புக்களையும் கொண்டு திகழும் நூல். ஆராய்ச்சியாளர்களுக்குப் பெருந்துணை செய்யவல்லது. எழுதியவர் டாக்டர் சாமிநாதையர். காலம் கி.பி. 20-ம் நூற்றாண்டு.

சங்கரசோழன் உலா = இது ஒட்டக்கூத்தரால் பாடப் பட்டது. காலம் கி. பி. 12-ம் நூற்றாண்டு. அகப் பொருள் தழுவிய நூல்.

சங்கர நாராயணத் திரட்டு = சுயம்பிரகாச யோகியார் என்பவர் தேவாரம், திருவாய்மொழியாகிய இரு பெருந்தோத்திரநூல்களிலிருந்து திரட்டிய 1100 பாடல்களைக் கொண்டு 52 அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்ட நூல். சைவசமய பரமாகவும், வைஷ்ணவ சமய பரமாகவும் உள்ள பாடல்களின் தொகுப்பு இதில்காணப்படுதலினால் இப்பெயர் பெற்றது. தொகுக்கப்பட்ட காலம அறிதற்கு இல்லை.

சங்கற்ப நிராகரணம் = இது சைவ சித்தாந்த சாத்திரம் 14 களுள் ஒன்று. இதனை எழுதியவர் கோற்றங்குடி உமாபதி சிவாசாரியர். இதற்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் உரை எழுதியுள்ளார். காலம் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு. இந்நூலில் மாயாவாதி ஐக்கியவாதி முதலான வாதிகளைத் தர்க்க முறைப்படி மறுத்துச் சைவ சித்தாந்த மேன்மையை அறிவித்திருப்பதை அறியலாம். இப்பெயரால் கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் திகழ்ந்த இராமானந்த சுவாமிகளும் ஒரு நூலியற்றியுள்ளார்.

சதிவண்ணபோதம் = இது ஒரு வேதாந்தநூல். இதனைத் தத்துவராயர் என்பவர் பாடினர். காலம் கி. பி. 15-ஆம் நூற்றாண்டு. சதிவண்ணன் என்பவன் இயல்வழியில் நடந்து பெருநோயுற்று வருந்த அவன் நல்வாழ்வு அடைய எழுதப்பட்ட நூல்.

சடகோபர் அந்தாதி = கம்பராமாயண பாடப்பட்டது. கம்பர் தாம் எழுதிய இராமாயணத்தைத் திருவரங்கத்தில் அரங்கேற்றியபோது அரங்கர் 'நந்தம் சடகோபர் மேற் பாடினையோ?' என்று கேட்டபோது, இந்நூலைப் பாடினர். சடகோபர் என்பார் நம்மாழ்வார். காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு.

சதுர அகராதி = ரெவரண்ட் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் எழுதியநூல். இந்நூல், தமிழில் உள்ள பெயர் வினை, இடை, உரிச் சொற்களுக்குரிய சொற் பொருள் விளக்கம் தரும் நூல். காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

இது ஆங்கில மொழியில் அமைந்த அக்ராதி போலத் தமிழ் மொழியிலும் அகராதி அமைய வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆசிரியரால் தொகுக்கப்பட்ட நூல் ஆகும். தமிழில் முதல் முதல் உண்டான அகராதி இதுவே ஆகும்.

சந்திரவாணன் கோவை = பிறவிக் குருடராக விளங்கிய அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பவர் பாடிய நூல். காலம் கி. பி. 17-ம் நூற்றாண்டு. அகப்பொருள் தழுவிய நூல்.

சம்பந்தர் பிள்ளைத்தமிழ் = சைவ சமய குரவர்கள் நால்வருள் ஒருவரான திருஞான சம்பந்தர் மீது பாடப்பட்ட பிள்ளைத் தமிழ். இதனைப் பாடியவர் மாசிலாமணித் தேசிகர். காலம் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு.

சரபோசிராஜன் குறவஞ்சி = கொட்டையூர் சிவக் கொழுந்துதேசிகர் பாடிய நூல். இது தஞ்சை பெரிய கோவில் திருவிழாவின்போது, நாடகமாக நடிக்கப்பட்டு வந்தது. சரபோசி மகாராஜன் காலத்திலேயே இந்நூல் இயற்றப்பட்டது. காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு. நாடக இலக்கிய வகையைச் சார்ந்தது. படிக்கச் சுவை தரும் நூல்.

சா

சாகுந்தல நாடகம் = இது காளிதாசர் இயற்றிய வடமொழி சகுந்தல நாடகத்தைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட உரை நடை நூல். இதைத்தொடர்ந்து சாகுந்தல நாடக ஆராய்ச்சி என்னும் நூலும் எழுதப்பட்டது. இவ்விரு நூற்களால் நாடகத் தோற்றம் காளிதாசர் காலம், மதம் முதலான அரிய குறிப்புக்கள் காணக கிடைக்கும். இந்நூற்கள் ஆராய்ச்சியாளர்க்கட்குப் பெருந்துணையாகும். இவ்விரு நூற்களின் ஆசிரியர் மறைமலையடிகள் என்னும் சுவாமி வேதாசலம் என்பவர். காலம் கி. பி. 20-ம் நூற்றாண்டு

சாதவாகனம் = செய்யித் தோனுல் பெயர்பெற்ற

நூற்களுக்கு இது மேற் கோளாகத் தரப்பட்ட நூல். இது இதுபோது கிடைத்திலது. மயிலை நாதர் இதனை நன்னூல் உரையில் குறிப்பிடுவ தனல். இது அவருக்கும் முற்பட்டதாகும். மயிலை நாதர் காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு.

சி

சிதம்பர சபாநாதர்புராணம் = சிதம்பரநடராஜரது மான் மியத்தைக் கூறும் நூல். இதனைச் சபாபதிநாவலர் என்பார் எழுதியுள்ளார். சிதம்பரத்தையும், நடரா சர் நடனத்தின தத்து வத்தையும் அறியத்துணை செய்யும் புராண நூல் இதன் காலம கி. பி. 19-ஆம் நூற்றாண்டு.

சிதம்பரச்செய்யுட்கோவை = யாப்பிலக்கண விதிக்கு மேற்கோளாக உள்ள பாடல்கள் பெரும்பாலும் சைனசமயச் சார்புடை யனவாக இருத்தலை அறிந்த குமரகுருபரசுவா மிகள், யாப்பிலக்கணத் திற்கு மேற்கோள் பாடல் கள் சைவசமயப் பரமாக இருத்தல் வேண்டும் என்ற குறிக்கோளுடன் இந்நூல் அவரால் பாடப் பட்டது. இலக்கியச்சுவை யும், சைவசித்தாந்த கருத் துக்களும் நிறைந்த நூல். ஒருவர், எந்தாய் என்னும் சொற்களின் நயத்தை இந்நூலில் காணலாம். காலம கி. பி. 18-ம் நூற் றாண்டு. இது தோத்திர நூல்.

சிதம்பரப்பாட்டியல் = பாட்டி யல் என்பது 96 வகைப் பிரபந்தங்களை எப்படிப் பாடப்படுதல் வேண்டும் என்ற முறைகளையும், ஒரு நூலின் தொடக்கச் செய் யுளின் முதல் எழுத்து, சீர் முதலானவை எப்படி அமையவேண்டும் என்ற முறைகளையும் அறிவிக் கும நூல். இம்முறையில் பல நூல்கள இருக்கின் றன. அவற்றுள் ஒன்று இது. இதனைப்பரஞ்சோதி முனிவர் எனபார் இயற்றி யருளினர். காலம்கி.பி.16-ஆம் நூற்றாண்டு. பாட்டி யற் நூற்களால் அழுத எழுத்துக்கள் இன்ன நச் செழுத்துக்கள் இன்ன என்பன போன்ற குறிப் புக்களையும் அறியலாம்.

சிதம்ப புராணம் = சிதமபர மான்மியம் உணர்த்தும் நூல். இதன் ஆசிரியர் திருமூலநாதர் எனபவர்.

காலம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு.

தம்பர மும்மணிக் கோவை- மூப்பது பாடல்களைக் கொண்ட நூல். சைவசித்தாந்த கருத்துடைய நூல். குமரகுருபரசுவாமிகளால் எழுதப்பட்டது. காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு. இது தோத்திர நூல்

சித்தாந்த சாத்திரம் = சைவசித்தாந்த சார்பான 14 நூறகளின் தொகுதியே சித்தாந்த சாத்திரம் எனப்படும். இதுவே மெய்கண்ட நூல் என்னும் கூறப்படும் சிறப்பு வாய்ந்தது. இத் தொகுப்பில் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது. உண்மை விளக்கம், சிவப்பிரகாசம். திருவருட்பயன், விஞ வெண்பா, போற்றிக் கலி வெண்பா, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை விளக்கம், சங்கற்ப நிராகரணம் அடங்கியுள்ளன. பதி, பசு, பாசங்களைப்பற்றிய குறிப்புக்கள், பஞ்சாட்சர மாண்பு, சுத்தாத்துவித சைவசமய மேம்பாடு முதலானவற்றை அறியத் துணைசெய்யும் தொகுப்பு நூல். இப்பதினான்கு நூற்களையும்ஒன்று சேர்த்துத் தருமபுர ஆதீனத்தார் வெளியிட்டுள்ளார்.

சித்தாந்த சிகாமணி = சுத்தாத்துவிதமாகிய சைவசித்தாந்தகருத்துக்களைக் கொண்ட சிறந்த நூல். இதன் ஆசிரியர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு. இது பெயரைக்கொண்ட நூல் அம்பலவாண தேசிகர் என்பவராலும் இது நூற்றாண்டில் பாடப்பட்டுள்ளது.

சித்தாந்த பிரகாசிகை = சைவசித்தாந்த உண்மைகளை வடமொழியில் எழுதப்பட்ட நூல். இதன் ஆசிரியர் சர்வான்மசம்பு சிவாசாரியார். இதனைச் சிவஞான சுவாமிகள் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அதன் காலம் 18 ஆம் நூற்றாண்டு.

சித்தாந்த வசன பூஷணம் = சைவ சித்தாந்த கருத்துக்களை வசன நடையில் எல்லோரும் எளிதில் புரிந்துகொள்ளும் நிலையில் எழுதப்பட்ட நூலாகும். ஆசிரியர் பூவை கலியாணசுந்தர முதலியார்

ஆவார். காலம் கி.பி. 20-ஆம் நூற்றாண்டு

சித்தாந்த தீபம் = சங்கராசாரிய சுவாமிகள் அத்வைத கொள்கையர் ஆயினும், சைவ சித்தாந்தக் கொள்கையினையும் தம்மது ஆழ்ந்த கருத்தாகக் கொண்டவர் என்பதற்கு இந்த நூலே போதிய சான்றாகும். இது வடமொழியில் உள்ளது இதனைத் தமிழ்மொழியில் ராமசந்திரசாஸ்திரி என்பவர் மொழிபெயர்த்துள்ளார். மொழிபெயர்ப்பின் காலம் கி. பி. 20-ம் நூற்றாண்டு. இதனால் "ஒரும வேதாந்தத்து உச்சியில் பழுத்துச்சாரம் கொண்ட சைவ சித்தாந்தம்" என்பது உண்மை ஆகின்றதல்லவா?

சிந்தனைக் கட்டுரைகள் = தூய செந்தமிழ் நடையில் கட்டுரை எழுதப்படுவோர்க்குப் பெரிதும் துணைசெய்யும் நூல். ஆங்கில கட்டுரைகளைத் தழுவி எழுதப்பட்டது. இதனை எழுதியவர் மறைமலைஅடிகள். காலம் கி.பி. 20-ம் நூற்றாண்டு.

சிலப்பதிகாரம் = ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. நாடகத்தமிழிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது. நூலை இதனை உரைநடையில் பாட்டுடைச்செய்யுள் என்றும், முத்தமிழ் விரவிய நாடகக்காப்பியம் என்றும் கூறுவர். கோவலன் வரலாற்றைக்கூறும் நூல். இதில் புகார் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற மூப்பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு காண்டமும் காதைகள் என்ற சிறு பிரிவுகளையும் கொண்டது. ஆசிரியர் இளங்கோ அடிகள். இதற்கு அடியார்க்கு நல்லார் என்பவர் சிறந்த உரை எழுதியுள்ளார். பழைய குறிப்பு உரையும் இதற்குஉண்டு. கற்புடைப் பெண்டிரை உயர்ந்தோர் ஏத்துவர் என்பதும், அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாக இருந்து அழிக்கும் என்பதும், ஊழ்வினை உரியவரை உண்பிக்கச் செய்யும் என்பதும் இந்நூலால் அறியப்படும், சீரிய கருத்துக்களாம். இதன்காலமகடை சங்ககாலம். பழங்காலத்துத் தமிழ் நாட்டின் நாகரிகத்தை அறிய இந் நூல் துணை செய்யும் அரிய இசை நாடகங்களைப் பற

திய குறிப்புக்களையும் இந் நூலால் உணரலாம்.

எழுபது = கம்பர் பாடிய தாகக் கருதப்படும் நூல். வில்லின் மாண்பை உணர்த்தும் நூல். காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

கீதை = அகத்தியரால் எழுதப்பட்ட நூல் என்பர். முழுமுதற் பரம் பொருள் சிவனே என்பதை உணர்த்தும் நூல்.

சிவ வெண்பா = சென்ன மல்லயர் என்பவரால் எழுதப்பட்ட நூல். இந்நூலின் ஒவ்வொரு வெண்பாவின் ஈற்றிலும் ஒவ்வொரு திருக்குறள் அமைந்து, அக் குறட் பொருட்களை எடுத்துக் காட்ட ஒவ்வொரு வரலாற்றுக் குறிப்பும் கொண்டு திகழும் நூல். காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

சிவஞானசித்தியார் = மெய் கண்ட நூல்கள் எனப்படும் சித்தாந்த சாத்திரம் 14 களுள் ஒன்று. சிவஞான போதத்திற்குச் செய்யுள் வடிவில் விளக்கம் கூறும் நூல். இதில் சுபக்கம் பர பக்கம் என்ற இரு பிரிவுகள் உள்ளன. சுபக்கம் சைவ சித்தாந்த சிறப்பையும், பரபக்கம்பிற சமயக் கொள்கைகளை எடுத்துக் காட்டி அவற்றை மறுத்துச் சைவசித்தாந்தகொள்கையினை நிலை நிறுத்தும். இதன் ஆசிரியர் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள். காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு. இந் நூலுக்குச் சிவஞானமுனிவர் பொழிப்புரை எழுதியுள்ளார். சுபக்கத்திற்கு ஞானப்பிரகாச தேசிகரும், மறைஞான தேசிகரும் பரபக்கத்திற்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் என்பவரும் உரை எழுதியுள்ளார். இந் நூலுக்கு ஞான பரண உரை ஒன்று வெள்ளியம் பலத்தம்பிரானால் எழுதப்பட்டது. பதவுரை சுப்பிரமணிய தேசிகரால் எழுதப்பட்டது. விருத்தியுரை சிவாக்கர யோகிகளால் எழுதப்பட்டது. இந்நூலால் பதிபசு, பாச இலக்கணங்களையும். சைவசித்தாந்த உண்மைகளையும், மேன்மைகளையும் நன்கு உணரலாம். இந் நூலில் உள்ள செய்யுட்களில் ஒன்றான பாதி விருத்தமே சித்தாந்த

உண்மையை உணர்தற்குப் போதுமானதுஎன்று தாயுமானவரே கூறுவாராஞல், இதன் சிறப்பைக் கூற வேண்டுவதில்லை. இந்நூலின் சுபக்கப் பாயிரச் செய்யுள்ஒன்றில்வரும் எடுத்து என்னும் சொல்லுக்குப் பேருரை எழுதி ஒருதனிநூலாக்வடநூற் கடலும், தென்னூற் கடலும் நிலை கண்டுணர்ந்த சிவஞான முனிவர் வெளியிட்டுள்ளார் எனில் வேறு சிறப்புயாது கூற வேண்டும்?

சிவஞானபோத உதாரண வெண்பா = இந் நூல் தனித்து விளங்குவது அன்று.சிவஞானபோதத்தில்வரும் 12 சூத்திரங்களில் கூறப்பட்ட கருத்துக்களுக்கு உதாரணமாகப் பாடி அமைக்கப்பட்டது. 81 வெண்பாக்கள் இப்பெயருடன் விளங்குகின்றன. சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்க மெய்கண்டாரால் பாடி அமைக்கப் பட்டவை. சிவஞான சித்தியார் போன்ற நூற்களின் கருத்துக்களுக்கெல்லாம் முன் வழி காட்டியாய் இருப்பன. காலம் கி: பி. 13-ஆம் நூற்றாண்டு.

சிவஞான போதம் = இது சுத்தாத்துவிதம் எனப்படும் சைவ சித்தாந்த முடிவை விளக்கிக் கூறும் 12 சூத்திரங்களைக்கொண்டது. அளவில் சிறியதாயினும் கருத்தில் மிகப் பெரியது. பிற சமயக் கொள்கைகளை எல்லாம் தர்க்க முறைப்படி கண்டித்துச் சைவசித்தாந்தக் கொள்கைகளை ஆணித்தரமாக நிலை நாட்டிக் கூறும் நூல். இதனை இயற்றியவர் மெய்கண்ட சிவாசாரிய சுவாமிகள். இதற்குப் பாண்டிப் பெருமாள் உரை எழுதியுள்ளார். இதற்குச் சிற்றுரையும் பேருரையும் சிவஞான முனிவரால் எழுதப்பட்டுள்ளன. பேருரை மாபாடியம் என்று கூறப்படும். சிவஞான சித்தியார் என்பது இந்நூலிற்குச் சிறந்த உரை கூறுவது போன்று அமைந்த நூல். பதி, பசு, பாச உண்மைகளையும் பதியைப் பசு அடையும் வழி, பாசத்தின் இயல்பு முதலான பலவும் தருக்க முறையில்

அறிவிக்கும் நூல். குரு வின் மாண்பு. சிவவேடப் பெருமை ஐந்தெழுத்தின் சிறப்பு முதலானவற்றை யும் இது உணர்த்தும். இதன் காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு.

சிவபெருமான் இரட்டை மணிமாலை = கபிலதேவ நாயனாரால் பாடப்பட்ட தது. 11-ஆம் திருமுறை யில் இணைக்கப்பட்டது. இருபது பாடல்களைக் கொண்டது. ஆசிரியர் சங்ககாலக்கபிலர் அல்லர் என்று கருதப்படுதலின் காலம் கி.பி. 10-ஆம்நூற் றாண்டு எனச் சிலர் கூறு வர். இது ஆராய்தற் குரியது.

சிவப்பிரகாசம் = சைவ சித் தாந்த சாத்திரம் 14 களுள் ஒன்று. பதி, பசு. பாச இலட்சணங்களும். தீட்சை விதிகளும் இதில் கூறப்படுகின்றன. சிவ ஞானபோத சூத்திரக் கருத்துக்களைத் தழுவி எழுதப்பட்டது. இதன் ஆசிரியர் கொற்றவங்குடி உமாபதி சிவாசாரிய சுவா மிகள். காலம் 14-ஆம் நூற்றாண்டு. இந்நூலுக் குத் திருப்பதி சாரச்சாமி, சிதம்பரநாத முனிவர், மதுரை சத்திய ஞானப் பிரகாசர் முதலியோர் உரை எழுதியுள்ளார். இந்நூல் சம்பந்தமாகச் சிற்றம்பல நாடிகள் சிவப் பிரகாசக் கருத்துரைச் சூத்திரம் என்ற நூலும், சிவப்பிரகாசக் கட்டளை என்ற நூலும் (ஆசிரியர் அறிதற்கு இல்லை) நல்ல சிவன் என்பவரால் எழுதப்பட்ட சிந்தனை யுரை என்ற நூலும் உண்டு. இதுவிருத்தப் பாவால் அமைந்த நூல். இந்நூலின் அவையடக் கச் செய்யுளில் "தொன் மையவாம் எனும் எவை யும் நன்றுகா இன்று, தோன்றிய நூல் என்னும் எவையும்தீதாகா" என்று குறிப்பிடப் பட்டிருப்பது, இக்காலத்துக் கருத்துக் கேற்ற ஒன்றாகும்.

சிறிய திருமடல் = வைணவ சமய தோத்திர நூலா கியஅகப்பொருள் கருத்து நிறைந்த நூல். நாலா யிரத் திவ்விய பிரபந்தத் துள் ஒருபிரிவு. இதன் ஆசிரியர் திருமங்கை யாழ்வார். காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு.

சிறுபஞ்சமூலம் = பதினெண் கீழ்க்கணக்கு நூற்

களுள் ஒன்று. பஞ்ச மூலம் என்பன கண்டங் கத்தரி, சிறுவல்லி, சிறு வழுதுணை, நெருஞ்சி, பெருமல்லி ஆகிய ஐந்தின் வேர்கள். இவற்றின் சேர்க்கையால் அனைய மருந்து நோயினைப்போக்க வல்லது. அது போல இந்நூலில் உள்ள வெண்பாக்கள் ஒவ்வொன்றும் ஐந்து சிறிய கருத்துக்களைக் கொண்டு நன்மை தரவல்லது. இதில் 105 வெண்பாக்கள் இருந்தனவாகக் கருதப்படுகிறது. ஆனால், ஐந்து செய்யுள்கள் இடையில் குறைந்து காணப்படுகின்றன. இதன் ஆசிரியர் மாக்காயனார் மாணாக்கர் காரியாசான் என்பவர். கடைச் சங்க காலம்.

சிறுபாணாற்றுப்படை = சங்கம் மருவிய பத்துப் பாட்டில் இது ஒன்று. இது ஏறுமா நாட்டு நல்லியக் கோடன்மீது இடைக்கழி நாட்டுநல்லூர் நத்தத்தனாரால் பாடப்பட்டது. கடை எழு வள்ளல்களைப் பற்றிய குறிப்புக்களையும் இதில் காணலாம். 299 அடிகளுடைய பாடல். நல்லியக் கோடன் புலவர்க்கும் பொருநர்க்கும் அந்தணர்க்கும் என்றும் அடையா வாயில் உடையவன்; என்றும் செய்நன்றி அறியும் குணமும், இன்முகம் உடைய பண்பும், அஞ்சினர்க்கு ஆதரவு தரும் இயல்பும் எண்ணியதை ஈடேற்றும் ஆற்றலும் உடையவன். இன்னோரன்ன குறிப்புக்கள் இதில் உள்ளன. பாணர்களுள் சிறுபாணர், பெரும்பாணர் என இருவர் உளர். அவர்களுள் சிறிய இனியோசையுடைய யாழினைக் கொண்ட பாணனை ஆற்றுப் படுத்திப் பாடப்பட்டமையின் இப் பெயர் பெற்றது. இதற்கு நச்சினார்க்கினியர் உரை உண்டு. காலம் கடைச் சங்க காலம். தமிழ் நாட்டுப் பண்பைப் அறிய இது துணைசெய்யும் இலக்கியம்.

சின்னூல் = இது நேமிநாதம் என்னும் இலக்கண நூலுக்கு அமைந்த மற்றொரு பெயர். வெண்பாவால் எழுதப்பெற்ற இலக்கணங்களைக் கூறும் நூல். காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு. ஆசிரியர் குணவீர பண்டிதர்.

பு

புராணம் = இதுவே ஸ்ரீ புராணம் என்பதும். இது சைன நூல். இருசபர் முதல் சிவர்த்தமானர் இறுதியாக உள்ள இருபத்து நான்கு தீர்த்தங்காரகளுடைய வரலாற்றைக்கூறும் நூல். பணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டது. அதாவது வடமொழிச் சொற்களும் செந்தமிழ்ச் சொற்களும் கலந்துவர எழுதப்பட்ட நூல். இதனைச் சைனர் போற்றித் தினமும் பாராயணம் செய்து வருகின்றனர். இதன் ஆசிரியரை அறிதற்கில்லை. ஆகவே காலமும் குறிப்பிட முடியவில்லை. வழக்கில் இல்லாத பல அரிய தமிழ்ச் சொற்கள் இதில் உண்டு.

சிவக சிந்தாமணி = ஐம் பெருங் காப்பியங்களுள் ஒன்று. திருத்தக்க தேவரால் பாடப்பட்டது. சருக்கம் ஒன்பதற்குப்பதிலாக இலம்பகம் என்ற பெயருடன் 13 இலம்பகங்களையுடையது. சிவகன் தன் கலைப் பண்பால் பல மாதர்களை மணக்கின்ற காரணத்தால் இது மணநூல் என்றும் பெயர் பெறும். சிவகனது முழு வரலாற்றைக் கூறுவது. இதில் சிவகன் அடைந்த முத்தி சிவகதி என்று கூறப்பட்டிருப்பதைக் கவனித்தல் வேண்டும். இது படிக்கச் சுவை தரும் நூல். சிற்றின்பம் பேரின்பங்களைப் பற்றிய விளக்கம் பல இதனுள் உண்டு. கி.பி. 10 ஆம் நூற்றாண்டு. பல நீதிகள் இதில் கூறப்பட்டுள்ளன. சுடலையில் சிவகன் பிறந்த போது விசயை வருந்திப் பாடிய பாடல்கள் கல்லான நெஞ்சையும் கரையச்செய்யும் இயல்பில் அமைந்துள்ளன.

சிவகாருண்யம் ஒழுக்கம் = இது பல பிரிவுகளாகச் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளால் உரைநடையில் எழுதப்பட்ட நூல். இவ்வுரைநடை படிப்பவர் புலால் புசிப்பையும் கைவிடுவர். எவ்வுயிர்க்கும் இங்குசெய்ய எண்ணுவர். 19 ஆம் நூற்றாண்டு நூல்.

சிறுப்புராணம் = உமறுப் புலவரால் எழுதப்பட்டது. முகம்மது நபியின் வரலாற்றைக் கூறுவது. பெருங்காப்பிய இலக்கண முறைப்படியும் தமிழர் மரபுப்படியும் பாடப்பட்ட நூல். கி.பி. 18 ஆம்

நூற்றுண்டு கொ டி. ய விலங்குகளையும் அடக்கி அவற்றை நல்வழிப்பட நபிநாயகம் செய்தருறிப்பு முதலியன இதில் உண்டு. இதில் வரும் வர்ணனைக் கவிகள் சுவை தருவன வாகும்.

சூ

சூடாமணி நிகண்டு = சொற் பொருளை அறிதற்குச்செய் யுளில் அமைந்த நூல். இக்காலத்து அகராதி போல அக்காலத்தில் இருந்த அகராதி நூல். இதன் ஆசிரியர் மண்டல புருடர் கி.பி. 16ஆம் நூற் றுண்டு.

சூத்திரர்யார்? = பிராம்மணர் கள் தம்மைத் தவிர்த்து மற்றைய யாவரையும் சூத்திரர்கள் என்று கூறித் தம்மை வேறு பிரித்துக்கொண்டு கூறி வருவதைத் தக்க காரணம் காட்டிக் கண்டித்து ஜே. எஸ். கண்ணப்பர் என்னும் தன்மானம் மிக்க வரால் உரை நடையில் எழுதப்பட்டநூல். காலம் கி.பி. 20ஆம் நூற்றுண்டு நூல்.

சூளாமணி = ஐஞ் சிறு காப் பியங்களில் தலை சிறந்த நூல். தோலா மொழித் தேவர் எழுதிய நூல். இவரை ஸ்ரீ வர்த்த தேவர் என்றும் கூறுவர். இதில் வரும் வரலாறு கண்ணன் பலராமன் கதை போன்று திவ்ட்டனது வரலாறு கூறப்படுகிறது. இவனது பகைவன் அயக்கிரீவபிரதி வாத தேவன் என்பவன். காலம் கி.பி. 10 ஆம் நூற் றுண்டு.

செ

செங்கோன் தரைச் செலவு = இது ஒரு பழைய நூல் முற்றும் கிடைக்கப் பெறுத நூல். எழுபாடல் களும் அவற்றிற்குரிய உரையும் பதிப்பிக்கப் பட்டு வெளிவந்துள்ளன. முதல் ஊழிக் காலத்து நூல். இவ்வாறுகூறுவது குறித்து மேலும் ஆராய வேண்டி இருக்கிறது.

செவ்வந்தி புராணம் = திருச் சிராப்பள்ளி மான்மியம் கூறும் நூல். சைவ எல் லப்ப நாவலர் இதன் ஆசி ரியர். காலம். கி. பி. 17 ஆம் நூற்றுண்டு. திருச் சிராப்பள்ளியில் எழுந் தருளியுள்ள தாயுமானே ஸ்வரருக்குத் தாயுமான வர் என்ற பெயர் எது னல் அமைந்தது என்ற காரணத்தை இந்நூலில் காணலாம்.

சே

சேக்கிழார் புராணம் = இது பெரியபுராணம்பாடியசேக்கிழாரது வரலாற்றைச் சிறந்தசைவசிந்தாந்த பேராசிரியர் சிதம்பர தீட்சித மரபினர் கொற்றவங்குடி உமாபதி சிவாசாரிய சுவாமிகளால் பாடி அமைக்கப்பட்ட நூலேயாகும். இந்நூலால் பெரிய புராணச் சிறப்பு, சேக்கிழார் மாண்பு, வேளாளர் பெருமை முதலானவை நன்குதெரியவரும். காலம் கி.பி.19 ஆம் நூற்றாண்டு.

சேந்திரவெண்பா : 11 ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்ட நூல். ஐயடிகள் காடவர்கோன் என்பவரால்பாடப்பட்டது. நூலாசிரியரது உளத்தைக் கவர்ந்த சைவ சேத்திரங்கள் ஒவ்வொன்றின் மீதும் ஒவ்வொரு பாடலாகப் பாடப்பட்டநூல். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு. இது தோத்திர வடிவிலும் உபதேசவடிவிலும் அமைந்த நூல்.

சேயூர் முருகன் மும்மணித் தமிழ் = அந்தகக் கவி வீரராகவ முதலியாரால் பாடப்பட்டது. கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

சேனாவரையம் : தொல் காப்பியச் , சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் எழுதிய உரையே இந்நூலாரும். சொல்லதிகாரத்திற்கு இதனினுஞ் சிறந்த உரை வேறு இல்லை. காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு.

சை

சைவ சமய விளக்க வினாவிடை = சைவசமயத்தில் உள்ளவர் தம்மத ஒழுக்கங்களை எம்முறையில் கையாள வேண்டும் என்னும்முறைகளைத்தெற்றத் தெளிய உணர வேண்டி வசன வடிவில்கேள்வியும் பதிலும் கொண்டு எழுதி அமைக்கப்பட்ட நூல். எழுதியவர்காஞ்சிசபாபதி முதலியார். காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு.

சைவ சித்தாந்த ஞானபோதம் = இது ஓர் உரை நடைநூல். சைவ சித்தாந்தச் சிறப்பை ஆணித்திரமாக எடுத்துக் கூறும் நூல். ஆசிரியர் மறைபாலை அடிகள். காலம் 20-ஆம் நூற்றாண்டு.

சோ

சோண சைலமாலை = திருவண்ணாமலைமீது துறைமங்

கல சிவப்பிரகாச சுவாமி களால் பாடப்பட்ட நூல். தமிழ் கற்க விரும்புபவர் படித்துக் கொள்ள வேண்டிய நூல். காலம் கி. பி 17 ஆம் நூற்றாண்டு. ஒவ்வொரு பாடலிலும் அமைந்த கற் பனைகள் படித்து இன்புறுதற்குரியன. திருவண்ணா மலை உயர்ந்து விளங்குவது தவமாகிய கப்பலை நடத்த இது கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது என்பது அக்கற்பனை கருள் ஒன்று.

சோமேசர் முதுமொழி வெண்பா = இதில் உள்ள ஒவ்வொரு வெண்பாவின் ஈற்றிலும் ஒவ்வொரு திருக்குறட்பா அமைந்துள்ளது. அக் குறட் கருத்தை விளக்கும் கதைக்குறிப்பு வெண்பா பாவின் முதலில் அமைந்துள்ளது. இது சிவஞான முனிவரால் பாடப்பட்ட நூல். காலம் கி.பி.18 ஆம் நூற்றாண்டு.

சோழமண்டல சதகம் = சோழ நாட்டின் சிறப்பும் அந்நாட்டைச் சார்ந்த புலவர்கள் வள்ளல்கள் முதலினோர் வரலாறு களும் அறியத்தரும் செய்யும் நூல். ஆத்மநாத தேசிகர் பாடிய நூல். காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு.

சென

சென்தூரியலகரி = இது வடமொழியில் சங்கராசாரிய சுவாமிகளால் பாடப் பட்டது. இதனை வீரைக விராசபண்டிதர் தமிழுப் பாவில் பாடி அமைத்தனர். கி. பி. 11-ஆம் நூற்றாண்டு. இதில் திருஞான சம்பந்தருக்குத் தெரியார் ஞானப்பால் ஊட்டியதைப் பாராட்டிப் பேசி இருப்பதைக் காணலாம். இந்நூல் திருஞான சம்பந்தரைத் திராவிடசிசு என்று குறிப்பிடுகிறது.

ஞா

ஞானவாசிட்டம் = இது ஒரு வேதாந்த நூல். வசிஷ்டர் ராமனுக்கு உபதேசம் செய்தமுறையில் அமைந்த நூல். ஆளவந்தார்பாடிய நூல். கி.பி. 18-ஆம் நூற்றாண்டு. இந்நூலில் சில பாடல்களைத் திரட்டி ஞான வாசிட்டத்திரட்டு என்ற பெயரால் நமச்சிவாய ஐயர் ஒரு நூலாக வெளியிட்டுள்ளார்.

ஞானவெட்டியான் = இது கி. பி. 18 ஆம் நூற்றாண்டிற்குப்பின் எழுந்த நூல். இது வள்ளுவரால் பாடப்

பட்ட தாகக் கூறுவது தவறு. ஞானக் கருத்துக்கள் இதில் உண்டு.

ஞானமிர்தம் = இது சைவ சித்தாந்த நூல். இது அகவற் பாவால் பாடப்பட்டது. நடைசங்க காலத்து நூற்களின் நடை போன்றது. ஆசிரியர் வாகீச முனிவர் என்பவர். (திருநாவுக்கரசர் அல்லர்) இந்நூலைச் சிவஞான முனிவர் பெரிதும்பாராட்டியுள்ளார்என்பதைத் தம் உரைகளில் அடிக்கடி மேற்கொள் காட்டுவதால் அறியலாம். கி.பி. ஆறும் நூற்றாண்டு. இதில் காணப்படும் உவமைகள் சுவைபடக் காணப்படும்.

து

துகடீர் யாத்திரை = இது ஒரு பழைய நூல். தகடூர்மீது படை எடுத்தசெய்தியினை அறிவிப்பது. இதன் ஆசிரியர்கள் பொன் முடியார் அரிசில் கிழார் ஆகிய இருவரும் ஆவர். கடைச்சங்க காலம்.

தக்கயாகபரணி = ஒட்டக் கூத்தரால் பாடப்பட்ட நூல். சிறந்த பொருட் செறிவுடையது. இதற்குச் சிறந்த உரை உண்டு. அவ்வுரையால் பல நுண்ணிய கருத்துக்கள் அறியப்படுகின்றன. காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு. நூலில் ஞானசம்பந்தரது வரலாறு குறிப்பிட்டிருப்பது கவனித்தற்குரியது.

தசகாரியம் = இது சைவ சித்தாந்த உண்மைகளைக் கூறும் நூல். பண்டார சாத்திரம் பதினெண்களுள் ஒன்று. திருவாவடுதுறை அம்பலவாண தேசிகரால் இயற்றப்பட்டது. தத்துவரூபம் தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம். ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம், என்னும் பத்தின் தன்மைகளை விரிவாகவுணர்த்தும் நூல். 550 பாடல்களைக் கொண்டது. காலம் 19 ஆம் நூற்றாண்டு. இந்நூற் பெயரால் சுவாமி நாத தேசிகர், திருவண்ணாமலையார் என்பவர்களும் எழுதிய இரண்டு நூற்கள் உண்டு.

தஞ்சை வாணன் கோவை = நம்பி அகப்பொருள் இலக்கணத்திற்கு உதாரணச் செய்யுளாக எடுத்துக்காட்டப்பட்டநூல். பொய்யா

மொழிப் புலவரால் பாடப்பட்டது, சுவை மிக்க செய்யுட்களைக் கொண்டது. காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு. இதற்குச் சொக்கப்ப நாவலர் உரை எழுதியுள்ளார். இந்நூலில் உள்ள நானூறு பாடல்களையும் பொய்யா மொழிப்புலவர் பாடிப்பொருள் கூறுகையில் மகிழ்ந்த இந்நூலின் பாட்டுடைத் தலைவனான தஞ்சை வாணன் ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு பொன் தேங்காயினை உருட்டிச் சிறப்புச் செய்தான் என்பர். தஞ்சை வாணன் என்பவன் தஞ்சாக்கூர் மன்னன். இவன் வாணன் என்றும், சந்திர வாணன் என்றும் கூறப்படுவான். இந்நூலில்வரும் சில துறைகட்குத் திருக்கோவையார் பாடல்கள்உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளன.

தணிகைப் புராணம் = திருத்தணிகை மான்மியம் கூறும் நூல். கச்சியப்ப முனிவரால் பாடப்பட்டது. சிவகசிந்தாமணி என்னும் நூல் ஒரு சிலரால் சிறப்புறப் பயிலப்பட்டு வந்ததை அறிந்த முனிவர், அந்நூலைப் போன்று சொற் செறிவும் பொருட் செறிவும் தொனிக்கப்பாடியருளப்பட்டநூல். சிலேடைக் கவிகளும், சித்திரக் கவிகளும் இந்நூலில் மிகுதி. தொல்காப்பிய உரிச்சொற்களை இந்நூலில் பெரிதும் காணலாம். புலவர்கள் விரும்பிப் பயிலும் நூல். கி.பி. 18 ஆம் நூற்றாண்டு. இதில் உள்ள வள்ளியம்மையார் திருமணத்தைப் பற்றியகவிகள் கோவைத் துறைகள் அமையப் பாடப்பட்டிருப்பது இன்பம் பயப்பதாகும். கடவுள் வாழ்த்தில் விநாயகப் பெருமான். ஐந்து கரங்களுடன் திகழும் மாண்பிற்குக் காரணம் காட்டும் முறை சுவை தருவதாகும்.

தணிகையாற்றுப்படை = ஆற்றுப்படை என்பது பரிசுபெற்ற ஒரு புலவன் பரிசு பெறுத மற்றொருவரிடம், தனக்குப் பரிசில் நல்கியவனது குணங்களையும் அவன் இடத்தையும் கூறி வழிகாட்டி அனுப்புவதாகும். அந்த முறைப்படி முருகப் பெருமான் திருவருளைப் பெற்றவன் அம்முருகனது திருவருள் பெறத் தணிகைதான்

மீது பாடப்பட்ட நூலாகும் இது. இதனைக் கச்சியப்ப முனிவர் பாடியருளினர். தம் மாணாக்கரான கந்தப்பையர் குன்ம நோயால் துன்புற்ற நிலையினைக் கண்டு சகியாத முனிவர் இந் நூலைப் பாடினர். இதன் காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

தண்டலையார் சதகம் = சதகம் என்பது நூறு செய்யுட்களைக்கொண்ட நூல். தண்டலை என்னும் ஊரில் உள்ள இறைவன் மீது பாடப்பட்ட நூல். இந் நூலில் உள்ள ஒவ்வொரு பாடலிலும் பழமொழி அமைந்திருக்கும் நீதிகளை அறியவும், பழமொழிகளை உணரவும் பெருந்துணை செய்யவல்லது. பழமொழிகளைக் கொண்டு இந் நூல் விளங்குதலின் இது பழமொழி விளக்கம் என்ற பெயரையும் பெற்றது. இந்நூலைப் பாடியவர் தண்டலைச் சாந்தலிங்க கவிராயர் ஆவார். காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

தமிழ் நாவலர் சரிதை = இஃது ஒரு சிறந்த நூல். புலவர்கள் சிலரைப்பற்றியும், சில நூல்களைப்பற்றியும் அறிந்துகொள்ளுதற்குரிய அரிய குறிப்புக்களைக் கொண்ட நூல். இந் நூலைத் தொகுத்தவரைப்பற்றி அறிதற்கு இல்லை. என்றாலும் திரு. கனகசுந்தரம் பிள்ளை என்பவர் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இந் நூலில் 18-ஆம் நூற்றாண்டு வரையில் இருந்த புலவர் வரலாற்றுக் குறிப்புக்களை உணரலாம்.

தமிழ்விடு தூது = இந்நூல் தமிழ்மொழியையே தூது விடுவதுபோல் அமைந்த நூல். சுவை மிகுந்தது. ஏனைய பொருள் தூது போலதற்குரியவை அல்ல என்பதற்குரிய காரணங்களும், தமிழே தூது செல்லுதற்கு எல்லாப் படியாலும் பொருந்துதலுடையதுஎன்பதற்குரிய காரணங்களும் காட்டப்பட்டிருப்பது படித்துஇன்புறுதற் குரியவையாகும். இந் நூலாசிரியர் யாவர் என்பது அறிதற்கில்லை. இதனை டாக்டர் சாமிநாதய்யர் பதிப்பித்துள்ளார்.

தனிப்பாடல் திரட்டு = இந் நூல் ஒருவரால் பாடப்பட்ட நூல் அன்று. இந்

நூலில் பல புலவர்கள் அவ்வப்போது பாடிய பாடல்கள் காணப்படும். இப் பாடல்கள் பெரும் பாலும் எளிமையுடைய வையாகவும். நகைச்சுவை ததும்பக் கூடியவையாக வும் காணப்படும். இத் தொகுப்புநூலில் பலசித் திரக் கவிகளும் பொருட் செறிவுடைய கவிகளும். நீதிகளை விளக்கும் கவி களும் உள்ளன. இந் நூலை முற்ற ஓதி உணர்ந் தால் பல நூல்களின் பொருள்களையும், பல புல வர்களின் கவிதைச்சுவை களையும் நன்கு உணர லாம். இந் நூலைத் தொகுத்தவர் இன்னார் என்பது அறிதற்கு இல்லை. இந் நூலுக்கு உரை உண்டு.

தூ

தாயுமானவர் பாடல் = இது ஒரு சிறந்த தோத்திர நூல். வேதாந்தசித்தாந்த கருத்தும்கொண்ட நூல். இதனைப் பாடியவர் தாயு மான சுவாமிகள். இதன் காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. இதற்குப்பூவை கலியாண சுந்தர முதலியார் சிறந்த பேருரை எழுதியுள்ளார்.

நு

நெடுமாலை நூற்றைம்பது = இந்நூல் சங்கம் மருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூற்களுள் ஒன்று. அப் பொருள் சம்பந்தமான நூற்றைம்பது பாடல் களைக் கொண்டது. குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் ஆகிய நிலங்கள் ஒவ்வொன்றிற் கும் முப்பது முப்பது பாடல்கள் உண்டு. இதன் ஆசிரியர் தமிழ் ஆசிரியர் மகனார் மாக்காயனார் மாணாக்கர் கணமேதை யார் என்பவர். காலம் கடைச் சங்க காலம்.

நேரிசைவெண்பா ஐம்பது = இது ஓர் அகப் பொருள் தொடர்புடைய நூல். இது சங்கம் மருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஐந் திணைகளாகிய குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல். ஆகிய ஐந்திற் கும் தனித்தனியே பத் துப் பாடல்களைக் கொண்டது. இதனைப் பாடியவர் சாத்தந்தை யார் என்பவர். காலம் கடைச்சங்க காலம்.

நாவிட மாபாடியம் = இது சிவஞான போதத்திற்கு

THANJAVUR PUBLIC ...

எழுதப்பட்ட விரிவுரை நூல். பாஷ்யம் என்பதே மாபாடியம்என்று ஆயது. இந்நூல் பயிற்சியினால் தருக்கம், இலக்கணம் காவியம், சாத்திரம், சித்தாந்தம் ஆகமம் ஆகிய இவற்றின் நுட்பங்களை இனிதின் உணரலாம். இத்தகைய அரிய உரையை எழுதியவர் சிவஞான முனிவர் ஆவர். காலம் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் = இந்நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. ஆங்கில நூலாயினும் தமிழர் யாவரும் படிக்க வேண்டும் என்னும் குறிக்கோளுடன் இதன் குறிப்பும் இங்கு எழுதப்படுகிறது. இந்நூல் தெலுங்கு, கன்னடம், பலியாளம், துளு முதலான மொழிகளின் இலக்கணங்களை ஆராய்ந்து தமிழ் இலக்கணத்தோடு ஒத்திட்டுக் காட்டி அம்மொழிகளுக்கும் தாயகம் தமிழ்மொழி என்னும் குறிப்பை நன்கு அறிவிக்கும் நூலாகும். தமிழ்வடமொழியின் துணையின்றி என்றும் தனித்து இயங்கும் ஆற்றல் உடையது என்பதையும், இவ்வாறு தெலுங்கு கன்னடம் முதலான மொழிகள் இருக்கவியலாது என்பதையும் தெற்றெனத் தெளிய அறிவிக்கும் நூலாகும். இந்நூலால் பல தமிழ்ச் சொற்கள் வடமொழியில் சென்று சேர்ந்துள்ளன என்பதையும் நன்கு அறியலாம். இத்தகைய அரிய பெரிய நூலை எழுதித்தந்தவர் ரெவரெண்ட கால்டுவல் துரைமகனார் ஆவார். காலம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு. இந்நூலின் கருத்தைத் தழுவிப் பல நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன.

திரிகடுகம் = பதினெண் கீழ்க்கணக்கு நூற்களுள் ஒன்று. சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று கூட்டு மருந்துகளின் சேர்க்கையால் உடற்பிணி போவதுபோன்று அறியாமையாகிய நோய் நீங்க ஒவ்வொரு பாடலிலும் உள்ள மும்மூன்று நீதிகள் துணைபுரியும். அதனால் தான் இது திரிகடுகம் எனப்படுகிறது. இந்நூலைப்பாடியவர் நல்லாதனார் என்பவர். காலம் கடைச் சங்க காலம்.

திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி = அந்தாதி என் பது ஒரு பாட்டின் முடிவு அடுத்த பாட்டிற்கு முத லாக அமையப்பாடப்படும் நூலாகும். இது கரிவலம் வந்த நல்லூர்ச் சிவபெரு மான்மீது பாடப்பட்ட நூலாகும். இது உருக்க மாகப்பாடுதற்குரிய முறை யில் அமைந்திருத்தலின் இதனைக் குட்டித் திருவா சகம் என்றும் கூறுவர். இதனைப் பாடியவர் அதிவீரராம பாண்டியர் ஆவார். காலம் கி. பி. ஆம் நூற்றாண்டு.

திருக்கலம்பகம் = இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்த அருகக் கடவுள் மீது பாடப்பட்டதாகும். இங்குக் கூறப்பட்ட அரு கக் கடவுளின் செயல்கள் பலவும் சிவ பெருமான் செய்த செயல்களாகக் குறிப்பிட்டிருப்பது வியப் பைத் தரும். இந்நூலை இயற்றியவர் திருத் தேவர் என்பவர். காலம் கி. பி. 14-ம் நூற்றாண்டு திருக்கலம்பகம் என்ற பெயரால் மற்றொரு நூலும் உண்டு. அது சைவத் திருமுறை பன்னி ரண்டனுள் பதினோராம் திருமுறையுள் ஒரு பிரபந்தமாகத் திகழ் கிறது. இது ஞானசம் பந்தர் மீது நம்பியாண் டார் நம்பிகளார், கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் பாடப்பட்ட ஒரு தோத் திர நூல்.

திருக்காவலூர் கலம்பகம் = இது கிறிஸ்தவச் சமயச் சார்புடைய நூல். இத னைத் தமிழில் பாடியவர் வெரெண்ட் பெஸ்கி என் னும் வீரமாமுனிவர் ஆவார். இதன் காலம் 17 ஆம் நூற்றாண்டின் இறுதி.

திருக்காளத்திப் புராணம் = இது காளாஸ்திரி என்று வழங்கப்பெறும் திருக் காளத்தீஸ்வரர் திருத் தலத்தின் வரலாற்றைக் கூறும் நூல். சிகாளத்திப் புராணம் என்ற புராண நூலும் உண்டு, அதனி னும் இது வேறானது. இதன் ஆசிரியர் ஆனந் தக் கூத்தர் என்பவர். கி.பி.16 ஆம் நூற்றாண்டு.

திருக்குடந்தைப் புராணம் = இது கும்பகோணத்தைப் பற்றிய வரலாற்றைக் கூறும் நூல். இதன் வாயிலாக மகாமகத் தீர்த் தத்தின் வரலாறு, கும் பேஸ்வரர் என்ற பெயரை

இறைவர் பெற்றவரலாறு முதலானவற்றை அறிந்து கொள்ளலாம். இதனைப் பாடியவர் திருசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையாவார். காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு. இத் தலத்து அம்பிகையாகியமங்களாம் பிகையம்மையார் மீதும் பி. பிள்ளை அவர்கள் பிள்ளைத் தமிழ் நூலையும் பாடியுள்ளார்-

திருக்குறள் = தமிழ் மொழியில் உள்ள ஒப்பு உயர்வு அற்ற நூல். 1330 குறள் வெண்பாவால் ஆன நூல். இது பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் சார்ந்தது. இதில் அறத்துப் பால், பொருட்பால், காமத் துப்பால் என்ற மூன்று பிரிவுகள் உண்டு. இந்நூல் பயிற்சியால் பல அரிய கருத்துக்களை எல்லாம் தெரிந்து கொள்ளலாம். இந்நூலினது அருமை காரணமாக மேலைட்டு மொழிகள் பலவற்றிலும், கீழ்நாட்டு மொழிகள் பல வற்றிலும் இது மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இது தமிழ் மொழியில் அமைந்திருப்பது தமிழ் நாட்டவர்க்கு ஒரு தனிப் பெருமையாகும். இந்நூலுக்குப் பதின்மர் உரை எழுதியுள்ளனர். அவற்றுள் பரிமேலழகர் உரையே சிறந்தது. இதன் காலம் கி. பி. 2 ஆம் நூற்றாண்டு. இந்நூலுக்கு மூப்பால் உத்திரவேதம், தெய்வநூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாலாற்றை வாழ்த்து, தமிழ் மறை, பொதுமறை திருவள்ளுவப் பயன் என்ற பெயர்கள் உண்டு.

திருக்குறள் வளம் = இந்நூல் திருக்குறளுக்கு இதுவரையில் வந்துள்ள உரை நூல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது. இத்துடன் குறட் கருத்துக்களைக் கொண்ட செய்யுட்களையும் கொண்டு திகழ்வது. அறத்துப்பால் பொருட்பால், காமத்துப் பால் ஆகிய மூன்று பாலும் தனித்தனி நூலாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இத்தகைய அரிய தொண்டைமேற்கொண்டு செம்மையுறப் பதிப்பித்து வெளிப்படுத்தியவர் தருமபுர ஆதினகர்த்தரான ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளாவார். இந்நூல் கி.பி. 20 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டு

வெளிவந்துள்ளது. இது திருக்குறளைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர்கட்குப் பெருந்துணை செய்ய வல்லது.

திருக்குறுந்தாண்டம் = இது வைணவர்கட்குரிய நாலாயிர திவ்யபிரபந்தத்தின் உள்பிரிவுகளில் ஒன்று. திருமாலின்மீது திருமங்கையாழ்வாரால் பாடப்பட்ட தோத்திரநூல். திருநெடுந்தாண்டகம் என்பதையும் பாடியவர் இவரே. காலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு.

திருக்கலாய ஞான உலா = இது தமிழில் உள்ள தொண்ணூற்று வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இறைவன் பவனி வந்தபோது பருவ மங்கையர் அவனது பேரழகில் ஈடுபட்டுக் காமுற்றுநின்ற நிலைகளை விரிக்கும் முறையில் பாடப்பட்டுள்ளது. இவ்வுலா நூல் முதல் முதல்தோன்றினமையின், இது ஆதி உலா என்றும் கூறப்படும். இது சைவத் திருமுறைகளுள் பதினோராம் திருமுறையில் உள்ள நூல்களுள் ஒன்றாகத் திகழ்வது. இதனைப்பாடிய வர்சேரநாட்டுமன்னராய்ச் சிவனடியார்களுள் ஒருவராயுள்ள சேரமான் பெருமாள் நாயனார் ஆவார். காலம். கி. பி. 9 ஆம் நூற்றாண்டு.

திருச்சிற்றம்பலக்கோவையார் = இது திருக்கோவையார் என்றும் கூறப்படும். இதன் அருமை பெருமையறிந்தே இதற்கு ஆர்விகுதி கொடுத்தும், திரு என்ற அடைமொழி கொடுத்தும் திருக்கோவையார் என்று குறித்துள்ளார் தமிழில் பல கோவைநூல்கள். இருப்பினும் அவற்றையெல்லாம் அக்கோவை யார் மீது பாடப்பட்டதோ, அன்றி எத்தலத்தின் மீது பாடப்பட்டதோ, அப்பாட்டுடைத் தலைவன் பெயரையும். தலத்தின் பெயரையும் சார்த்தி வழங்குவர். ஆனால், எந்தவிதமான அடைமொழியும் இன்றிக் கோவை என்றளவில் இத் திருக்கோவையாரைத்தான் உணர்த்தும். பாலைவ பாடின வாயில் கோவை பாடுக என்று மணிவாசகரை நடராஜ பெருமான் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இது பாடப்பட்ட நூலாயின் இதன் மாண்பைக் கூறவும் முடியுமோ?

இது சைவத் திருமுறை களுள் 8வதாகத் திகழ் வது. இது சிற்றின்பச் சுவை தரும் முறையில் அகப்பொருள் இலக் கணத்துப்படி பாடப் பட்டிருப்பினும் உள்ளுரப் பேரின்பப் பொருளைத் தன்னகத்தே கொண்டுள் ளது. இதன் உண்மை யைத் திருக்கோவையார் உண்மை என்ற நூலா லும் நன்கு உணரலாம். இந்நூலுக்குச் சிறந்த உரை ஒன்று பேராசிரியர் என்பவரால் எழுதப்பட் டுள்ளது. அவ்வுரை திருக் கோவையாரின் நுண்ணி பொருள்களைத் தெள்ளி தின் அறியப் பெருந் துணை செய்யவல்லது. இந்நூலின் ஆசிரியர் மாணிக்கவாசகர். காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு. அந்தணர் வேதம் என் றும் யோகியர் ஆகமத் தின் சாரம் என்றும், தர்க்கம் உணர்ந்தவர், தருக்க நூல் என்றும் புலவர்கள் இலக்கியம் என்றும் காமுறுகர் காம நூல் என்றும், கருதுதற் குரிய முறையில் இந்நூல் அமைந்துள்ளது.

திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் = இது திருச்செந் தூர் முருகப் பெருமான் மீது பாடப்பட்டமையின் இப்பெயர் பெற்றது, இதை ஓதப்பாடியவர் பகழிக்கூத் தர். இவர் வயிற்று நோயால்வருந்தினபோது, அந்நோய் நீங்க முருகனை வேண்டி இந்நூலைப் பாடியருளினர். இதன் காலம் 18 ஆம் நூற் றாண்டு. இந்நூலாசிரி யர் மீது அன்புகொண்ட முருகப் பெருமான் இந் நூலுக்குப் பரிசிலாக முத்துமாலையை அளித் துள்ளார்.

திருத்தொண்டர் திருநாமக் கோவை = கோவை என்ற தும் அகப்பொருள் தழு வியநூலை என்று கருத வேண்டா. இது சிவனடி யார்கள் அறுபத்து மூன்று பேர்களுடைய பெயர்களையும் தொகை அடியார்கள் ஒன்பதின் மர் யாவர் என்பதையும் கோவைபடுத்தி அறிவிக் கும் நூலாகும். இதனைத் தினமும் பாராயணம் செய்து வந்தால் உண்மை சிவனடியார் பற் றையும், வைராக்கம், அற்ப புத்தி, மயக்க அறிவு ஆகியவை நீங்கப் பெறு வர். நித்தியமாய் வாழ் வர். இதனைப் பாடியவர்

சிவஞானமுனிவர். காலம் 18-ஆம் நூற்றாண்டு.

திருத்தொண்டர் திருவந்தாதி = இது சைவ சமயத்தைச் சார்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றியவாழ்க்கைவரலாற்றுக் குறிப்பை அறிவிக்கும் பாடல்களைக் கொண்ட நூல். இந்நூல் பெரிய புராணம் பாடுதற்குப் பெருந்துணையாக இருந்தது. இது சைவத் திருமுறை பன்னிரண்டனுள் பதினோராவது திருமுறையில் உள்ள நூல்களுள் ஒன்றாகும். இதனைப் பாடியவர் நம்பியாண்டார் நம்பிகள். காலம் கி. பி. 11-ஆம் நூற்றாண்டு.

திருத்தொண்டர் புராண சாரம் = இது சைவசமய நாயன்மார்கள் அறுபத்து மூவரது வரலாற்றுக் குறிப்பைக் கொண்ட பாடல்களையுடைய நூலாகும். இது பெரியபுராணத்தையும் திருத்தொண்டர் திருவந்தாதியையும் அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டது. இதனைப் பாடியவர் கொற்றவங்குடி-உமாபதி சிவாசாரியார் என்னும் தீட்சதர் ஆவார், இதன் காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டு.

திருப்பள்ளி எழுச்சி = இதனைப்பாடியவர் தொண்டரடிப்பொடியாழ்வார். திருவரங்கநாதனைத் துயில் எழுப்பும் முறையில் அமைந்த தோத்திரநூல். இது நாலாயிரப் பிரபந்தத்து பல பிரிவுகளுள் ஒன்று. திருவரங்கனைத் துயில் எழுப்பும்முறையில் அமைந்தது. இதன்காலம் 9 ஆம் நூற்றாண்டு. மாணிக்கவாசகர் பாடியுள்ள திருப்பள்ளி எழுச்சியும்உண்டு. அதுதிருவாசகத்தில் அமைந்துள்ளது. திருப்பெருந்துறை சிவபெருமானைத் துயிலினின்றும் எழுப்பும் முறையில் அது பாடப்பட்டது. காலம் கி. பி. 4 ஆம் நூற்றாண்டு. இவ்விரண்டு நூற்களிலும் இயற்கை வர்ணனை இனிது காணப்படும்.

திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் = இது தொல்காப்பிய தேவரால் பாடப்பட்டது. திருப்பாதிரிப்புலியூர் என்பது இக்காலத்தில் திருப்பாப்புலியூர் என்று வழங்கப்படுகிறது. கி.பி. 14 ஆம்நூற்றாண்டு. இது தோத்திர நூல்.

திருப்பாவை - ஸ்ரீ ஆண்டாள் அம்மையாரால் பாடப் பட்டநூல். 30 பாடல் களைக் கொண்டது. பெண் கள் பாவை நோன்பை நோற்கும்முறைகள் இதில் பாடப்பட்டுள்ளன. இதனை மார்கழி மாதத்தில் பெரி தும்பாடுவர். இது இயற் கை அழகை நிரம்பக் கொண்டு இனிய பொருள் நயமுடையதாய்த்திகழும். இதன் காலம் கி.பி. 8ஆம் நூற்றாண்டு. இதற்கு அழ கிய மணவாளப் பெரு மாள் நாயனார் உரையும் இராகாதாசாரியார் உரை யும் பெரிய வாச்சான் பிள்ளை உரையும் உண்டு.

திருப்புகழ் = முருகப் பெரு மான் எழுந்தருளியுள்ள திருத் தலங்களின் மீது பாடப்பட்ட திருப்பாடல் களின் தொகுதியாகும். திருபுகழைப் பயின்றால் எக்கு பண்பட்டுச் சொற் கள் தடுமாற்றம் இன்றி வரும். திருப்புகழைப் படிப் பவர் சிந்தைவலுவாலே ஒருத்தரை மதிப்பதில்லை என்று இதன் சிறப்புக் கூறப்படுகிறது. இந்த முறையில் 16000 திருப் புகழ் பாடப்பட்டன. ஆனால், அவை அனைத் தும் கிடைத்தில. கிடைத் தன 1200தாம். இந்த நூலை அழகான முறை யில் அரிய குறிப்புக்களு டன் திரு. செங்கல்வ ராயப்பிள்ளை அவர்கள் பதிப்பித்துத் தந்துள்ள னர். இந்நூலின் காலம் கி. பி. 15 ஆம் நூற் றாண்டு. இந்நூல் வாயி லாக முருகப்பெருமானே திருஞானசம்பந்தராக வந் தார் என்ற குறிப்பையும் உணரலாம்.

திருப்போரூர் சந்நிதிமுறை = இது முருகப் பெருமா னைப்பற்றிப் பாடப்பட்ட தோத்திர நூல். இது திருப்போரூர் முருகன் மீது பாடப்பட்டமையின் இப்பெயர் பெற்றது. இந் நூலுள் முருகப்பெருமான் பிள்ளைத்தமிழும் அமைந் துள்ளது. அப் பிள்ளைத் தமிழ் அரிய உயர்ந்த கருத்துக்களைத் தன் னகத்தே கொண்டுள்ளது. முருகப் பெருமானே திரு ஞான சம்பந்தராக வந்த வர் என்ற குறிப்பும் இந் நூலில் உண்டு. இதனைப் பாடியவர் திருப்போரூர் சிதம்பரசுவாமிகள். காலம் கி. பி. 18-ம் நூற்றாண்டு. இதுதோத்திரநூல்.

திருமந்திரம் = இது திருமந் திர மாலை என்றும் கூறப்

படும். இது சைவத்திரு முறை பன்னிரண்டனுள் பத்தாம் திருமுறையாக இருப்பது. இதனைப் பாடியவர் திருமூலர் என்னும் பேராசிரியர் ஆவார். இவர் ஒருவருடம் மௌன யோகத்தில் இருந்து பின் விழித்து ஒரு பாடலைப்பாடிப் பின்னரும் யோகத்தில் அமர்ந்து அந்த அனுபவத்தில் மூவாயிரம் பாடல்களைப்பாடினார் என்பர். இந்நூல் சித்தாந்த நூண் பொருள்களையும் ஆகமக் கருத்துக்களையும் கொண்டது. மக்கள் அறிந்து ஒழுகவேண்டிய நீதிகள் பலவற்றையும் தன்னகத்தேகொண்டது. இதன்காலத்தைப்பற்றிப் பலவித கருத்து வேற்றுமைகள்உண்டு. எவ்வாறு இருப்பினும் இது சைவ சமயாசிரியர் நால்வர் காலத்துக்கு முற்பட்டது. இதன் காலத்தைத் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்று ஒருவாறு கூறலாம்.

திருமயிலைத்தல புராணம் = இது சென்னை மயிலாப்பூர் திருத்தலத்தைப் பற்றிய வரலாற்றைக்கூறும் நூல். இதன் ஆசிரியர் அமிர்தலிங்க தம்பிரான் என்பவர். இதற்குக்காஞ்சி சபாபதி முதலியார் உரை எழுதியுள்ளார். காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

திருமுருகாற்றுப் படை = இது முருகப் பெருமான் திருப்பெயரால் நக்கீரரால் பாடப்பட்ட சிறந்த இலக்கியச் செறிவுடைய பாட்டாகும். இதனை நித்தலும் பாராயணம் செய்துவரின் முருகன் திருவருளைப் பெறலாம். இது பத்துப் பாட்டில் முதல் நூலாக அமைந்தது. இதில் முருகப் பெருமானது, ஆறு படை வீடுகளைப்பற்றி அறியலாம். இயற்கை அழகும் அன்பர்கள் முருகனை வழிபடும் முறையும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. காலம் கடைச் சங்க காலம். இதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரை உண்டு.

திருமுறை = சைவசமய நூல்களின் தொகை நூல் வகையைச் சேர்ந்தது. இதனுள் திருஞான சம்பந்தர் தேவாரம் முதல் மூன்று திருமுறைகள், அப்பர் தேவாரம் நான்கு முதல் ஆறு திருமுறைகள், சுந்தரர் தேவாரம் ஏழாவது திருமுறை, மாணிக்கவாசகர் திருவா

சகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறை, கண்டராதித்தர்முதலானவர் பாடிய திருவிசைப்பாவும் சேந்தனார்பாடிய திருப்பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறை, திருமூலர் திருமந்திரம் பத்தாம் திருமுறை, திருவாலவாயுடையார் திருமுகப் பாசுரம் காரைக்கால் அம்மையார் பாடல்கள் முதல் நம்பியாண்டார் நம்பிகள் பிரபந்தம் வரையில் உள்ளவை பதினோராம் திருமுறை சேக்கிழார்பாடிய பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை. ஆக திருமுறைகள் 12 இதுமுதல் திருமுறையில் 'தோடுடைய' என்று தொடங்கும் செய்யுளில் ஓ என்னும் எழுத்தையும் பன்னிரண்டாம் திருமுறையின் ஈற்றுச் செய்யுள் 'உலகெலாம்' என்று முடிவதால் (ஈ) என்னும் எழுத்தையும் ஈற்றிலும் கொண்டு விளங்குதலால் ஓம் என்ற பொருளுடன் இத் திருமுறைகள் விளங்குகின்றன என்று பாராட்டுவர்.

திருமுல்லைவாயிற் புராணம் = சென்னைக்கு அடுத்த திருமுல்லைவாயில் என்னும் தலத்தைப் பற்றிப் பாடப்பட்டபுராணமாகும். இத்தலத்தைப்பற்றி இரு புராணங்கள் உண்டு. ஒன்றுவடுகநாதமுதலியாரால்பாடப்பட்டது. அதன் காலம் 17 ஆம் நூற்றாண்டு. மற்றொன்று. திருமயிலை சண்முகம் பிள்ளையால் பாடப்பட்டது. அதன் காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு. இந்நூல் வாயிலாகத் தொண்டைநாடு என்னும் பெயருக்குரிய காரணத்தை நன்கு அறியலாம்.

திருவெழுப்பு = இது முருகப் பெருமான்மீது பாடப்பட்ட விருத்தத்தால் ஆனநூல். வேல் வகுப்பு, மயில் வகுப்பு, புயல் வகுப்பு என்பது முதலான பெயர்களுடன் திகழும். இதில் பல இடைச் செருகல் பாடல்களும் சேர்ந்து இருக்கின்றன. இப்போதுள்ள திருவகுப்புக்களுள் 18 வகுப்புக்கள் தாம் அருணகிரியார் வாக்கு எனக் கருதப்படுகிறது. காலம் 15-ஆம் நூற்றாண்டு. இதனைப் பயின்றால் நாக்கு நன்கு திருந்தும்.

திருவருட்பயன் = இதுசைவசித்தாந்த சாத்திரம், 14

னுள் ஒன்று. இது சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் போன்ற சித்தாந்த நூற்களின் அரிய பொருளை எளிமையாக அறியத் துணைபுரியும் நூல். கொற்றவங்குடி-உமாபதி சிவாசாரிய சுவாமிகள் இந்நூலைப் பாடினர். இதன் மூலம் பதி பசுபாச இலக்கணங்களையும் ஐந்தெழுத்தின் மாண்பையும் தெற்றத்தெளிய அறியலாம். குறள் வெண்பாவால் ஆனது. இதற்கு நிரம்ப அழகிய தேசிகர் எழுதிய உரை உண்டு.

திருவள்ளுவமாலை = திருக்குறள் சிறப்பையும், திருவள்ளுவர் மாண்பையும் குறித்துச், சங்க காலப் புலவர்கள் பாடிய வெண்பாக்களைக் கொண்ட ஒரு தொகுப்புநூல். ஆனால், இந்நூலைப்பற்றிய கருத்து வேற்றுமையுண்டு. 'இது பல புலவர்கள் பாடிய பாடல்களைக் கொண்ட நூல் அன்று, ஒரேபுலவர் பாடிய நூல்தான்'' என்பதே அக்கருத்து வேற்றுமையாகும். என்றாலும், குறளாசிரியர் சிறப்பையும் நூலின் பெருமையும் அறிதற்கு இந்நூல் பெருந்துணை செய்கிறது. சங்கப் புலவர்கள் பாடியபாடலின் தொகையாயின் கடைச் சங்ககாலம் என்னலாம்.

திருவாசகம் = சைவத் திருமுறை 12-னுள் எட்டாவது திருமுறையாகவிளங்கும் பெருமை சான்றது. கல்லான மனத்தையும் கரையச்செய்யும் இயல்பு வாய்ந்த பாடல்கள் அமைந்த தோத்திர நூல். இந்நூலின் அருமை பெருமை தெரிந்து தில்லை நடராசப் பெருமானே இதனைத் தம் திருக்கரத்தால் எழுதிப் பஞ்சாக்கரப்படியில் வைத்தனர். இது எவர் உள்ளத்தையும் உருக்க வல்லது என்ற குறிப்பில், ''திருவாசகத்திற்கு உருகாதவர் ஒரு வாசகத்திற்கும்உருகார்.'' என்ற பழமொழியும் இது குறித்து வழங்கப்படுகிறது. மேற்கு நாட்டவர் உள்ளத்தைக் கவர்ந்த பெருமை சான்றது. இதனால்தான் செவரண்ட் போப் என்பவரும் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இதனைப்பாடிய பெரியார் மாணிக்கவாசகர். இதற்குக் காழித் தாண்டவராயர் எழுதிய வியாக்கி

யானம் உண்டு. மறைமலி அடிகள் முதல் நான்கு பாடல் கருக்கு எழுதிய உரையுண்டு. இவைகளே அன்றி, மற்றும்சில உரைகளும் வெளிவந்துள்ளன. இதன் காலம் கி. பி. 4 ஆம் நூற்றாண்டு.

திருவாசிரியம் = நம்மாழ்வர் பாடிய நாலாயிரப் பிரபந்தத்துள்ளது. காலம், கி.பி. 8 ஆம் நூற்றாண்டு. திருமாலின் பெருமைகளை ஆசிரியப்பாவால் உரைத்துளது.

திருவாய்மொழி = நம்மாழ்வர் வரலாற்றை அறிவிக்கும் நூல். இதில்பதிகபாசுரங்களின் விளக்கமும், குறிவரைகளின் இலட்சணமும் மற்றும் பல அரிய குறிப்புக்களும் அழகுறக் கூறப்பட்டுள்ளன. படிக்கப் படிக்கச் சுவை அமைந்த நூல். இதற்குக் குமார தேவர் எனபவர் உரை எழுதியுள்ளார். புராணத்தின காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

திருவாய்மொழி = வைணவ சமயத்திற்குரிய நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் உள்ளது. இது வேதத்தின் சாரம் என்று கூறப்படுவது. அகப்பொருள் கருத்துக்களை மிகுதியாகக் கொண்டு பாடப்பட்டது. இதனைப் பாடியவர் நம்மாழ்வார். இதற்கு நம்பிள்ளை, நஞ்சீயர், திருக்குருகைப்பிரான் பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, முதலானவர் உரைகள் உண்டு. இந் நூலின் காலம் கி. பி. 8 ஆம் நூற்றாண்டு. திருமாலின்மீது பாடப்பட்ட தோத்திரநூல்.

திருவைகுண்ட அம்பல வாணதேசிகர்பிள்ளைத்தமிழ் = திருவாடுதுறைகுருமகா சந்நிதானமாக விளங்கிய பரமாசாரிய சுவாமிகளான அம்பலவாண தேசிகர் மீது பாடப்பட்ட பிள்ளைத் தமிழ். இதனைப் பாடியவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள். காலம் கி. பி.19 ஆம் நூற்றாண்டு.

திருவிசைப்பா = சைவத் திருமுறை 12-னுள் 9-ஆம் திருமுறையாக அமைந்த தோத்திரநூல். இந் நூல் கண்டராதித்தர், கருவூர்த் தேவர், திருவாலியமுதனார், திருமாளிகைத்

தேவர். வேணாட்டடிகள், பூந்துருத்திநம்பிக்காடவர் ஆகியவர்கள் பாடியுள்ள திருப்பாடல்கள் உள்ளன. இவற்றுள் பல சிவபெருமான் மீதும், சில முருகன்மீதும் பாடப்பட்டுள்ளன. இது ஒரு தொகுப்பு நூல் காலம் கி.பி.11 ஆம்நூற்றாண்டு. இதில் தேவாரப் பதிகத்தில் குறிப்பிடப்படாத பண்ணும் உண்டு.

திருவிளையாடற் புராணம் = இது மதுரைச் சொக்கநாதரது 64 திருவிளையாடல்களை அறிவிக்கும் நூலாகும். இலக்கியச் செறிவும், சித்தாந்தக் கருத்துக்களும், கவிநயங்களும் மிகுதியும்கொண்ட நூல். தமிழின் பெருமையினை விரு கொண்டு விளம்பும் நூல். இதில் மதுரைக்காண்டம், கூடல் காண்டம், திருவாலவாய்க் காண்டம என்ற மூன்று காண்டங்கள் உள்ளன. இந் நூலால், அகப்பொருள் இலக்கணம், இரத்தின இலக்கணம், முதலான அரிய குறிப்புக்களை அறிந்து கொள்ளலாம். இந்நூலைப்பாடியவர் வடமொழி தென்மொழி அறிந்த பரஞ்சோதி முனிவர் ஆவார். இவரது காலம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு. சிவஞான முனிவர் தமது படுக்கையில் எப்போதும் வலப்பக்கத்தே பெரிய புராணத்தையும், இடப்பக்கத்தே இப்புராணத்தையும் வைத்திருப்பாரானால் இதன் மாண்பை மேலும் கூறவேண்டுமா அன்றோ?

திருவுந்தியார் = இது சைவசித்தாந்த சாத்திரம் 14 னுள் ஒன்றாகும். உந்தியை முன்னிலைப்படுத்திச் சித்தாந்த கருத்துக்களை இந்நூல் அறிவிக்கின்றது. இதனைப்பாடியவர் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் ஆவார். இதன் பெருமையை உணர்ந்து உந்தி என்னும் சொல் இக்குமுன் இரு என்னும், பின் ஆர் விகுதியும் தொடுத்துக்கூறப்பட்டதனால் இது திருவுந்தியார் எனப்பட்டது. காலம்கி.பி. 12 ஆம் நூற்றாண்டு. சித்தாந்த சாத்திரம் 14 நூற்களில் முன்னர்த் தோன்றிய நூல்.

திருவெம்பாவை = மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தினுள் வைக்கும் சிறந்த பாடல்பத்துகளில் ஒன்றாகும். இயற்கை

அழகும். மாதர்கள் ஒரு வரை ஒருவர் எழுப்பிக் கொண்டே நீராடப் போகும் முறையும், அவர் கள் தமக்குள் ஏசிப்பே சிச் செல்லும் தன்மை யும் சுவைதருவனவாகும். மேகத்தை தூதாகவிட்டு யாக உருவகப்படுத்திக் கூறும் பாடல் இன்பம் பயப்பதாகும். பாவை நோன்பின் காலமாக மாதர்கள் பாடும் முறை மில் இது அமைந்துள் ளது. திருவண்ணாமலையில் பாடப்பட்டது. பாவை நூல்களுள் இது முதன் மையானது என்று கரு தப்படுகிறது. இதன் காலம். கி. பி. 1 ஆம் நூற்றாண்டு.

திருவேங்கடசதகம் = திரு வேங்கட மு டை யா ன் திருப் பெயரால் இந்நூல் பாடப்பட்டமையால், இது இப்பெயர்பெற்றது. இத னைப்பாடியவர் நாராயண பாரதி என்பவர் ஆவார். நூறுகள் பல இதில் கூறப் பட்டுள்ளன. காலம் 18 ஆம் நூற்றாண்டு.

திருவேங்கடத்தலபுராணம் = திருப்பதித் திருத்தலத் தைப்பற்றிப் பாடப்பட்ட நூல். இதனைப் பாடியவர் வீரராகவ அய்யங்கார். காலம். கி. பி. 19 ஆம் நூற்றாண்டு. இதில் திருப் பதி மலையில் உள்ள தீர்த் தங்களின் விசேடத்தைப் பற்றியும், பூசித்துப் பேறு பெற்ற அன்பர்களைப் பற்றியும், அலர்மேல்மங் கைத்தாயார் திருமணத் தைப் பற்றியும் அறிய லாம்.

திருவொற்றியூர்ப் புராணம் = சென்னைக்கருகில் திரு வொற்றியூரைப் பற்றிய வரலாற்றைக்கூறும் நூல். இதனைப் பாடியவர் திரு வொற்றியூர் ஞானப்பிர காசர் என்பவர். காலம். கி. பி. 16 ஆம் நூற் றாண்டு.

திருவொற்றியூர் முருகர் மும் மணிக் கோவை = சுவாமி வேதாசலம்என்னும்பறை மலை யாடுகளால் பாடப்பட் டது. இவர் தூய செந்த மிழ் உரைநடை நூல்களை யும் ஆராய்ச்சி நூல்களை யும், எழுதும் ஆற்றலு டையவர். இவர் செய்யுள் இயற்றுவதிலும் வல்லு நர் என்பதையும் காட்டு தற்குரியமுறையில்சிறந்த இலக்கியச் செறிவுடன் விளங்கும் நூல். காலம் கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

நில்லைக்கலம்பகம் = சிதம்பரத்தின் மீது பிறவியிலேயே குருடும், முடமும் ஊமைப் பிறந்து, இளஞ் சூரியர், முதுசூரியர் என்னும் பெயருடன் திகழ்ந்த இரட்டைப் புலவர்களால் பாடப்பட்டது. இதன்காலம் 15 ஆம் நூற்றாண்டு. இது தோத்திர நூல். இலகிய நயமுடையது.

நிகண்டு = இதுமுதுகண்டு நூல். தமிழ் மொழியின் பொருளை நன்கு அறிதற்குத் துணை செய்யும் நூல். இக்காலத்தில் அகராதி பயன் படுவது போல், முற்காலத்தில் இத்தகைய நூற்களே சொற்பொருள் அறியத் துணை செய்தன. நிவாகரம் என்னும் நூல் சேந்தன் என்னும் அரசனது வேண்டுகோளால் நிவாகர முனிவரால் பாடப்பட்டது. அதனால் இது சேந்தன் நிவாகரம் என்றும் கூறப்படும். காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு.

நு

நுதலறு போதக்கட்டளை = இது சைவ சித்தாந்த கருத்தைக் கூறும் நூல். இதில் பதி, பசு பாசங்களின் இயல்புகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இதனைச் சிற்காழி சிற்றம்பல நாடிகளின் சீடர்களில் ஒருவர் செய்துள்ளார். இது உரை நடையால் ஆனது. இந் நூலாசிரியர் தமது அஞ்ஞானத்தைத் தம் ஞானசிரியர் போக்கி அருளிய திறத்தைச் சிறப்பாக எடுத்து மொழிந்துள்ளார். காலம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு.

நுதலறுபோதம் = இது செய்யுள் வடிவான நூல். சைவ சித்தாந்த கருத்துகளைச் செவ்வையாக எடுத்துக் கூறும் நூல். பதி, பசு, பாச இயல்புகளை இதன் மூலம் அறியலாம். இதன் ஆசிரியர் சிற்றம்பல நாடிகள். காலம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு.

தே

தேம்பாவணி = தே + பா + அணி என்னும் சொற்கள் இணைந்து தேம்பாவணி என்று ஆயது. இனிமையான பாடல்களை அழகுறக் கொண்ட நூல் என்பதே இத் தொடரின் பொருள். ஏசுப் பெருமானின் வரலாற்றைத் தமிழில் எடுத்து

இயம்பும் நூல். இதனைப் பாடியவர் டெவரண்ட் பெஸ்கி என்னும் விரமா முனிவர் ஆவார். நல்ல இலக்கியச் செறிவுடைய நூல். இதன காலம் கி. பி. 17 ஆம் நூற் றாண்டு. இதில் திருக் கூறள், சிவக சிந்தாமணி கம்பராமாயணம் முதலான காவியங்களின் நடையும் கருத்தும் தழுவப்பட் டிருப்பதைக் காணலாம்.

தேவாரம் = இது சைவ சமயத்தில் தலை சிறந்து விளங்கும் தோத்திர நூல்களில் முதன்மை வாய்ந்தது. தே + ஆரம் என்று இத்தொடர் பிரிக்கப்பட்டு, தேவனுகிய சிவபெருமானுக்கு உகந்த பாமாலை என்ற பொருளுடையது. இதனைப் பாடியவர்கள். சம்பந்தர் அப்பர், சுந்தரர் ஆவார். இது சைவத் திருமுறைகள் 12 னுள் முதல் ஏழு திரு முறைகளாக விளங்குவது. இது ஒரே காலத்தில் பாடப் பெறுமல், பல் வேறு காலங்களில் எழுந்தமையின் காலம் ஈண்டுக் குறிப்பிடப்படவில்லை. தேவாரம் என்பது வீட்டில் வைத்துப்பூசிக்கத்தக்கது என வைணவப் பேருரை ஆசிரியர்கள் தம் உரையில் குறிப்பிட்டு எழுதியிருப்பது உற்று நோக்கி கவனித்தற்குரியது. இந்நூலால் அறுபத்து நான்கு கலைகளின் குறிப்புக்களையும், பல சித்திரக் கவிகளையும், வரலாற்றுக் குறிப்புக்களையும் இலக்கிய நயங்களையும், சித்தாந்த கருத்துக்களையும் தெரிந்துகொள்ளலாம்.

தொ

தொல்காப்பியம் = தமிழ் மொழியில் உள்ள இலக்கண நூற்களுக்கெல்லாம் காயகமாக விளங்கும் நூல் இதுவேயாகும். இது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் முப்பிரிவுகளை உடையது. பொருளதிகாரத்தில் பாப்பு இலக்கணமும், அணியிலக்கணமும் அமைந்துள்ளன. தமிழ் நாட்டு மக்களின் நாகரிகம் பண்பாடு முதலியனவற்றை அறிவதற்குப் பெருந்துணை செய்ய வல்லது பொருளதிகாரமே. இந்நூலுக்கு நச்சினார்க்கினியர், சேனவரையர், இளம்

பூரணர், பேராசிரியர் தெய்வச் சிலையார் கல்லாடனார் பொன்றவர்கள் உரை எழுதியுள்ளார். தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல் காப்பியர் என்பவர். காலம். இடைச்சங்க காலம்.

தொன்னூல் விளக்கம் = இது தமிழ் மொழியில் உள்ள சொல், பொருள், யாப்பு, அணி, ஆகிய ஐந்தின் இலக்கணங்களைச் சுருக்கிக் கூறும் வசன நூல். இதனை எழுதியவர் ரெவரண்ட் பெஸ்கி என்னும் வீரமா முனிவர் ஆவார். காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு. இதன் மூலம் ஐந்திலக்கணங்களின் விளக்கங்களைத் தெற்றத் தெளிய உணரலாம்.

தொண்டைமண்டல சதகம் = இது தொண்டைமண்டலத்தைப்பற்றிப் பாடப் பட்டமையின் இப்பெயர் பெற்றது. இதன் மூலம் தொண்டை நாட்டுத் தொடர்புடைய புலவர்கள் இன்னின்னார் என்பதையும், தொண்டை நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், இன்னின்ன என்பதையும் தெற்றத்தெளிய அறிந்து கொள்ளலாம்.

இந் நூலைப் பாடியவர் படிக்காசுப்புலவர். காலம் 17 ஆம் நூற்றாண்டு.

ந

நந்தனர் சரித்திரக் கீர்த்தனை = நந்தனாருடைய சரித்திரத்தைக் கீர்த்தனைகளின் மூலம்பாடி அமைத்துள்ள சிறந்த நூல். இது போதும்நந்தனர் நாடகம் நடத்துபவர் இதனை அடிப்படையாகக் கொண்டே நடத்துகின்றனர். இதில் அமைந்த கீர்த்தனைகள், செவிக்கு இனிமையுடையனவையாய், உருக்க முடையனவாய் இருக்கின்றன. இதற்கு முதலில் சாத்து கவி தொடுக்க மறுத்த மகர வித்துவான், திருசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களே, பின்னர் இதன் கீர்த்தனைகளை இதன் ஆசிரியர் பாடிக்காட்டிய போது உள்ளம் பரவசப் பட்டுச் சாத்து கவி அருளினர் என்று அறியப் படுதலிலிருந்து, இந் நூலின் மாண்பை அறியலாம். இதனைப் பாடியவர் கோபால கிருஷ்ண பாரதியார். காலம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு. இந்தக் கீர்த்தனையில் கூறப்

பட்ட நந்தன் சரித்திரக் குறிப்புக்கும் பெரிய புராணத்தில்வரும் திருநாளைப் போவார் (நந்தனார்) வரலாற்றுக் குறிப்புக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு.

நந்திக்கலம்பகம் = நந்தி வர்மன் என்னும் பல்லவ மன்னன் தமிழ் ஆர்வம் உடையவன், இதனால் புலவர்கள் இவனைப் போற்றினர். இதனைக் கண்டு பொறுமைகொண்ட இவன் தம்பி சித்திரமயன் இவனைக் கொல்ல ஒரு புலவனைச் சரிபடுத்தி அவனை அரம் வைத்துப் பாடிக் கொல்லக் கூறினன். அவ்வாறே புலவன் நச்சுஎழுத்துக்கள் அமைய நந்திக்கலம்பகம் என்னும் இந்நூலைப்பாடி நந்தவர்மனை நேட்குமாறு செய்து அவனைக்கொலையுண்ணச் செய்தான். காலம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு.

நற்றிணை = இது சங்க இலக்கியங்களாகிய எட்டுத் தொகை என்னும் பகுதியுள் ஒன்றாகும். அகப் பொருள் சுவை ததும்பிய நூல். ஆசிரியப் பாவால் ஆனது. நல் என்ற அடைமொழியே இதன் சிறப்பை அறிவிக்கும். 400 பாக்களைக் கொண்டது. பல புலவர்கள் பாடிய பாடலின் தொகை நூல் ஆகும். இதனைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் என்பவன். இதற்கு அழகான முறையில் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை எழுதியுள்ளார். இந்நூலின் காலம் கடைச் சங்க காலம்.

நன்னூல் = இது தமிழில் உள்ள இலக்கண நூல். இதில் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் ஆகிய இரண்டின் இலக்கணங்கள் தெளிவாகச் சூத்திர வடிவில் கூறப்பட்டுள்ளன. இந்நூல் பொருள், யாப்பு, அணி ஆகிய இலக்கணங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்பது இதன் சிறப்புப் பாயிரத்தால், அறிய வருகிறது என்றாலும், அம் மூவிலக்கணங்களைக் கூறும் சூத்திரங்களை இதுவரை கண்டிலோம். தொல்காப்பியம் பயில்வதற்குமுன், இந் நூல் பயிற்சி, மிகமிக இன்றியமையாதது. இதன் ஆசிரியர் பவணந்தி முனிவர்

இதன் காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு. இந் நூலுக்குப் பலர் உரை எழுதியுள்ளார். அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை மயிலை நாதர் உரை, சங்கரநமச்சிவாயர் உரை, விசாகப் பெருமாளையர் உரை, இராமானுசக் கவிராயர் உரை, ஆறுமுக நாவலர் உரைகளாம், இவற்றுள் சங்கர நமச்சிவாயர் உரை விருத்தியுரை எனப்படும். இவ்வுரையினைத் திருத்தம் செய்து சில அரிய குறிப்புடன் சிவஞானமுனிவரும் ஓர் உரை செய்துளளார்.

நன்னெறி = நல்ல நெறிகளை யுணர்த்தும் நாற்பது வெண்பாவாலான நூல். இதனை இளமையில் பயின்று, பின் வாழ்க்கையில் பயின்ற வண்ணம் நடப்பதற்கு ஏற்ற நீதிகளையும் கருத்துக்களையும் கொண்ட நூல். இதனைப் பாடியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். காலம். கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

நா

நாச்சியார் திருமொழி = இது ஸ்ரீ ஆண்டாள் அம்மையார் பாடிய தோத்திர நூல். திருமாலின் மீது பாடப்பட்டது. நாச்சியார் என்பவர் ஈண்டு ஸ்ரீ ஆண்டாள் அம்மையார். ஆவார். இந் நூல் நாலாயிர திவ்ய பிரபந்தத்துள் ஒன்றாகத் திகழ்கிறது. இதன் காலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு. ஸ்ரீ ஆண்டாள் அம்மையார் தம் மைத் திருமால் மணவாளனாக வந்து, மணந்து செய்திகளைத் தம் தோழிக்குக் கூறும் முறையில் அமைந்துள்ள பாடல்களைக் கொண்டு வைதிக முறைப்படி திருமணச் சடங்குகள் நடைபெறும் குறிப்புக்கள் பலவற்றை அறிவிக்கும நூல்.

நாராயண சதகம் = நீதிகளை 100 பாடல்களால் விளக்கும் நூல். ஆசிரியர் நாராயண பாரதி. காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு.

நாலடியார் = நான்கடிகளைக் கொண்டு சிறப்புடன் திகழ்வதால் நாலடியார் எனப்படும். திருக்குறளோடு ஒருங்கு வைத்து எண்ணப்படும் நீதி நூல். "நாலும் இரண்டும் சொல் லுக்குறுதி"

"சொல்லருமை நாலிரண்டில்" என்பனபோன்ற மொழிகள் இது கருதியே கூறப்பட்டு வருகின்றன. எண்ணுயிரம் சமணர்கள் தம் நாடு பஞ்சத்தால் பாதவித்தபோது, பாண்டிய நாட்டை அடைந்து வாழ்கையில், பின்னர் நாடு செழிப்புற்றதால் தம் நாடு திரும்பிப் போகையில் ஒவ்வொரு வெண்பாவைப் பாடித் தாம் இருந்த இடத்தில் எழுதி வைத்து விட்டுச் செல்லப் பாண்டிய மன்னன் தன்னிடம் கூறுது சென்ற சமணர்களின் பாட்டுநாட்டுக்குத்தேவையில்லை என்று சினந்து அவற்றை வைகை ஆற்றில் எறிந்து விடக்கூற, அவற்றுள் நாநூறு பாடல்கள் கரையில் ஒதுங்கி நின்றுவிட்டன. அவற்றை எடுத்துப் பதுமனர் எனபவர் செப்பனிட்டனர். இதனை காலம் கடைச் சங்க காலம். இந்நூலைப் போப் அவர்கள் ஆங்கில மொழியில் மொழி பெயர்த்துளளார். சிலர், "இந்நூல சமணப் புலவர்கள் பலரால் பாடப்பட்ட நூல் அன்று. ஒருவரால் பாடப்பட்ட நூல்" என்றும் கூறுவர். இதன் காலம் கி. பி. 7 ஆம் நூற்றாண்டு எனச் சிலர் கருதுவர்.

நாலாயிரப் பிரபந்தம் = இது வைணவர்களுக்குரியதோத்திர வடிவில் அமைந்த நூல்களுள் சிறந்ததாகும். இந்நூலில் நாலாயிரப் பாடல்கள் இருப்பதால் இந்நூலுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. இந்நூலுக்குரிய ஆசிரியர்கள் 12 ஆழ்வார்கள் ஆவார். அவர்களை பொய்கையார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை யாழ்வார், நம்மாழ்வார், மதுரகவி யாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார். ஆண்டாள், தொண்டரடிப் பொடி யாழ்வார், திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார் ஆவார். இந்நூலுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவையாவும் தலைசிறந்த உரைகள். அவை ஆழ்வார்களின் உள்ளக் கருத்தை உரைப்பனவாகும். இந்நூலில் கண்ட ஆசிரியர்கள் பல்வேறு காலங்களில் தோன்றினமையின் காலம் குறிக்கப்படவில்லை.

நால்வர் நான்மணிமாலை = திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமயாசிரியர்கள் நால்வர் மீது பாடப்பட்ட நூல். நான்கு மணிகள் கோக்கப்பட்ட மாலை போல வெண்பா கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், அகவல் பா ஆகிய நான்கு பாக்கள் மாறி மாறி வர 40 பாடல்களாக அந்தாதித் தொடையமையப் பாடப் படுவதே நான்மணிமாலை யாகும். இம் முறையில் இந் நூல் நால்வர்மீது பாடப்பட்டதனால் இப் பெயர் பெற்றது. இந் நூலால் நால்வரது தலை சிறந்த பெருமைகளையும், தேவார திருவாசகங்களின் ஒப்புயர் வற்ற மாண்பையும், தெற்றத் தெளிய அறிந்துகொள்ளலாம். இந்நூலை வட நூற் கடலையும், தென்னூற் கடலையும் நிலை கண்டுணர்ந்த சிவஞான முனிவர் தம் சடையில் சிரோரத்னம் போல் வைத்து முடித் திருப்பார் என்ற ஒரு செய்தியும் கேட்கப்படுவதால், இந் நூலின் பெருமை நன்கு விளங்கும. இந் நூலை இயற்றியவர் துறைமங்கலம் சிவப் பிரகாச சுவாமிகள் ஆவார். காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

நான்மணிக்கடிகை = இது சங்கம் மருவிய பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. நான்கு விலையுயர்ந்த மணிகளின் துண்டு எத்தனைச் சிறப்புடையதோ, அத்தனைச் சிறப்புடையது போன்று ஒவ்வொரு பாடலிலும் சிறந்த நான்கு நீதிகள் அடங்க இந் நூல் பாடப்பட்டுள்ளமையின் இப் பெயர் பெற்றது. இந் நூலைப் பாடியவர் விளம்பிநாகனார் என்பவர். காலம் கடைச் சங்க காலம்.

நி

நிகண்டு = தமிழ்ச் சொற் பொருள்களை அறிதற்குப் பாட்டு வடிவில் அமைந்த நூலாகும். இந்த முறையில் பல நிகண்டுகள் தமிழில் உண்டு. குறிப்பிடத் தக்க நிகண்டு நூல் சூடாமணி நிகண்டு.

நீ

நீதிநூல் = இந் நூலைப் பாடியவர் வேதநாயகம் பிள்ளை

என்பவர். இந் நூலில் மக்கள் நடத்தைக்கு இன்றியமையாத நீதிகள் பல பாவடிவில் அமைந்துள்ளன. தாய் தந்தையரே முதல் தெய்வம் என்பதும் உண்மைக் கற்புடைய மாதர் ஆண்களைச் ஏறிட்டும் பாரார் என்பதும், அவ்வாறே தம் கணவர் பிற பெண்களைப் பார்க்க இடம்கொடார் என்பதும் போன்ற நீதிகள் பல உள. காலம். கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

நெறி விளக்கம் = நீதி மார்க்கங்கள் இன்னின்னவா என்பதை, விளக்கிக் கூறும் கருத்துடன் எழுதப்பட்ட நூலாகும். இது பெரிதும் திருக்குறளைத் தழுவி எழுதப்பட்ட நூலாகும். திருமலை நாயக்கனுடைய வேண்டுகோளால் குமரகுரு பர சுவாமிகள் இயற்றி அருளினர். இதன் காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

நிதிவெண்பா = இது நீதி நூல்களில் ஒன்று. இதன் ஆசிரியர் யாவர் என்று அறிந்து கொள்வதற்கில்லை.

நீலகேசி = இதன் ஆசிரியர் தெரிதற்கு இல்லை. இதில் சைன மதத்துக் கொள்கைகள் கூறப்பட்டுள்ளன. இதில் பௌத்த மதம், சாங்கிய மதம், வைதிக மதம் முதலான மதக் கொள்கைகள் கண்டித்துக் கூறப்பட்டுள்ளன. இந் நூலுக்கு வாமன முனிவர் உரை எழுதியுள்ளார்.

நெ

நெடுநல்வாடை = இது சங்கம் மருவிய பத்துப்பாட்டுள் ஒன்றாகும். இதனைப் பாடியவர் நக்கீரர். இது பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றிப் பாடப்பட்டது. வாடைக் காற்றின் இயல்பு இதில் அழகுற இயம்பப் பட்டுள்ளது. கடைச் சங்கக் காலத்திய நூல்.

நெய்தற்கலி = இதன் ஆசிரியர் நல்லந்துவனார். நெய்தல் திணையின் இயல்பு அழகுறக் கூறும் நூல் இது. கலித்தொகை நூலுள் ஒரு பகுதி. இதற்கு நச்சினார்க்கினியர் உரை உண்டு. காலம் கடைச்சங்க காலம்.

நே

நேமிநாதம் = இது ஓர் இலக்கண நூல். வெண்பாவால் அமைந்தது. இதனைப் பாடியவர் குணவீரபண்டிதர். காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டு. இது சின்னூல் என்றும் கூறப்படும்.

நை

நைடதம் = நிடத நாட்டு மன்னனும் மனைவி மைலாற்றை விருத்தத்தால் கூறும் நூல். நைடதம் புலவர்க்கு ஓளடதம் என்னும் பழமொழியே இதன் சிறப்பை உணர்த்தும். இன்பச்சுவை இனிது நுகர விரும்புவார்க்கு இது சிறந்த நூலாகும். இதனை இயற்றியவர் அதிவீரராமபாண்டியர். காலம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு.

ப

பஞ்சதந்திர விருத்தம் = மித்திரபேதம் சுகிர்லாபம், சந்தி விக்ரகம், லப்தப்ரணாசம், அசம்பிரேட்சிய காரித்துவம் (சினேகத்தைப் பிரித்தல், சினேகத்தைப் பெறுதல், அடித்துக் கெடுத்தல், கையில் கிடைத்த பொருளை ஒழித்தல், ஆராயாமல் செய்தல்) ஆகிய ஐந்து தந்திரங்களைக் கூறும் நூல். இதனைப் பாடியவர் வீரமார்த்தாண்ட தேவர். காலம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு. இந்த நூலுக்கு அழகான முறையில் உரை நடை நூலும் உண்டு. இதனை எழுதியவர் தாண்டவராய முதலியார்.

பட்டினத்தார் பாடல் = பட்டினத்தார் என்ற பெயருடன் இருவர் இருந்திருக்கின்றனர். அவர்களுள் இரண்டாவது பட்டினத்தார் பாடல்களே, பட்டினத்தார் பாடல் என வழங்கப்பட்டு வருகிறது. இதில் கச்சியே கம்பமாலீசன் பதும், சிதம்பரத்தில் மீது பாடப்பட்ட அகவல்களும், உடற் கூற்றுவண்ணமும், எங்ஙனம் ஆளாக்கண்ணிகளும். தாயாருக்குத் தகனக் கிரியை நடத்தியபோது பாடிய பாடல்களும் திருவொற்றியூர் தலத்திலும், திருவிடைமருதூர் முதலான தலத்திலும் பாடப்பட்ட பாடல்களுள் உள்ளன. திருவேகம்பமாலையில் குலாமர் என்ற இந்துஸ்தான் மொழிசொல்

எடுத்து ஆளப்பட்டிருத்தலின், முஸ்லீம்களின் இயக்கம் தமிழ் நாட்டில் மிகுதியும் இருந்த காலத்தில் இந் நூல் பாடப்பட்டிருக்கவேண்டும் என்பது புலனாகிறது. ஆகவே இந் நூல் தோன்றிய காலத்தை 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் எனலாம். முதல் பட்டினத்தார் என்பவரே திருவெண்காட்டடிகள் என்னும் பட்டினத்தாராக இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. அவர் இருந்த காலம் கி. பி. 10 ஆம் நூற்றாண்டு. அவர் பாடிய பாடல்கள் சைவத் திருமுறை பன்னிரண்டனுள் 11 ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. அவை திருவிடைமருதூர் மும்மணிமாலை, கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக் கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்பன.

பட்டினப்பாலை = சங்கம் மருவிய பத்துப்பாட்டு என்னும் தொகை நூலில் ஒன்றாகும். கரிகால் வளவன் காவிரிப்பூம்பட்டினத்தை அரசிருக்கையாகக் கொண்டு, அரசாண்டபோது அவனது சிறப்பு, அவன் நாட்டின் சிறப்பு முதலியவை கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் பாடப்பட்டவை. இந் நூலைப்பாடிய காரணத்தால், கரிகாற் சோழன், பதிற்றுப் பத்தின் பிரிவாகிய பொற்காசுகளைப் புலவர்க்குக் கொடுத்தான். இந் நூல் வாயிலாகத் தமிழ் நாட்டின் உன்னத நிலையினையும், நாகரிகப் பண்பினையும் காணலாம். இதில் கலங்கரை விளக்கத்தைப் பற்றியகுறிப்பு (light house) காணப்படுவது குறித்து மகிழ்தல் வேண்டும். காலம் கடைச்சங்க காலம். இந் நூலுக்கு அரிய ஆராய்ச்சிநூல் ஒன்றைப் பேராசிரியர் மறைமலை அடிகள் எழுதியுள்ளார். அது ஆராய்ச்சியாளர்க்குப் பெருந்துணை செய்ய வல்லது.

பணவிடுதூது = இதன் மூலம் பணத்தின் மாண்பும், எனையபொருள்களைத் தூது அனுப்புவதிலும் பணத்தை தூதாக அனுப்புவதற்குரிய கார

ணமும் தெளிவாகக்கூறப் பட்டிருப்பது படித்து இன்புறுவதற் குரியன வாகும். இந்நூலைப்பாடிய வர் காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

பண்டார மும்மணிக்கோவை = மூன்று மணிகள் கோக்கப்பட்ட மாலை போல் மூன்று பாடல்கள் ஒன்றன் பின் ஒன்றாக அமையு மூப்பது பாடல் கோக்கொண்ட நூலே மும்மணிக்கோவையாகும். அம் மூன்று பாடல்கள் அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை. என் பன. குமரகுருபரர் இதன் ஆசிரியர். குமர குருபர சுவாமிகள் திருச்செந்தூர் முருகப்பெருமானை நோக் கித் தமக்கு ஞானசிரியரை நாடித்தருதல் வேண்டும் என்று கேட்டுக் கொண் டார். அதுபோது செந் தில் பெருமான், 'அன்ப! உனது வாக்கு யாரிடம் தடைபடுகிறதோ, அவரே உனது ஞான சிரியர் ஆவார்'. என்று கூற, சுவாமிகள், அந்த ஆணை யைச் சிரமேற் கொண்டு, ஞானசிரியரை அடைய வேண்டுமென்ற நாட்டத் துடன் இருக்கையில், திருத்தருமை ஆதின குரு மகா சந்நிதானமாக அவர் காலத்தில் விளங் கிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வணங்கும் பேறு சுவாமிகளுக்குக் கிட்டியபோது, திரு மகா சந்நிதானம் பெரிய புரா ணத்திலுள்ள 'ஐந்து பேரறிவு' என்னும் திருப் பாடலுக்கு அனுபவப் பொருளைக் கூறுமாறு பணித்தார். குமரகுரு பரர் கூற இயலாது நின் றார். அதன்பின் மகா சந்நிதானம் அதன் பொருளை விளக்கினர். அதனைக்கேட்ட சுவாமி கள் செந்தில் முருகப்பெரு மானது கட்டளையைக் கூறி அவருக்கு ஞானப் புத்திரராக ஆயினர். அந்தச் சந்தர்ப்பத்தில் பாடப்பட்ட நூலே இந் நூல். சைவ சித்தாந்தத் தின் மேன்மை சிறப்புற இந்நூலில் கூறப்பட்டுள் ளது. இதன் காலம் கி. பி. 17 ஆம் நூற் றாண்டு.

பதிற்றுப்பத்து = இது சங்க இலக்கியங்களாகிய எட் டுத்தொகை நூல்களுள் ஒன்று. சேரநாட்டு மன் னர்களைப் பற்றியும், அவர்களின் நாட்டைப் பற்றியும் அறிதற்குப்

பெருந்துணை செய்பவல்லது. இதில் நூறு பாடல்கள் உண்டு. பத்துப் பத்து என்னும் தொடரே புணர்கையில் இற்றுச்சாரியை பெற்றும் மற்றும் சிலமாறுதல் அடைந்தும் இவ்வாறு ஆயிற்று. இவற்றுள் முதல்பத்தும், ஈற்றி உள்ள பத்தும் கிடைத்திலை. இரண்டாம் பத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்மீது குமட்டூர்கண்ணனாரால் பாடப்பட்டது. மூன்றும் பத்து இமயவரம்பன் நம்பி பல்யாணை செல்கெழுகுட்டுவன்மீது பாலைக்கௌதமனாரால் பாடப்பட்டது. நான்காம் பத்து களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்மீது காப்பியாற்றுக் காப்பியரால் பாடப் பட்டது. ஐந்தாமபத்து கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்மீது பரணரால் பாடப்பட்டது. ஆறும் பத்து ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்மீது காக்கைப்பாடினியார் நச்செள்ளையாரால் பாடப்பட்டது. ஏழாம் பத்து, செல்வக்கடுங்கோவாழியாதன்மீது கபிலரால் பாடப்பட்டது. எட்டாம் பத்துத் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை மீது அரிசில் கிழாரால் பாடப்பட்டது. ஒன்பதாம் பத்து இரும்பொறையின் மீது, பெருங்குன்றூர்க் கிழாரால் பாடப்பட்டது. காலம் கடைச்சங்ககாலம். இதற்குக் குறிப்பு உரை உண்டு.

பதிற்றுப்பத்து திருமுறை = இது சைவத் திருமுறை பன்னிரண்டனுள் பதினோராவதாகத் திகழ்வது. இதில் பாடியுள்ள புலவர்கள் பன்னிருவர். (1) திருவாலாவாயாராகிய மதுரை சோக்கலிங்கப் பெருமான பாடிய திருமுகப்பாசுரம (2) காரைக்காலம்மையார் பாடிய (i) திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் (ii) அற்புதத் திருவந்தாதி (iii) திருவிரட்டை மணிமாலை. (3) ஐயடிகள் காடவர்கோன் பாடிய திருவந்தாதி கோத்திர வெண்பா (4) சேரமான் பெருமாள் நாயனார் பாடிய (i) பொன்வண்ணத்து அந்தாதி. (ii) திருவாரூர் மும்மணிக்கோவை. (iii) திருக்கைலாயஞான உலா. (5) நக்கீரர் தேவர் நாயனார் பாடிய

(i) கைலைபாதி காளத்தி பாதி யந்தாதி. (ii) திரு வீங்கோய்மலை எழுபது. (iii) திருவலஞ்சுழி ரம்ப மணிக்கோவை. (iv) திரு வெழுக்கூற்றிருக்கை. (v) பெருந்தேவபாணி. (vi) கோபப் பிரசாதம். (vii) காரெட்டு (viii) போற்றித் திருக்கலிப்பா. (ix) திருமுருகாற்றுப்படை (x) திருக்கண்ணப்ப தேவர் திருமறம். (6) கல்லாட தேவ நாயனார் பாடிய திருக்கண்ணப்ப தேவர் திருமறம். (7) கபில தேவ நாயனார் பாடிய (i) மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை. (ii) சிவ பெருமான் திருவிரட்டை மணிமாலை (iii) சிவபெருமான் திருவந்தாதி. (8) பரணதேவநாயனார் பாடிய சிவபெருமான் திருவந்தாதி. (9) இளம்பெருமாள் அடிகள் பாடிய சிவபெருமான் திருமும்மணிக்கோவை. (10) அதிரா அடிகள் பாடிய மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை. (11) பட்டினத்துப்பிள்ளையார் பாடிய (i) கோவில் நான்மணிமாலை. (ii) திருக்கழுமல மும்மணிக்கோவை (iii) திருவிடைமருதூர் மும்மணிக்கோவை (iv) திருவேகம்பமுடையார் திருவந்தாதி (v) திருவொற்றியூர் ஒருபா ஒருபது. (12) நம்பியாண்டார் நம்பிகள் பாடிய (i) திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை (ii) கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் (iii) திருத்தொண்டர் திருவந்தாதி (iv) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி. (v) ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம். (vi) ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை. (vii) ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை. (viii) ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம். (ix) ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை (x) திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை. ஆகிய நூற்கள் அடங்கியுள்ளன. இந் நூலில் அடங்கியபுலவர்கள் சங்க காலம் முதல் 11ஆம் நூற்றாண்டு வரையில் திகழ்ந்தவர்கள் ஆவார்.

பத்துப்பாட்டு = சங்கம் மருவிய தொகை நூல்களுள் ஒன்று. இதில் திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை,

பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி. நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் (இதுகூத்தராற்றுப்படை எனவும் கூறப்படும்) என்னும் பத்துப் பாடல்கள் அடங்கியுள்ளன. இதற்கு நச்சினார்கினியர் உரை உண்டு. கடைச் சங்க காலம். தமிழ் நாட்டு வளம், மக்கள் நாகரிகம், பண்புடைமை முதலானவற்றை அறியப் பெருந் துணை செய்ய வல்லது. இது பாட்டு என்றும் கூறப்படும்.

மததிமிரபாஞ்ஞ = இது பிற மதங்களின் திறமையைக் காரணத்துடன் எடுத்து விளக்கி, சைவ சித்தாந்த மதத்தின் சிறப்பையும். பெருமையையும் இனிதின் எடுத்துக்கூறுவது. இதன் ஆசிரியர் மறை ஞான சம்பந்தர் என்று யூகிக்கப்படுகிறது. காலம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு.

பரமார்த்த குரு கதை = நகைச்சுவை ததும்பும் முறையில் ரெவரெண்ட் பெஸ்கி என்னும் வீரமாமுனிவரால் எழுதப்பட்ட உரைநடை நூல். கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

பராபரக் கண்ணி = தாயுமானவரால் பாடப் பட்டது. பராபரமே என்று ஒவ்வொரு கண்ணியும் முடிதலின் இப் பெயர் பெற்றது. இதில் சிறந்த உண்மைகளும் சிவாத்மாவின் நிலைகளும் பராபரனுடைய மாண்புகளும் கூறப்பட்டுள்ளன. இது தாயுமானவர் பாடலில் ஒரு பகுதி. காலம். கி. பி. 19-ஆம் நூற்றாண்டு.

பரிபாடல் = சங்க நூற்களுள் ஒன்றாம் எட்டுத் தொகை நூற்களுள் இது ஒரு நூலாகும். பரிபாடல் என்பது தமிழ் மொழியில் உள்ள ஒரு வகைப் பாடல். அப்பாடலால் இந்நூல் அமைந்துள்ளமையின் இப்பெயர் பெற்றது. இதில் எழுபது பாடல்கள் இருந்தன. ஆனால் அவற்றுள் 24 பாடல்களே கிடைத்தன. இந்நூலில் முருகப் பெருமானைப் பற்றியும். திருமாலைப்பற்றியும், மதுரையைப்பற்றியும், வைகையைப்பற்றியும் கூறப்பட்ட பாடல்களே உண்டு இவற்றின் மூலம தமிழ் நாட்டின் வழக்க ஒழுக்கங்கள்

திரப்பரங்குன்றம், திருமாலிருஞ் சோலை, வைகை நதி, மதுரையம்பதி ஆகிய இவற்றின் இயற்கை வளன் முதலியவற்றை நன்கு அறியலாம். திருமாலின் பெருமைகளையும், திருமுருகன் மாண்புகளையும் உணரலாம். அகப்பொருட் சிறப்பு அதிகமாக இதில் பேசப் பட்டுள்ளது. இதற்குப் பரிமேலழகர் எழுதிய உரை உண்டு.

பழமொழி = இது சங்கம் மருவிய பதினெண் கீழ்க் கணக்கு நூற்களுள் ஒன்று. இதில் நானூறு வெண்பாக்கள் உண்டு. அதனால் இது பழமொழி நானூறு என்ற பெயரையும்பெற்றது. ஒவ்வொரு வெண்பாவிலும் நல்ல பழமொழி ஒன்றுண்டு. அதனால் இந்நூல் பழமொழி என்றே பெயர் பெற்றது. இதனைப் பாடியவர் முன்றுறை அரையனார். காலம கடைச் சங்க காலம்.

பன்னிரு படலம் = இது அகத்திய முனிவருடைய மாணவர்களை பன்னிருவர் புறப் பொருளைப்பற்றிப் பாடிய பாடல்களைக் கொண்ட நூல். என்பர் ஆகவோ இது புறப்பொருள் இலக்கணம் கூறும் நூல். காலம் கூறுதற்கில்லை.

பா

பாகவத புராணம் = கிருஷ்ணனது வரலாறு அறிதற்குப் பெருந்துணை செயயும் நூல். இதுவே யன்றிப் பழைய உலகத் தோற்றம். ஒடுக்கம் முதலானவற்றை உணர்த்த வல்ல நூலும் ஆகும். அதன் ஆசிரியர் ஸ்ரீ யப்பப் புலவர். காலம் அறிதற்கு இல்லை.

பாரதத்தைப் பரணி = இது ஒரு வேதாந்த நூல். தமிழில் வெற்றி கண்ட வீரன் மீது பாடப்படும் பரணிபோல, சிவன் மாவைப் பந்தித்து நிற்கும் பாசத்தை அழித்து வெற்றி காணும் வகைகளை உணர்த்தும் நூல். இதன் ஆசிரியர் தத்துவராயர். காலம கி. பி. 16 ஆம நூற்றாண்டு.

பாண்டிமண்டல சதகம் = பாண்டிய நாட்டின் பெயரால் நூறு பாடல்களில் பாடபபட்ட நூல். இதனால் பாண்டிய நாட்டுப்

புலவர்கள், பாண்டிய நாட்டு சரித்திரக் குறிப்புகள் அறியப்படும். காலம் அறிதற்கு இல்லை. ஆசிரியர் ஐயம்பெருமாள்.

பாரதம் = இப் பெயரால் இரு புலவர்கள் பாடிய நூற்கள் உண்டு. ஒன்று வில்லிபுத்தூரரால் பாடப்பட்டது. அது வில்லிபாரதம் என்படும். வில்லியார் தம்மை ஆதரித்த வக்கபாகை வரபதி ஆட்கொண்டானது வேண்டுகோளுக்கிணங்கி இந்நூலைப் பாடினர். அவனது சிறப்பையும் இந்நூலில் தக்க இடத்தில் வைத்துப்பாடியுள்ளார். காலம் கி. பி. 15-ஆம் நூற்றாண்டு. நல்லாப்பிள்ளை என்பவரும் பாரதம் பாடியுள்ளார். அது நல்லாப்பிள்ளை பாரதம் என்று கூறப்படும். இதன்காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு. இவ்விரு நூல்களும் பரதவம்சத்தவர்களான கௌரவ பாண்டவர்களின் வரலாற்றைக் கூறுவனவாகும்.

பாரத வெண்பா = பாரதக் கதையை வெண்பாவால் பாடிய நூலே பாரத வெண்பாவாகும். இம் முறையில் பாடியவர் பெருந்தேவனார் என்பவர். காலம் 9-ஆம் நூற்றாண்டு.

பாரிகாதை = தமிழ் நாட்டுப் பண்டைக் காலக் கடை யெழுவள்ளல்களுள் ஒருவனாபாரி என்பவனது புகழை வெண்பாவால் கூறும் நூல் இது. இதனைப் பாடியவர் திரு. ரா. ராகவய்யங்கார் என்பவர். இதன் பொருட்டு ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் பொன் முடிப்பு ஒன்றையும் ஆசிரியர்க்குப் பரிசு அளித்துள்ளார்.

பாவலர்விருந்து = பல்வகையான பொருள்களின் மீது சிறந்த கருத்துக்கள் வெளிவரும் முறையில் அகவல் பாவால் பாடப்பட்ட நூலாகும். இது ஆங்கிலத்தில் உள்ள சானட்என்னும் முறையில் அமைதல் வேண்டும் என்ற எண்ணத்துடன் பாடப்பட்டது. கலங்கரை விளக்கம், மாணாக்கன் முதலான தலைப்புக்களுடன் அமைந்த பாடல்களைக் காண்க. இதன் பெருமை அறிந்த டாக்டர் போப்

அவர்கள், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் இருக்கின்றார். இதன் ஆசிரியர் பரிதிமாற் கலைஞர் என்னும் திரு. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் ஆவார். காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு.

பி

பிங்கல நிகண்டு = நிகண்டு என்பது தமிழ் மொழியில் உள்ள சொற்களின் பொருளை அறிவிக்கும். நூலாகும். இதனைப் பாடியவர் பிங்கலமுனிவர். காலம் 10-ஆம் நூற்றாண்டு.

பிரதாபமுதலியார் சரித்திரம் = இது ஒரு நல்ல தமிழ் நாவல். படிக்கப் படிக்கச் சுவையும் நகையும் தரும் நூல். எழுதியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை. காலம் 19-ஆம் நூற்றாண்டு.

பிரபுலிங்க லீலை = கன்னட தேசத்துக் கதைகளின் தொடர்புடையது. காவியச்சுவை ததும்ப வெகு அழகான முறையில் பாடப்பட்டது. வீரசைவ சித்தாந்தக் கருத்துக்களைக் கதைகளின் வாயிலாக விளக்கும் நூல். இதில் உள்ள பிரிவுகள் படலம் என்றோ, சருக்கம் என்றோ, கூறப்படாமல் கதி என்று கூறப்பட்டிருக்கும். பிரபுவாகிய லிங்கத்தின் திருவிளையாடல்களைக் கூறும் நூல். மாயையின்வன்மை, அல்லமன் மாண்பு முதலான வற்றைக் காணலாம். இதில் காணப்பெறும் வர்ணனைகளும் கற்பனைகளும் கற்போர்க்கு இன்பம் தரும். ஆசிரியர் துறை மங்கலம். சிவப்பிரகாச சுவாமிகள். காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

பிரபோத சந்திரோதயம் = அறிவு, மோகத்துடன் சண்டை செய்து, வெற்றி காண்கின்றது என்பதை விருத்தக் கவியால் காவிய இன்பம் தோன்றப் பாடப்பட்ட ஒரு வேதாந்த நூல். ஆசிரியர் திருவேங்கட மன்னன். திருவேங்கிடநாத ஐயர் என்றும் கூறுவர். காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

பு

புலவர் புராணம் = பண்டைக்காலத்துப் புலவர்களின் வரலாற்றை அறிவிக்கும் நூல். இதனைப் பாடியவர் முருகதாச

சுவாமிகள். காலம் 19-ஆம் நூற்றாண்டு.

புறத்திரட்டு = இந்நூல் ஒரு தொகை நூல். இந்நூலில் பல நூல்களினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள் உள்ளன. இத்தொகை நூலால் இறந்துபட்ட சில நூற்களின் பெயர்களையும், பாடல்களையும் அறியலாம். இது முறைப்படத் தொகுக்கப்பட்டுள்ளது. திருக்குறள் போன்ற நூல்களில் உள்ள தலைப்புக்களைப் போன்று தலைப்புக்களைப் பெற்று அத்தலைப்பின் கீழ்ப் பல நூல்களினின்று எடுக்கப்பட்ட பாடல்கள் தரப்பட்டுள்ளன. இந்நூல் ஆராய்ச்சியாளருக்குப் பெருந்துணை செய்யவல்லது. இதனை இம் முறையில் தொகுத்தவர் யாவர் என்பது அறிதற்கு இல்லை.

புறநானூறு = சங்கம் மருவிய எட்டுத்தொகை நூற்களுள் ஒன்று. இதில் நானூறு பாடல்கள் உண்டு. புறப்பொருளைப் பற்றிக் கூறும் நூல். இதில் பல புலவர்களின் பாடல்கள் காணப்படும். அப் புலவர்கள் ஆண்பாலராகவும், பெண்பாலராகவும், பல சாதியினராகவும், அரசர்களாகவும் பல தொழிலினராகவும், சிறுகுடி மன்னர்களாகவும் உள்ளனர். இந்நூல் பண்டைத் தமிழ் நாட்டின் பெருமை, மக்களின் நாகரிகம் முதலியன அறிதற்குப் பெருந் துணை செய்யவல்லது. நீதிகளும் அரிய கருத்துக்களும் அடங்கியநூல். இதன் மூலம் பண்டைக்காலத்து மக்களைப்பற்றியும், வள்ளல்களைப்பற்றியும், அரசர்களைப்பற்றியும் நன்கு அறியலாம். இதற்கு உரை உண்டு. ஆனால் உரையாசிரியர் பெயர் தெரிந்திலது. காலம் கடைச்சங்க காலம்.

புறப்பொருள் வெண்பாமாலை இது ஐங்கை, கரந்தை, வஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை முதலான புறப்பொருள்பற்றி வெண்பாவால் பாடப்பட்டநூல். இந்நூலால் தமிழ் நாட்டுப்போர் முறை, வீரச் சிறப்பு முதலியன அறியலாம். இதன் ஆசிரியர் ஐயனாரிதனார். காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு.

இந் நூலுக்கு உரை உண்டு. இதனை எழுதியவர் சாமுண்டி தேவ நாயனர் எனபவர். ஒரு சிலர் மாகனூர்மூலன் எழுதினர் என்றும் கூறுவர்.

பெ

பெரிய திருமொழி = நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் உள்ள ஒரு பகுதி. திருமால் மீது பாடப்பட்ட தோத்திர நூல். இதனைப் பாடியவர் திருமங்கை ஆழ்வார். காலம். கி. பி. 9 ஆம் நூற்றாண்டு. இதற்குப் பெரியவாச்சான் பிள்ளை என்பவர் எழுதிய வியாக்கியானம் உண்டு.

பெரியபுராணசாரம் = பெரிய புராணத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு நாயன்மார்களின் மீதும் ஒவ்வொரு விருத்தமாகப் பாடப்பட்ட நூல். சில நாயன்மார்களுக்கு இரண்டு பாடல்களும் உண்டு. இதன் ஆசிரியர் கொற்றவங்குடி உமாபதி சிவாசாரியர். காலம். 14 ஆம் நூற்றாண்டு.

பெரிய புராணம் = சைவத் திருமுறை பன்னிரண்டனுள், பன்னிரண்டாவதாகத்திகழ்வது. பெரியவர்களான சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் நூல். இது ஒருசிற் திருத்த நூல் என்பதையும், இக் காலத்துக்கு ஏற்ற நூல் என்பதையும், இது ஒரு வரலாற்று நூல் என்பதையும், சாதி, மத வேறுபாட்டைக் கடந்த நூல் என்பதையும் விதவை மணம், சமபந்திபோசனம், பிறப்பால் உயர்வு தாழ்வு கருதாத நிலைமை ஆகிய இவற்றை விளக்கும் நூல் என்பதையும் இதனைப் படிப்பவர் உணராமல் இரார். சைவசமய அடியார்களின் வரலாற்றைக் கூறுவது. இதன் ஆசிரியர் சேக்கிழார், காவியச்சுவை கனிந்து ஒழுகும் நூல். கவி நலம் கனிந்த நூல். இரண்டாம் குலோத்துங்கன் சிவக சிந்தாமணியில் ஈடுபட்டிருந்த நிலையினை உணர்ந்த சேக்கிழார். சிவனடியார்களின் வரலாற்றைக் கூற, அவற்றைக் காவியமாகப் பாடும்படி வேண்டிக்கொண்டதன் காரணமாக வெளிவந்த நூல். காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு. சுந்தரர் பாடிய தொகை

நூலே முதல் நூலாகவும், நம்பியாண்டார் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை வகை நூலாகவும்கொண்டு சேக்கிழார் இதனை விரிநூலாகப்பாடினர். "தொண்டர் சீர் பரவுவீர் மேலாந்தரம்" எனக்குறிப்பிடப்பட்ட ஆறு நூல்களில் இதுவும்ஒன்று. இது திருத்தொண்டர் புராணம்என்றும் கூறப்படும். இது சைவத் திருமுறை 12-ஆம் பன்னிரண்டாம் திருமுறையாகும்.

பெரியாழ்வார் திருமொழி = நாலாயிர திவ்யபிரபந்தத்தில் உள்ள ஒரு பகுதி. இதில் திருமாலை பற்றி சரித்திரம், அழகாகவும், தோத்திர ரூபமாகவும் பாடப்பட்டுள்ளது. இதனைப் பாடியவர் பெரியாழ்வார். இதற்குப் பெரியவாச்சான் பிள்ளையும் பிறவான முன்னோர்களும் உரை எழுதியுள்ளனர். காலம் 9 ஆம் நூற்றாண்டு.

பெரும்பாணாற்றுப் படை = இது சங்கம் மருவிய பத்துப்பாட்டில் ஒன்றாகும். இதனைப்பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் இந்நூல் தொண்டைமான் இளந்திரையன்மீது பாடப்பட்டது. இந்நூலால் அம்மன்னனது பிறப்பும், காஞ்சியம்பதியின் சிறப்பும், தமிழ் நாட்டின் நாகரிகப் பண்பும், தெற்றத்தெளிய விளங்குகின்றன. காலம் கடைச்சங்க காலம். இதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரை உண்டு. 500 அடிகளைக்கொண்ட ஆசிரியப்பாவால் ஆனது.

பொ

பொருநர் ஆற்றுப்படை = 248 அடிகளையுடைய ஆசிரியப்பாவால் ஆனது. இது பத்துப் பாட்டு என்னும் தொகை நூலுள் ஒன்று. இது சோழன் கரிகால் பெருவளத்தான் மீது முடத்தாமக் கண்ணியர் என்பவரால் பாடப்பட்டதாகும். போர்க்களம்பாடும் பொருநரை ஆற்றுப்படுத்தலின் இது இப்பெயர் பெற்றது. காலம் கடைச்சங்க காலம். இதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரை உண்டு.

ம

மகாராசா துறவு = இது வீரசைவ மதத்தைச் சார்ந்த நூல். மன்னன் சிறக்க வீற்றிருந்தும், அச்சிறப்பை உதறித்தள்ளித் துறவு பூண்ட விசுவாமித்

பற்றிக் கூறுவது. இந் நூலால் துறவிகளின் இயல்பு, வைராக்கியசிந் தைபோன்றகருத்துக்கள் நிரம்பஉள்ளன. இதனைப் பாடியவர் சாந்தலிங்க சுவாமிகள். காலம். 17ஆம் நூற்றாண்டு.

மக்கள் நூருண்டு வாழ்வது எப்படி? = இது ஒரு வசன நூல். இந்நூல் வாயிலாக மக்கள் உடலே ஓம்பும் விதத்தையும் உணவு கொள்ளும் முறையையும் மற்றும் பல குறிப்புக்களை அறியலாம். இந்நூலில் கூறப்பட்ட முறையில் சிறிதும் வழுவாது வாழ்க் கையை நடத்திஞல் உல கில் நூருண்டுகள் உயி ருடன் வாழலாம் என் பதை நன்கு தெற்றத் தெளிய அறிந்து கொள்ள லாம். இதனை எழுதியவர் சுவாமி வேதாசலம் என்ற மறைமலை அடிகள். காலம் 20 ஆம் நூற்றாண்டு.

மணிமேகலை = ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று. கோவலனுக்கும் மாதவிக் கும் பிறந்த மணிமேகலை யின் வரலாற்றைக் கூறு வது. மணிமேகலை துறவு பூண்டு வாழ்ந்த காரணத் தால் இது மணிமேகலை துறவு என்றும் கூறப் படும். இது பௌத்த மதக் கொள்கைகள் பல வற்றை ஆங்காங்கு விளக்கிச் செல்கிறது. இதன் மூலம் தமிழ்நாட்டு வரலாற்றுக் குறிப்புக்கள் பலவற்றைக் காணலாம். யாக்கை நிலையாமை இள மை நிலையாமை, முதலி யன வெகு தெளிவாகக் விளக்கப்பட்டுள்ளன. நீதிகள் பலவும் கூறப்பட் டுள்ளன. கற்புடை மாதர் செயல்களும் இதில் உள் ளன. இதனை எழுதியவர் கூலவாணிகச் சீத்தலைச் சாத்தனர். காலம் கடைச் சங்ககாலம். இந் நூலைக் குறித்துச் சிறந்த முறை யில் ஓர் ஆராய்ச்சிநூலும் வெளிவந்துள்ளது. அதனை எழுதியவர் ஔவை துரைசாமிப் பிள்ளை என்பவர்.

மதிவாணன் = இது ஓர் உரை நடை நூல். பெரி தும் பிறமொழி கலவாது தூய தமிழ் நடையில் எழு தப்பட்ட நூல். உயர்ந்த கம்பீரமான நடையுடை யது. படிக்கப் படிக்க இனி மை தருவது. ஆசிரியர் பரிதிமால் கலைஞர். காலம் கி. பி. 20 ஆம்

நூற்றாண்டு. ஆங்கிலத்தில் உள்ள நாவல்போல் இது தமிழில் உள்ள நாவல்.

துரைக்கலம்பகம் = தென்மதுரை சொக்கலிங்கப் பெருமான் மீது பாடப்பட்ட நூல். தமிழின் மாண்பு, மதுரையின் சிறப்பு முதலியன இதனால் தெரியவரும். இதனைப் பாடியவர். குமரகுருபர சுவாமிகள். காலம். கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

துரைக்காஞ்சி = சங்கம் மருவிய பத்துப்பாட்டில் ஒரு பாட்டு. ஆசிரியப் பாவால் 782 அடிகளையுடையது. வீடு பேற்றை அடையப் பல்வேறு நிலையாமைகளைப் பெரியோர் எடுத்துக்கூறுவது காஞ்சியாதலின் இதிலும் அத்தகைய குறிப்புக்கள் காணப்படுதலின் இப்பெயர் பெற்றது. இம்முறையில் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியற்கு விடுபேறு நிமித்தம் பலவகை நிலையாமையைச் செறியறிவுறுத்தினர் மாங்குடி மருதனர் என்பவர். இது தமிழ் நாட்டின் சிறப்பை அறிதற்குப் பெருந் துணைசெய்ய வல்லது. காலம் கடைச்சங்க காலம். இதற்கு நச்சினார்க்கினியர் உரை உண்டு.

மத்தான்சாயபு பாடல் = இது ஒரு வேதாந்த கருத்துக்கள் அடங்கிய நூல். தாயுமானவர் பாடல் போக்கைத் தழுவிப் பாடப்பட்டது. அமைப்பு முறையும் அதுபோன்றே இருக்கும். இதனைப் பாடியவர் மத்தான்சாயபு காலம் 19 ஆம் நூற்றாண்டு.

மலரும் மாலையும் = தனித் தனிமலர்களும் அம்மலர்களால் ஆன மாலைகளும் எப்படி நலனுற விளங்குமோ, அது போலத் தனித் தனிப் பாடல்களையும் பாடல்களின் தொடர்பு பெற்ற தொடர் நிலைச் செய்யுட்களையும் கொண்டு இந் நூல் தொடுக்கப்பட்டது. இதனால்தான் இது இப் பெயர்பெற்றது. இதன் ஆசிரியர் தேசிகவிநாயகம்பிள்ளை. காலம் 20 ஆம் நூற்றாண்டு.

மலைபடுகடாம் = சங்கம் மருவிய பத்துப்பாட்டில் ஒன்று. இது கூத்தர் ஆற்றுப்படை என்றும் கூறப்படும். 583 அடிகளைக்கொண்டது. ஆசிரி

யப்பவரால் ஆனது. மகீலக்கு யானையை உவமானமாகக் கூறி அதனிடம் பிறந்த ஓசையைக் கடாம் எனச் சிறப்பித்தகனால் இது மகீலபடுகடாம் என்ற பெயரைப் பெற்றது. பரிசில் பெறவரும் கூத்தன் ஒருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் செய்கண்மாத்துவேள் நன்னன் சேய் நன்னனிடத்தில் ஆற்றுப் படுத்தியதாக அம் மன்னனை இரணிய முட்டத்துப் பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகனார் பாடினர். காலம் கடைச் சங்க காலம். இதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரை உண்டு.

மனுமுறை கண்ட வாசகம் = இது ஓர் உரை நடை நூல். மனுநீதி கண்ட சோழனது வரலாற்றைப் பெரிய புராணத்தைத் தழுவி எழுதப்பட்டநூல். இதன் வாயிலாக ஆசிரியர், சோழநாட்டின் சிறப்பு, பசுவின் மாண்பு, அரசன் கடமை, மந்திரியின் மாண்பு, மக்கள் செய்யக் கூடாத் தீமைகள் முதலானவற்றை அழகாகக் குறித்து இராமலிங்கசுவாமிகள் எழுதியுள்ளார். இவ்வரிய நூலை எழுதியவர் காலம் 19 ஆம் நூற்றாண்டு.

மனோன்மணியம் = இது ஒரு நாடக நூல். பெரிதும் ஆசிரியப்பாவால் ஆனது. வேற்றுப்பாக்களும் சில உண்டு. இது ஆங்கில நூலின் நாடக அமைப்பு முறையில் களம், அங்கம், முதலிய உறுப்புகளைக் கொண்டது. இதல் கடவுள் வாழ்த்துத் தமிழ்த் தாய் வாழ்த்து. அதன் மூலம் தமிழின் பெருமை திறம்படக் கூறப்பட்டுள்ளது. அக்கடவுள் வாழ்த்தில் கன்னடம், தெலுங்கு, மலையாளம், முதலான மொழிகள் தமிழ்மொழியின் சேய்கள் என்பதையும், தமிழ்மொழி அவற்றினை தாய் என்பதையும் யும் குறிதிருப்பதை நன்குதெரியலாம். இதில் உள்ள சிவகாமி சரிதை படித்து இன்புறுதற்குரியது. இந்நூல் முழுமையும் ஆங்கில நூலைத் தழுவி எழுதப்பட்டது. ஆசிரியர் சுந்தரம்பிள்ளை. காலம் 19 ஆம் நூற்றாண்டு. தாவரத்தைப் பற்றியும் வாய்க்காலைப் பற்றியும் நாங்கூழ்ப் புழுவைப்பற்றியும் கூறும்

இடங்களில் பல உண்மை களை இந்நூல் எடுத்துக் காட்டுகிறது. அதன் வாயிலாகச் சமயக் கருத்துக்கள் பல அறியவருகின்றன.

மா

மாணிக்கவாசகர் காலம் = இது ஒரு சிறந்த உரை நடைநூல். இந்நூலில் மாணிக்கவாசகர் எக்காலத்தில் இகழ்ந்தார் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. இந்நூலில் தமிழ் நாட்டில் இகழ்ந்த பல மாபெரும் புலவர்களின் காலங்களும் திட்டவட்டமாகக் குறிக்கப்பட்டுள்ளன. அகத்தியர், தொல்காப்பியர் சைவ சமய ஆசிரியர்கள் வைணவ சமய ஆசிரியர்கள் மற்றும் பல ஆசிரியர்களின் காலங்களும் எழுதப்பட்டுள்ளன. தமிழ் மொழி ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு இது ஒரு பெருந்துணையாகும். எழுதியவர் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலை அடிகள். காலம் கி.பி. 20ஆம் நூற்றாண்டு. இந் நூலாசிரியர் ஒவ்வொரு நூலையும் எழுதத் தெண்ணிச் சொல்லெண்ணிப் படித்தவர் என்பதற்குரிய சான்றுகள் பலவற்றை இதன்கண் அறிந்து கொள்ளலாம்.

மாறன் அலங்காரம் = இது தமிழ் மொழிக்குரிய அணி இலக்கணத்தை அழகுபடக் கூறும் நூல். சூத்திரயாப்பால் அமைந்தது. தொல்காப்பியத்தில் சுருக்கமாகச் சொல்லிய வற்றை விரிவாக விளக்கும் நூல். தக்க உதாரணங்கள் காட்டி எழுதப்பட்டது. ஆசிரியர் குருகைப்பெருமாள் கவிராயர் கி.பி. 16ஆம் நூற்றாண்டு.

மீ

மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம் = இது ஒரு வசன நூல். திருச்சிராபுரம் மகாவித்துவானும் திருவாவடுதுறை ஆதீன வித்துவானும் ஆன மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் குறிக்கும் நூல் இந்நூலை எழுதியவர், மேற்படி பிள்ளையவர்களின் மாணவர்களில் ஒருவராகிய டாக்டர் உ. வே. சுவாமிநாத அய்யர் ஆவார். இதன் வாயிலாக திரு அய்யர் அவர்களின் வாழ்க்கைவரலாற்றையும்

அறிந்து கொள்ளலாம். அரியகுறிப்புக்கள் இதில் உண்டு. காலம் 20ஆம் நூற்றாண்டு.

மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் பிரபந்தம் = இதில் மகாவித்துவான் திருவாவடுதுறை ஆதின வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடியுள்ள கலம்பகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ், சிவபுராணம் முதலானவற்றை ஒன்று சேர்த்து அன்னார் மாணவர் டாக்டர் உ.வே.சுவாமிநாத அய்யர் வெளியிட்டுள்ள ஒரு தொகை நூலாகும். இப்பிரபந்தத் திரட்டால் மீ. பிள்ளை அவர்களின் பிரபந்த நூற் புலமையையும், கவி பாடும் பேராற்றலையும் மற்றும் பல சிறப்புக்களையும் அறியலாம். காலம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

மீனாட்சி அம்மை கலி வெண்பா = கலி வெண்பா என்பது வெண்பா வகையுள் ஒன்று. பல அடிகளைக்கொண்டது. அப்பாவமைப்பில் மதுரை மீனாட்சி அம்மையார் மீது பாடப்பட்டமையின் இப்பெயர் பெற்றது. இந்நூலை அம்மையார் தம் மீது பாடும்படி கட்டளையிட்ட காரணத்தால் இது பாடப்பட்டது. தேவியின் திருவருளைப் பெறுதற்கும் துணை செய்யும் நூல். இந் நூலைப் பாடியவர் மதுரைச் சிதம்பர சுவாமிகள். காலம் கி. பி. 17ஆம் நூற்றாண்டு

மீனாட்சி அம்மை குறம் = குறம் என்பது குறத்தி குறி சொல்லும் முறைகளைப்பற்றிப் பாடப்படும் நூலாகும். இது மதுரை மீனாட்சியம்மையின் மீது பாடப்பட்டமையின் இப்பெயர் பெற்றது. இந்நூல் குறத்தியர் வாழ்க்கை, மலை வளம் முதலானவற்றை அறிவிக்கும் நிலையில் அமைந்துள்ளது. மீனாட்சியம்மையார் தடாதகை பிராட்டியாராக மதுரையை அரசாண்ட போது விளங்கிய நிலைகளும் இதில் உண்டு. குமாரகுருபர சுவாமிகள் இதனைப்பாடினர். காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் = மதுரை மீனாட்சியம்மை மீது குமரகுருபர சுவாமிகளால் பாடப்பட்ட நூல். இந் நூலில் உள்ள வருகைப் பருவத்தில் அமைந்த "தொடுக்கும்

கடவுள் பரம்பாடல்" என்ற பாட்டைப் படித்து ஆசிரியர் பொருள்விரித்த போது மதுரை மீனாட்சி அம்மையார் வியந்து தமது கழுத்து முத்து மாலையினை ஆசிரியருக்குப் பரிசு அளித்தார் என்பர். இந்நூலின் மாட்சியினைக் கூற வேண்டுவதில்லை அல்லவா? இந்நூல் மதுரைத் திருமலை நாயகர் அவையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

முகையத்தின் புராணம் = முஸ்லிம் சமய இலக்கியங்களுள் ஒன்று. முகையதின் அண்டவர் வரலாற்றைக் கூறுவது. ஆசிரியர் அல்தின் புலவர். காலம் 18 ஆம் நூற்றாண்டு.

முகைதீன் மாலை = இதுவும் முஸ்லிம் சமய இலக்கியம். தமிழில் உள்ள பிரபந்த இலக்கணமுறைப்படி பாடப் பட்ட நூல். இதன் ஆசிரியர் நமிழ் முகமது புலவர். காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு.

முக்கூடற்பள்ளு = பள்ளு என்பது உழத்தியர் பாட்டாகும். இது 96 வகைப்பிரபந்த வகைகளுள் ஒன்று. இதன் மூலம் வயலில் உழுவர்கள் உழுதொழில் செய்யும் சிறப்பும், அது போது அவர்கள் களிப்புடன் பாடி ஆடிப்பயிர்த் தொழில் செய்யும் விதமும், மழைவரும் குறிகளைக் கூறும் அழகும் அமைந்திருப்பதைக் காணலாம். சந்தப் பாடல் களைக் கொண்டது. பாடியவர் எனினும் 18 ஆம் நூற்றாண்டு.

முதற்றிருவந்தாதி = இது நாலாயிர பிரபந்தத்தில் ஒரு பகுதி. இதனைப் பாடியவர் பொய்கையாழ்வார். செய்யுட்கள் எல்லாம் வெண்பாவால் ஆனவை. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய முதலாழ்வார் மூவரும் பாடியுள்ள திருவந்தாதிகளில், இது முதற்கண் இருத்தலின், இது முதற்றிருவந்தாதி எனப் பட்டது. காலம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு.

முதுமொழிக்காஞ்சி = இது கங்கம்பருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூற்களுள் ஒன்று. நீதிகளை அழகுற எடுத்துக் கூறும் நூல். இதில் கூறப்பட்ட ஒவ்வொரு நீதியும் ஒவ்வொரு பழமொழிகளைப்

போல் அமைந்திருத்தலின், இது முதுமொழிக் காஞ்சி எனப்பட்டது. முதுமொழியாவது பழமொழி. ஆசிரியர் கூடலூர் கிழார். காலம் கடைச் சங்க காலம்.

முத்நிலைச்சயம் = சைவசித்தாந்த கருத்துக்களை அழகுறத் தெளிவுற அறிவிக்கும் நூல். ஆசிரியர் ஞான சம்பந்த தேசிகர். காலம் 16ஆம் நூற்றாண்டு. இந்நூற்பெயராலேயே மோட்சம் அடைதற்குரிய வழியினை இந்நூல் வாயிலாக அறியலாம் என்பது கூறாமலே தெரிகிறதல்லவா?

முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ் = வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள முத்துக்குமரன்மீது குமரகுருபர சுவாமிகள் பாடிய பிள்ளைத்தமிழ். இதன்மூலம் சோழ நாட்டு வளம், புலவரின் கற்பனைத்திறன் முதலானவற்றைப் படித்து இன்புறலாம். காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு. சிவபெருமானது சடையில் உள்ள சந்திரனைப் பாம்பினிடம் வைத்தும். மானின் வாயில் அறுகம் புல்லை வைத்தும், இறைவன் மார்பில் கூத்தாடியும், கண் சிவக்க கங்கையாற்றில் குளித்தும், மற்றும் பல குறும்புகளையும் முருகன் செய்வார் என ஆசிரியர் அழகுபடக்கூறி இருப்பது படிக்கச்சுவை தருவதாகும்.

முத்தொள்ளாயிரம் = இது தமிழ்மொழியில் தோன்றி மறைந்த நூற்களில் ஒன்று. இது சேர சோழ பாண்டியர்களைத் தனித் தனியே 900 பாடல்களாகப் பாடப்பட்ட நூலாகும். ஆக 2700 பாடல்களைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் ஒருசிலர் தனித்தனி 300 பாடல்கள் பாடப்பட்டு 900 பாடல்களைக் கொண்டதாக இருக்க வேண்டுமென யூகிக்கின்றனர். என்ன கூறிலும் நமக்கு இது பாதுகாத்துள்ள பாக்கள் சிலவே. அச்சிலவற்றுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. இதில் 108 பாடல்களே இதுபோது கிடைத்துள்ளன. இந்நூலால் மூவேந்தர்களின் சிறப்பு, தமிழ் நாட்டுச் சிறப்பு முதலியன அறியலாம். அகப்பொருள் சுவையுடைய பாடல்கள் படிக்கப் படிக்கச்சுவை தருவனவாகும்.

ஆசிரியர் யார் என அறிதற்கில்லை.

முல்லைப்பாட்டு = இது சங்கம் மருவியபத்துப் பாட்டில் ஒன்று. இதன் மூலம் பிரிந்த தலைமகன் திரும்பும் அளவும் தலைவி ஆற்றியிருந்த தமையையும் அவன் வருகையைக் கண்டு தோழி கூறுவதையும் அறியலாம். இதனைக் காவிரிப் பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார்மகனார் நம்பூதனார் பாடியருளினார். 103 அடிகளைக் கொண்டது. இதன்மூலம் பல அரிய குறிப்புக்களை அறிந்து இன்புறலாம். மிதித்தும் பார்க்கும் வழக்கமும் பெண்கள் அரசனது பாடிவீட்டில் அவனுக்குக் காவல் பெண்களாக இருந்து காத்துவந்தனர் என்பதும், யவனர்கள் காவல்காரர்களாகவும், விளக்குத் தூக்கிகளாகவும் அமைக்கப்பட்டனர் என்ற செய்தியும் ஊமையர்களான மிலேச்சர் அரசன் பள்ளி கொள்ளும் இடத்தில் காவல் காத்தனர் என்ற செய்தியும் அறிந்து இன்புறலாம், காலம் கடைச் சங்க காலம். இதற்கு நச்சினார்க்கினியர் உரை உண்டு. இத்தகைய நூலுக்கு அழகுக்கு அழகு செய்வது போல மறைமலையடிகள் முல்லைப் பாட்டு ஆராய்ச்சி என்ற நூலையும் எழுதியுள்ளார்.

மூ

மூத்த திருப்பதிகம் = சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பதினோராம் திருமுறையில் இரண்டாவது நூலாகத் திகழும் பெருமையுடையது. தேவாரப் பதிகங்களே திருப்பதிகம் என்னும் சிறப்புக்குரியனவாக இருத்தலின், அத்தேவாரப்பதிகங்களை நோக்க இப்பதிகம் முன்னர்த் தோன்றினமை கருதி, இதற்கு மூத்த திருப்பதிகம் என்ற பெயரை சூட்டினர். இது திருவாலங்காட்டின் இறைவர்மீது காரைக்கால் அம்மையார் பாடிய திருப்பதிகமாகும். இதன் காலம் அப்பர், சம்பந்தர் சுந்தரர் ஆகிய மூவருக்கும் முற்பட்ட காலம். ஆகவே, கி. பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது.

மூத்த நாயனார் இரட்டைமணிமாலை = இது சைவத் திருமுறை பன்னிரண்டனுள் பதினோராவது திரு

முறையில் அமைந்ததாகும். இது விநாயகப் பெருமான் மீது பாடப்பட்டது. இஃது நாயனார் என்று முருகப் பெருமானைக் குறித்துப் பேசப்படுதலின், ஈண்டு மூத்த நாயனார் என விநாயகப் பெருமான் குறிப்பிடப்பட்டார். இதனைப் பாடியவர் கபிலதேவ நாயனார். விநாயகரைப் பற்றிய குறிப்புச் சங்க நூற்களில் எங்கும இல்லை. ஆகவே, இங்குக் குறிப்பிடப்பட்ட கபிலதேவ நாயனார் என்பவர் சங்க காலக் கபிலராக இரார் எனபது ஆராய்ச்சியாளர் துணிபு. ஆகவே, காலம உறுதியாகக் கூறுவதற்கில்லை.

மூத்த பிள்ளையார் பிள்ளைத் தமிழ் = இதுவும் பதினேராம் திரு முறையாக அமைந்தநூலாகும். விநாயகப் பெருமானைப் பற்றியதாகும். இதனைப் பாடியவர் அதிராவடிகள். காலம் அறிதற்கு இல்லை.

மூன்றும் திருவந்தாதி = நாலாயிர பிரபந்தத்தில் உள்ள ஒரு பகுதி. 100 வெண்பாக்களைக் கொண்ட நூல். திருமால் மீது பாடப்பட்ட தோத்திர நூல். ஆசிரியர் பேயாழ்வார். காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு. பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் ஆகிய மூவரும் அந்தாதி பாடியுள்ளமையின் அவைகளுள் இவ்வந்தாதி மூன்றாவதாக அமைந்திருத்தலின், இது மூன்றும் திருவந்தாதி எனப்பட்டது.

மெ

மெய்கண்ட சாத்திரம் = இந்நூலுக்கு அமைந்திருக்கும் பெயரைக் கொண்டே இந்நூலின் அருமைபெருமைகளை உணர்ந்து கொள்ளலாம். இது ஒரு தொகுப்பு நூல். பதி,பசு, பாசங்களைப பற்றிய சைவ சித்தாந்தத்தின் தெளிவை நன்கு விளக்கும் நூல். இந்நூற்களைவிடத் தெற்றத் தெளிய சைவ சித்தாந்த உண்மைகளை ஒழுங்காகத் தர்க்க முறைப்படி காரணங்களுடன் கூறத்தக்க நூல்கள் எவையும் இல்லை என்னலாம். இவற்றிற்குப்பின் வந்த பிற நூல்கள் இக்கருத்துக்களைக் கூறினும் அக்கருத்துக்களுக்கு அடிப்படை இந்நூற்களே அன்றி வேறு அல்ல. இந்நூலில் திருவுந்தியார்

திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம் திருவருட் பயன், விண்ணெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய பதினான்கு சாத்திரங்கள் உள்ளன. பற்பல காலத்தில் இருந்த ஆசிரியர்கள் செய்த காரணத்தால் காலம் குறிப்பிடப்படவில்லை.

மோ

மோகவைத்தப் பரணி = இது ஒரு வேதாந்தநூல். இதனைப் பாடியவர் தத்துவராயர். இது வேதாந்த கருத்துக்களைக் கற்பனையாகக் கொண்டு பாடப்பட்டது. இதில் மோகன், விவேகன் என்பானுக்கும் போர் நடந்ததாகக் கூறி, இறுதியில் விவேகன் வெற்றி கொண்டான் என்ற முறையில் முடியும் நூல். காலம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு.

யா

யாப்பருங்கலக் காரிகை = தமிழ் மொழியின் இலக்கணங்களுள் ஒன்றான யாப்பிலக்கணத்தைக் கட்டளைக் கலித்துறை என்னும் பாவால் கூறும் நூல். எழுதியவர் அமிர்தசாகர முனிவர். இதற்குக் குணசாகரர் என்பார் உரை எழுதியுள்ளார். காலம் 11-ஆம் நூற்றாண்டு. சுயமாகச் செய்யுளைப் பாட இந்நூற் பயிற்சி இன்றியமையாது வேண்டற்பாலது.

யாத்திரை = ஒன்று. இது 320 பாடல்களுடன் 6 சருக்கங்களுடன் விளங்குவது. இது வடமொழி யசோதர சாத்திரத்தை ஆதரவர்க்கக் கொண்டு எழுதப்பட்டது. மாரிதத்தன் என்னும் இராச மரபுர மன்னனுக்கு உயிர்கள் பலி கொடுத்தல் தீமையாகும் என்று அறுவுறுத்த யசோதரனது பல பிறவிகளைக் கூறும் கதைகள் அடங்கிய நூல். தலைவன் யசோதரன். கதை சுவையுடையது. ஆசிரியர் அறிதற்கு இல்லை. கி. பி. 11-ஆம் நூற்றாண்டிற்குப் பின் தோன்றிய நூல்.

யா

யாப்பருங்கலக் காரிகை = தமிழ் மொழியின் இலக்கணங்களுள் ஒன்றான யாப்பிலக்கணத்தைக் கட்டளைக் கலித்துறை என்னும் பாவால் கூறும் நூல். எழுதியவர் அமிர்தசாகர முனிவர். இதற்குக் குணசாகரர் என்பார் உரை எழுதியுள்ளார். காலம் 11-ஆம் நூற்றாண்டு. சுயமாகச் செய்யுளைப் பாட இந்நூற் பயிற்சி இன்றியமையாது வேண்டற்பாலது.

யாழ்நூல் = இது ஐஞ்சிறு காப்பியங்களுள்

யாப்பருங்கலவிருத்தி = இது வும் யாப்பிலக்கணத்தை விரித்துக் கூறும் நூல். இது சூத்திரப் பாவால் ஆனது. இதன் மூலம் செய்யுளைப்பற்றிய அரிய பெரிய குறிப்புக்களைக் காணலாம். புது புது செய்யுட்களின் பெயர்களை உணரலாம். ஆராய்ச்சி செய்பவர்க்கு ஒரு பெருந் துணையான நூல். ஆசிரியர் அமிர்தசாகரர். காலம் 11-ஆம் நூற்றாண்டு. இந்நூலுக்கு உரையும் உண்டு.

யாழ்நூல் = இம்மாதிரியான நூல் ஒன்று இருந்ததாக நச்சினார்க்கினியர் தமது உரையில் மேற்கோள் கொடுத்திருப்பதன் மூலம அறியலாம். ஆனால், இது போது அந்நூல் கிடைத்திலது. 20-ஆம் நூற்றாண்டில் பரிமேலழகர் பெருமான் பிள்ளையாகிய சுவாமி விபுலானந்தர் என்பவரும் உரைநடையில் இப்பெயரால் ஒரு நூல் எழுதியுள்ளார். இதில் யாழ் வகைகளையும் அவற்றின் உருவங்களையும் மற்றும் பல அரிய குறிப்புக்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். ஆராய்ச்சிக்கு உகந்த நூல்.

வ

வளையாபதி = ஐம் பெருங் காப்பியங்களுள் ஒன்று. இந்நூல் முற்றிலும் கிடைத்திலது. உரைகளில் மேற்கோளாகக் காட்டப்பட்ட சில பாடல்களே கிடைத்துள்ளன. இது சமண சார்புடைய நூல். இது சிவகசிந்தாமணிக்கு முற்பட்டது. ஆகவே, இது பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நூல்.

வா

வாக்குண்டாம் = இந்நூல் நீதிகளை அறிவிப்பது. ஔவையார் பாடினதாகக் கூறப்பட்டு வருவது. வாக்குண்டாம் என்று முதல் பாடல் தொடங்கப் பட்டமையின் அத்தொடக்கப்பெயரே நூலுக்கு அமைக்கப்பட்டது. இந்த ஔவையார் சங்க காலத்து ஔவையார் அல்லர். இதில் வான்கோழி குறிப்பிட்டிருத்தலின், இது ஆங்கில ஆட்சி தமிழ் நாட்டில் நிலவத் தொடங்கிய காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதலாம். ஆகவே இது கி.பி. 16 ஆம் நூற்றாண்டு நூல். எனக் கருத இடமுண்டு.

நாயு சங்கிதை = வியாசர் வடமொழியில் இயற்றியதை ஒட்டி வரதுங்க பாண்டியர் தமிழில் பாடிய நூல். சிவபரத்துவத்தை விளக்குவது. காலம் 16-ஆம் நூற்றாண்டு.

வி

விநாயக புராணம் = இது பார்க்கவ புராணம் என்றும் கூறப்படும். விநாயகப் பெருமானது வரலாற்றையும், பெருமையையும், அவரைப் பூசித்துப் பேறு பெற்றவர்களையும் எடுத்து மொழிவது. திருக்குறள் கருத்துக்கள் மிகுதியும் இதில் எடுத்து ஆளப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலும் பொருட்பாலில் உள்ள குறட்பாக்களின் கருத்துக்களைப் பரக்கக் காணலாம். ஆசிரியர் கச்சியப்ப முனிவர். காலம் 18-ஆம் நூற்றாண்டு.

விநாயகர் அகவல் = விநாயகர் சதுர்த்தி அன்று முக்கியமாகப் பாராயணம் செய்யும் நூல். இதனை ஔவையார் பாடினர். இவ்வௌவையார் சுந்தரர் காலத்தவர். இந்நூலைப் பாடி விநாயகப் பெருமான் திருவருளால் சுந்தரருக்கு முன் கைலாயம் சேர்ந்தவர். எளிய நடையில் செய்யுள் அமைப்பு இருப்பினும் அரிய கருத்து உடைய செய்யுளாகும். இதனைப் பிள்ளையார் அகவல் என்றும் கூறுவர். காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு.

விறலிவிடு தூது = இது ஓர் உரைநடை நூல். படிக்கப்படிக்கச் சுவை தரும் நூல். கம்பரைப் பற்றி முழுவிவரம் இந்நூலால் அறியலாம். தமிழறியும் பெருமாள் கதை இதில்தான் உளது. சிதறுண்ட பல கர்ணபரம்பரைச் செய்திகளை ஒருங்கே அறிவதற்கு இந்நூல் துணை செய்யும். இதன் ஆசிரியர் வீராசாமி செட்டியார். காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

விவேகசிந்தாமணி = இது ஒரு தொகுப்பு நூல். இதில் பல நூல்களிலிருந்தும் தேர்ந்து எடுக்கப்பட்ட பாடல்கள் உள்ளன. அவை அனைத்தும் சிறந்த நீதிகளைக் கற்பிப்பனவாய் இருக்கும். பல நூல் கருத்துக்களை ஒரு நூலில் காண்பதற்கு இது ஒரு பெருந்துணையானது.

தொகுத்தவர் யாவர் என அறிதற்கு இல்லை. தொகுத்த காலமும் தெரிதற்கு இல்லை.

விறலி விடுதூது = இது ஒரு சிற்றின்ப நூல். இதில் தாசிகளின் மோசமும், அவர்கள் செய்யும் தந்திரங்களும், அவர்களின் சேர்க்கையால் ஏற்படும் துன்பங்களும், புணர்ச்சி இன்பங்களும் மற்றும் பலவும் அழகுபடக் கூறப்பட்டுள்ளன. விறலி என்பவள் தன் உள்ளக் குறிப்பினைத் தன் உடல் வழியே தோன்ற விறல்பட ஆடிக் காட்டுபவள். அவளைத் தூது விடுக்கும் முறையில் இது அமைந் திருத்தலின் இப்பெயர் பெற்றது. இதனைப் பாடியவர் ஸ்ரீரங்கம் அட்டாவதானியார். காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு.

விருத்தவெண்பா = சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்று. விளக்கமும் அவ்விளக்கங்களுக்குரிய விடைகளும் வெண்பாவால் பாடப்பட்ட நூல். இவ்விளக்கமும் விடைகளும் சைவசித்தாந்தத்தை ஒட்டிய விளக்கமும் அவற்றிற்குரிய விடைகளும் ஆகும். ஆசிரியர் உமாபதி சிவாசாரியார். காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு. இப்பெயரால் சிற்றம்பல நாடிகளும் ஒரு நூல் எழுதியுள்ளார். அதன் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு.

வீ

வீர சோழியம் = இது ஓர் இலக்கண நூல். புத்தமித்திரரால் எழுதப்பட்டது. இதன் மூலம் வடமொழிப் புணர்ச்சி இலக்கணங்கள் முதலியவற்றை அறியலாம். கந்த புராண முதற் பாடலின் தொடக்கமான திகழ் + தசம் = திகடசம் என்று புணர்ந்தமைக்கு இந்நூலில் இருந்தே இலக்கணம் காட்டப்பட்டது. காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

வெ

வெங்கைக்கலம்பகம் = வெங்கனூர்தலத்து இறைவன் மீது பாடப்பட்ட கலம்பகம். இவ்வூரின் மீது உலாவும், கோவையும் பாடப்பட்டுள்ளன. இவற்றைப் படிக்கப் படிக்க ஆசிரியரின் கற்பனைத் திறத்தை நன்கு சுவைக்கலாம். இவற்றின் ஆசிரியர் துறைமங்கலம் சிவப்

பிரகாச சுவாமிகள். காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

வேற்றிவேற்கை = நீதிகளை உணர்த்தும் நூல். இது நறுந்தொகை என்றும் கூறப்பெறும். அதிவீர ராம பாண்டியரால் பாடப் பட்டது. வெற்றிவேற்கை என்று இந்நூலின் முதற் செய்யுள் தொடங்கலின் இப்பெயர் கொடுக்கப்பட் டது. காலம் கி. பி. 16 ஆம் நூற்றாண்டு.

வை

வேம்பத்தூர் திருவிளையா டல் = இது பழைய திரு விளையாடற் புராணம் என்றும் கருதப்படும். மதுரைச் சொக்கலிங்கப் பெருமானது திருவிளை யாடல்களை அறிவிப்பது பெரும்பற்றப்புலியூர் நம்பி கள் பாடியது. காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு. இந்நூல் அமைப்பிற்கும் பரஞ்சோதியார் திருவிளை யாடற் புராண அமைப் புக்கும் வேறுபாடு நிரம்ப உண்டு.

வேளாளர் நாகரிகம் = இது ஓர் உரை நடை நூல். இதில் வேளாளர் மாண் பும், தமிழ் நாட்டின் நாக ரிகமும், நன்கு தெரிவிக் கப்பட்டுள்ளன. வேதத் தில் கூறப்பட்ட செய்தி கள் என்ன என்பதைப் பரக்க எடுத்துக் காட்டி யும் விளக்கும் நூல். ஆராய்ச்சி செய்பவர்க் குத் துணையாயது. ஆசிரி யர் மறைமலை அடிகள். காலம் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு.

வை

வைராக்கிய சதகம் = இது வேதாந்த நூல். இதனைத் திருத்துறையூர்ச் சாந்த லிங்க சுவாமிகள் பாடி அருளினர். வைராக்கிய தீபமும் இவரால் பாடப் பட்டதே. இவற்றிற்குச் சிறந்த முறையில் பல மேற்கோள்களைக் காட்டி விரிவான முறையில் திருப் போரூர் சிதம்பர சுவாமி கள் உரை எழுதியுள்ளார். காலம் 17-ஆம் நூற் றாண்டு.

நூல் அகராதி முற்றிற்று.

புலவர் அகராதி

அ

அகத்தியர் = இவர் தமிழ் முனி, குறுமுனி என்றும் கூறப்படுவர். இவர் வட நாட்டிலிருந்து தென்னாடு வந்தவர். இமயமலையில் சிவபெருமானுக்குத் திருமணம் நடக்கும்போது, தேவர்களும் மற்றுமுள்ளவர்களும்ஒருங்கே திரண்டு கூடியதால் வட கோடு தாழ்ந்தது. தென்கோடு உயர்ந்தது. அதுபோது இவர் சிவபெருமானால் தென்னாட்டுக்கு அனுப்பப் பட்டார். அப்படி வந்தவர் பொதிகைமலையில் தங்கினார். இதனால் இவர் பொதிகை முனிவர் என்றும் கூறப்படுவார். இவர் கும்பத்தில் பிறந்ததனால் கும்பமுனி எனவும் அழைக்கப்படுவார். வடிவில்குறுகிக்காணப்பட்டதால் குறுமுனி என்றும், சிவபெருமானிடம் தமிழ் மொழிபயின்று, இலக்கணம் செய்ததால் தமிழ் முனி என்றும் கூறப்பட்டவர். இந்திரனது பகைவனான விருத்திரா சூரன் கடலில் ஒளிந்துகொள்ள, அவனை வெளிப்படுத்தக் கடலைத் தம் உள்ளங்கையில் அடைத்தவர். இவர் 12000 நூற்பாக்கள் அடங்கிய இலக்கண நூலைச் செய்தவர் என்பர். அதுவே பேரகத்தியம் எனப்படும். ஆனால் அவற்றுள் பல மறைந்து போக வெகு சில சூத்திரங்களே இதுபோது கிடைத்துள்ளன. சோதிடம், வைத்தியம் சம்பந்தமாக நூல்களையும் செய்தவர். தலைச்சங்கத்தில் ஒரு புலவராகத் திகழ்ந்தவர். இவரது மனைவியார் உலோபாமுத்திரை. காவிரியாறு உண்டானதற்கு இவர் காரணர். இவர் வேத பாடல்களையும் செய்ததாகக்கூறுவர்.

அகோர சிவாசாரியார் = இவர் சிதம்பரத்தில் வாழ்ந்த ஆதி சைவ பிராமணர். இவர் வெற்றிவேற்கை செய்த அதிவீரராமபாண்டியரின் ஆசிரியர் ஆவார். அகோரபத்ததி என்னும் நூலைச் செய்தவர். கி. பி. 16-ஆம் நூற்றாண்டினர்.

அகோர முனிவர் = இவர் வடமொழி தென் மொழி அறிந்தவர். திருவாரூர் தேவாலயத்தில் அபிடேகக் கட்டளையை நடத்தி வந்தவர். கி. பி. 17-ஆம் நூற்றாண்டினர். இலக்கண விளக்க வைத்திய

நாத தேசிகர் ஆசிரியர். கும்பகோணப் புராணம், திருக்கானப்பேர்புராணம், வேதாரண்ய புராணம் இயற்றியவர். இவரை அகோரதேவ முனிவர் என்றும் கூறுவர்.

அசலாம்பிகை அம்மையார் = பிராமண வகுப்பினர். காந்தி புராணம். இராமலிங்கசுவாமிகள் புராணம் பாடியவர். காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

அடியார்க்கு நல்லார் = இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர். நிரம்பையூர் என்னும் ஊரினர். இவரைப் பொப்பண்ண காங்கேயன் என்பவன் ஆதரித்து வந்தான். இவர் தமது வாழ்க்கையைத் திருவாரூருக்கு அருகில் உள்ள தீபங்குடியில் நடத்தியவர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டினர்.

அட்டாவதானி சுப்பிர நிபக் கவிராயர் = இவர் வைணவர். கம்மாள சாதியினர். திருவரங்கத்தில் பிறந்தவர். கூளப்ப நாயகன் காதல், விறலி விடுதூது என இரண்டு நூற்களை இயற்றியவர். காலம் கி.பி. 18ஆம்நூற்றாண்டு.

அனிலாடு முன்றிலார் = சங்க காலத்தவர். முன்றில் வர்ணிக்கையில் அணில் ஆடும் முன்றில் எனச் சிறப்பித்துப் பாடிய காரணத்தால் இப்பெயர் பெற்றார். இவரது பாடல் ஒன்று குறுந்தொகையில் உள்ளது. இவர் பெண்பாலராக இருக்கலாமோ என்று ஐயுறப்படுகிறது.

அண்டர்மகன் குறுவழுதியார் = சங்க காலத்தவர். இவர் பாண்டிய மரபினர். இவரது பாடல்கள் அகநானூற்றில் இரண்டும், குறுந்தொகையில் ஒன்றும், புறநானூற்றில் ஒன்றும் உள்ளன.

அண்ணாமலை ரெட்டியார் = இவர் பாண்டிய நாட்டுக் கரிவலம் வந்த நல்லூருக்கு அடுத்த சென்னிக்குளம் என்னும் ஊரினர். ஊற்றுமலை ஜமீந்தாரிடம் ஆஸ்தான புலவராய்த் திகழ்ந்தவர். இவர் பாடிய நூற்கள் காவடிச்சிந்து, சங்கர நாராயண கோயில் திரிபு அந்தாதி, நவநீத கிருஷ்ணன் பிள்ளைத்தமிழ். அவற்றுள் காவடிச்சிந்து படிக்கப் படிக்கச் சுவை தருவதோடு பேரின்பச் சுவை

யுடன் சிற்றின்பச் சுவை களையும் இனிதின் எடுத் துக் காட்டும் நூல். கி.பி. 19-ஆம் நூற்றாண்டினர்.

அதங்கோட்டாசான் = இவர் அகத்தியமாணவர்களுள் ஒருவர். இவர் முன்தான் தொல்காப்பியம் அரங் கேற்றப்பட்டது. நான்கு வேதங்களோ நன்கு பயின் றவர். அகத்தியர் காலத்த வர். இவை அனைத்தும் தொல்காப்பாயிப்பாயிரச் செய்யுளால் விளங்குகின் றன.

அதிமதுரகவி = இவர் மது ரையில் வாழ்ந்தவர். திரு மலை நாய்க்கன் ஆஸ்தானப் புலவர். காளமேகப்புலவ ரிடம் வாதத்தில் தோற் றவர். கி. பி. 16-ஆம் நூற்றாண்டினர்.

அதிராவடிகள் = இவர் பதி னேராம் திருமுறையில் உள்ள மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை யின் ஆசிரியர். கி. பி. 9-ஆம் நூற்றாண்டினர்.

அதிவீரராம பாண்டியர் = இவர் குலசேகர பாண்டி யன் திருமகனார். இவரது தமையனார் வரதுங்க பாண்டியர். கொற்கை, தென்காசி ஆகியவற் றைத் தலை நகராகக் கொண்டு மதுரையை ஆண்டவர். இவரது ஆசிரியர்கள் சுவாமி நாததேவர், வேம்பத் தூர் சபை முனிவர், சுவாமி வாசுதேவர், சிதம் பரம் அகோர சிவாசாரி யார். இவருக்கு வல்லப தேவன், பிள்ளைப் பாண் டியர், குலசேகரன். குண சேகரவழுதி என்ற பெயர் களும் உண்டு இவர் இயற்றிய நூல்கள் நைட தம், காசிகாண்டம், கூர்மபுராணம் இலிங்க புராணம், வாயுசங்கிதை வெற்றி வேற்கை என் பன. இவரது தமைய னார் வரதுங்க பாண்டிய னும் பல நூல்களைச் செய் திருப்பதால் "பட்டரில் இருவர் பாண்டியில் இரு வர்" என்ற பழமொழி யும் வழக்கத்தில் உள் ளது. பட்டரில் இருவர் சிவஞானமுனிவரும், கச்சி யப்பரும். பாண்டியில் இருவர் வரதுங்கரும், அதி வீரராமரும் : தவறுடைய பாடல்களைப் பாடிவரும் புலவர்களின் தலையில் குட்டி வந்த பாண்டியர் இவர். இவரைக் குறித் துத்தான் "குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் எங் கில்லை" என்ற பாட லும் எழுவதாயிற்று.

இவர் 16-ம் ஆம் நூற்றாண்டினர்,

அந்தாரி = இவர் மதுரை கிருஷ்ணவீரப்ப நாய்க்கர் அமைச்சர் சனிப்பெருமாள் திருமகனார்; தென்னாடைநாட்டுப்புலவர். சுந்தர பாண்டியம் என்னும் நூல் இவரால் செய்யப்பட்டது. காலம் கி. பி. 16 ஆம் நூற்றாண்டு.

அந்தாதி கவிராயர் = மதுரைப் பதிற்றுப்பத்து அந்தாதியின் ஆசிரியர். (இதனைப் பரஞ்சோதி முனிவர் இயற்றியதாகவும் கூறுவர்.) காலம் தெரியவில்லை.

அருணை விநாயகம் பிள்ளை = நல்ல தமிழ்ப்புலமையும், ஆங்கிலப்புலமையும் பெற்றவர். எம்.ஏ. பட்டம் பெற்றவர். திருநெல்வேலியில் பிறந்தவர். இவர் தலைமையில் சில காலம் தமிழ் லக்ஸிகள் தொகுக்கப்பட்டது. பல வசன நூல்களை எழுதியவர். ஔவையார், தமிழ்ப் பெருமக்கள் வரலாறு சைவசித்தாந்தம் முதலியன இவர் எழுதிய நூற்கள். கி. பி. 20-ஆம் நூற்றாண்டினர்.

அந்தகக்கவி வீரராகவ முதலியார் = இவர் வேளாளர். கி. பி. 17-ஆம் நூற்றாண்டினர். காஞ்சிபுரத்தை அடுத்த பூதூரில் பிறந்தவர். வடுகநாத முதலியாரின் திருமகனார். இலங்கை பரராசசேகரனிடம் பல பரிசு பெற்றவர்; பிறவிக் குருடர். முதுகில் பிறரை எழுதச் சொல்லிக் கல்வி பயின்று புலமை பெற்றவர். கழுக்குன்ற புராணம்; கழுக்குன்ற மாலை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருவாரூர் உலா, கயத்தாற்றரசன் உலா, சந்திரவாணன் கோவை முதலியன இவர் எழுதிய நூற்கள். இவர் எழுதியசீட்டுக்கவி ஒன்றில் குதிரைக்குரிய பல சொற்களைச் சமத்காரத்துடன் குறித்திருப்பது படித்து இன்புறுதற்குரியது.

அந்தி இளங்கீரனார் = சங்க காலத்தவர். அந்திக் காலத்தை வர்ணித்துப் பாடிய காரணத்தால் இப்பெயர் பெற்றார். இவரது பாடல் அகநானூற்றில் உளது.

அபிராமிப்பட்டர் = இவர் பிராமணர். சரபோஜி மகாராசரது அரசாங்கப் புலவர். திருக்கடவூர்

தேவியான அபிராமி அம்மையார்மீது அபிராமி அந்தாதி என்னும் நூலைப் பாடியவர். தேவி கடாட்சத்தால் அமாவாசையில் பூரண சந்திரனைக் காட்டியவர். கி.பி. 18-ஆம் நூற்றாண்டினர்.

அப்பர் = இவர் சைவசமயாசாரியர்களில் திருவாமூரில் பிறந்தவர். இவரது பெற்றோர் புகழனார் மாதினியார் என்பவர். இவரது தமக்கையார் திலகவதியார். சைவசமயத்தினர். சில காலம் சமண சமயத்தில் இருந்தவர். அதுபோது சூலை நோய் வர அதனைப்போக்கிக் கொள்ள மீண்டும் சைவ சமயம் புகுந்தவர். இவர் கொல்லவெந்தயானையைக் குனியச் செய்தவர். விஷத்தையுண்டும் சாவாதவர். சுண்ணாம்பு அறையில் அடைக்கப்பட்டும் இறவாதவர். கல்லொடு கட்டிக் கடலில் இட்டும் அழுந்தாது கரை ஏறியவர். இவ்வளவு துன்பங்களையும் இவருக்கு இழைத்தவர்கள் சமணர்கள். அந்தணராகிய அப்பூதியடிகளாரரசல் குலதெய்வமாகப் போற்றிப் பூசிக்கப்பட்டவர். அப்பூதியார் மகன் பாம்பு கடித்து இறக்க அவனை எழுப்பியவர். திருமறைக்காட்டுத் தேவாலயக் கதவைத் திறந்தவர். பொன்னையும் மாதரையும்வெறுத்தவர். திருஞான சம்பந்தரின் நண்பர். இவருக்குத் தாண்டகவேந்து, திருநாவுக்கரசர், வாகீசர். ஆளுடைய அரசுகள் என்ற பல பெயர்களும் உண்டு. பல தலங்களை வணங்கிப் பதிகம் பாடியவர். இவர் பாடிய பதிகங்கள் சைவத் திருமுறைகளில் 4, 5, 6 எனத் திகழ்கின்றன. இவரது காலம் கி. பி. 7 ஆம் நூற்றாண்டு. இவர் பாடிய பதிகங்கள் 49000 என்பர். ஆனால் 311 பதிகங்களே இதுபோது உள்ளன. இவரது காலத்துப் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன். இவரது பதிகங்கள் திருத்தாண்டகம், திருநேரிசை திருவிருத்தம், திருக்குறுந்தொகை என்ற தலைப்பினைப் பெற்றிருக்கும். இவரைப்பற்றி, "என்னைப்பன் என்னைப் பாடினான்" என்று சிவபெருமானே சிறப்பித்துக் கூறியதாகக் கூறப்படுகிறது. திருப்புகலூரில் இறைவன் திருவடிநீழலை அடைந்தவர். 81 ஆண்டு

கள் நில உலகில் வாழ்ந்த வர்.

அப்பாவு முதலியார் = வைணவர். இவரது ஊர் முடிச்சூர். குரேச விஜயம், விட்டுணு தத்துவம், இராமானுச நூற்றந்தாதி உரை இவரால் இயற்றப்பட்ட நூற்கள். காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு.

அமிர்த கவிராயர் = இவர் பாண்டிய நாட்டுப் பொன்னங்கால் என்னும் ஊரினர். இராமநாதபுர தளவாய் இரகுநாத சேதுபதியால் ஆதரிக்கப்பட்டவர். கோவை நூலில் வரப் பெறும் நாணிக்கண் புதைத்தல் என்னும் ஒரு துறையினை நாறாறு விதமாகப் பாடிய பெரும் புலவர். அதுவே ஒரு துறைக்கோவை எனப் படும். இவரது காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு.

அமிர்த சாகரர் = வேளாளர். சமண சமயத்தினர். யாப்பருங்கலம், யப்பருங்கலக் காரிகை என்ற இரண்டு நூற்களும் இவரால் செய்யப் பெற்றவை. கி. பி. 11-ஆம் நூற்றாண்டினர். இவர் அமுத சாகரர் என்றும் கூறப்படுவார்.

அமுதனார் = இவரைத் திருவரங்கத்து அமுதனார் என்றும் கூறுவர். இவர் திருவரங்கத்தினர். இவர் இராமானுஜ நூற்றந் தாதியின் ஆசிரியர், இது பிரபந்த காயத்திரி என்றும் கூறப்படும்.

அம்பல்வாணக் கவிராயர் = இவர் அருணாசலக் கவிராயர் திருமகனார். அறப்பளீசுர சதக ஆசிரியர். கி.பி. 18-ஆம் நூற்றாண்டினர்.

அம்பலவாண தேசிகர் = திருவாவடுதுறை ஆதினத்தில் 15-ஆம் பட்டத்துக் குருமகா சந்நிதானமாக விளங்கியவர் கல்விக் களஞ்சியமாக இருந்தவர். பல சித்தாந்த சாத்திரங்களை எழுதிவர். அவற்றுள் சில உபதேசவெண்பா. சித்தாந்த சிகாமணி, தசகாரியம், பஞ்சாக்கர மாலை முதலியன. காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு.

அம்பிகாபதி = கம்பருடைய திருமகனார். சோழ மன்னனுடைய திருமகளையே காதலித்தவர். அதன் காரணமாகக் கொலையுண்டவர். இவரது குமாரனார் தண்டி என்று கூறப்படுகின்றார். அம்பிகாபதி

ஒரு கோவை பாடியுள்ளார். அது அம்பிகாபதி கோவை எனப்படும். இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டினர். பல தனிப் பாடல்களும் இவரால் பாடப்பட்டுள்ளன.

அம்மூவனார் = சங்க காலத்தவர். இவரால் பாடப்பட்ட வள்ளல்பலீயமான் திருமுடிக் காரியாவான். ஐங்குறுநூறு என்னும் நூலில் நெய்தல் திணையைப் பற்றிய நூறு பாடல்களையும், அகத்தில் ஐந்தும், கற்றிணையில் பத்தும், குறுந்தொகையில் பதினொன்றும் ஆக 126 பாடல்களைப் பாடியுள்ளார்.

அரங்கநாத முதலியார் = இவர் பூண்டி என்னும் ஊரினர். எம். ஏ. பட்டமும், இராவ்பகதூர் பட்டமும் பெற்றவர், கணிதநூற் புலமையுடையவர். சென்னை அரசியலார் கல்லூரியில் பேராசிரியராக இருந்தவர். தமிழில் கச்சிக்கலம்பகம் என்னும் நூலைப் பாடியவர். ஒரு முறை ஸ்ட்ஜ் முத்துசாமி ஐயர் தம்மைக் கடி தொங்கிய கையை எடுத்து "அடியேன்" என்று இவருக்கு வணக்கம் செலுத்தியபோது, திரு. முதலியார் வேடிக்கையாக, "அப்படியானால் உம் கையில் கடியேன்?" என்று கேட்டு அப்போது இருந்தவரை நகைக்கும் வண்ணம் செய்தவர். பல மாணவர்கட்கு உபகாரச் சம்பளம் தந்தவர். காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு.

அரசகேசரி = இவர் பரராச சேகரர் மருகர். வடமொழி தென்மொழிகளே கன்கு பயின்றவர். இரகுவம்சம் என்னும் நூலை எழுதியவர். யாழ்ப்பாணவாசி. ஆழ்வார் திருநகரி அட்டாவதானம் இராமானுசக் கவிராயர் இவரது ஆசிரியர். காலம். கி. பி. 17-ஆம் நூற்றாண்டு.

அரசஞ்சண்முகனார் = இவர் சோழவந்தான் என்னும் ஊரில் வாழ்ந்தவர். இலக்கண இலக்கிய புலமை மிகுந்தவர். செய்யுள் இயற்றுவதில் வல்லவர். எளிய வாழ்க்கையர். ஆடம்பரத்தை வெறுத்தவர். 'சாவாமருந்து' என்னும் தொடருக்குப் பின் மேலழகர் சாவாமைக்குக் காரணமாகிய மருந்து என்று கூறிய உரையை மறுத்து, "மருந்து என்

ருலே சாகாமைக்குரிய பொருள் தொனித்தலின், சாவா என்ற சொல்லே மருந்து என்னும் சொல்லுக்கு அடையாகக் கொள்ளக்கூடாது என்று கூறிச் சாவா என்னும் சொல்லேச் சாவாம் என்று முற்றுப் புள்ளி தந்து முடித்துக் காட்டிப் பொருள் கூறும் ஆற்றல் வாய்ந்தவர். இரண்டு புலமையை இவர் எழுதியுள்ள முருகக் கடவுள் வெண்பா, இன்னிசை இருநூறு, மதுரைச் சிலேடை வெண்பா முதலான செய்யுள் நூற்களின் மூலமும், ஆசாய்ச் சித்திறனேயும் நுண்ணறிவு வன்மையையும் தொல்காப்பியப்பாயிரம் சண்முகவிருத்தி ஆகுபெயர், அன்மொழித் தொகை என்பனமோன்ற உரை நடை நூல்களாலும் நன்கு அறியலாம். காலம் 19-ஆம் நூற்றாண்டு.

அரதத்தாசாரியார் = இவர் வைணவ பிராமணர் குடியினர். பின்னர் சைவ சமயம் புகுந்தவர். காஞ்சிபுரவாசி. பல நூல்களேச் செய்தவர். அவற்றுள் சில அரிஹரதாரதம்மியம், சைவாகமபூஷணம், விபூதி உருத்திரர்க்ச பஞ்சகம், தெய்வம் சிவமே என்பன நிலேநாட்டவல்ல சுலோகம் ஐந்து முதலியன. காலம் சிவஞான முனிவர்க்கு முந்தியது.

அரிசில் கிழார் = சங்க காலத்தவர். வேளாளர். பதிற்றுப்பத்து நூலில் எட்டாம் பத்து இவரால் பாடப்பட்டது. அப்பாட்டுடைத் தலேவர் பெருஞ்சேரல் இரும்பொறை. இம் மன்னன் இவருக்கு 9000 பொற்காசு பரிசில் நல்கினன். பெருஞ்சேரல் இரும்பொறை தகடூரை முற்றுகையிட்டு அதிகமானேக் கொன்றதைக் குறிக்கும் நூலாகிய தகடூர் யாத்திரை இவரால் பாடப்பட்டது. இந்நூலில் பொன் முடியார் பாடல்களும் உண்டு. அரிசில் கிழாரால் புறத்தில் எட்டும், குறுந்தொகையில் ஒன்றும், பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்தும், திருவள்ளுவ மாலேயில் ஒன்றும் பாடப்பட்டுள்ளன.

அருணகிரிநாதர் = திருவண்ணாமலேயில் பிறந்தவர்,

முருக பக்தர். இவர் தேவதாசி மரபினர் எனக் கூறப்படுகின்றனர். இவர் பாடிய நூற்கள் திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தர் அந்தாதி, திருவகுப்புக்கள், மயில் விருத்தம், வேல் விருத்தம் முதலியன. இவர் பிரபுடதேவன் காலத்தவர். வில்லிபுத்தூராரிடமும், சம்பந்தாண்டானிடமும் வாதுசெய்து வென்றவர். கிளிவடிவாக இருந்து கொண்டு இன்னமும் முருகன் புகழைப் பாடுகின்றார் என்றும் கூறுவர். இவர் கி. பி. 15-ஆம் நூற்றாண்டினர்.

அருணந்தி சிவாசாரியார் = இவர் அந்தணர். திருத்துறைப்பூண்டியில் பிறந்தவர். ஆகமங்களை ஐயம் திரிபறப் பயின்றவர். இதனால் சகலாகம பண்டிதர் என்ற பெயரையும் பெற்றவர். இவரது ஞானகிரியர் மெய்கண்ட தேவர். தம் ஆசிரியர் எழுதிய சிவஞானபோதம் என்னும் நூலின் விளக்கமாகவே சிவஞான சித்தியார் என்னும் நூலைப் பாடியவர். இவர் பிற மதங்களைத் தக்க காரணம் காட்டிச் சைவ சித்தாந்தத்தின் சிறப்பை உணர்த்தும் திறன் மிகமிகப் போற்றற் குரியது. இவர் இயற்றிய நூற்கள் சிவஞான சித்தியார், இருபா இருபஃது. காலம் கி.பி.13-ஆம்நூற்றாண்டு.

அருணைவடிவேல் கவிராயர் = வேளாளர். இவரது பெற்றோர் கல்லத்திப்பிள்ளை, வள்ளியம்மையார். தருமை ஆதீன அம்பலவாண தேசிகரிடம் தமிழ் பயின்றவர். இவர் இயற்றிய நூற்கள் சிகாழித்தல புராணம், சிகாழிக்கோவை, பர்வத வர்த்தனியம்மை பிள்ளைத் தமிழ், இராமாயண கீர்த்தனை, இராம நாடகம், அனுமார் பிள்ளைத் தமிழ், அசோகமுகி நாடகம் முதலியன கி. பி. 18 ஆம் நூற்றாண்டினர்.

அருண்மொழித் தேவர் = சென்னைக்கு அடுத்தகுன்றத்தூரினர். சைவ வேளாளர். சேக்கிழார் என்ற பெயரை உடையவரும் இவரே. அனபாயச் சோழனிடம் அமைச்சராக இருந்தவர். பெரிய புராணத்தை இயற்றியவர். தொண்டர் சீர்பரவுவார் என்ற பெயரையும் பெற்

றவர். இவருக்குப் பால ருவாயர் என்ற இளவ லும் உண்டு. சிதம்பரத் தில் முத்தி பெற்றவர். கி. பி. 12-ஆம் நூற்றாண் டினர். பெரும் புலமை யுடையவர். இவரது எனைய சிறப்புக்களைச் சேக்கிழார் என்ற இடத் தும் காண்க.

அவிநயனார் = இவர் இலக் கண நூல் ஒன்றைச் செய்தவர். இவரது நூல் உரையாசிரியர்களால் மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளது. இவரால் செய்யப்பட்டது அவிநயம் என்பது. பன்னிரு பாட் டியல் என்னும் நூலிலும் சில சூத்திரங்கள் உள் ளன. இவர் தொல்காப் பியர் காலத்தவரா அன் றிப் பிற்பட்டவரா என் பதுபற்றி இன்னமும் அறிஞரிடையே ஐயத் திற்கு இடனாகவே இருக் கிறது. பழங்காலத்தவரா னால் அகத்தியமாணவர் களுள் இவரும் ஒருவர்.

அவ்வையார் = இப்பெயர் கொண்டவர் பலர் ஆவர். சங்க காலத்தில் ஓர் ஔவையார். சுந்தர மூர்த்தி சுவாமிகள் காலத் தில் ஓர் ஔவையார். கம்பர் காலத்தில் ஓர் ஔவையார் இருந்திருக்க வேண்டும் என்பது தெரி கிறது. ஆனால், சங்க காலத்து அதிகமான் என்னும் வள்ளல் கொடுத்த நெல்லிக் கனி யை உண்டு பல்லாண்டு கள் வாழ்ந்தவர் என்று கருதினால் ஒரே ஔவை யார் தாம் இருந்தனர் என்று நினைக்கலாம். ஔ வையார் என்பது பாட்டி யார் என்ற பொருள் தரு தலின், இவரது முதுமை யை உணரலாம். இந்த அம்மையார் இளைஞர்கட் கும் முதியர்கட்கும் உகந்த பல பாடல்களைப் பாடிய வர். சைவ நெறியினர். இவர் பல வள்ளல்களைப் பாடியவர். கூழுக்குப் பாடி யவர் ஔவையார் என்பது னால் இவ்வம்மையாரது பண்பாடு நன்கு புலனு கும். இவர் பாணர் குடி யினரால் எடுத்து வளர்க் கப்பட்டதாகக் கூறுவர். ஆதி, பகவன் என்ற இரு வர்க்கும் பிறந்த எழுவ ருள் ஒருவர் இவர் என்ற வரலாறும் உண்டு. இவரால் பாடப்பட்ட பாடல்கள் பல. அகத் தில் நான்று, குறுந்தொ கையில் பதினைந்து, நற் றிணையில் எழு, புறத்தில்

பதினேழு, உண்டு, ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், முதுரை, நல்வழி, வாக்குண்டாம், அசதிகோவை, பந்தனந்தாதி, ஞானக்குறள், விளையகர் அகவல் முதலிய தனி நூற்களும். இலவகளோ அன்றி மற்றும் பல நூல்களும் இவர் பெயரால் வழங்கப்படுகின்றன. இவர் பல தனித் தனிப் பாடல்களையும் பாடியுள்ளார். அவற்றைத் தனிப் பாடல் திரட்டில் காணலாம்.

அழகிய சிற்றம்பலக் கவிராயர் = சிவகங்கையைச் சார்ந்த மிதிலைப் பட்டி என்னும் ஊரில் திகழ்ந்தவர். இரகுநாத சேதுபதியின் சிறப்பாகத் தனசிங்க மாலை என்னும் நூலைப்பாடியவர். கி. பி. 17-ஆம் நூற்றாண்டினர்.

அழகிய சொக்கநாதப் பிள்ளை = திருநெல்வேலி தச்சநல்லூரினர்; சைவர். திருநெல்வேலி சுந்தரமூர்த்தி அம்மையார் மீது பிள்ளைத் தமிழ் பாடியவர். பல தனிப் பாடல்களையும் பாடியுள்ளார். அவை பெரிதும் முத்துச்சாமி வள்ளல் மீது பாடப் பட்டவை. சிலேடைப் பொருள் அமைந்தன. அவற்றுள் செருப்புக்கும் திருடனுக்கும் சிலேடையாக அமைந்த கவி சுவை தரும். கி. பி. 19-ஆம் நூற்றாண்டு.

அழகிய நம்பி = வைணவர். இவரே குரு பரம்பரை வரலாற்றை எழுதியவர். கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

அழகிய மணவாள ஐயர் = திருவிருத்தம், திருவாய்மொழிக்குரியாக்கியானமும், பன்னீராயிரப்படியென்னும் உரையும், பகவத்தோத வெண்பாவும் பாடிய புலவர். வீரவைஷ்ணவர். காலம் அறிதற்கு இல்லை.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் = திருப்பாவைக்கு உரை, ஆறாயிரப்படி உரை, ஆசாரிய இருதயம் முதலியன இவரால் இயற்றப்பட்டவை. பிள்ளை உலகாசிரியரின் இளவலாவார் காலம். கி. பி. 15-ஆம் நூற்றாண்டு.

அழிவுடைநம்பி = சங்க காலத்தவர். பாண்டிய மன்னர் மரபினர். இவர் மன்னராயினும், பாடல்

கலியும் பாடியவர். இதற்குச் சான்று இவருக்கு முன்னுள்ள அறிவுடை என்னும் சொல்லே அறிவித்து விடும். புலவர்கள் கூறும் இனிய மொழி கனைக் கேட்டு அவர்களின் குறைகளைப் போக்கும் குணமுடையவர். இவரது பாடல்கள் அகத்தில் ஒன்று, புறத்தில் ஒன்று, நற்றிணையில் ஒன்று, குறுந்தொகையில் ஒன்று உள்ளன.

ஆ

ஆசிரியர் நல்லந்துவனார் = சங்க காலத்தவர். பரிபாடல் என்னும் நூலில் முருகப் பெருமானுக்கு ஒன்றும், வையை ஆற்றிற்கு மூன்றும் ஆக நான்கு பாடல்களை இயற்றியவர், நெய்தற்கலியைப் பாடியவரும் இவரே. இவரே கலித்தொகை நூலைத் தொகுத்து அமைத்தவர். திருவள்ளுவ மாலையில் ஒரு பாடல் காணப்படுகிறது. இவைகளே அன்றி அகத்தில் ஒன்று, கலித்தொகைக் கடவுள் வாழ்த்து. நற்றிணையில் ஒன்று இவரால் பாடப்பட்டவை.

ஆண்டாளம்மையார் = இவர் பெரியாழ்வாரின் வளர்ப்புத் திருமகளார். துளசிப் பாத்தியில் அவருக்குக் கிடைத்தவர். பெருமானுக்கெனத் தொடுக்கப்பட்ட மாலையைத் தாம் முன்னர் அணிந்து அழகுபார்த்தவர். இதனால் சூடிக் கொடுத்த நாச்சியார் என்ற பெயரையும் உடையவர். ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்தவர். திருவரங்கப் பெருமாள் இவரை மணந்து கொண்டனர். இவர் பாடிய நூற்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பன. கி.பி. 9 ஆம் நூற்றாண்டு.

ஆண்டிப்புலவர் = இவர் ஆசிரியநிகண்டு செய்தவர் செஞ்சிக்கு அருகில் உள்ள ஊற்றங்கால் என்னும் ஊரினர். காலம் 17 ஆம் நூற்றாண்டு.

ஆதிமந்தி = சங்ககாலத்தவர். பெண்பால் புலவர். சோழன் கரிகால்வளவன் மகள். ஒருசமயம் கரிகாற் சோழன் காவிரியாற்றில் புதுப்புனல் வருங்கால் ஒரு விழா கொண்டாடினான். அதுபோது ஆதிமந்தியும் அவர் கணவனை ஆட்ட நந்தியும் காவிரியில் ஓடி விளை

யாடுகையில், அந்தி ஆட்ட நந்தியை அடித் துக்கொண்டு போயது. அதனல் வருந்திக் கொண்டு கடற்கரையை அடைய அங்கு மருதி என்பவள் ஆட்ட நந்தி யைக் காட்டி ஆதிமந்தி புடன் சேர்த்தனள். அதன்பின் மகிழ்ச்சியுடன் திரும்பினர். இம்மாதரார் பாடல் குறுந் தொகை யில் ஒன்று உளது.

பிரகாம் பண்டிதர் = இவர் தஞ்சாவூரினர். இவர் கல்லூரியில் தமிழ்ப் பயிற்சி பெற்றவர். கர்ணபரித்ர சாகரத் திரட்டு என்னும் நூலை இயற்றியவர். தமிழ் இசையைப் பற்றி அறி தற்கு இது பெருந்துணை செய்யும். இவர் கி.பி. 20 ஆம் நூற்றாண்டினர்.

பிள்ளைப் புலவர் = இவர் வேளான மரபினர். கும்ப கோணத்தைப் பிறப்பிட மாகக் கொண்டவர். இவர் பாகவதம் என்னும் நூலைப் பாடியவர். அது விஷ்ணுபாகவதம் எனப் படும். இதில் 1070 பாடல் கள் உள. காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு.

பிள்ளை லோகாந்தம் பிள்ளை = இவர் சிறந்த சித்தாந்தப் புலவர். பெரிய புராணத் திற்குப் பேருரை கண்ட வர். அதன் வாயிலாகச் சேக்கிழாரது கவிநயத் தைப் பாக்கக் காணலாம். திருக்களிற் றுப்படியா ருக்கு உரை எழுதியவர். ஆசாரியப் பிரபாவம என்னும் வசன நூலையும் எழுதியவர். காலம் கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

ஆபவந்தர் = இவர் பிரா மணர், வேம்பத்தூர் வாசி வடமொழி தென்மொழி அறிந்தவர், நானவாசிட் டம் என்னும் நூலை இயற் றியவர். இது ஒரு மொழி பெயர்ப்பு நூல். கி.பி. 18 ஆம் நூற்றாண் டினர்.

ஆபத்சகாய நாவலர் = யாழ்ப்பாணர். திருத்தரு ணை ஆதினத்தில் புலவ ராக இருந்தவர். மடத் தலைவராகவும் திகழ்ந்த வர். பெரிய புராணத்திற் குச் சிறந்த உரைகண்ட வர். காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

ஆபத்சகாய நாவலர் = இவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த நல்லூரில் கந்தப் பிள்ளை என்பாருக்குப் பிள்ளையாகப் பிறந்தவர். தமிழ் உரை நடை எழுது

வதில் தலை சிறந்தவர். சிறந்த சொற்பொழிவும் செய்யக்கூடியவர். இவை ஏது ஆசிரியர் இருபாலைச் சேனாதிரிய முதலியார். நாவலர் என்றே சிறப்பாக அழைக்கப்படுபவர். இவர் இளஞ்சூர்கட்குரியனவாகிய பாலபாடங்களை எழுதியவர். பெரிய புராணம் வசனமும், திருவிளையாடற் புராண வசனமும் இவரால் எழுதப்பட்டனவை. இலக்கணச் சுருக்கமும் எழுதியுள்ளார். சைவ சம்பந்தராகச் சைவ விளக்க விடை நூலையும் எழுதியுள்ளார். கோயில் புராணம், கந்தபுராணம் முதலியவற்றிற்கு உரையும் எழுதியுள்ளார். தேவ கோட்டைத் தல புராணத்தையும் எழுதியுள்ளார். இவர் பல நூல்களையும் பதிப்பித்தவர். அவை பெரிய புராணம், கந்தபுராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை. (இப்பதிப்பின் வாயிலாகத்தான் 'பார்ப் பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்' என்பது 'குரவர்த்தப்பிய கொடுமை யோர்க்கும்' என்னும் தொடர் அறிய வந்தது) திருக்கோவையார் உரை, இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம், நன்னூல் விருத்தி, சூடாமணி நிகண்டு, சிவஞான போதம் முதலியன. காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

இ

இடைக்குறி நாட்டு நல்லூர் நத்தத்தனார் = இவர் கடைச் சங்க காலத்தவர். பத்துப்பாட்டில் உள்ள சிறுபாணாற்றுப் படையினை எழுதியவர்.

இடைக்காடர் = சங்ககாலத்தவர். இவர் இடையர் கன்னப்பற்றிப் பெரிதும் பாடியிருப்பதால் இப்பெயர் பெற்றனரோ அன்றி, பல்லாள பிரதேசத்தைச் சார்ந்த இடைக்காடு என்னும் ஊரினராக இருந்த காரணத்தால் இப்பெயர் பெற்றனரோ என்பதைத் திட்டமாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை. இவர் பாடினவாக அகத்தில் ஆறு, புறத்தில் ஒன்று, குறும்தொகையில் ஒன்று, திருவள்ளுவமாலையில் ஒன்று, கற்றிணையில் மூன்று, ஆக பன்னிரண்டு பாடல்கள் உள்ளன. இவைகளே அன்றி ஊசிமுறி, அறுபது வருட வெண்பா, மூவடி முப்பது என்னும்

நூற்களையும் பாடியுள்ளதாகத் தெரிகிறது. இப்பெயர் கொண்ட சித்தர் ஒருவர் இருந்திருக்கிறார். அவர் கொங்கணச் சித்தர் மாணவர். கி. பி. 15 ஆம் நூற்றுண்டினர்.

முனைவர் கோனூர் = சங்க காலத்தவர். இம் என்ற சொல்லை அமைத்துப் பாடிய காரணத்தால் இப்பெயர்பெற்றவர். அகத்தில் ஒருபாடல் உளது.

ரசை வடமலை பிள்ளை = சோழநாட்டைச் சார்ந்த இரசை என்னும் ஊரினர். கார் காத்த வேளாளர்; திருமலை நாயகர் காலத்தில் பாண்டி நாட்டிற்கு அரசப் பிரதிநிதியாக இருந்தவர். இவர்மகச்சபுராணம், சேர்த்தல புராணம், நாலாற்றுக் கோவை, நாற்கவி வண்ணம் முதலான நூற்களைச் செய்தவர்.

ட்டையர் = இவர்கள் இருபுலவர்கள். இளஞ் சூரியர், முதுசூரியர் எனப் படுபவர். ஒருவர் குருடர்; ஒருவர் நொண்டி. சோழ நாட்டு ஆலந்துறையினர். செங்குந்த மரபினர். இவர்கள் சேர்ந்த பாடல்களைப் பாடுவர். இவர்கள் பல தனிப் பாடல்களையும் திருவாமாத்தூர்க் கலம்பகம். எகம்பரநாதர் உலா, தில்லைக்கலம்பகம் முதலியன முதலான, வற்றையும் அக்கபாகை ஆட்கொண்டானுல் ஆதரவு தரப்பட்டவர்கள். அவன்மீது பாடலையும் பாடியுள்ளனர். காலம் கி.பி. 15 ஆம்நூற்றுண்டு

இரணிய முற்றத்துப் பெருங்குன்றூர்ப்பெருங் கௌசிகனூர் = இவர் கடைச்சங்க காலத்தவர். பத்துப்பாட்டில் மலைபடுகடாம் பாடிய ஆசிரியர்.

இரத்தினவேலு முதலியார் = மக்காடு என்னும் ஊரினர் பின் நிறப்புப்பெயர் அகராதி ஆசிரியர், திருவிளையாடற்புராணம், காசிகாண்டம் என்னும் புராணநூல்களுக்கு உரையும் எழுதியவர். காலம் கி. பி. 20 ஆம் நூற்றுண்டு.

இரத்தினக் கவிராயர் = இவர் இரசை வடமலையப்பப் பிள்ளை மீது புலவர் ஆற்றுப் படை என்னும் நூலைப்பாடியவர். இருப்பேரைத் திருமணிமாலையும் இவரால் செய்யப்பட்டது. காலம் கி. பி. 17 ஆம் நூற்றுண்டு.

இராகவஐயங்கார், ரா. = இவர் புதுக்கோட்டையினர்.

மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையின் பதிப்பாசிரியர். இவர் வஞ்சிமாநகரம், சேதுநாடும் தமிழும், நல்லிசைப் புலமை மெல்லியலார். தமிழ் வரலாறு, பாரிக்காதை, தொழிற்சிறப்பு முதலான நூற்களை எழுதியவர். காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

இராசகோபாலப் பிள்ளை = சிறந்த இலக்கணப்புலவர்; உரையாசிரியர். நாலடியார் நானெண்பா, திருவாய்மொழி முதலான நூற்களுக்கு உரைகளை எழுதியவர். வைணவர். சென்னை மாகாண அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். காலம் கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

இராசப்பக்கவிராயர் = இவரே திரிகூடராசப்பக் கவிராயர் எனப்படுபவர். இவர் குற்றால சம்பந்தமாகப்பல நூல்களை இயற்றியுள்ளார். குற்றாலத்தல புராணம், குற்றாலமாலை, குற்றால உலா, குற்றாலக் கோவை, குற்றாலப் பிள்ளைத் தமிழ் முதலியன இவர் பாடிய நூற்கள். இவர் செய்த குற்றாலக் குறவஞ்சி நாடகத்தைக் கேட்ட முத்து விசய சொக்கலிங்கநாயக்கர் இவருக்குப் பூமிதானம் செய்தார். அது குறவஞ்சி மேடு என்று இப்பொழுதும் குற்றாலத்தே வழங்கப் பட்டுவருகிறது. இவரது காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு.

இராமபாத்தி = இவர் சிறந்த சைவர். ஆத்திசூடி நீதி வாக்கியங்களை அமைத்துத் தனித் தனியே வெண்பாவைப் பாடி, அதில் ஒவ்வொரு கதை களையும் சேர்த்து ஆத்திசூடி வெண்பா என்னும் நூலைப்பாடியவர். காலம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

இராமலிங்க சுவாமிகள் = தென்னாற்காடு மருதூரில் பிறந்தவர். கருணீகக் குலத்தினர். இவர் செய்த நூலே திருவருட்பா என்பது. பலவசன நூல்களையும் இயற்றியவர். அவற்றுள் தலைசிறந்தவை மனுமுறைகண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் என்பன. வேதாந்தம் சித்தாந்தம் வடமொழி தென்மொழி ஆகிய இவற்றில் நல்ல புலமையும் அனுபவமும் பெற்றவர். சித்துப் பல செய்தவர். வடலூரில் ஒரு கோயில் கட்டி வாழ்ந்

தவர். காலம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

இராமானுச கவிராயர் = இவர் இராமநாதபுரத்தினர். பின்னர்ச் சென்னையில் வாழ்வை நடத்தியவர். வைணவ சமயத்தவர். திருவாவடுதுறைச் சேர்ம சுந்தர தேசிகரையடைந்து அவரிடம் இலக்கண இலக்கியங்களைப் பயின்றவர். திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன். நன்னூல் இவற்றிற்கு உரைவழுதியவர். பார்த்த சாரதி மாலை, வரதராசப் பெருமாள் பதிற்றுப் பத்தந்தாதி முதலிய நூல் களைப்பாடியவர். காலம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

இரும்பிடர்த்தலையார்--கடைச் சங்க காலத்தவர். இவர் பாடிய பாடல் புறநானூற்றில் ஒன்று உளது. இவர் கரிகாற் சோழன் மாமனார். இவர் யானையின வர்ணிக்கையில் இருப்பிடர்த்தலை என வர்ணித்துப் பாடியதால் இப்பெயரினைப் பெற்றார்.

இரேவண சித்தர் = இவர் சைவ வேளாளர். பேரளத்தில் பிறந்தவர். சிதம்பரத்தில் சில காலம் வாழ்ந்தவர். பின்னர் சென்னைக் கோடம்பாக்கத்தில் வாழ்ந்தவர். அகராதி நிகண்டு என்னும் நூலை இயற்றியவர். இவர் பட்டீசுரப்புராணம் திருவலஞ் சுழிப்புராணம். திருமேற்றளிப்புராணங்களையும் பாடியவர். காலம் கி. பி. 16 ஆம் நூற்றாண்டு.

இலக்கணம் சிதம்பரநாத முனிவர் = இவர் சிவஞானமுனிவர் மாணவர்களில் ஒருவர். திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம் பாடியவர். காலம் கி.பி.18 ஆம் நூற்றாண்டு.

இலாசரஸ் = இவரே சேவரண்டு லாசரஸ் என்பவர். தமிழ்மொழியினை நன்கு பயின்று ஆராய்ச்சி அறிவு பெற்றவர், நன்னூல் திருக்குறள் முதலியவற்றை ஆங்கிலத்தில்மொழி பெயர்த்தவர். ஆராய்ச்சி கட்டுரைகள்பல எழுதியவர். காலம் 20 ஆம் நூற்றாண்டு.

இளங்கோவடிகள் = சங்க காலத்தவர். இளமையில் துறவு பூண்டவர். சேரன் செங்குட்டுவன் இளவல்; சைவர்; சைனர் என்னும் கூறுவர். முத்தமிழையும் நன்குபயின்ற

வர். அதற்குச் சான்றாக இவர் செய்த சிலப்பதிகாரத்தை எடுத்துக் காட்டலாம்.

இளம்பூரணர் = இவர் சிறந்த உரையாசிரியர். அகத்தில் இவரை உரையாசிரியர் என்றே கூறுவர். தொல்காப்பியத்திற்கு உரை கண்டவர். "உளங்கூர் கேள்வி இளம்பூரணர்." உளங்கூர் உரையாய இளம் பூரணம் என்று இவரையும் இவரது நூலையும் சிறப்பித்துள்ளனர். காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு.

இளம் பெருமானடிகள் = இவர் காலம் தெரிதற்கு இல்லை. என்றாலும் இவர் பாடிய சிவபெருமான் திருமும்மணிக்கோவை பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டிருத்தலில், அதனை அபபடிச் சேர்த்த நம்பியாண்டார் நம்பிகளின் காலமாகிய கி.பி. 10 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தென்னலாம்.

இறையனார் = முதற் சங்க காலத்தவர். இவர் செய்த நூலே இறையனார் அகப்பொருள் என்பது. இது களவியல் என்றும் கூறப்படும். இவரால் குறுந்தொகையில் ஒருபாடலும், திருவள்ளுவ மாலையில் ஒரு பாடலும் பாடிச் சேர்க்கப் பட்டுள்ளன. திருவாலவாய்ச் சொக்கலிங்கப்பெருமானே இவ்வாறு பெயர் கொண்டு புலவராகத் திகழ்ந்தவர் என்பது தொன்று தொட்டு வரும் செய்தியாகும்.

ஈ

ஈசானதேசிகர் = இவர் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்தவர். இவரே சுவாமிநாத தேசிகர் எனப்படுபவர். கல்லாட உரையாசிரியர் மயிலேறும் பெருமான் பிள்ளையிடம் கல்விகற்றவர். இலக்கணக்கொத்து, தச காரியம் திருச்செந்திற் கலம்பகம் முதலான நூற்களைச் செய்தவர். காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

உ

உக்கிரப்பெருவழுதி = சங்க காலத்தவர். பாண்டிய மரபினர். அரசராய் இருந்தும் கவிபாடிய காவலர் ஆவார். அகநானூற்றைத் தொகுக்குமாறு செய்தவர் இவரே. இவர் வேண்டுகை மார்பனது

கானப் பேரூரை வென்ற வர். இவர் பாடியனவாக அகத்தில் ஒன்று, நற் றிணையில் ஒன்று, திரு வள்ளுவமாலையில் ஒன்று ஆக மூன்று பாடல்கள் உள்ளன.

உதீசித் தேவர் = சைனசமயத்தவர். கி.பி. 14 ஆம் நூற்றாண்டினர். திருக்கலம்பகம் என்னும் நூலை இயற்றியவர். தொண்டைமண்டலத்தைச் சார்ந்தவர். இவரது திருக்கலம்பக நூலில் சிவபெருமான் செய்த செயல்களை எல்லாம் அருகன் செய்ததாகக் கூறியிருக்கும் கருத்து ஊன்றிக் கவனித்தற்குரியது.

உமாபதிசிவாசாரியார் = இவர் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள கொற்றவங்குடியில் அந்தணர் மரபில் உதித்தவர். சைவசந்தானாசாரியர் நால்வருள் ஒருவர். இவரது குருநாதர் மறைஞானசம்பந்தர். இவர் பல நூல்களை இயற்றியவர். சிவப்பிரகாசம் கொடிக்கவி, உண்மை நெறி விளக்கம், நெஞ்சு விடுதூது, திருவருட்பயன் சங்கற்ப நிராகரணம், முதலிய சைவசித்தாந்த நூற்களையும், கோயிற் புராணம், சேக்கிழார்புராணம் முதலிய புராண நூற்களையும் செய்தவர். பௌட்கர் ஆகமத்திற்கு உரை கண்டவர். இவர் பெற்ற மகன் சாம்பான் என்னும் ஆதி திராவிடனுக்கு இறைவன் கட்டளைப்படி திட்சை செய்து அவனை முத்திக்கு உரியவனாக்கினவர். முள்ளிச் செடிக்கும் முத்தி கொடுத்ததாகக் கூறுவர். இவரது காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு.

உமாபுத்திரர் = இவர் முல்லை நாட்டினர். நல்ல தமிழ்ப்புலமையுடையவர். இராமநாதபுரத்துக்குச் சார்ந்த திருப்புல்லாணியில் பிறந்தவர். இவரது தந்தையார் சேது முதலியார். முகம்மது நபியின் வரலாற்றைக் கூறும் சிறுப் புராணத்தையும், முதுமொழிமாலையென்னும் நூல்களையும் பாடியவர். இவரது காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு.

உய்யவந்ததேவ நாயனார் = இவர் திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார் என்றும் கூறப்படுவார். இவரது ஆசிரியர் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார். இவரே திருக்களிற்றுப்படியார் என்

னும் நூலுக்கு ஆசிரியர். கி. பி. 12 ஆம் நூற்றாண்டினர். இவரது ஆசிரிய ராகிய திருவியலூர் உய்ய வந்ததேவநாயனார் பாடிய நூல் திருவந்தியார்.

உருத்திரசன்மர் = இவரது தந்தையார் உப்பூரிகுடிகிழார். இதனால் இவர் உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர் எனப்படுவர். இவரே அகநானூற்றைத் தொகுத்துத் தந்தவர். இவர் பிறவியிலேயே ஊமையாகப் பிறந்தவர். இவர் கனவியல் என்னும் நூலுக்குப் பலர் உரை கூறியபோது, அவற்றை எல்லாம் பாராட்டாமல், நக்கீரர் கூறிய உரையைக் கேட்டபோதுமட்டும் தம்உணர்ச்சியைக் கண்ணீர் வடித்துக் காட்டியவர். கடைச் சங்க காலத்தவர்.

உறையூர் மருத்துவன் தாமோதரனார் = கடைச் சங்க காலத்தவர். உறையூரினர் வைத்தியத் தொழிலில் தைவந்தவர் இவரது பாடல் புறத்தில் மூன்றும், அகத்தில் இரண்டும், திருவள்ளுவமாலையில் ஒன்றும் உள.

ஊன்பொதி பசுங்குடையார் = கடைச் சங்க காலத்தவர். தாம் இளஞ்சேட் சென்னியைப் பாடிப் பெற்ற பரிசிலைத் தமது வறுமைச் சுற்றத்திற்கு வழங்கிமகிழ்ந்தவர். இவரது பாடல் புறத்தில் நான்கு உள.

எ

எருக்காட்டூர்த்தாயம் கண்ணனார் = கடைச்சங்ககாலத்தவர், சோழநாட்டு தஞ்சையினைச் சார்ந்த எருக்காட்டூர் வாசி. இவரது பாடலால் சோமர்களும் கிரேக்கர்களும் சேர்ந்து முசிறித் துறை முகத்திற்கு வந்து தமது நாட்டுக்கு நம்நாட்டு மிளகைக் கொண்டு சென்றனர் என்பதைக் குறித்துப் பாடியுள்ளார். இவரது பாடல்கள் புறத்தில் ஒன்றும் அகத்தில் மூன்றும் குறுந்தொகையில் ஒன்றும் நற்றிணையில் ஒன்றும் உள.

எல்லப்ப நாவலர் = இவரைச் சைவ எல்லப் நாவலர் என்பர். தருமையாதீனத்தைச் சார்ந்தவர். காவிரிப் பூம்பட்டினத்திற்கு

அண்ணமையதான இராத நல்லூரில் தோன்றியவர். இவர் அருணைக்கலம்பகம் திருவெண்காட்டுப் புராணம் செவ்வந்திப் புராணம், திருச்செங்காட்டங் குடிப் புராணம் பாடியவர். பிள்ளைப்பெருமாள் ஐயங் கார் காலத்தவர். இவரது மனைவியாரும் கவிபாடுவதில் வல்லவர். ஐயங் கார் சிவபெருமானைத் தாழ்த்தி விஷ்ணுவை உயர்த்திப் பாடிய பாடல் களுக்கு எதிராக விஷ்ணு வைத் தாழ்த்திச் சிவ பெருமானை உயர்த்திப் பாடியவர். காலம் கி. பி, 17 ஆம் நூற்றாண்டு.

ன்னையிருப்புலவர் = இவர் எழுதிய நூல் முக்கூடற் பள்ளு என்பது. காலம் கி.பி.17 ஆம்நூற்றாண்டு. இவர் இயற்கையைப் பாடுவதில் வல்லவர்.

ஞ

ஞானிச் சேரிமுடமோசியார் = இவர் பிறவியில் முடமாகவே பிறந்தவர். ஞானிச் சேரி என்னும் கிராமத்தவர். இவர்உறையூர்ஞானிச் சேரி முடமோசியார் என்றும் கூறப்படுவர். இவரது பாடல்கள் புறத்தில் ஆறு உள. இவர் அந்து வஞ்சேரல் இரும்பொறையும் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளியும் வாழ்ந்த காலத்துப் புலவர்.

ஐ

ஐயடிகள் காடவர் கோன் = பல்லவமன்னர் மரபினர், துறவு பூண்ட தூயர், பல தேவாலய யாத்திரை செய்தவர். இதன்பயனாக நேரத்திரவெண்பா என்னும் நூலைச் செய்தவர். கி. பி. 9 ஆம் நூற்றாண்டினர்.

ஐயம் பெருமாள் பிள்ளை = பாண்டிமண்டல சதக ஆசிரியர். கி. பி. 19 ஆம் நூற்றாண்டினர்.

ஐயாறப்பர் = இவர் சேரவம்சத்தினர். சைவர். இவர் புறப்பொருள் வெண்பா மாலை என்னும் நூலைச் செய்தவர். இவரது காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு.

ஒ

ஒட்டக்கூத்தர் = சென்னித்த மரபினர். சைவர். இவர் வயதால் முதிர்ந்தவர். முதற் குலோத்துங்கன் காலத்தவர். அவன் மீது பிள்ளைத்தமிழ், உலாநூல் களைப் பாடியவர். இவை

யே அன்றி புதுவை காங்கேயன் மீதும் நாலாயிரக் கோவை நூல் பாடியவர். விக்ரம சோழன் மீதும் இரண்டாம் குலோத்துங்கன் மீதும் உலா பாடியவர். மூன்று உலாக்கள் அடங்கிய நூலே மூவர் உலா எனப்படும். தக்கயாகபரணியும், இராமாயண உத்தரகாண்டமும், சிட்டி எழுபதும் இவரால் பாடப்பட்டவை. கி.பி. 12 ஆம் நூற்றாண்டினர். தேவியின் அருளைப்பூரணமாகப்பெற்றவர். அதனால் வெட்டுண்ட உடலங்களையும் தலைகளையும் ஒட்டப் பாடிய காரணத்தால் ஒட்டக்கூத்தர் என்னும் பெயரைப் பெற்றவர். இவரை வாணிதாதன் என்றும் கூறுவர்.

ஒப்பிலாமணிப் புலவர் = சிறந்த சைவர். சிவரகசியம் என்னும் நூலுக்கு ஆசிரியர். இலக்கண விளக்க வைத்திய நாத தேசிகரிடம் கல்விபயின்றவர். தஞ்சை சரபோஜி மன்னர் காலத்தவர். கி. பி. 18 ஆம் நூற்றாண்டினர். குமணன் வரலாற்றைப் பாடியவர் ஒருவரும் இப்பெயருடையவர் ஆவர். கி.பி. 19 ஆம் நூற்றாண்டினர் என்பது அறிஞர் துணிபு.

க

கச்சியப்ப சிவாசாரியார் = இவர் காஞ்சிபுர குமரகோட்ட அர்ச்சகருள் ஒருவர். முருகப்பெருமான் அருளைப் பூரணமாகப் பெற்றவர். இவரது தந்தையார் காளத்தியப்ப சிவாசாரியார். இவர் வடமொழி தென்மொழிகளையும் ஆகமங்களையும், திருமுறைகளையும்நன்கு பயின்றவர். இவரே கந்த புராணத்தின் ஆசிரியர். காலம் கி.பி. 12 ஆம்நூற்றாண்டு.

கச்சியப்ப முனிவர் = இவர் சிவஞான முனிவரின் மாணவர். திருத்தணிகையில் வேளாளர் குலத்தில் உதித்தவர். இவர் பாடிய நூல்கள் பல. விநாயக புராணம், தணிகை புராணம், ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது, திருவானைக்காப்புராணம், பேரூர்ப் புராணம், காஞ்சி புராணத்தின் இரண்டாம் கண்டம், திருத்தணிகைப் பதிற்றுப்பத்து அந்தாதி முதலியன. கி. பி. 18 ஆம்நூற்றாண்டு.

கடவுள் மாமுனிவர் = திருவாதவூர் அடிகள் புராணம்செய்தவர். கச்சியப்ப முனிவரின் காலத்தவர். அவருக்கு மெருங்கிய நண்பரும் ஆவார். கி. பி. 18 ஆம் நூற்றாண்டு.

கடிகை முத்துப்புலவர் = இவர் எட்டையபுரம் சமஸ்தானப் புலவர். யமகம் அந்தாதி முதலியவற்றைப் பாடுவதில் வல்லவர். இவர் பல தனிப் பாடல்களையும் நூற்களையும் எழுதியுள்ளார். அவற்றுள் சமுத்திர விலாசம், காமரசாஞ்சி, முதலியன குறிப்பிடத்தக்கன. காலம் 17 ஆம் நூற்றாண்டு.

கடியலூர் உருத்திரங் கண்ணனார் = கடைச்சங்க காலத்தவர்; பெரும்பாணாற்றுப் படை, பட்டினப் பாலை களின் ஆசிரியர். இரண்டும் முறையே தொண்டைமான் இளந்திரையன் சிறப்பும், சோழன் கரிகால் பெருவளத்தான் சிறப்பும் கூறுவன.

கணக்காயனார் = இவர் ஆசிரியத்தொழில் மேற்கொண்டவர். மதுரை வாசி. நக்கீரனார் தந்தையார். இவரது பாடல் குறுந்தொகையில் ஒன்று உளது. காலம் கடைச்சங்க காலம்.

கணிமோதாயியார் = இவர் எழுதிய நூற்கள் ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது. சோதிடம் வல்லவர். இக்காரணம் பற்றியே கணி என்று அடையுடன் கூறப்பட்டு வருகின்றனர். காலம் கடைச்சங்க காலம்.

கனியன் பூங்குன்றனார் = கடைச்சங்க காலத்தவர். சோதிடம்வல்லவர், புறத்தில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றும் இவரது பாடல்கள் உள.

கன்னாரித்தர் = இவர் சோழ மரபினர். முதற் பராந்தகன் திருமகனார். சைவத் திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறையில் உள்ள திருவிசைப்பா பாடிய ஆசிரியர்களுள் இவரும் ஒருவர். கி.பி. 10 ஆம் நூற்றாண்டினர்.

கண்ணம்புத்தனார் = கடைச்சங்ககாலத்தவர். இவரது தந்தையார் கண்ணன் என்பவர். இவரால் பாடப்பட்ட நூல் கார் நாற்பது, என்பது.

கண்ணஞ்சேந்தனார் = கடைச்சங்ககாலத்தவர். இவரது தந்தையார் சாத்தந்தை

யார். இவரது நூல் தினை மொழி ஐம்பது.

கண்ணுடை வள்ளலார் = இவர் காழிகண்ணுடைய வள்ளலார் எனப்படுவார். சைவத்துறவி. சீர்காழியில் வாழ்ந்தவர். இவரது நூல் ஒழிவில் ஒடுக்கம். அத்துவைதக் கலிவெண்பா. சித்தாந்த தரிசனம் முதலியன. 18 ஆம் நூற்றாண்டு.

கனிரைவேற்பிள்ளை = யாழ்ப்பாணத்தில் புலோலியூரில் பிறந்தவர். சைவ வேளாளர். வடமொழி, தென்மொழி பயின்றவர். கல்ல சொற்பொழிவாளர். அட்டாவதானம் சதாவதானம் செய்த அறிஞர். இவர் கூர்மபுராணத்திற்கும் பழனித்தலபுராணத்திற்கும் உரை எழுதியுள்ளார். சிவாலய மகோற்சவ விளக்கம். சைவ சித்தாந்தச் சுருக்கம் முதலியனவும் இவர் எழுதியநூற்கள். கி.பி. 19 ஆம் நூற்றாண்டினர்.

கந்தசாமிப்புலவர் = திருப்பூவணத்தில் சைவ மரபில் உதித்தவர். அத்தலத்தைப் பற்றிப் புராணம், உலா, வண்ணம் முதலிய நூற்களைச் செய்தவர். ஆப்பனூர்ப் புராணம் பாடியவரும் இவரே. 17 ஆம் நூற்றாண்டு.

கந்தப்பையர் = கச்சியப்ப முனிவரின் மாணவர். திருத்தணிகை வாசி. வீரசைவ மரபினர். இவர் தணிகையைப் பற்றி உலா, அந்தாதி, கலம்பகம் அனுபூதி முதலான நூற்களைப் பாடியவர். பரமலீலை அந்தாதி, செந்தில் நிர் ஒட்டக அந்தாதி களுக்கு உரை எழுதியவர். இவர் பெற்ற பிள்ளைகளே விசாகப் பெருமாள் ஐயர், சரவணப் பெருமாள் ஐயர் என்பவர்கள். இவ்விருவர் களும் சிறந்த புலமையுடையவர்கள் கி. பி. 18 ஆம் நூற்றாண்டினர்.

கந்தியார் = இவர்வணவர். பெண்பாற்புலவர். திருக்குரு கூருக்கு அருகுள்ள திருப்பேரையில் பிறந்தவர். சிந்தாமணியிலும், பரிபாடலிலும் பாடல்களைப் பாடிச்சேர்த்தவர். கி.பி. 12 ஆம் நூற்றாண்டினர்.

கபிலர் = கடைச்சங்ககாலத்தவர். திருவாதவூரில் பிறந்த அந்தணர். இவர் சேரன் செல்வக்கடுங்கோவாழி ஆதனைப் பாடி நூறுயிரம் பொன்னும், வளநாடும்

பெற்றவர். பாரி வள்ளலின் நண்பர். குறிஞ்சிப் பாட்டு. ஐங்குறு நூற்றில் குறிஞ்சிப் பாடல்கள். கலித்தொகையில் குறிஞ்சிக்கலிகள் இன்ன நாற்பதும்.நற்றிணையில் இருபது குறுந்தொகையில் இருபதினான்பது. அகத்தில் பத்து, புறத்தில் மூப்பது, திருவள்ளுவ மாலையில் ஒன்று ஆகிய இவைகள் இவர் பாடிய பாக்களும் நூற்களும் ஆகும். இவரது பாடல்களாகப் பதினேராம் திருமுறையிலும் சில உள. அவை முத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி முதலியன. இவை இவரால் பாடப்பட்டனவை அல்ல என்பது சிலரது கருத்து. பாட்டியல் ஒன்றும் இவரால் பாடப்பட்டுள்ளது.

கமலைஞானப்பிரகாசர் - இவர் திருவாரூரில் பிறந்தவர். திருத்தருமை ஆதினத்தைச் சார்ந்தவர். பழுதை கட்டிய ஞானப்பிரகாசர் மாணவர். இவர் புட்பவிதி, அலுட்டானை அகவல், திருவாரூர்ப்பள்ளு, சிவபூசை அகவல், சிவானந்த போதம், திருமழுவாடிப் புராணம் திருவாஞைக்காப்புராணம் முதலான நூற்களைப்பாடியவர். காலம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு.

கம்பர் = இவர் உவச்சர் குலத்தினர். திருவழுந்தூரில் பிறந்தவர். வெண்ணெய் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர். மூன்றும் குலோத்துங்கன் அவைப் புலவராக இருந்தவர். இவர் ராமாயணம், ஏர் எழுபது, சரஸ்வதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, முதலிய நூற்களைப் பாடியவர். கல்வியில் பெரியர் கம்பர் என்ற சிறப்புடையவர். இவரது திருமகனார் அம்பிகாபதி காலம். கி. பி. 12 ஆம் நூற்றாண்டு.

கருணைப்பிரகாசர் = இவர் காஞ்சிபுரத்தினர். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் சகோதரர். வெள்ளி யம்பலவாணர் இவரது ஆசிரியர். இவர் இட்டலிங்க அகவலையும் காளத்திப் புராணத்தில் ஒரு பகுதியும் எழுதியவர் காலம். கி.பி. 17 ஆம் நூற்றாண்டு.

கருவூர்த்தேவர் = கோங்கு நாட்டில் கருவூரில் பிறந்தவர். இவர் சிறந்த சித்தர். இவரது பாடல்கள் ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா என்றும் பகுதியில் உள்ளன. இவரே இராஜ ராஜேஸ்வரச் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டைக்கு உதவியாய் இருந்தவர். காலம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு.

கலியாணசுந்தர முதலியார் = இவர் சிறந்த சைவ சித்தாந்தி. சொற்பொழிவு ஆற்றும் திறனும் உரை எழுதும் வன்மையும் உடையவர். இவரே பூவை கலியாணசுந்தரர் எனப் படுவார். பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல்களுக்குச் சிறந்த உரைகளை எழுதியவர். சித்தாந்த வசன பூஷணம் என்னும் நூலையும் எழுதியுள்ளார். காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டிடு.

கலியாணசுந்தர முதலியார் = இவரே திரு. வி. க. எனப் படுபவர். இவர் சமய உலகிற்கும் தொழிலாளர் உலகிற்கும் பெரிதும் பாடுபட்டவர். எழுதும் திறனும் பேசும் திறனும் படைத்தவர். பல உரை நடை நூற்களையும், செய்யுள் நூற்களையும் எழுதியவர். பெரிய புராணத்திற்குச் சிறந்த முறையில் குறிப்புரை எழுதியவர். பெண்ணின் பெருமை என்கடன் பணிசெய்து கிடப்பதே. வள்ளலார் திருவுள்ளம் முருகன் அல்லது அழகு முதலியன உரைநடைநூற்களில் குறிப்பிடத்தக்கன. முருகன் அருள் வேட்டல் திருமால் அருள்வேட்டல் முதலியன இவரது செய்யுள் பாடும் திறனுக்கு எடுத்துக்காட்டுகள். சைவ சமயத்தவர் ஆயினும் சமரச நோக்கினர். ஏயே சுப்பெருமான் மீதும் பாடல்களைப் பாடியவர். காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு. தம் சுயசரித்திரத்தையும் இவர் எழுதியுள்ளார்.

கல்லாடர் = இவர் மலையாள நாட்டைச் சார்ந்த கல்லாடம் என்னும் ஊரினர் போலும். கடைச்சங்க காலத்தவர். இவரது பாடல்கள் அகத்தில் ஏழும், குறுந்தொகையில் இரண்டும் திருவள்ளுவ மாலையிலும் ஒன்றும் உள்ளன. தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு உரை கண்ட கல்லாடரும் கல்லாடம் என்னும்

நூலைச் செய்தவரும், பதினோராம் திருமுறையில் காணப்படும் திருக்கண்ணப்பதேவர் திருமறம் பாடியவரும் இப்பெயரால் குறிப்பிடப்பட்டு வருகின்றனர். பிற்பட்ட நூற்களைப் பாடிய கல்லாடர் சங்க காலத்துக் கல்லாடர் அல்லர் என்பது சிலரது கருத்தாகும்.

வீராசபண்டிதர் = இவர் வீரைக்கவிராச பண்டிதர் என்றும் கூறப்படுவார். இவர் பாண்டியநாட்டு வீர சோழன் ஊரினர் அந்தணமரபினர். சங்கராசாரியர் பாடிய சௌந்தரிய லகரி, ஆனந்த லகரி என்னும் வடமொழி நூற்களைத் தமிழில் மொழி பெயர்த்துப் பாடியவர். கி. பி. 16 ஆம் நூற்றாண்டினர்.

வைகாவூர்ப்பின்னை = இவர் யாழ்ப்பாணத்தினர். பின்னர் சென்னையில் வாழ்ந்தவர். ஆங்கிலம் பயின்று பி.ஏ. பட்டம் பெற்றவர். இவர் 1800 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர் என்னும் நூலை இயற்றியவர். களவழி நாற்பது விக்ரம சோழன் உலா, கலிங்கத்துப் பரணி நூற்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். கி. பி. 19 ஆம் நூற்றாண்டினர்.

வைகுந்தப்பிள்ளை = திரிகோணமலையில் பிறந்தவர். தமிழ் நாவலர் சரிதை என்னும் நூலைப் பதிப்பித்தவர். இல்லாண்மை என்னும் உரைநடை நூலையும் எழுதியவர் காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

ஞ

ஞாக்கையபாடினியார் நற்செல்வனார் = கடைச் சங்க காலத்தவர். ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைப் பாடி ஒன்பது துலாம் பொன்னும் நாலாயிரம் பொற்காசுகளும் அரசன் பக்கத்தில் அமரும் பேறும் பெற்றவர். பெண்பாற் புலவர். இவரது பாடல்கள் பதிற்றுப்பத்து என்னும் நூலில் ஆறும் பத்தும், குறுந்தொகையில் ஒன்றும், புறத்தில்ஒன்றும் காணப்படுகின்றன. காக்கை பாடினியம் என்னும் யாப்பிலக்கண நூலைச் செய்தவரும் காக்கைபாடினியார் என்று கூறப்படுகின்றார். இந் நூலைப் பாடியவர் சங்க காலத்தவர் அல்

லர் என்பது சிலர் துணிபு.

காங்கேயர் = உரிச் சொல் நிகண்டு ஆசிரியர். செங்குந்த மரபினர். தொண்டைமண்டலத்தில் தோன்றியவர். காலம் கி. பி. 16 ஆம் நூற்றாண்டு.

காஞ்சி ஞானப்பிரகாசர் = இவர் காஞ்சிபுரத்தில் உள்ள சைவமடத்தலைவர். கச்சித் கலம்பகம், இவர் பாடிய நூல். கி. பி. 16 ஆம் நூற்றினர். சிறந்த சைவ சித்தாந்தியார்.

காரி இரத்தினக் கவிராயர்! = இவரைத் திருமேனி இரத்தினக் கவிராயர் என்றும் கூறுவர். ஆழ்வார் திருநகரியினர். மாறன் அலங்காரம் என்னும் அணியிலக்கண நூலுக்கு உரை எழுதியவர். பரிமேல் அழகர் நுண் பொருள் மாலை என்னும் நூலையும் எழுதியவர். கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

காரியாசான் = கடைச் சங்க காலத்தவர். சிறு பஞ்ச மூல நூல் ஆசிரியர். சைன சமயத்தவர்.

காரைக்கால் அம்மையார் = இவருக்குப் புனிதவதியார் என்ற பெயரும் உண்டு. காரைக்காற் பதியில் நிதிபதி செட்டியார் திருமகளார். நாகை பரமதத்தனுக்கு வாழ்க்கைப் பட்டவர். இறைவன் திருவருளால் பேய் வடிவினை வேண்டிப் பெற்றவர். திருவாலங்காட்டில் முத்தியடைந்தவர். இவர் பாடியன அற்புதத் திருவந்தாதி, மூத்த திருப்பதிகம், இரட்டைமணிமாலை என்பன. இவை பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காலம் கி. பி. 6 ஆம் நூற்றாண்டு.

கார்த்திகேய முதலியார் = தொண்டைநாட்டு மாகறல் என்னும் ஊரினர். சைவ சமயத்தவர். மொழி நூல் எழுதியவர். தமிழ் விண்ணப்பம் என்னும் நூலும் இவரால் எழுதப்பட்டது. காலம் கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

கார்மேகக் கவிஞன் = கொங்கு நாட்டின் விஜமங்கல ஊரினர். கொங்கு மண்டல சதகம் இவரால் இயற்றப்பட்டது. இவரது மரபு இன்னதென அறிதற்கு இல்லை.

கால்டுவெல் துரைமகனார் = இவர்மேனாட்டுபாதிரியார். தென்னாடு வந்து தென்னாட்டு மொழிகளோடு

பயின்றவர். அப்பயிற்சியின் காரணமாக மொழிநூல் என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதி அதனுள் திராவிடமொழிகள் ஒவ்வொன்றையும் ஆய்ந்து ஒன்றற் கொன்றிற்குள்ள ஒற்றுமைகளை எடுத்துக் காட்டித் தமிழ்மொழியின் தனிச்சிறப்பை விளக்கியவர். இவர் தெற்றத் தெளிய வடமொழிசார்பின்றித் தமிழ்மொழி இயங்க வல்லது என்றும் எவரும் அறிய எழுதியவர். கி. பி. 19 ஆம் நூற்றாண்டினர்.

தாவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் = கடைச் சங்க காலத்தவர். முல்லைப் பாட்டு ஆசிரியர்.

மனமேகப் புலவர் = ஆசு கவிபாடுவதில் மிக வல்லவர். ஸ்ரீரங்கம் கோயிலில் பரிச்சாரகராக இருந்தவர். அது போது வரதர் என்பது பெயர். திருவானைக்கா சிவன் கோயில் தாசிமோகனுங்கி காரணமாகக் கைவரானவர். அகிலாண்ட நாயகியின் அருளால் கவிபாடும் திறன் பெற்றவர். திருவானைக்கா உலா, பரப்பிரம்ம விளக்கம், சரஸ்வதி மாலை இவர் பாடிய நூல்கள். பலப்பல தனிப் பாடல்களைப் பாடியவர். அவை பெரும்பாலும் நகைச் சுவை ததும்பி இருக்கும். கி. பி. 14 ஆம் நூற்றாண்டினர்.

ந

நிருப்புணைப்பிள்ளை = பாளையங் கோட்டையினர். வைதிக சமயத்தில் இருந்து பின்னர்க் கிறிஸ்தவச் சமயத்தைச் சார்ந்தவர். இவர் இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய குறள் முதலான நூல்களை இயற்றியவர். காலம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

நு

நூலை நரசியர் = திருவண்ணாமலையில் குகையில் தவம் கிடந்த யோகியார், இவர் அருணாசல அந்தாதி, சோணாசல மாலை இவற்றைப் பாடியுள்ளார். கி. பி. 16 ஆம் நூற்றாண்டினர்.

நூலாசிரியர் = இவர் சைனர். யாப்பருங்கலக் காரிகைக்கு உரை எழுதியவர். கி. பி. 12 ஆம் நூற்றாண்டு.

குணவீர பண்டிதர் = இவர் தொண்டை நாட்டைச் சார்ந்த களத்தை என்னும் ஊரினர். நேமிநாதம் என்னும் இலக்கண நூலைச் செய்தவர். வச்சணந்தி மாலை என்னும் நூலும் இவரால் இயற்றப் பட்டது. கி.பி. 12 ஆம் நூற்றாண்டினர்.

குமட்டூர்க் கண்ணனார் = கடைச் சங்க காலத்தவர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடி இம்பற் காட்டில் உள்ள 500 ஊர்களைப் பிரம்மதாய மாகவும், 38 ஆண்டுகள் தென்னாட்டுள் வரும் வருவாயில் ஒரு பாகமும் பரிசிலாகப் பெற்று மகிழ்ந்தவர். அந்தணர் குலத்தினர்.

குமரகுருபரர் = இவர் பாண்டிய நாட்டு ஸ்ரீவைகுந்தம் என்னும் இடத்தில் சண்முக சிகாமணி கவிராயருக்கும் சிவகாமி அம்மைக்கும் பிறந்த சைவ வேளாள மரபினர். ஐந்து வயது வரை ஊமையாக இருந்தவர். பின்னர்த் திருச்செந்தூர் முருகப்பெருமான் திருவருளால் அது நீங்கப் பெற்றவர். இவரே திருப்பனந்தாளில் ஒரு மடத்தை ஸ்தாபித்தவர். தமது சிறப்பையும், சைவ சமய ஏற்றத்தையும் உயிருள்ள சிங்கத்தின்மீது அமர்ந்து முஸ்லீம் மன்னருக்குக் காட்டியவர். இவர் எழுதிய நூற்கள் கந்தர்கலி வெண்பா, மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ், முத்துக் குமாரசாமிபிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், கைலைக் கலம்பகம், மீனாட்சியம்மைகுறம், மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை, பண்டார மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, நீதி நெறி விளக்கம், சிதம்பர மும்மணிக்கோவை, சிவகாமி யம்மை இரட்டை மணிமாலை, காசிக் கலம்பகம், இந்துஸ்தான் மொழியை உணரச் சகல கலாவல்லி மாலை முதலிய வற்றைப் பாடியவர். இவரது ஞானசிரியர் தருமை ஆதினமாசிலாமணி தேசிகர் ஆவார். இவர் திருமலை நாயக்கன் காலத்தவர். இவர் காலத்தில்தான் துளசிதாசர், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் விளங்கினர். கி.பி. 17 ஆம் நூற்றாண்டு.

குமாரசுவாமிப்புலவர் = இவர் சுன்னாகத்தில் வேளாளர்

மரபில் பிறந்தவர். இவர் சைவ மரபினர். வடமொழி யிலும் வல்லவர். இப் பயிற்சியினால் மேகதூதக் காரிகை, சாலைக்கிய நீதி வெண்பா என்னும் நூற் களை மொழிபெயர்த்து எழுதியுள்ளார். தமிழ்ப் புலவர் சரிதம், விளப்பகு பத விளக்கம் முதலியன வும் இவர் செய்தவையே. காலம் 19 ஆம் நூற் றாண்டு.

குமாரதேவர் = இவர் கன்னட தேசத்து மன்னர். சாந்த லிங்க சுவாமிகளை ஞான சிரியராகக் கொண்டவர். பின்னர் அரசு துறந்தவர். திருப்போரூர்சிதம்பரசுவா மிகள் இவர்மாணவர். இவர் அத்துவிதஉண்மை மகா ராஜ்ய துறவு, ஆகமநெறி அகவல், ஞான அம்மானை, சிவதரிசன அகவல், சமரச அகவல் முதலான நூல்களைப்பாடியவர். திரு வாதவூரார் புராணத் திற்கும் உரைஎழுதியவர். வீர சைவர். கி.பி. 18ஆம் நூற்றாண்டு.

குருகைப் பெருமான் கவிராயர் = திருநெல் வேலியில் ஆழ்வார் திருநகரியில் வேளாள மரபில் பிறந்தவர். மாறன் அலங்காரம் என்னும் அணி இலக்கணம், மாறன் பாப்பர்வினம் மாறன் அகப்பொருள், நம் பெருமான் மும்மணிக்கோவை முதலான நூற்களை இயற்றியவர். காலம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு.

குருநமச்சிவாயர் = இவர் குகை நமச்சிவாயர் மாணவர். அண்ணுமலை வெண்பா, சிதம்பர வெண்பா, பரமரகசிய மாலை என்னும் நூல்களைப்பாடியவர். கி.பி. 16 ஆம் நூற்றாண்டினர்.

குருபாததாசர்--இவர் குமரேச சதகம்பாடியவர் கி. பி. 18 ஆம் நூற்றாண்டினர்.

குலசேகர ஆழ்வார் = இவர் பன்னிரண்டு ஆழ்வார் களில் ஒருவர். சேர மன்னர் மரபினர். திருவஞ் சைக்களத்தில்பிறந்தவர். திருமாலிடத்தும் ராம பிரானிடத்தும் பேரன் புடையவர். மன்னர்குடியில் பரமபதம் அடைந்தவர். இவரது திருப்பாடல் கள் பெருமாள் திருமொழி என்று தலைப்பின் கீழ் நாலாயிரப் பிரபந்தத்தில் உள்ளன. இவர் முகுந்த மாலை என்னும் நூலை வட மொழியில் பாடியிருப்பதாகத் தெரிகிறது. பாகவதர் பெருமையினை உணர்த்த நன்கு ஆய்ச்சப்பட்ட

எண்ணெயில் கையை யிட்டுத் தம் கைக்கு எந்த வித துன்பமும் ஏற்படாத வாறு காட்டியவர். காலம் 9 ஆம் நூற்றாண்டு.

கூ

கூடலூர்கிழார் = கடைச்சங்க காலத்தவர். இவர் யானைக் கண் சேய்மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் காலத் தவர். வான நூல் புலமை பெற்றவர். முதுமொழிக் காஞ்சி என்னும் நூலைப் பாடியவர். ஐங்குறுநூறு என்னும் நூலைத் தொகுத் துத் தந்தவர். இவர் பாடினவாகப் புறத்தில் ஒன்றும், குறுந்தொகை யில் மூன்றும் ஆக நான்கு பாடல்கள் உள.

கோ

கொங்குவேள் = இவரே உத யணன் காதை ஆசிரியர். அது கொங்குவேள் மாக் கதை, பெருங்கதை என் றும் கூறப்படும். இந் நூலாசிரியர் விகடமங்க லம் என்னும் ஊரினர். கொங்கு நாட்டு வேளாள சிற்றரசருள் ஒருவர். காலம் கி. பி. 6 ஆம் நூற் றாண்டு.

கொட்டையூர்வெள்ளக்கொழுந்து தேசிகர் = இவர் பல நூல்களைப் பாடியவர். அவற்றை இணைத்துச் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத்திரட்டு என்ற பெயரால் ஒரு நூல் வெளி வந்துள்ளது. குறிப்பிடத் தக்க நூற்கள் சரபோச ராசன் குறவஞ்சி, சரபேந் திரன் வைத்திய முறை கோடிச்சுரக் கோவை, கொட்டையூர்ப் புராணம், பிரகதீஸ்வரர் உலா, குற வஞ்சி என்பன. கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

கோ

கோபாலகிருஷ்ண பாரதியார் இவர் இசை நூற் புலவர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை காலத்த வர். நந்தனார் கீர்த்தனை என்னும் நூலையும், சிதம் பரக்கும்மி என்னும் நூலை யும் பாடியவர். கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

கோப்பெருஞ் சோழர் = சங்க காலத்தவர் சோழ மன் னர் மரபினர். பொத்தி யார், பிசிராந்தையார் என் னும் புலவர்கட்கு உயி ரனைய நண்பர். இவர் சோழன் குரும்பொறை என்போனால் வெல்லப்பட் டவர். அதன் பொருட்டு வடக்கிருந்து உயிர் விட்டவர். இவரது பாடல்

கள் குறுந்தொகையில் நான்கும் புறத்தில் மூன்றும் உள.

கோவூர் கிழார் = கடைச்சங்க காலத்தவர். வேளாள மரபினர். இவர் மன்னர்கட்கு அறிவுரை புகட்டுவதில் வல்லவர். சமாதானப்படுத்தி வைப்பதிலும் சமர்த்தர். இளந்தத்தன் நெடுங்கிள்ளி என்பானால் கொல்லப்படும் தருவாய் கொல்லப்படாமல் செய்தவர். மலையமான் மக்கள் கிள்ளிவளவனால் யானைக்காலில் வைத்துக் கொல்லக் கட்டளை இட்டதைத் தடுத்தவர். இவரது பாடல்கள் புறத்தில் பதினைந்தும், நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையில் ஒன்றும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும் உள்ளன.

கோனேரியப்ப நாவலர் = இவர் கந்தபுராணத்தைச் சார்ந்த உபதேச காண்டத்தை இயற்றியவர். இவரைக் கந்த புராண ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியாரின் மாணவர் என்பர். அப்படியானால் இவரது காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டு. இவரை 18 ஆம் நூற்றாண்டு புலவர் என்றும் கூறுவர்.

ச

சங்கரநமச்சிவாயர் = இவர் திருநெல்வேலியில் பிறந்தவர். இலக்கணக் கொத்து எழுதிய சுவாமிநாத தேசிகரிடம் கல்வி பயின்றவர். இவர் போலிகார் மருதப்பதேவன் வேண்டுகோளின்படி நன்னூலுக்கு விருத்தியுரை வரைந்தவர். காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு. இவ்வுரையினைச் சிவஞான முனிவர் திருத்தம் செய்துள்ளார்.

சதாவண்ணர் = இவர் தத்துவராயரிடம் தீட்சை பெற்றவர். விருத்தாசலத்தில் உதித்தவர். இவர் வெண்குஷ்டநோயால் துன்புற்றவர். இக்காரணம் பற்றியே இப் பெயரால் குறிப்பிடப்பட்டுவந்தார். இவரது பெற்றோர் சாந்தசீலர் விரத சீலை என்பவர். காலம் 15 ஆம் நூற்றாண்டு. சதாவண்ணபோதம் என்னும் நூலியற்றியவர்.

சண்முகம் பிள்ளை = இவர் மயிலை சண்முகம் பிள்ளை என்றும் கூறப்படுவார். மயிலையில் வாழ்ந்தவர். கம்பராமாயணம் பாடம் சொல்லுவதில் வல்லவர்,

திருமுல்லைவாயில் புராணம் இவரால் பாடப்பட்டது. காலம் கி.பி. 20ஆம் நூற்றாண்டு.

சத்திமுற்றப் புலவர் = இவர் பிறந்த ஊர் சத்திமுற்றம் என்பது. இது கும்பகோணத்தைச் சார்ந்தது. இவரை ஆதரித்தவர் சோழ நாட்டுக் குடிதாங்கி என்பவன். இவர் பாடிய நாரைவிடுதூது என்னும் ஒரு தனிப்பாடல் இவரது வறுமை நிலையினையும், உவமைகூறும் ஆற்றலையும் புலப்படுத்தும். காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு.

சபாபதி நாவலர் = ஆறுமுக நாவலர் மாணவர்களுள் ஒருவர். யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர். நல்ல பேச்சாளர்; எழுத்தாளர். இவர் இயற்றிய நூற்கள் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கன : ஏசு மத சங்கற்ப நிராகரணம். சிதம்பர சபாநாதர் புராணம், இராமாயண தாற்பரிய சங்கிரகம், சதுர் வேததாற்பரிய சங்கிரகம், திருச்சிற்றம்பல யமக அந்தாதி, திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு, திராவிட பிரகாசிகை என்பன. காலம் கி. பி. 19ஆம் நூற்றாண்டு.

சம்பந்தசாஸ்திரியார் = இவர் தருமபுர மடத்துப் பண்டார சந்நிதியாவார். கந்த புராணச் சுருக்கம் பாடியவர். மைசூர் மன்னன் இவரைக் கண்டபோது, இவர் கருநிறமுடையவராக இருந்த காரணத்தால் 'வாரும் அண்டங் காக்கை யாரே' என்று அழைத்தபோது, உடனே இவர், "அண்டங்காக்கை யார் என்பது உமக்குத் தகுமே அன்றி எம் போன்ற துறவிக்கு எங்ஙனம் பொருந்தும்?" என்று கூறிய அறிஞர். அண்டங் காக்கை என்பது உலகைக்காத்தல் என்ற பொருள் தருதலின் இங்ஙனம் கூறினர். காலம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு.

சம்பந்தர் = இவரே திருஞானசம்பந்தர் எனப்படுபவர். ஆளுடைய பிள்ளையார் என்பதும் இவரது பெயர். மற்றும் பலபெயர்கள் இவருக்கு உண்டு. சீர்காழியில் கௌணியர் கோத்திரத்தில் அந்தணர் மரபில் சிவபாத இருதயருக்கும் பகவதி என்னும் அம்மை

யாருக்கும் பிள்ளையாகப் பிறந்தவர். மூவாண்டில் ஞானப்பால் உண்டு பாடல்களைப் பாடியவர். சிவபெருமான் திருவருளால் பல அற்புதங்களைச் செய்தவர். பாம்பு கடித்தவனை எழுப்பினர். பாண்டியன் கூனை நிமிர்த்தினர். சுரத்தைப் போக்கினர். எலும்பைப் பெண்ணாக்கினர். சமணர்களை வாதில் வென்றார். தம் திருப்பதிகம், ஆற்றில் அடித்துப்போகாவண்ணமும், நெருப்பில் வேகாவண்ணமும் செய்தவர். இவர் பாடிய பாடல்கள் தேவாரத்தில் உள்ளன. இவரது பாடல்கள் திருக்கடைக்காப்பு என்றும் கூறப்படும். சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள், முதல் மூன்று திருமுறைகளாக உள்ளன. இவர் பல்லாயிரத் கணக்கான பதிகங்களைப்பாடியும் இப்போது உள்ளவை 384 பதிகங்களே ஆகும். இவர் காலத்தில் அப்பர், சிறுத்தொண்டர் முதலியோர் திகழ்ந்தனர். காலம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டு.

சயங்கொண்டார் = இவர் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவர். தீபங்குடியில் தோன்றியவர். கலிங்கத்துப்பரணியைப் பாடியவர். பரணி பாடுதலில் வல்லவர் என்பதை உணர்த்த "பரணிக்கோர் சயங்கொண்டார்" எனச் சிறப்பிக்கப்பட்டவர். சைவ சமயத்தவர். இசையாயிரம் என்னும் நூலையும் இயற்றியதாகக் கூறுவர். காலம் கி. பி. 11 ஆம் நூற்றாண்டு.

சரவணப்பெருமாள் ஐயர் = இவர் வீரசைவ மரபினர், திருத்தணிகையில் பிறந்தவர். இவரது தந்தையார் கந்தப்பையர் என்பவர். இவர் சிறந்த உரையாசிரியர். நைடதம், பிரபுலிங்கலீலை ஆகிய நூற்களில் சில பகுதிகளுக்கு உரை கண்டவர். நாலடியார் திருவாசகம் முதலிய நூல்களைப்பதிப்பித்தவர். இயற்றமிழ்ச் சுருக்கம், அணியியல் விளக்கம், களத்தூர்ப் புராணம் இவரால் இயற்றப்பட்டவை. காலம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

சரவணப் பெருமாள் கவிராயர் = முத்து சாமலிங்க சேதுபதியின் அவைக்களப் புலவர். பணவிடுதூதின் ஆசிரியர் இவர்

என்பர். முத்து இருளப்பப் பிள்ளை மீது காதல் என்னும் நூலையும், விநாயகர் திருமுக விலாசம் என்னும் நூலையும் பாடியவர். காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

சவ்வாதுப்புலவர் = முஸ்லீம் இனத்தவர். ஆண்டவன் பிள்ளைத்தமிழ் என்னும் நூலையும், சேதுபதி மன்னர் வைரூரியால் வருந்தியபோது அது நீங்கத் தேவியை வேண்டி இராஜராஜேஸ்வரி பஞ்சரத்தினம் என்னும் நூலையும் பாடியவர். பல தனிப் பாடல்களையும் பாடியவர். 18 ஆம் நூற்றாண்டு.

சாந்தக்கவிராயர் = இவர் திருவரங்கர் பெயரை அமைத்து இரங்கேசா வெண்பா என்னும் நூலைச் செய்தவர். ஒவ்வொரு வெண்பாவிலும் ஒவ்வொரு குறட்பாவை அமைத்துக் குறட்பாவுக்கேற்ற உதாரணக் கதையும் அமையப்பாடியுள்ளார். இது சூடாமணி என்றும் கூறப்படும், காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு.

சாந்தலிங்க சுவாமிகள் = வீரசைவ மரபில் திருத்துறையூரில் பிறந்தவர். வேதாந்த சித்தாந்த மெய்யறிவு படைத்தவர். இவரது மாணவர் மகாராஜா துறவு என்னும் நூலைப்பாடிய குமாரதேவர் இவர்பாடிய நூற்கள் கொலை மறுத்தல், வைராக்கிய சதகம். அவிரோத உந்தியார் முதலியன. இவற்றிற்குத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் சிறந்த உரை எழுதியுள்ளார். வீராகமத்தையும் தமிழில் இயற்றியவர். காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

சாமிநாதபண்டிதர் = சிறந்த சைவ சித்தாந்தி. யாழ்ப்பாணவாசி. சிவஞான மாபாஷ்யம், தேவாரம் முதலான நூற்களை அச்சிட்டவர். சைவ நூற்சார சங்கிரகம் என்னும் நூலையும் இயற்றியவர். காலம் கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

சாமிநாதய்யர் = திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ் பயின்ற மாணவர். மறைந்து போகும் நிலையில் இருந்த சங்க நூற்கள் பலவற்றைப் பதிப்பித்தவர். பதிப்பாசிரியர்

பண்பில் தலை சிறந்தவர். எளிய இனிய உரை நடை எழுதும் ஆற்றல் படைத்தவர். தமது ஆசிரியர் திரு பிள்ளை அவர்களிடத்தில் அளவு கடந்த அன்பும் பக்தியும் உடையவர். அவர் பெயரைத் தம் வாயாலும் கூறுது பிள்ளை அவர்கள் என்றே கூறிவந்தவர். வித்துவான் நியாகராய செட்டியாரிடத்தும் அன்புடையவர். அவ்வன்புக்கு அறிகுறியாகத் தம் இல்லத்திற்குத் நியாகராய விலாஸ் என்ற பெயரையே அமைத்தவர். மீரூட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம், சங்க காலத்தமிழும் பிற்காலத்தமிழும், என் வாழ்கை வரலாறு, கண்டதும் கேட்டதும் முதலான உரைநடை நூற்களையும் எழுதியவர். காலம் கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

ஞ

ஞானப்பிரகாச சுவாமிகள் = சிறந்த இலக்கணப்புலவர். இவர் மதுரையிலிருந்த சாந்தலிங்க சுவமிகளிடம் ஞான தீட்சை பெற்றுத் துறவியானவர். திருப்போரூரில் தங்கி மடம் ஒன்றைத் தாபித்தவர். இவர் பாடிய நூற்கள் திருப்போரூர் சந்நிதி முறை. திருப்போரூர் முருகன் பிள்ளைத் தமிழ், உபதேசக் கட்டளை முதலியன. சாந்தலிங்க சுவாமிகள் எழுதிய வைராக்கிய தீபம், கொலை மறுத்தல்வைராக்கிய சதகம், முதலான நூல்களுக்கு உரைகண்டவர். திருப்போரூர் முருகன் கோயிலைக் கண்காணித்து வந்தவர். பல சித்துக்களிலும் வல்லவர். இவரது உரையால் தான் சம்பந்தர் பாடல்கள் திருக்கடைக்காப்பு என்றும், திருநாவுக்கரசர் பாடல்கள் தேவாரம் என்றும், சுந்தரர் பாடல்கள் திருப்பாட்டு என்றும் அறிய வருகின்றன. காலம் கி. பி. 18 ஆம் நூற்றாண்டு.

ஞானப்பிரகாசர் பிள்ளை = இவர் சிறந்த நாட்டுப் பற்றுடையவர். திருநெல்வேலியைச் சார்ந்தவர். அதன் பொருட்டுப் பல இன்னல் களுக்கு ஆளானவர். சிறையில்யிருந்து துன்புற்றவர். காப்பலெட்டிய தமிழர் என்ற சிறப்புப்பெற்றவர், இவர் இனனிலை விருத்தியுரை, அகமே புறம், மெய்யறிவு என்ற நூல்களைச்

செய்ததாகத் தெரிகிறது. இளம் பூரணம், திருக்குறள் மணக்குடவர் உரைகளைப் பதிப்பித்தவர். காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

சிவஞான முனிவர் = இவர் விக்ரமபுரத்துச் சைவவேளார் குலத்து ஆனந்தக் கூத்தர், மயிலம்மை என்பாரின் தவப் புதல்வர். இவரது திருப்பெயர் முக்களாலிங்கர் என்பது. இளமையிலேயே கல்வியில் சிறந்து விளங்கியவர். கவிபாடும் ஆற்றலும் பெற்றனர். இவர் திருவாவடுதுறையை அடைந்து பின் வேலப்ப தேசிகரால் ஞானஸ்னானம் செய்விக்கப்பட்டுச் சிவஞானயோகி என்ற பெயரைப் பெற்றவர். இவர் இலக்கணம் இலக்கியம், தருக்கம் முதலிய வற்றில் ஒப்பாரும் மிக்காருப் இன்றி விளங்கியவர். வடமொழியிலும் பேரறிவு பெற்றவர். இதன் பொருட்டே இவர் "வடநூற் கடலும் தென்நூற் கடலும் நிலை கண்டுணர்ந்த சிவஞான முனிவர்" என்று சிறப்பிக்கப் பட்டவர். இவர் எல்லாத் துறையிலும் நூல் இயற்றியுள்ளார். இவர் மாபாஷ்யம் செய்ய வல்லவர் என்பதைச் சிவஞானபோதத்திற்கு விரிவுரை எழுதியதாலும், பிரபந்தங்களைப் பாடவல்லவர் என்பதை அழுதாம்பிகை பிள்ளைத் தமிழாலும். புராணம் பாட வல்லவர் என்பதைக் காஞ்சிபுராணத்தாலும் கண்டன நூற்களை எழுதவல்லவர் என்பதைச் சிவசமயவாத மறுப்பு என்ற நூலாலும், பரந்த இலக்கண புலமைக்குத் தொல்காப்பியச் சூத்திர விருத்தி எழுதியதாலும் அறிந்து கொள்ளலாம், இவரைப் போன்று பரந்த பேரறிவுபடைத்த ஒரு புலவரைக் காண்டல் அரிது. இங்கு எடுத்துக் கூறப்பட்ட நூற்கள் சிலவே. மொழி பெயர்ப்பு அறிவைத் தருக்க சங்கிரகம் என்னும் நூலாலும் அறியலாம். காலம் 18 ஆம் நூற்றாண்டு.

சிவப்பிரகாச சுவாமிகள் = இவரைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்பர். காஞ்சிபுரத்தில் வாழ்ந்த குமாரசுவாமிப் பண்டாரம் என்பார் புதல்வர். வடமொழி தென்மொழி உணர்ந்த பெரும்

புலவர். வீர சைவ மரபினர். இவர் வெள்ளியம்பலத் தம்பிரான் இடம் இலக்கணம் கற்றவர். கற்பனைக் களஞ்சியம் என்றும் சிறப்பித்துப் பேசப்படுபவர். இவர் பல நூல்களை இயற்றியுள்ளார். அவைபிரபுலிங்கலீலை, நால்வர் நான்மணி மாலை, சோண சைலமாலை, வெங்கைக்கலம்பகம், வெங்கைக் கோவை, கிரோட்டக யமக அந்தாதி, சிந்தாந்த சிகாமணி, வேதாந்த சூடாமணி, பெரியநாயகி கலித்துறை தர்க்க பரிபாஷை, நன்னெறி, ஏசுமதநிராகரணம், திருக்கூவப் புராணம் திருக்காளத்தி புராணத்தில் இரண்டு சருக்கங்கள் முதலியன. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையில் படிக்காசு பெற்ற வரலாற்றை நால்வர் நான்மணிமாலையில் குறிப்பிடும் போது, "ஞானசம்பந்தர் பிராம்மணப் பிள்ளையாதலின் பிறர் கொடுக்க வாங்கத் தகும்; கொடுக்கும் குலமாகிய வேளாளர் குலத்தில் பிறந்த நீங்கள், வாங்கத் தகுமா?" என்று அப்பரை வினவும் விஞ்ஞ வேளாளர் மேம்பாட்டை உள்ளத்தில் வைத்து இவர் பாடியுள்ளது சிந்திக்கற்குரியது. காலம் 17 ஆம் நூற்றாண்டு.

சிவாக்கியர் = இவர் காயுமானவரால் குறிப்பிடப் பட்டபெருமை சான்றவர். இவரை ஒரு சித்தர் என்பர். இவர் பாடல்கள் சித்தர்கள் பாடிய பாடல்களைக் கோவைபடுத்தி வெளியிட்டுள்ள நூலில் காணலாம். நாடிப்பரீட்சை என்னும் நூலும் இவரால் செய்யப்பட்டது என்பர். இவர்தம் காலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு.

சிவாக்கிர யோகிகள் = இவர் சூரியனார் கோயில் ஆதினத்தலைவர். இவர் சிறந்த சைவ நூற் புலவர். சரபோசி மகாராசர் காலத்தவர். மணவாள முனிவருடன் வாதம் புரிந்து வென்றவர். இவர் பல நூல்களைச் செய்தவர். வடமொழியிலும் வல்லவர். இவர் இயற்றிய நூற்கள் சைவ சங்கியாசபத்ததி, வடமொழிச் சிவஞான போத சங்கிரக வியாக்கியானம், சைவ பரிபாஷை, சுருதி சூக்தி மாலை, தமிழ் உரை, சித்தாந்த தீபிகை, வேதாந்த

தீபிகை, சிவஞான சித்தி யார் உரை முதலியன கி.பி. 16 ஆம் நூற்றாண்டு.

ச

சித்தலைச் சாத்தனார் = இவர் கடைச் சங்க காலத்தவர். இவரது இயற்பெயர் சாத்தனார் என்பது. சித்தலை என்னும் ஊரினர் என்பதனால் சித்தலைச் சாத்தனார் எனப்பட்டார். பிறர் செய்யுளில் குற்றம் கண்டபோது தம் தலையில் எழுத்தாணி கொண்டு குத்திக்குத்திச் சிழ் ஒழுகும் தலையினையுடையராய் இருந்த காரணத்தால் சிழுத் தலைச் சாத்தனார் என்று கூறப்பட்டு நாளடைவில் சித்தலைச் சாத்தனார் எனப்பட்டார் என்றும் கூறுவர். மதுரையில் தான்யங்களை விற்று வந்த வணிகத் தொழிலாளர். அது காரணமாக மதுரைக் கூலவாணிகச் சித்தலைச் சாத்தனார் என்றும் கூறப்பட்டவர். இளங்கோ அடிகளாரின் நண்பர். பௌத்த மதத்தினர். இவர் செய்த நூலே மணிமேகலை என்பது. இதுவே அன்றி, அகத்தில் ஐந்தும், குறுந் தொகையில் இரண்டும், நற்றிணையில் மூன்றும், புறத்தில் ஒன்றும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும் ஆகப் பன்னிரண்டு பாடல்களும் இவரால் பாடப்பட்டுள்ளன.

சீனிவாசப் பிள்ளை = சிறந்த ஆராய்ச்சியாளர். வரலாற்றுப் புலமை மிக்கவர். தஞ்சாவூரில் வழக்கறிஞராக இருந்தவர். தமிழ் வரலாறு என்னும் நூலை எழுதியவர். இது ஆராய்ச்சியாளர் கட்குப் பெரிதும் பயன்பட வல்லது. 20 ஆம் நூற்றாண்டு.

சு

சுந்தரம் பிள்ளை = இவர் ஆலப்புழை என்னும் ஊரில் பெருமாள் பிள்ளை என்பாரின் புதல்வர். ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டமும் இராவ்பகதூர் என்ற சிறப்புப்பட்டமும் பெற்றவர். திருவனந்தபுறத்தில் தத்துவப் பேராசிரியராக இருந்தவர். இவர் மனோன்மணியம் என்னும் நாடக நூலை எழுதியவர் நூல் தொகை விளக்கம், ஞானசம்பந்தர் காலம் முதலியன இவரால் எழுதப்பட்டவை. மொழி நூல் ஆராய்ச்சியில் சிறந்தவர். கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

சுந்தரர் = இவர் சைவ சமயாசிரியர் நால்வருள் ஒருவர். இவர் பாடிய பாடல்கள் தேவாரத்தில் உள்ளன. அப் பாடல்களைத் திருப்பாடல்கள் என்றும் கூறுவர். திருநாவலூரில் ஆதி சைவ பிராமண மரபில் சடையனார் இசைஞானியார் என்பாருக்குத் தவப் புதல்வராய்ப் பிறந்தவர். இவரது திருமணத்தில் சிவபெருமானே வந்து, இவர் திருமணத்தை நடத்திக் கொள்ளாமல் படி தடுத்து ஆட்கொள்ளப் பெற்றவர். பின்னர்ப் பல தலங்களுக்கு யாத்திரை செய்தவர். அவ் யாத்திரையில் பரவையார், சங்கிலியார் என்ற மாதர்களைச் சிவனார் அருளால் மணந்தவர். பல அரிய பெரிய அற்புதங்களைச் சிவபெருமான் திருவருளால் நடத்திக் காட்டியவர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை முதலையுண்ட பாலனை அழைத்தல், செங்கல்லைப் பொன்கல்லாகச்செய்தல், ஆற்றில் இட்ட பொருளைக் குளத்தில் எடுத்தல் முதலியன. இவர் பாடிய தேவாரப் பதிகங்கள் 37000. ஆனால், இன்று உள்ளவை 100 பதிகங்களே. காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு. இவரது பாடல்கள் பலவகையான நயங்களைக் கொண்டு விளங்குவதால், "நயத்துக்குச் சுந்தரனார் என்று இவரைச் சிறப்பித்துப் பேசுவர். கல்வியின் பொருட்டு இவரது நட்பைச் சிவபெருமான் பெற்றார் என்றால், இவரது பெருமையைக் கூறவும் வேண்டுமா ? அதன் பொருட்டுத் தம்பிரான் தோழர் என்றும் பெயரையும் பெற்றவர்.

சுப்பிரமணிய பாரதியார் = இராமநாதபுர எட்டய புரத்தில் பிறந்தவர். தேசியக் கவிஞர். பின்னிகழ்வதை முன்னறிந்து பாடும் ஆற்றல் மிக்கவர். வடமொழி தென்மொழி அறிந்தவர். தமிழ்மொழியினிடத்து அளவுகடந்த பற்றுடையவர். இவரது பாடல்கள் உறங்குபவனையும் தட்டி எழுப்பி உணர்ச்சியூட்டவல்லன. செல்லம்மாத் திருவல்லிக்கேணியிலும் புதுவையிலும் வாழ்ந்தவர். பாஞ்சாலி சபதம், பாப்பாப் பாட்டு, கண்ணன் பாட்டு

முதலான பாடல்களைப் பாடியவர். பிற நாட்டுக் கலைகளைத் தமிழ் மொழியில் பெயர்த்து எழுத வேண்டுமென்ற பேரவரபடைத்தவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

சுப்பிரமணியப் பிள்ளை = திருநெல்வேலியினர். இவர் எம். எல். பிள்ளை என்று கூறப்பெறும் சிறப்புடையவர். சட்டம் பயின்று சட்டக் கல்லூரித் தலைவராக மிளிர்ந்தவர். தமிழ் நூல்களையும் சைவ சித்தாந்த நூற்களையும் நன்கு பயின்றவர். பல உரை நடை நூற்களை எழுதியவர். அவையாவும் ஆராய்ச்சி நூற்களாகவே இருக்கும். தமிழ் இலக்கிய வரலாறு. மெய்கண்ட நூற்கள் உரை நடை, மெய்கண்டாரும் சிவஞான போதமும். இந்துசமயங்களின் சுருக்க வரலாறு மொழி நூற் கொள்கையும் தமிழ் மொழி அமைப்பும், பழந் தமிழர் நாகரிகம், வான நூல் முதலியன இவர் எழுதிய நூற்கள். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

சுவாமிநாத தேசிகர் = சைவ வேளாள மரபினர் இவரது வடமொழி யாசிரியர் கனகசபாபதி சிவாசாரியார், தமிழ் ஆசிரியர் மயிலேறும் பெருமாள்பிள்ளை. திருவாவடுதுறை அம்பலவாண தேசிகரிடம் ஞானோபதேசம் பெற்று ஈசான தேசிகர் என்ற தீட்சா நாமம் பூண்டவர். இலக்கணக் கொத்துத் தசகாரியம் முதலான நூற்களை எழுதியவர். கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

சூ

சூரியநாராயண சாஸ்திரியார் = இவர் பரிதிமாற் கலைஞர் என்றும் கூறப்படுவர். தமிழ் மொழிப் பற்றில் தலை சிறந்தவர். மதுரை சபாபதி முதலியாரின் மாணவர். கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். உயர்ந்த நடையில் செய்யுளையும் உரை நடைகளையும் எழுதக்கூடியவர். இவர் பி. ஏ. பட்டம் பெற்றவர். வரலாற்றுப் புலமையுடையவர். தமிழ் வரலாறு. மதிவாணன், பாவலர் விருந்து, கலாவதி, நாடக இயல், ரூபாவதி முதலான நூற்களை எழுதியவர். இவர் வாழ்ந்த சில ஆண்டுகளில் தமிழ் மொழிக்குச் செய்த

தொண்டு மிக மிகப் பாராட்டற் குரியது. கி.பி. 19 ஆம் நூற்றாண்டு. இவர் "வட மொழிக்கு வாய் இல்லை என்று எழுதிய அத்துணைத் தமிழ்ப் பற்றுடையவர் என்றால் இவர் தமிழ் மொழியினிடத்துக் கொண்டிருந்த அன்பைக் கூறவும் வேண்டுமோ ?"

செ

செல்வகேசவராய முதலியார் = இவர் சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர் எம். ஏ. பட்டம் பெற்றவர். வேளாள மதத்தினர் கம்பன், திருவள்ளுவர், தமிழ், கண்ணகி முதலான உரை நடை நூல்களை எழுதியவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு. இவர் தமது திருக்குமாரர்களுக்கு நச்சினார்க்கினியன், பரி மேலழகர், இளம்பூரணன் என்றபெயரைச் சூட்டி மகிழ்ந்தவர்.

செல்வைச்சிவாக்குவர் - விண்டு பாகவத ஆசிரியர். இதனைப் பாகவதம் என்றும் கூறுவர். இவர் வேம்பத்தூர்வாசி. வைணவ பிராமணர். கி. பி. 16 ஆம் நூற்றாண்டு.

சே

சேக்கிழார் = அருள்மொழித் தேவர் என்ற பெயரும இவருக்கு உண்டு. ஆதலின் அருளமொழித் தேவர் என்ற இடத்துக் காண்க. சேக்கிழார் மரபு வேளாளர் மரபுகளில் ஒன்று. அம் மரபில் சிறந்து விளங்கினமை பற்றி இப்பெயரால் இவர் குறிப்பிடப் பட்டார். காலம் 12 ஆம் நூற்றாண்டு.

சேதிராயர் = சேதிநாட்டு மன்னர் மரபினர். திருவிசைப்பாப் பாடியவர்களுள் ஒருவர். கி.பி.11 ஆம் நூற்றாண்டு.

சேந்தனார் = ஒன்பதாம் திருமுறையில் உள்ள திருப்பல்லாண்டு என்னும் திருப்பாடல்களுக்கும், திருவிசைப்பாவில் உள்ள பாடல்கள் சிலவற்றிற்கும் ஆசிரியர். பட்டினத்தாரின் ஞானகுருவாகிய திருவெண்காட்டு அடிகளாரின் ஞானகுரு என்று கருதப்படுபவர். கருவூலத்தில் இருந்த பொருள்களைப் பட்டினத்தார் உத்தரவுப்படி சூறையிட்டவர். அதன் காரணமாக அவர் காலத்து மன்னனால் சிறை செய்யப்பட்டவர். பின்னர்ப் பட்டினத்

தடிகள் இறைவனே வேண்டச் அச் சிறையினின்றும் நீக்கப் பெற்றவர். பின்னர்ச் சிதம்பரத்தில் விறகுவிற்று வாழ்ந்தவர். இவரைத் திருவீழிமிழலையில் இருந்த வராகவும் கௌணிய கோத்திரத்தார் எனவும் கூறுவர். ஏறன் என்ற பெயரும் இவருக்கு உண்டு என்பர். கி.பி. 10 ஆம் நூற்றாண்டு.

சேரமான் கணைக்கால் இரும் பொறை = இவர் சேர மன்னர். சோழன் செங் கணானால் தோற்கடிக்கப் பட்டுச் சிறை புகுந்தவர். சிறந்த மானி. தம் மானத்தைக் காக்க உயிரைவிட்டவர். தாம் சிறைபட்டிருந்த சிறைச்சாலைச் சேவகனே நீர் வேண்ட, அவன் கொணரத்தாம் தம்செய்து பின்னர்க் கொணர்ந்த காரணத்தால் அந்நீரைப் பருகாது உயிர்விட்டவர். கடைச் சங்க காலத்தவர். இவரது பாடல் புறத்தில் ஒன்று உண்டு.

சேரமான் பெருமாள் = இவர் பொறையன் என்பானின் திருமகனாராகக் கொடுங் கோளூரில் பிறந்தனர். இவர் மாக்கோதையார் என்னும் பெயரும் உடையவர். இவர் சேரநாட்டைச் சார்ந்த ஊருக்கு மன்னராமையின் சேரமான் பெருமான் எனப்பட்டார். இவர் சுந்தரருடைய நண்பர். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவர் பாடிய நூற்கள் திருக்கைலாயஞானஉலா, பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை முதலியன. காலம் 9 ஆம் நூற்றாண்டு. இவர் தாம் அரசு நடத்துகையில் எல்லா உயிர்களின் பேச்சையும் அறிந்து அவற்றிற்கு நனமை செய்யவேண்டி, அவை கூறியவற்றை அறிந்து வந்த காரணத்தால், கழறிற்று அறிவார் என்ற பெயரையும் பெற்றவர்.

சேனுவரையர் = "ஆனப் புலமை சேனுவரையர்" என்று சிறப்பிக்கப் பட்டவர். தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்குச் சிறந்த உரை கண்டவர். வடமொழிப்புலமையும் உடையவர். பாண்டிய நாட்டு ஆற்றூரில் சேனைத் தலைவர் குடும்பத்தினர். கி.பி. 13 ஆம் நூற்றாண்டினர். இவர் அந்தணமரபினர் என்றும் கருதப்படுவர்.

சொக்கப்பநாவலர் = இவர் ஓர் உரையாசிரியர். தஞ்சை வாணன் கோவைக்கு உரை எழுதியவர். குன்றத்தூர் வாசி என்று இவரைக் கூறுவர். கி. பி. 18ஆம் நூற்றாண்டு.

சோ

சோமசுந்தர நாய்க்கர் = இவர் ஒரு சிறந்த சைவ சித்தாந்தி. வடமொழி தென்மொழிகளையும் சைவ சித்தாந்த சாஸ்திரங்களையும் திருமுறைகளையும் நன்கு பயின்றவர். சைவ சித்தாந்த சண்ட மாருதம் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். இவர் வைணவ சமயத்தைச் சார்ந்த குடும்பத்தினர். அதுபோது ரங்க சாமி என்பது பிள்ளைத் திருநாமம். இவர் ஏகாம்பர சிவயோகியாரால் சோம சுந்தரம் என்று அழைக்கப்பட்டவர். வாதம் செய்து தம் கொள்கைகளை நிலைநிறுத்துவதில் ஈடும் எடுப்பும் அற்றவர். தம் அறிவுத் திறனைப் பேச்சாலும் எழுத்தாலும் காட்டியவர். இவர் திருஞான சம்பந்தரை ஆதிமார்த்த ஞான குரியராகக் கொண்டவர். சென்னை, சூளையில் வாழ்ந்தவர். இவர் நூற்றுக்கு மேலும் நூல்களை எழுதியவர். அனைத்தும் சிவ பரத்துவம, நால்வர் பெருமை, சைவசமய ஏற்றம் முதலான பொருள்களைக் கொண்டு மிளிரும். இவர் எழுதிய நூற்களில் சில சிவாதிக்க இரத்தினவளி, சித்தாந்த ரத்தினகரம், சித்தாந்த ஞானபோதம், ஆசாரிய பிரபாவம், வேத சிவாகமப் பிரமாணியம், சிவநாமப் பஃறொடை வெண்பா முதலியன. இவரது தலை சிறந்த மாணவர் மறை மலையடிகளார். காலம் 19 ஆம் நூற்றாண்டு. இவர் சொற்பொழிவு ஆற்றும்போது, எவரும் மேலாடை அணிந்து கொண்டு கேட்டல் கூடாது. அப்படி மேலாடையுடன் கேட்பவரை எழுந்து போமாறு கூறும் அத்துணைக் கண்டிப்பு உடையவர்.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவர் = இவர் கடைச்சங்க காலத்தவர். சோழமரபினர். கவிபாடும் காவலர் ஆவார். கொடையும் வீரமும் உடையவர். இவர் சிறுகுடி கிழான் பண்ணன் என்

பாணப்பாடியபாடல்புறத்தில் ஒன்று உண்டு. இவரைப் பல சங்ககாலப் புலவர்கள் பாடியுள்ளார்.

சோழன் நலங்கிள்ளி = இவர் சோழ மன்னர் மரபினர். கவியும் பாடவல்லவர். கடைச் சங்க காலத்தவர். இவரைச் சேட் சென்னி என்றும் மாவளத்தான் என்றும் புட்பகை என்றும் தேர்வளர்கிள்ளி என்றும் கூறுவர். நெடுங்கிள்ளிக்குப் பகைவர். பாண்டியநாட்டு ஏழ் அரண்களை வென்று தம் புலிக்கொடியை நாட்டியவர். பின்னர் உறையூர் முதுகண்ணன் சாத்தனாரால் அறிவுறுத்தப்பட்டு அறம் செய்தலை மேற் கொண்டவர். இவர் பாடியனவாகப் புறத்தில் இரண்டு செய்யுட்கள் உள.

ஞ

ஞானப்பந்த தேசிகர் = இவர் சைவ வேளாளர். பூவில்லிபுத்தூரில் பிறந்தவர். இவர் பல நூல் களைப்பாடியவர். அவற்றுள் சிவபோக்சாரம், முத்தி நிச்சயம், திரிபதார்த்த தசகாரிய அகவல் குறிப்பிடத்தக்கவை. காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு.

ஞா

ஞானப்பிரகாச தேசிகர் = யாழ்ப்பாணத்தில் உள்ள திருநெல்வேலியில் பிறந்தவர். கல்ல இலக்கண இலக்கிய வடமொழிப் புலமையுடையவர். இவர் பெவட்கர ஆகமத்திற்கும் சிவஞானசித்தியார் சுபசாகத்துக்கும் உரை எழுதியவர். திருவண்ணுமலையில் சைவ மடத் தலைவராக இருந்தவர். சிதம்பரத்தில் இவர் ஒரு குளம் வெட்டுவித்தார். அதுவே ஞானப் பிரகாசர் குளம் என்பது. கி.பி. 17ஆம் நூற்றாண்டு.

த

தண்டி = இவர் தாராபுர போசராஜ மன்னன் அவைக்களப் புலவர். இவரை அம்பிகாபதியின் குமாரர் என்றும்கூறுவர். இவர் செய்தநூல் அலங்காரம் என்பது. இதனைத் தண்டி அலங்காரம் என்றும் கூறுவர் இவரது காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு.

தத்துவராய சுவாமிகள் = இவர் வேதியர். சோழ நாட்டு வீரை என்னும்

ஊரினர். இவர் சொரூபானந்தர் என்பாரிடம் மாணவர். இவர் பல நூல்களைப்பாடியுள்ளார். அவற்றுள் சில சுரக்கீதை, பிரமகீதை, பாடுதுறை, குறுந்திரட்டு, பெருந்திரட்டு அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, நெஞ்சுவிடுதூது. திருத்தாலாட்டு முதலியன. கி.பி. 16 ஆம் நூற்றாண்டு.

தா

தாமோதரம் பிள்ளை = இவர் பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றவர். யாழ்ப்பாணத்தார். ஏழாலை என்னும் ஊரில் பிறந்தவர். இவரது போதகாசிரியர் சுன்னாகம் முத்துக்குமாரக்கவிராயர். புதுக்கோட்டையில் நீதிபதியாக இருந்தவர். பழந்தமிழ் நூல்களை ஏடு தேடிப் பதித்த பெரியார். வீரசோழியம் இறையனார் அகப்பொருள் உரை, தொல்காப்பியப் பொருளதிகாரம், இலக்கண விளக்கம், சூளாமணி கலித்தொகை, தணிகைப் புராணம், தொல்காப்பிய சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை முதலான நூல்களைப் பதிப்பித்தவர். அப்பதிப்புக்களின் முகவுரைகளில் இவரது ஆராய்ச்சிப் புலமையினை நன்கு அறியலாம். இவர் சைவமகத்துவம் என்னும் நூலையும் இயற்றியவர். கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

தாயுமான சுவாமிகள் = இவர் சைவவேளாளர். வேதாரண்யம் கேடிலியப்பப் பிள்ளையின் திருமகனர். மௌனகுரு இவரது ஆசிரியர். திரிசிரபுர விசயரகுநாத சொக்கலிங்க நாயகரிடம் அரசாங்க அலுவலில் இருந்தவர். திருமணம் முடித்து இல்லறம் நடத்தி ஒரு குழந்தை பிறந்ததும், துறவிக்கோலம் பூண்டவர். இவரது நூல் தாயுமானவர் பாடல் எனப்படும். கி.பி. 18 ஆம் நூற்றாண்டு.

தி

திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார் = இவர் ஆதனடைய தேவ நாயனர், திருவியலூர் உய்யவந்ததேவ நாயனர் ஆகிய இருவரிடமும் ஞான அறிவு பெற்றவர். திருக்களிற்றுப்படியார் என்னும் நூலைப் பாடியவர். கி. பி. 12 ஆம் நூற்றாண்டு.

திருத்தக்க தேவர் = இவர் சமண சமயத்தவர்.

சிறந்த துறவி. சீவக சிந்தாமணி ஆசிரியர். கரி விருத்தம் என்பதும் இவரால் பாடப்பட்டது. கி.பி. 10 ஆம் நூற்றாண்டு.

திருநாவுக்கரசர் = இவரே அப்பர் எனப்படுபவர். இவரைப்பற்றி அப்பர் என்ற தலைப்பின் கீழ்ப் பார்க்க.

திருப்பாணாழ்வார் = வைஷ்ணவ சமயாசிரியர் பன்னிருவர்களில் ஒருவர். பாணர் குடியினர். உறையூரில் பிறந்தவர். லோகசாரங்கர் என்பார் திருமால் கட்டளைப்படி இவரைத் தம் முதுகில் தூக்கிச்சென்று அரங்கன் முன் விட்ட காரணத்தால் முனிவாகனர் என்றும் கூறப்படுபவர். இவர் பாடியது அமலநாதிப்பிரான் என்பது. இதனை நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் காண்க. கி. பி. 9 ஆம் நூற்றாண்டு.

திருமங்கை யாழ்வார் = இவர் சோழ நாட்டுத் திருவாலித்திருநகரியின் அருகுள்ள திருக்குறையலூரில் கள்ளர் மரபில் பிறந்தவர். இவரை நீலன் என்றும் கூறுவர். இவர் சோழ மன்னன் சேனாதிபதியாக இருந்து, வெற்றிகள் பல வற்றைக்காட்ட அதனால் அவன் திருமங்கை என்னும் ஊருக்கு மன்னன் ஆக்கினன். இவர் குமுதவல்லி என்பாளை மணந்து பின் பரம வைஷ்ணவ பாகவதர் ஆயினர். இவர் நாற்கவிகளும் பாடவல்லவர். இவர் பாடிய பாடல்கள் பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பன. இவற்றை நாலாயிரத் திவ்யபிரபந்தத்தில் காணலாம். இவர் புத்தரது பொன்னுருவத்தைத் கொணர்ந்து ஸ்ரீரங்கத்தில் மூன்றும் பிரகாரம் கட்டப் பயன்படுத்தியவர். கி.பி. 9 ஆம் நூற்றாண்டு.

திருமழிசையாழ்வார் = இவர் தொண்டை நாட்டில் திருமழிசை என்னும் ஊரில் பிறந்தவர். இவரது மாணவன் மணிகண்ணன். இவர் வடமொழியிலும் வல்லவர். இவர் தம்மைச் சூத்திரர் என்று கூறிய வேதியரைக் கும்பகோணத்தில் வென்றவர். வைணவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவர். இவர் சொல்படி காஞ்சியில்

உள்ள பெருமாள் கேட்டனர் என்ற காரணத்தால் அப்பெருமானைச்சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்றும் கூறுவர். இவர் பாடியவை. திருச்சந்தவிருத்தம், நான்முகன் திருவந்தாதி என்பன. இவை நாலாயிரத் திவ்யபிரபந்தத்தில் உள்ளன. காலம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு.

திருமாளிகைத் தேவர் = இவர் சைவத் திருமுறைகளில் உள்ள ஒன்பதாம் திருமுறைகளில் காணப்படும் திருவிசைப்பாக்களின் ஆசிரியருள் ஒருவர். திருவாவடுதுறையில் இருந்தவர். இவரைப் போகமுனிவர் மாணவர் என்பர். இவர் சிதம்பரம் சென்று ஓடாது தடைப்பட்ட தேரை ஓடச் செய்த சித்தர். இவரது கோயில் திருவாவடுதுறைத் திருமடத்தில் உள்ளது. கி.பி. 11 ஆம் நூற்றாண்டு.

திருமூலர் = அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். சித்தரும் சிவயோகியும் ஆவார். மூவன் என்னும் இடையன் திடீர் என்று இறக்க அவன் மேய்த்து வந்த ஆடுமாடுக்கள் வருந்தும் நிலைகண்டு, அவன் உடலில் புகுந்து ஆடுமாடுகளுக்கு இன்பம் வரச் செய்தவர். பின்னர் அப்படியே அம் மூவன் வடிவில் இருந்து ஆகமங்களின் சாரமான திருமந்திரங்களை எழுதியவர். அதுவே திருமூலர் திருமந்திரம் எனப்படும். திருவாவடுதுறையில் இவரது கோயில் உண்டு. கி.பி. 5 ஆம் நூற்றாண்டு.

திருவள்ளுவர் = இவர் ஆதிபகவன் என்பாரின் பிள்ளை என்பர். இவரை வள்ளுவர் குடியினர் எடுத்து வளர்த்தனர் என்பர். மதுரையில் பிறந்து மயிலையில் வாழ்ந்தனர் என்பர். மயிலாப்பூரில் இவருக்கு ஒரு கோயில் உண்டு. இவர் வாசுகி அம்மையாருடன் இல்லறம் நடத்தினர். இவரது மாணவர் ஏலேல சிங்கர் என்பவர். இவரைப்பற்றிய வரலாறுகள் பலவாகும். இவர் சைவர் என்பதற்கு அடையாளமாக இவரது கோயில் சைவர்களால் பூசிக்கப்பட்டு வருவதாலும், நாயனார் என்ற பெயராலும் அறியலாம் இவர் முதற் குறளில் ஆதிபகவன் என்று கூறியிருப்

பது அம்மை அப்பரது வணக்கமே ஆகும். இவர் எழுதிய நூலே திருக்குறள். காலம். கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.

திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் = இவர் கமலை ஞானப்பிரகாசரின் மாணவர். சிவஞானசித்தியார் பரபக்கத்திற்கும் சங்கற்ப நிராகரணத்திற்கும் உரை எழுதியவர். திருவொற்றியூர்ப் புராணமும் இவர் பாடிய நூல். காலம். கி.பி. 16 ஆம் நூற்றாண்டு.

தே

தேரையர் = இவர் அறுப்புச் சிகிச்சை செய்வதில் வல்லவர். ஒருவரது மண்டையின் கபாலத்தை கீக்கி அதில் தேரை இருந்ததைக் காட்டியவர். இக் காரணம்பற்றியே இவர் தேரையர் என்று அழைக்கப்பட்டவர். இவர் அகத்தியர் மாணவர் என்றும். தருமசெளமியர் மாணவர் என்றும் கூறப்படுவர். இவரால் பதார்த்த குணசிந்தாமணி நோயணுகா வழி நாடிக் கொத்து முதலான நூல்களைச் செய்தவர். காலம் திட்டமாகக் கூற இயலாது.

தேவராசபிள்ளை = இவர் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை மாணவர். தொண்டமண்டல ஊரினர். பின்னர் பெங்களூரில் வாழ்ந்தவர். இவர் குசேலோபாக்கியானம், பஞ்சாக்கர தேசிகர் பதிகம், தணிகாசல மாலை முதலான நூல்களைச் செய்தவர் கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

தொ

தொண்டரடிப் பொடியாழ்வார் = இவர் விப்பிரநாராணர் என்றும் கூறப்படுபவர். தேவதேவி என்றும் கோயில் தாசியின் வலையில் சிக்கியவர். திருமண்டங்குடி என்னும் இடத்தில் பிறந்தவர். திருநந்தவன கைங்கரியம் செய்து திருமாலுக்கு மாலைசாத்திவழிபட்டவர். திருமாலை, திருப்பள்ளி எழுச்சி என்னும் நூற்களைப் பாடியவர். கி. பி. 9 ஆம் நூற்றாண்டு.

தொல்காப்பியர் = தமிழ் மொழியின் மேன்மையினையும் நாகரிகப்பண்பையும் எடுத்துக்காட்டும் தொல்காப்பியம் என்னும் தலை சிறந்த நூலை எழு

திய மரபுரும் புலவர். இவரைத் திரணதூமாக்கினி என்றும் கூறுவர். அகத்தியர் மாணவர்களுள் ஒருவர் என்பர். "ஒல்காப் பெருமைத் தொல்காப்பியர்" என்று சிறப்பிக்கப்படும்பெருமை சான்றவர். இக்காலத்தில் தமிழர் தனிப்பெருமையுடன் திகழ்வதற்கு இவரது நூலாகிய தொல்காப்பியமே காரணமாகும். காலம். கி.பி. 4ஆம் நூற்றாண்டு.

தோ

தொல்லாமொழித் தேவர் = இவர் எழுதிய நூலே சூளாமணி என்பது. இவர் சைனர். இவரைக் கார் வெட்டி நகரத்தரசன் விசயன் என்பான் ஆதரித்தனன். கி. பி. 10 ஆம் நூற்றாண்டு.

நா

நக்கணையார் = கடைச் சங்க காலத்தவர். பெண்பாற் புலவர். வணிக மரபினர். இவ்வம்மையார் தந்தையார் பெருங்கோழி நாய்க்கன் என்பவர். போர்வைக்கோ பெருநற்கிள்ளி என்னும் மன்னனிடம் காதல் கொண்டு மணக்க விரும்பியவர். இவர் நற்றிணையில் இரண்டும் அகத்தில் ஒன்றும், புறத்தில் மூன்றும் பாடியுள்ள பாடல்கள் உண்டு.

நக்கீரர் = நல்ல மொழிகளைப் பேசிய காரணத்தால் நக்கீரர் எனப்பட்டார். இவரது தந்தையார் மதுரையில் கணக்காயர் (ஆசிரியர்) தொழில் மேற்கொண்டிருந்த காரணத்தால் இவர் மதுரைக் கணக்காயனூர் மகனூர் நக்கீரர் என்று கூறப்பட்டவர். தமிழ்ச் சங்கப் புலவர்களின் தலைவர். இறையனூர் அகப் பொருளுக்குச் சிறந்த உரை கண்டவர். வேளாப் பார்ப்பனர் என்னும் மரபினர். தமிழ் மொழியினை எவரேனும் இழிவாகக் கூறின் அவர்களை அழியும் வண்ணம் தமிழ்பாடும் ஆற்றல் மிக்கவர். அப்படியே கொண்டான் என்னும் குயவன் வடமொழி உயர்ந்தது என்று கூறக்கேட்டு அவன் சாவுமாறு பாடிப் பின்னர் பலர் வேண்டுகோளுக்கு இணங்கி அவன் உய்யுமாறும் பாடியுள்ளார். திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை என்னும் நூற்கூறும் இவரால்பாடப்பட்டவைகளே.

அடி-நூல், நக்கீரர் நாலடி நாராயணர் முதலான நூல்களைப் பாடினதாகவும் கூறுவர். சைவத் திருமுறைகளில் காணப்படும் கைலைபாதி காளத்திபாதி யந்தாதி, திருஞானசம்பந்தர் மும்மணிக்கோவை, பெரும் தேவபாணி, திருவெழுகூற்றிருக்கை. கோவைப் பிரகாசம், காரெட்டு, போற்றிக் கலிவெண்பா, திருக்கண்ணப்ப தேவர் திருமறம் முதலானவையும் இவர் பாடினவாகக் கூறப்படுகின்றன. சிவபெருமான் பாடிக்கொடுத்த பாடல் ஒன்றில் குற்றம் கூறியதால் குட்ட நோய் வரப்பெற்றுப் பின்னர் அவரைத் துதித்து அதனின்றும் நீங்கினர் என்பர். மேலே கூறிய தனி நூல்களே அன்றி, அகத்தில் 19, குறுந்தொகையில் 6, நற்றிணையில் 7, புறத்தில் 3, திருவள்ளுவமாலையில் 1 ஆகப் 38 பாடல்கள் உள.

நச்சினார்க்கினியர்- இவர் தலை சிறந்த உரையாசிரியர் "உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர்" எனறு சிறப்பித்துக் கூறப்படுபவர். பாரத்துவாச கோத்திரத்தினர். மதுரையில் பிறந்தவர். அந்தண மரபினர். சைவசமயத்தினர். தொல்காப்பியம் பத்துப்பாட்டு, கலித்தொகை, சிவகசிந்தாமணி என்னும் நூற்களுக்கு உரை எழுதியவர். கி.பி. 14 ஆம் நூற்றாண்டு.

நஞ்சீயர் = இவர் உரையாசிரியர். திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி என்னும் உரை எழுதியவர். வைணவ சமயத்தவர். திருப்பள்ளி எழுச்சிகளும் கண்ணிநுண் சிறுதாம்பு என்னும் பாக்களுக்கும் உரை எழுதியவர் கி.பி.13 ஆம் நூற்றாண்டு.

நமச்சிவாயதேசிகர்-இவர் திருவாவடுதுறை ஆதினத் தம்பிரான் ஆவர். வினாவெண்பா, இருபா இருபஃது, சிவஞானசித்தியார் சுபக்கம் ஆகிய நூற்களுக்கு உரை எழுதியவர். கி.பி. 15 ஆம் நூற்றாண்டு.

நமச்சிவாய முதலியார் = இவர் காவேரிப்பாக்கத்தவர். சைவ மரபினர். தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்தவர். இளைஞர் கட்கும் முதியவர்க்கும் பயன்படும் வண்ணம்

MADRAS PUBLIC LIBRARY

நூல் பல எழுதியவர். பெருஞ் செல்வம் திரட்டியவர். சென்னையில் செந்தோமில் சிறக்க வாழ்ந்தவர். உதார குணமுடையவர். தணிகைப் புராணம். இளம்பூரணம் சொல்லதிகாரம், முதலான நூற்கனைப் பதிப்பித்தவர். ஓர் அணு விளைக எனப் புலவர் வறுமை, கண்ணப்பர், வள்ளி, அரிச்சந்திரன், முதலான உரை நடை நூல்களை எழுதியவர். பிரிதிவி ராசன் என்னும் நாடக நூலையும் எழுதியவர். காலம் கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

நம்பியாண்டார் நம்பி = இவர் தமிழ்வேதவியாசர் எனக் கூறப்படுபவர். இவரே சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர். திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவருள் பெற்றவர். ஆதி சைவ பிராமண வகுப்பினர். இவர் பாடிய நூற்கள் திருத்தொண்டர் திருவந்தாதி, கோயில் திருப்பணியர் விருத்தம், திருச்சண்பை விருத்தம், திருக்கலம்பகம். திருவுய்க்காசர் ஏகாதசமாலை முதலியன. கி.பி. 10 ஆம் நூற்றாண்டு.

நம்மாழ்வார் = இவர் சடகோபர், மாறர் என்றும் கூறப்படுபவர். வைணவ சமய வேளாள மரபினர். திருநெல்வேலி ஆழ்வார் திருநகரியில் பிறந்தவர். ஆழ்வார்களில் தலைசிறந்தவர். புளியமரத்தடியில் அமர்ந்து யோகம் புரிந்து திருமால் திருவருள் பெற்றவர். திருமால் இவர் மீது பற்றுடையவர் என்பது கமபரை நோக்கி "நந்தம் சடகோபனைப் பாடினையோ?" என்று கேட்டதால் விளங்குகிறது. இவர் பாடிய பாடல்கள் வேதத்தின் சாரம் எனப்படும். இவரைப் போற்றியே மதுரை கவியாழ்வார் திருமாலின் திருவருள் பெற்றார். இவர் பாடிய பாடல்கள் திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி, திருவிருத்தம் என்பன.

நரசிங்கமுத்தையர் = இவர் உடல் விகாரம் உடையவர் போலும். இவரது தலையைக் கண்டால் நரியுரு பயப்படும் என்ற காரணத்தால் இப்பெயர் பெற்றார் என்று கருதப்படுகிறது. இவ் விகார சொரூபம் சோமான் கருவூர் எரிய ஒள்வாள்

கோப்பெருஞ்சேரல் இரும் பொறையைக் கண்ட போதுநீங்கிய தாம்.கடைச் சங்க காலத்தவர். குறுந் தொகையில் 2, புறத்தில் 2, திருவள்ளுவமாலையில் 1, ஆக 5 பாடல்கள் இவ ரால் பாடப்பட்டுள்ளன.

நல்லசாமிப்பிள்ளை = இவர் சிறந்த தமிழ் அறிவும் ஆங்கில அறிவும் பெற்ற வர். பி.ஏ. பி.எல். பட்டம் பெற்றவர். டிஸ்டிரிக்ட் முன்சிப்பாகப் பணி புரிந் தவர். பெரிய புராணம், சிவஞான சித்தியார் சிவ ஞானபோதம், சிவப்பிர காசம், உண்மை விளக் கம், சைவசமய நெறி, திரு வருட்பயன் முத லான நூற்கள் ஆங் கிலத்தில் மொழி பெயர்த் தவர். சித்தாந்த தீபிகை யின் பத்திராதிபர். கி.பி. 19ஆம் நூற்றாண்டு.

நல்லாப்பிள்ளை = இவர் பாரதம் பாடிய நல்லாப் பிள்ளை எனப்படுபவர். தொண்டைமண்டலத் தில் முத்தாலப்பேட்டை யில் கணக்கர் குடியில் பிறந்தவர். தெலுங்கு, கன்னடமும் அறிந்தவர் தமிழிலும் வட மொழியி லும் புலமை மிக்கவர். தெய்வயானை புராணமும் இவர் பாடியதாகக் கூறு வர். கி. பி. 18 ஆம் நூற் றாண்டு.

நா

நாராயணசாமி ஐயர் = இவர் திருத்துறைப் பூண்டிப் பின்னத்தூரில் பிரா மணக்குடியில் பிறந்தவர். வடமொழி தென் மொழியில் புலமைமிக்க வர். நற்றிணைக்கு அழ கான உரை எழுதியவர். இவர் பல நூல்களை எழுதி யிருப்பதாகத்தெரி கிறது. இடும்பாவன புரா ணம், சிவகீதை, மாணிக் கர் ஆற்றுப்படை, பழையதுவிடுதூது செருப்பு விடுதூது முதலி யன குறிக்கத்தக்கன. கிபி. 19 ஆம் நூற்றாண்டு.

நாராயணபாரதி = இவர் பிராமண வகுப்பினர். இவர் மணவாளநாராய ணன் என்னும் பிரபுவின் வேண்டுகோளால் ஒரு சதகம் பாடியுள்ளார். அது திருவேங்கட சதகம் எனப்படும். அதனைக் கோவிந்த சதகம் என் றும் கூறுவர். கி. பி. 18 ஆம் நூற்றாண்டு.

நாற்கவிராசநம்பி = இவர் தொண்டை நாட்டைச் சார்ந்த புளியங் குடியில் பிறந்தவர். சமணசமயத்

தவர். இவர் நாற்கவி பாடும் ஆற்றலும் படைத்தவர். இதனால் நாற்கவி ராசநம்பி என்றும் கூறப்படுபவர். இவர் எழுதிய நூலே நம்பி அகப்பொருள் என்பது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டு.

நி

நிரம்பவழகிய தேசிகர் = இவர் திருமறைக்காட்டில் சைவவேளாளர் குலத்தில் தோன்றியவர். கருணை ஞானப்பிரகாசரிடம்சிவதீட்சைபெற்றவர். மதுரையில் வாழ்ந்தவர். இவரது நண்பர் பரஞ்சோதி முனிவர். சேது புராணம், திருப்பரங்கிரி புராணம் முதலான நூற்களைப் பாடியவர். சிவஞான சித்தியார் சுபக்கத்திற்கும், திருவருட்பயனுக்கும் உரை எழுதியவர். கி.பி. 16 ஆம் நூற்றாண்டு.

ப

பகழிக்கூத்தர் = இவர் இராமநாதபுரத்தில் சன்னியாசி என்னும் கிராமத்தில் வைணவ சமயக் குடும்பத்தில் பிறந்தவர். இவருக்கு வயிற்று நோய் கண்டு, அதன் பொருட்டுத் தம் குலத்துக்குரிய தெய்வங் கட்குப் பிரார்த்தனை பலவும் செய்தும் தீராது துன்பப்பட்டவர். பின்னர்த் திருச்செந்தூர் முருகப்பெருமானைப்பாடித் தம் வயிற்று நோயினின்றும் நீங்கியவர். இவரது அன்புக்கு உகந்த செந்தில் வேலவன் தன் திருவாபரணங்களுள் ஒன்றையும் வழங்கியுள்ளான். இவர் பாடிய நூல் திருச்செந்தூர் முருகர் பிள்ளைத் தமிழ் என்பது. கி.பி. 18 ஆம் நூற்றாண்டு.

படிக்காசுப்புலவர் = தொண்டை நாட்டைச் சார்ந்த தென்கலந்தை என்னும் ஊரில் செங்குந்த மரபில் தோன்றியவர். இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகரின் மாணவர். மாவண்டூர்க் கந்தூரிமுதலியார் வேண்டுகோளைக் கிணங்கித் தொண்டை மண்டல சதகம் பாடியவர். இவரது பாடலின் சிறப்பைச் சொல்லுதற்பாலதோ? "தெரட்டாலும் கைமணக்கும், சொன்னாலும் வாய்மணக்கும் துய்ய சேற்றில் நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே பாட்டினது நலினம் தானே" என்றுபாடியுள்ளார். இவர் முஸ்லிம்

இனத்துப் பெருவள்ளலாகிய சீதக்காதி என்பாரையும் பாடிய பாவலர். இவர் பாடிய வேறு நூற்கள் வேளூர்க்கலம்பகம். உமைபாகர் பதிகம் முதலியன. கி.பி. 11 ஆம் நூற்றாண்டு. பல தனிப்பாடல்களையும் இவர் பாடியுள்ளார்.''

பட்டினத்தடிகள் = இவர் திருவெண்காடர் என்றும் கூறப்படுபவர். காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தவர். வாணிபம் செய்து பெரும்பொருள்ஈட்டியவர். இவரை யாட்கொள்ள இறைவரே சிலகாலம் பிள்ளையாக வந்து இருந்தார் என்றும் கூறுவர். அரசர் மெச்சச் சிறக்க வாழ்ந்தவர். பின்னர்த் துறவு உள்ளம் கொண்டு எல்லாச் செல்வச் சிறப்பினையும் உதறித்தள்ளி வெளியேறியவர். இவரது மாணவர் பத்திரகிரியார். இவர் திருவொற்றியூரில் சமாதி நிலையுற்றவர். அதனை இன்னும் அங்குக் காணலாம். இவர் பாடிய நூற்கள் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவாதி. திருவொற்றியூர் ஒருபஃது என்பன. இவை பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. இவர் காலம் 10 ஆம் நூற்றாண்டு. இவர் பெயர்கொண்ட மற்றொரு பட்டினத்தார் இருந்ததாகவும் தெரிகிறது. அவர் பாடிய நூலே பட்டினத்தார் பாடல் என்ற தொகுப்பு நூலாகும். இதில் உள்ள பாடல்கள பதினோராம் திருமுறையில் சேர்க்கப் பட்டில. அதில் குலாம் என்ற இந்துஸ்தான் வார்த்தை இருப்பதிலிருந்தே அது பிற்பட்ட நூல் என்பது தெரிகிறது. இதன்காலம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு என்னலாம்.

பண்டிதர் சவரிராய பிள்ளை = இவர் திருச்சிராபுரம் செயிண்ட் ஜோசப்கல்லூரியின் தமிழாசிரியர். இறைத்தவச் சமயத்தவர். டமிலியன் ஆண்டிக்யூரி என்னும் இதழுக்கு ஆசிரியர். தமிழர் ஆரியர் கலப்பு. சங்ககாலம் என்னும் கட்டுரைகளை எழுதியவர். நல்ல ஆராய்ச்சிப் புலமையுடையவர். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

பதுமனார் = இவர் ஓர் உரையாசிரியர். இவரே நாலடியார் என்னும் நூலைத்

தொகுத்தவர். அதற்கு உரையும் கண்டவர். காலடியாரை அறம பொருள் இனபம் என முப்பிரிவு படுத்தி அதிகார அடைவும் தந்தவர். காலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

பத்திரகிரியார் = இவர் அரச மரபினர். பட்டினத்தார் தொடர்பு ஏற்பட்டபின் அவரோடு துறவியாகவே தொடர்ந்தவர். அவருக்குத் திருத்தொண்டபுரிந்தவர். இவர் பாடிய நூல் பத்திரகிரியார் புலம்பல் எனப் படும். இவரோடு இருந்த நாய் இவரும் இவரது குருவாகிய பட்டினத்தாரும் உண்ட மிச்சிலை உட்கொண்டதனால் காசி ராசன் மகளாகப் பிறக்கும் பேறு பெற்றது. பின்னர்ச் சோதியில் கலந்து முத்தி பெற்றது. காலம் கி. பி. 10 ஆம் நூற்றாண்டு. வடமொழியுணர்ந்த பத்திரகிரியார் இவரினும் வேறு வார்.

பரஞ்சோதி முனிவர் = இவர் திருமறைக் காட்டுச் சைவ வேளாளர மரபினர். மதுரை மடத்தில் தமிழ் ராணராக இருந்தவர். வேதாரண்யத்தில் அபிடேகப் பொருள்களைத் தயாரிக்கும் திருத்தொண்டு புரிந்ததாகவும் கூறுவர். தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சமய சாத்திர நூல்களையும் நன்கு பயின்றவர். வடமொழியிலும் வல்லவர். இவர் எழுதிய நூற்கள் திருவிளையாடற் புராணம், வேதாரண்ய புராணம், மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலியன. கி. பி. 16 ஆம் நூற்றாண்டு.

பரணர் = இவர் கடைச் சங்க காலத்தவர். கபிலரின் தொடர்பு நண்பர். கடல் பிறகோட்டிய செல்கெழு குட்டுவனைப் பாடி உம்பற் காட்டுவரு வாயையும் அவன் மகனையும் பரிசிலாகப் பெற்றவர். இவர் சேரனையே அன்றிச் சோழனையும், பேகன் என்னும் வள்ளலையும் பாடியவர். இவர் பாடின பாடல்கள் அகத்தில் 34, குறுந் தொகையில் 10, புறத்தில் 13, திருவள்ளுவமாலையில் 1, உள்ளன. இவையே அன்றிப் பதினாராம் திருமுறையில் உள்ள பாடல்கள் பல இவர் பெயரால் அமைந்துள்ளன. இது ஆராய்ச்சிக்கு உரியது.

பரிதியார் = இவர் திருக்குறளுக்கு உரை எழுதியவர். சிறந்த சைவ சமய உணர்ச்சியினர். இவரைப் பருதியார் என்றும் கூறுவர். காலம் அறிதற்கு இல்லை.

பரிமேலழகர் = இவர் காஞ்சிபுரத்தில் உலகளந்த பெருமாள்கோயில் பட்டாசாரியர்களில் ஒருவர். திருக்குறளுக்குச் சிறந்த உரைகண்டவர். இவர் திருமுருகாற்றுப் படைக்கும் பரிபாடலுக்கும் உரை எழுதியதாகவும் கூறுவர். மணிவாசகர் பொருட்டுச் சொக்கலிங்கப் பெருமான் குதிரை மீது வந்த காரணத்தால், அவரைப் பரிமேலழகர் என்றுகூறுவது கொண்டு. அப் பெயரை இவர் பெற்றுத் திகழ்வதால் இவரைச் சைவ மரபினர் என்றும் கூறுவர். இவரது திருக்குறள் உரைச் சிறப்பை உமாபதி சிவாசாரியர் "தெள்ளுபரி மேலழகர் செய்த உரை" என்று பாடிப் பாராட்டியுள்ளார். காலம். கி. பி. 13 ஆம் நூற்றாண்டு.

பவணந்தி முனிவர் = இவர் தொண்டைநாட்டுச் சனகாபுரத்தில் சைன மரபில் உதித்தவர். தந்தையார் சன்மதி முனிவர் எனப்படுவார். சீயகங்கன் வேண்டுகோளுக்கு இணங்கி நன்னூல் என்னும் நூலைப் பாடியவர். இவர் பல கலைக்குரிசில் என்று சங்கரநமச்சிவாயப் புலவரால் பாராட்டப் பட்டவர். காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டு.

பனம்பாரனார் = இவர் பழங்காலப் புலவர். தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் பாடியவர். இவர் யாப்பிலக்கண நூலும் செய்ததாகத் தெரிகிறது. இதனை யாப்பருங்கல விருத்தியுரையால் உணரலாம். குறுந் தொகையிலும் ஒரு பாடல் உளது.

பாண்டித்துரைத் தேவர் = இவர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவர். தமிழ்நூல்கள் பல வெளியாதற்குத் துணை புரிந்தவர். இது போது உள்ள மதுரைத் தமிழ்ச்சங்கம் தோன்றுதற்கு முதற் காரணர் இவரே. இவர் சைவமஞ்சரி, துதி மஞ்சரி, பன்சொல் திரட்டு என்னும் தொகை நூல்களின் ஆசிரியர். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

ராண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் = கோவலனது கொலைக்குக் காரணர். ஆரியப்படைகளை வென்றவர். கல்வியில் பெரிதும் கருத்துடையவர். கடைச் சங்ககாலத்தவர். புறத்தில் இவரது பாடல் ஒன்று உண்டு.

பாரதம் பாடிய பெருந்தேவனார் = கடைச் சங்க காலத்தவர். இவர் பாடிய நூல் பாரதம். இது அன்றிச் சங்க நூற்களின் பகுதி பகுதியாகிய எட்டுத் தொகை நூற்களான அகம், புறம், ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை யாகியவற்றிற்கு முதற் கண்கடவுள் வாழ்த்துப் பாடி அமைத்தவர். இவர் பாரத வெண்பா பாடிய பெருந்தேவனரி னும் வேறானவர். திருவள் ளுவமாலையில் இவர் பாடிய பாடல் ஒன்று உண்டு.

பி

பிசிராந்தையார் = கடைச்சங்க காலத்தவர் கோப்பெருஞ் சோழனது உயிர் நண்பர். அவன் இறந்த பொது அவனோடு இறந்தவர். பாண்டிய நாட்டில் பிசிர் என்னும் ஊரில் பிறந்த வர். இவரது குமாரர் ஆதன் தந்தையார் என் பது ஆந்தையார் என மருவி ஊர்ப்பெயரையும் இணைத்துப் பிசிராந்தை யார் எனப்பட்டவர். இவ ரது பாடல்கள் அகத்தில் 1, நற்றிணையில் 1, புறத் தில் 4 உள்ளன.

பிள்ளைப் பெருமாள் அய்யங் கார் = இவர் வைணவப் பிராமணர். அழகிய மண வாள தாசர் என்றும் கூறப்படுவர். திருவரங்க நாதனிடம் மிகுந்த ஈடு பாடுடையவர். இவர் பாடல்களின் சுவையைக் கண்டே திருவேங்கடநாதன் தன் மீது பாடல்களைப் பாடும்படி கேட்க 'அரங் கனைப் பாடிய வாயால் குரங்கனைப்பாடேன்' என்று கூறியவர். பிள்ளைத் திரு வேங்கடநாதனுள்ளபிற்று வலி கண்டு, அது தீர அந்நாதன் மீது சிலநூல் களைப் பாடியவர். திருமலை நாயகன் காலத்தில் திகழ்ந்தவர். இவர் பாடிய நூற்களின் தொகுதியே அஷ்டப் பிரபந்தம் எனப் படும். அதில் அடங்கிய நூற்கள். அழகர் அந்தாதி, திருவரங்கக் கலம்பகம், திருவரங்கமாலை, திருரங் கத் தந்தாதி, திருவேங்

கடத் தந்தாதி, திருவேங்கட மாலை, திருவரங்கத் தூசல், 108 திருப்பதி அந்தாதி, என்பன. கி.பி. 17 ஆம் நூற்றாண்டு.

பு

புகழேந்திப்புலவர் = தொண்டை மண்டலத்தில் பொன் விளைந்த களத்தூரில் வேளாளர் மரபில் உதித்தவர். வைணவ சமயத்தினர். முதுசுரப் பாண்டியனிடம் சபை தானப்புலவராகத் திகழ்ந்தவர். மள்ளுவ நாட்டு மன்னரான சந்திரன் சுவர்க்கியினாலும் ஆதரிக்கப்பட்டவர். நளவெண்பா என்னும் நூலைப்பாடியவர். "வெண்பாவில் புகழேந்தி" என்று சிறப்பிக்கப்பட்டவர். இரத்தினச் சுருக்கம் என்னும் நூலையும் பாடியுள்ளார். ஒட்டக் கூத்தர் பேச்சைக் கேட்டுக் குலோத்துங்கன் இவரைச் சிறையில் இட்டனர் என்றும், அந்தத் தருணமங்கை மாராகளின் பொருட்டு அல்லி அரசாணி மாலை, பவளக் கொடிமாலை புலந்திரன் களவுமாலை முதலான நூற்களைப் பாடியதாகவும் கூறுவர். காலம் 13 ஆம் நூற்றாண்டு. பல தனிப் பாடல்கள் இவர் பாடினவாகக் கருதப்படுகின்றன.

புத்தமித்திரன் = இவர்செய்த நூலே வீர சோழியம் என்பது. இது வீர சோழன் பெயரால் இயற்றப்பட்ட இலக்கண நூல். இவர் தஞ்சாவூர் மாவட்டமிழலைக் கூற்றத்தைச் சார்ந்த பொன்பற்றி என்னும் ஊரினர். கி.பி. 11 ஆம் நூற்றாண்டு.

பூ

பூதந்தாழ்வார் = இவர் முதல் ஆழ்வார்கள் மூவருள் ஒருவர். மாவலிபுரம் என்னும் திருக்கடல் மல்லை என்னும் ஊரில் குருக்கத்திமரத்தின் கீழ்ப் பிறந்தவர். இரண்டாம் திருவந்தாதி என்னும் நூலைப் பாடியவர். அது நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் இயற்பா என்ற தலைப்பின் கீழ் உளளது. காலம் 8 ஆம் நூற்றாண்டு.

பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப் பண்டு = இவர் பூதப்பாண்டியன் மனைவியார். அவன் இறந்ததும் உடன்கட்டை ஏறி உயிர் விட்டவர். கடைச் சங்ககாலத்தவர். இவரது

பாடலில் விதவைகள் எப்படித் தம் வாழ்க்கையை நடத்தவேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது. இவர் பாடல் ஒன்று புறத்தில் உளது.

பூரணலிங்கம் பிள்ளை = இவர் திருநெல்வேலி முங்நீர்ப் பள்ளம் என்னும்ஊரினர். பி.ஏ.எல்.டி. பட்டங்களைப் பெற்றவர். திருச்சிராப்பள்ளியில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தவர். தமிழ் இந்தியா, தமிழ் இலக்கிய வரலாறு மாணிக்கவாசகரின் வாழ்க்கையும் உபதேசங்களும் என்னும் நூற்களின் ஆசிரியர். திருக்குறளைப் பற்றியும் ஆய்ந்து நூல் எழுதியவர். இராவணனைப் பற்றியும் ஆய்வு நூல் வரைந்தவர். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

பெ

பெரியசாமிப் பிள்ளை = இவர் கவிஞர், சிறந்த உரையாசிரியர். இவரது உரையில் வடமொழிக் கலப்பு மிகுதியும் உண்டு. ஆதலின் அதனை மணிப்பிரவாள நடை என்று கூறுவர். இவர் நம்பிள்ளை என்பாரின் மாணவர். இவர் 24,000 படி கத்திய உரை, திவ்யபிரபந்த உரை, அமலனாதிப் பிரான் வியாக்கியானம் முதலானவற்றை எழுதியவர். கி.பி. 15 ஆம் நூற்றாண்டு.

பெரியாழ்வார் = இவர் பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் வடமலையப், பனைத்திருத் துளசி மாலை கட்டி வழிபட்ட சிறந்த வைஷ்ணவ பிராமணர். பன்னிரண்டு ஆழ்வார்களில் இவர் ஒருவர். வில்லிபுத்தூர் ஆழ்வார் என்ற திருப்பெயரும் உடையவர். ஸ்ரீ ஆண்டாள் அம்மையாரை வளர்ப்புப் பெண்ணாகப் பெற்றவர். மதுரை வல்லப தேவ மன்னன் காலத்தவர் அவன் முன்னிலையில் வைணவ மதத்தின் ஏற்றத்தைக் கூறிப் பொற்கிழியினைப் பெற்றவர். இவர் பாடிய பாடல்கள் பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு என்பன. கி.பி. 9 ஆம் நூற்றாண்டு.

பெருந்தலைச்சாத்தனார் = இவர் கடைச் சங்க காலத்தவர். குமணனைப் பாடிப் பரிசில் பெற்றவர். அவன் தலையைக் காத்தமை

யால் இப்பெயர் பெற்றவர். குமணன் தன் தலையை வெட்டித் தம்பி கையில் கொடுத்துப் பொருள் பெற்றுச் செல்லுமாறு கத்தியைக் கொடுக்க அக் கத்தியைப் பெற்று இளங்குமணனை கண்டு அறுவரை கூறி அண்ணனேறு அன்பு கொள்ளசெய்தவர். ஆலூர் மூலங்கிழார்மகனார். இவர் அகத்தில் 2. நற்றிணையில் 1, புறத்தில் 6, பாடல் களைப் பாடியுள்ளார்.

பெரும்பற்றபுலியூர் நம்பி = இவர் வேம்பத்தூரார் என்றும் கூறப்படுபவர். இவர் மதுரைச் சொக்கநாதர் திருவிளையாடல் கதைக் குறிக்கும் நூல் ஒன்று பாடியுள்ளார். அதுவே பழைய திருவிளையாடல் என்பது. இவர் பாண்டியநாட்டு, வேம்பத்தூர் கொளையிய மரபுடை அந்தணர். இவரைத் தில்லை நம்பி என்றும் கூறுவர். இவரை செல்வி நகினார் என்றும் கூறுவர். கி. பி. 12 ஆம் நூற்றாண்டு.

பே

பேயனார் = இவர் சென்னை மயிலாப்பூரில் ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்தில், செவ்வல்லி மலரில் தோன்றியதாகக் கூறுவர். இவர் திருமாலின அன்பில் ஈடுபட்டு, அழுதலும், அலறுதலும், சிரித்தலும் செய்து கொண்டிருந்ததால் பேயர் போலும் என்று ஒரு சிலர் கூறி வந்தது கொண்டு, அப் பெயரே இவருக்கு நிலைத்து விட்டது என்பர். ஆழ்வார் பன்னிருவருள் ஒருவர். நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் உள்ள இயற்பாவின் மூன்றும் திருவந்தாதி இவரால் பாடப்பட்டது. கி.பி. 8 ஆம் நூற்றாண்டு.

பேராசிரியர் = இவர் சிறந்த உரையாசிரியர். சைவ சமயத்தவர். தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கும் திருக்கோவையார்க்கும் உரை கண்டவர். குறுந்தொகையில் பல பாடல்களுக்கும் உரை எழுதினர் என்பர். இவரை மதுரை ஆசிரியர் என்றும் கூறுவர். கி. பி. 12 ஆம் நூற்றாண்டு.

பொ

பொய்கையார் = கடைச்சங்க காலத்தவர். இவர் சேரன்

கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கண்ணனால் சிறைப்பட்ட போது அவனை மீட்கக் களவழி நாற்பது என்னும் நூலைப் பாடியவர். நற்றிணையில் 1 புறத்தில் 1. இருபாடல்கள் உண்டு. இவர் இன்னிலை என்னும் நூலும் செய்ததாகக் கூறுவர். அது எட்டாம் நூற்றாண்டு. என்பது ஒருசிலரது கருத்து. இந்நூலை எழுதியவர் பொய்கையாழ்வாராக இருக்கலாம் என்ற கருத்தும் உண்டு.

பொய்கை யாழ்வார் = வைணவ சமயாசிரியர் பன்னிருவர்களுள் ஒருவர். முதல் ஆழ்வார்கள் மூவர் எனப்படுவோருள் ஒருவர். காஞ்சிபுரத்தில் பிறந்தவர். திருவெஃகா என்னும் வைணவத் திருத்தலத்தின் பொய்கையில் இவர் தோன்றினமைப் பற்றிப் பொய்கையார் எனப்பட்டவர். இயற்பாவைச் சார்ந்த முதல் திருவந்தாதி இவரால் பாடப்பட்டது. கி.பி. 8 ஆம் நூற்றாண்டு.

பொய்யாமொழிப் புலவர் = சோழநாட்டுத் துறையூரில் பிறந்தவர். தஞ்சை வாணன் மீது கோவை பாடி 400 பொன் தேங்காய்களைப் பெற்றவர். பல தனிப்பாடல்களைப் பாடியவர். இவர் சிவபெருமானிடத்தில் பேரன்புடையவர். இவர் திருவாயால் ஒரு பாடலைப்பெற விரும்பிய முருகப்பெருமான் இவரைப்பாடும்படி வேண்டிய போது, 'கோழியைப் பாடிய வாயால் அதன் குஞ்சைப் பாடேன்" என்று கூறிய அத்துணை மனவுரம் படைத்தவர். என்றும் தமக்குப் புலவர் என்ற பட்டம் தகாது என்பதை, "அறம்உரைத்தானும் புலவன், முப்பாலின் திறமுரைத்தானும் புலவன், தரணி பொறுக்குமோ யான புலவன் என்றக்கால்" என்று கூறிய அத்துணை அடக்கமும் உடையவர். கி.பி. 13 ஆம் நூற்றாண்டு.

போ

போப்பையர் = இவர் மேனாட்டு அறிஞர். நம் நாட்டிற்கு வந்து தமிழ் மொழி பயின்று தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டு புரிந்தவர். "தமிழர்கள் ஒழுக்கத்தில் தலை சிறந்தவர்கள். இப்படிக்

சிறந்தவர்கள் என்பதை அவர்களிடம் உள்ள பல ஒழுக்க நூல்களால் உணரலாம்'' என்ற உத்தமர். திருக்குறள், திருவாசகம் நாலடியார் முதலானவற்றை ஆங்கிலத்தில்மொழி பெயர்த்து உரை கண்டவர். இவரையே டாக்டர். ஜ. யு. போப் என்பர். பாதிரியார் பணியினைமேற் கொண்டவர். கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

ம

மணவாளமுனிவர் = இவர் பெரிய சியர் என்ற பெருமை பெற்றவர். தென்கலை வைணவர்கட்டுத் தலைவர். 'மணவாளமாமுனியே இன்னும் ஒரு நூற்றாண்டிரும்' என்று வைணவர்கள் வாழ்த்தும் சிறப்புப்பெற்றவர். இவர் பாண்டிய நாட்டுச்சிங்கிலிகிடாரம் என்னும் ஊரில் பிறந்தவர். முன்னர் அரசாங்க அலுவலில் அமர்ந்துபின்னர்த்துறவு நெறியை மேற்கொண்டவர். இவர் திருமந்திரத்திற்கு வியாக்கியானமும், திருவாய்மொழி நூற்றந்தாதியும், ஸ்ரீவசனபூஷண வியாக்கியானமும், பெரியாழ்வார் திருமொழி வியாக்யானமும் முதலானவற்றையும் செய்துள்ளார். கி.பி. 15 ஆம் நூற்றாண்டு.

மண்டலபுருடர் = தொண்டை மண்டலம் வீரை என்னும் ஊரிற்பிறந்தவர், சைனசமயத்தவர். இவரே சூடாமணி நிகண்டு என்னும் நூலை இயற்றியவர். ஸ்ரீபுராணம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார், திருஷ்ணதேவராயர் காலத்தவர். சூடாமணி உள்ளமுடையான் என்னும் நூல் செய்ததாகவும் கூறப்படுகிறது. கி.பி. 16 ஆம் நூற்றாண்டு.

மதிவாணனார் = இவர் மன்னர் மரபினர். கடைச்சங்க காலத்தவர். நூல் இயற்றும் வன்மையும் படைத்தவர். இவர் செய்தநூல் மதிவாணனார் நாடகத் தமிழ் என்பது. இதனைக் கூத்த நூல் என்றும் கூறுவர்,

மதுரகவியாழ்வார் = வைணவ ஆழ்வார் பன்னிருவருள் ஒருவர். நம்மாழ்வாரையே போற்றி முத்திபெற்றவர். பாண்டியநாட்டில்திருக்கோளூர் என்னும் ஊரில் பிறந்தவர். மதுரமாகக் கவி பாடவல்லவர். அந்தண

மரபினர். கி. பி. 9 ஆம் நூற்றாண்டு.

மதுரைக்கணக்காயனார் = இவர் மதுரைவாசி. வேளாப் பார்ப்பனர் குடியினர். ஆசிரியர்தொழிலே மேற்கொண்டவர். நக்கீரரைத் திருமுகனாராகப் பெறும்பேறு பெற்றவர். அகத்தில் 3, நற்றிணையில் 1, புறத்தில் 1, ஆக 5 பாடல்கள் உள. கடைச்சங்க காலத்தவர்.

மத்தனார் சாயபு = இவர் முஸ்லீம் இனத்தவர். தமிழ்ப்பயின்று பாடும் ஆற்றல் படைத்தவர். திருச்சிராப்பள்ளியில் அத்தர் வாணிபம் செய்து வந்தவர். வாலே வழி பாட்டினர். இதன் காரணமாகச் சித்தர் என்றும் கருதப்பட்டவர். குணங்குடி மஸ்தான் சாயபு என்றும் இவரைக் கூறுவர். இவரது பாடல்கள் தாயுமானவர் பாடல் போன்று காணப்படும். இவர் அகத்திசர் சதகம், நக்கீசர் சதகம்' கிறிஸ்துமத கண்டனம்வச்சிரதண்டம் முதலான நூற்களே இயற்றியவர். கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

மயிலேறும் பெருமாள் பிள்ளை = இவர் திருநெல்வேலியில் வேளாளர் மரபில் பிறந்தவர். இவர் இலக்கொணக்கொத்து ஈசான தேசிகர்க்கு ஆசிரியர். கல்லாடம் 37 பாடல்களுக்கு உரைகண்டவர். தொல்காப்பியம் குறுமுதலான வற்றிற்கும் உரை எழுதி இருப்பதாகக் கூறுவர். கி.பி. 17 ஆம் நூற்றாண்டு.

மயிலைநாதர் = இவர் ஓர் உரையாசிரியர். சைன சமயத்தவர். நன்னூல் அக்கு உரை எழுதியவர். கி. பி. 13 ஆம் நூற்றாண்டு.

மருத்துவன் தாமோதரனார் = இவர் வைத்தியமும் நன்கு தெரிந்தவர். உறையூரில் பிறந்தவர். வைணவ நெறியினர். கடைச்சங்க காலத்தவர். கூல வாணிகச் சித்தலைச் சாத்தனார்க்குத் தலையில் சிழ்வடிந்த காரணத்தையும், அது தீர்ந்தகாரணத்தையும் கூறியவர் இவரே ஆவார். இவர் பாடினவாகத் திருவள்ளுவமாலையில் 1, அகத்தில் 2, புறத்தில் 3 பாடல்கள் உள.

மறைஞானசம்பந்தர் = இவர் திருக்களர் சேரியில் வேளாண்மரபில் உதித்த

பெரியார். சந்தானாசாரியர் நால்வருள் ஒருவர். அருணந்திசிவாசாரியர் மாணவர். உமாபதி சிவாசாரியரின் ஆசிரியர். வேதாகமங்களில் வல்லவர் கி.பி. 13 ஆம் நூற்றாண்டினர். இவர் சிவதருமோத்தரம் என்னும் வடமொழி நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவர் என்றும் கூறுவர். இவரே அன்றி மற்றொரு மறைஞான சம்பந்தர் இருந்துளளார். இவர் சிதம்பரத்தில் வாழ்ந்த பெரியார். துறவொழுக்கம் பூண்டவர். சைவ வேளாளராவினர். வடமொழி தென் மொழிகளை நன்கு பயின்றவர். காமிலாலய புராணம், சைவ சாயகேறி, பதிபசுப்பனுவல், பாசுபதவிளக்கம் முதலானவை. இவரது நூற்கள். காலம் 16 ஆம் நூற்றாண்டு.

மறைமலையடிகள் = இவரே நாகை வேதாசலம்பிள்ளை என்பவர். சுவாமி வேதாசலம் என்றும் இவரை குறிப்பிடுவர். இவர் வடமொழி, தென் மொழி, ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் ஈடும்எடுப்பும் அற்றவர். சைவ சித்தாந்த துண் பொருள்களைத் தெற்றத் தெளிய உணர்ந்தவர். ஆராய்ச்சித்துறையில் தலைசிறந்தவர். மறுப்புரை எழுதுதலில் மாபெரும் புலவர். இவர் உரைநடை எழுதுவதிலும், உரை வரைவதிலும், செய்யுள் இயற்றுவதிலும் தலை சிறந்தவர். இவர் பேச்சும், எழுதும் நடையும் தமிழ்ச் சுவை மிக்கனவாக விளங்கும். சைவக் குடும்பத்தில் நாகைபட்டினத்தில் பிறந்தவர். பின்னர்ச் சென்னை, பல்லாவரத்தில் சிறக்க வாழ்ந்தவர். இவர் நாகை நாராயணசாமிப் பிள்ளையிடம் இயற்றமிழ் அறிவையும், சூளை, சோமசுந்தர நாயகரிடம் சிந்தாந்த நூற் புலமையும் பெற்றவர். இவர் எழுதியுள்ள நூற்களில் உள்ள முகவுரையில் இவரது பன்மொழிப் புலமை புலப்படும். இவர் எழுதியுள்ள நூற்களுள் மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி என்னும் மாபெரும்நூல் ஒவ்வொருவரும் படித்தல் சாலச் சிறந்தது. தமிழ் நாட்டில் துலங்கிய இலக்கண இலக்கிய சைவ ஆசிரியர்கள் காலம் அனைத்தையும் இங்

நூலில் காணலாம். இவர் எழுதிய நூற்களுள் சில முல்லைப் பாட்டாராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, அறிவுரைக் கொத்து, சிந் தனைக் கட்டுரைகள். சமுந் தலை நாடக ஆராய்ச்சி, கோகிலாம்பாள் கடிதங் கள், பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும், நாக நாட்டரசி, தமிழர் நாகரி கம், திருவாசக விரிவுரை, மக்கள் நூறாண்டு வாழ் வது எப்படி? சிவஞான போத ஆராய்ச்சி, மரணத் தின் பின் மனிதர்நிலை, வேளாளர் நாகரிகம். தமிழர் சமயம், ஓங்கார உண்மை. திருவொற்றி யூர் முருகர் மும்மணிக் கோவை, சோமசுந்தரக் கான்சி ஆக்கம் பஞ் சாட்சர ரகசியம், சிறு வர்க்கான செந்தமிழ். இந்தி பொது மொழியா? சாதிச் சண்டையும் போ லிச்சைவமும், பழந்தமிழ்க் கொள்கையே சைவ சம யம், தென்புலத்தார்யார்? முதலியன. கி.பி. 20 ஆம் நூற்றாண்டினர். நாட்டுப் பற்றும் தேசத் தலைவர் களைப் பாராட்டும் பண்பும் உடையவர். இதனை இவர் திலகர் இறந்தது குறித்துக் கையறு நிலை ஒன்றைப் பாடி இருப்ப தாலும் நன்கு உணர லாம்.

மாவைகவிர் கடுந்தார் = இவர் மெய்கண்டாரின் மாணவர். திருவதிகை யில்வாழ்ந்தவர். உண்மை விளக்கம் என்னும் சித் தாந்த நூலின் ஆசிரியர் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு.

மி

மாங்குடி மருதனார் = இவர் மாங்குடி எனனும் ஊரி னர். மருதனார் என்ற இயற் பெயருடையவர். இவர் தலையாலங்காலத்து நெடுஞ்செழியன்மீது மது ரைக் காஞ்சி என்னும் நூலைப்பாடியவர். கடைச் சங்க காலத்தவர். நிலை யாமையை அழகாக எடுத் துக காட்டும் ஆற்றல் படைத்தவர். திருவள் ளுவமாலையில் ஒருபாடலை இவர் பாடியுள்ளார்.

மாணிக்க நாயகர் = இவர் ஒரு தலைசிறந்த ஆராய்ச்சி யாளர். ஆங்கிலமும் ஆய்ந்த எழுத்துத் தமிழ் மொழி யில் இருப்பதால் எத்த கைய பிற நாட்டு எழுத் துக்களையும் உச்சரித் தற்குப் பயன்படுத்தலாம் என்று கண்டறிந்து கூறியவர். அரசாங்க அலு

வலை மேற்கொண்டவர். இவர் அருளுரானம் தமிழ் மறை விளக்கம், தமிழ் அலகைத் தொடர் முதலான நூற்களை எழுதியவர். கி. பி. 19 ஆம் நூற்றாண்டினர்.

மாணிக்கவாசகர் = இவர் சைவசமயாசிரியர் நால்வருள் ஒருவர். மூவர் முதலிகளான அப்பர். சமமந்தர் சுந்தரருக்கு முற்பட்டவர். இதனை இவர் பாடியுள்ள திருவாசகத்தில் விநாயகரைப்பற்றி எதுவிதக் குறிப்பும் கூறாமைகொண்டும், பல்லவர்களைப் பற்றியும் குறிப்பிடாமை கொண்டும் கண்ணப்பர் சண்டேசுரர் ஆகியபழைய அடியார்களைமட்டும் குறிப்பிட்டிருப்பதிலிருந்தும் அறியலாம். மற்றும் பல காரணங்கள் உண்டு. கி. பி. 3 ஆம் நூற்றாண்டினர். திருவாதவூரில் ஆமாத்திய பிராமணர் வகுப்பில் சம்புபாதாசிரியரின் புதல்வர். மதுரை அரிமார்த்தன பாண்டியனிடம் தலைமை அமைச்சராக இருந்தவர். திருப்பெருந்துறையில் ஆலயம் கட்டியவர். அத் தலத்தின் குருந்த மரத்தடியில் இறைவனால் ஞானோபதேசம் பெற்றவர். தில்லையில் முத்தி பெற்றவர். ஊமைப் பெண்ணைப் பேச வைத்தவர். இவர் பெருட்டு இறைவர் குதிரைச் சேவகனாக வந்தார். நரிகளைக் குதிரைகளாக்கினர். வையையில் நீர் பெருகச் செய்தார். மண்சுமந்து பிரம்படியும் பட்டார். இவர் பாடிய நூற்கள் திருவாசகம், திருக்கோவையார் என்பன.

மாமூலனார் = இவர் கி. மு. 3 ஆம் நூற்றாண்டினர். சிறந்த யோகியார். இவர் மோரியர் படை எடுப்பைப்பற்றியும் நந்தர்கள் தம்செல்வத்தைக் கங்கையாற்றில் மறைத்து வைத்தனர் என்பதைப்பற்றியும் அகத்தில் பாடியுள்ள. இக் குறிப்புச் சரித்திர ஆராயச்சிக்கு மிகவும் உதவவல்லது.

மாறன்பொறையனார் -கடைச் சங்க காலத்தவர். ஐங்திணை ஐப்பதின் ஆசிரியர்.

மாரேக்கத்து முள்ளிநாட்டு நல்லூர் கவிதியார் மகனார் புல்லங்காடனார் = இவர் கடைச் சங்க காலத்தவர் கைந்நிலை என்னும் நூலின் ஆசிரியர்.

பி

திருட்சிசுந்தரம் பிள்ளை = இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்று கூறப்படுபவர். சைவ மரபினர். இவரது பெயரைக் குறிப்பிடாமல் பிள்ளையவர்கள் என்றே யாவரும் குறிப்பிட்டுவந்த பெருமை சான்றவர். இவர் இலட்சத்திற்கு மேல் கவிகளைப் பாடியவர். இவர் பாடியுள்ள சில புராணங்களுமே பிரபந்தங்களும் பலப்பல வாகும். திருச்சிராப்பள்ளியிலிருந்து திருவாவடுதுறை ஆதினத்தில் புலவராகத் திகழ்ந்தவர். இவரும் ஆறுமுக நாவலரும் ஒருகாலத்தவர். இவரிடம் கல்வி பயின்று பெருமை பெற்றவர் பலராவார். தியாகராய செட்டியார், டாக்டர் சுவாமிநாதய்யர், மயூரம் வேதநாயகம் பிள்ளை, வல்லூர்த் தேவராசப் பிள்ளை முதலியோர்கள் இவரது மாணாவர்களாவர். இவர் இயற்றிய நூற்களுள் சில சேக்கிழார் பிள்ளைத் தமிழ், வாட்போக்கிக் கலம்பகம், திருத்தில்லை யமக அந்தாதி, தனிப்பூர்ப் புராணம் காரைக்காலம்மை, திருவாரூர்த் தியாகராசர்மாலை, திருவிடைமருதூர் உலா முதலியன. கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

பு

புரந்தரதாசர் = இவர் கர்நாடக புரந்தரதாசர் என்று அழைக்கப்படுபவர். நட்டுவர் வகுப்பைச் சார்ந்தவர். கிளாரினெட் வாசிக்கவல்லவர். திருப்பதி சுவாமி தரிசனத்தின் போது திருவாசகப் பாடியவர். கி. பி. 16 ஆம் நூற்றாண்டு.

புரிந்தேஷ் புலவர் = புதுமடம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். கடையநல்லூர் பொட்டல் காலத்தில் இன்னிசை மன்னர்களின் பல்லக்குக்குச் சென்று கொண்டிருந்து வந்தியற்றிப் பாடியவர். இவர் புறத்தில் ஈரடி பாடல் ஒன்று உளது.

புலவர் கண்மணிகள் = இவைகளைத் திருப்புத்தூரைச் சேர்ந்த கல்லாடனார் பரம்பரையைச் சேர்ந்த தமிழ்ப் புலவர்கள் என்றும் கூறுவர். இவர் திருக்கேவல் வேலி வேளாண்மரபினர். ஆனாலும் இவர்கள் இறைவன் திருவடியினை யுற்றவர்.

இவர் பாடிய நூற்கள். சென்னிக் கலம்பகம். ஒலியல் அந்தாதி, தமிழ்த் திருப்பதிகம், அறுவகை இலக்கணம், அருணகிரி நாதர் புராணம், திருமயிலைக் கலம்பகம் முதலியன. கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

மெ

மெய்கண்ட தேவர் = சந்தானாசாரியர் நால்வருள் முதன்மையானவர். அருணந்தி சிவாசாரியரின் குருவாசாரியார். சிவஞான போதம் என்னும் ஒப்புயர்வற்ற நூலின் ஆசிரியர். இவர் அச்சுதகளப்பாளர் திருமகனார். சைவ வேளாண் குடியினர். பெண்ணாகடத்தில் பிறந்தவர். இவரது குருவாசாரியார் பரஞ்சோதி முனிவர். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் சுவேதவனப் பெருமாள் என்பது. காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு. அருணந்தி சிவாசாரியர் முதல் முதல் இவரைச் சந்தித்தபோது, "ஆணவமலத்தின் சொரூபம் எத்தகையது?" என்று கேட்டதும் அவரையே ஏற இறங்கப் பார்த்துச் சும்மா இருந்து அக் குறிப்பி விருந்தே ஆணவமலத்தின் சொரூபத்தை அருணந்தி சிவாசாரியர் அறிந்துகொள்ளும் வண்ணம் செய்து, அவரது ஞானசிரியராக விளங்கியவர்.

வ

வடக்குத்திருப்பதிப்பிள்ளை = இவர் வைணவ சமயத்தவர். திருவாய்மொழிக்கு முப்பத்தாறுயிரப்படி உரை எழுதியவர். இவரது திருக்குமாரரே பிள்ளை லோகாசாரியார் என்பவர். கி. பி. 15 ஆம் நூற்றாண்டு.

வண்ணக்கஞ்சியப் புலவர் = இவர் மதுரையைச் சார்ந்த மீசல் என்னும் ஊரினர். வண்ணக் கவி பாடுதலில் வல்லவர். வடமொழியிலும் வல்லவர். மலையாளமும் தெரிந்தவர் பின்னர் நாகூரில் வாழ்ந்து அங்கேயே காலமானவர். முகையதீன் புராணம் இயற்றியவர். இதன் காரணமாக ஒரு செல்வன் மகளைத் திருமணம் முடித்துச் சிறக்க வாழ்ந்தவர். கி. பி. 18 ஆம் நூற்றாண்டு.

வரதுங்கராம பாண்டியர் = இவர் மன்னர் மரபினர். சைவ சமயத்தவர். அதி

வீரராம பாண்டியனின் பெரியதந்தையார் திருமகனார். இவர் பிரம்மோத்தரகாண்டம், கருவையந்தாதி, கூர்மபுராணம் முதலான நூற்களை இயற்றியவர். இவரும் இவரது இளவலும் தமிழ் மொழிக்குத் தொண்டு செய்ததால், "பாண்டியில் இருவர் பட்டரில் இருவர்" என்ற பழமொழியும் எழுவாயிற்று. ஈண்டுப்பட்டர் என்பவர் சிவஞானமுனிவரும் க்ச்சியப்பரும். இவரது மனைவியாரும் கவி பாட வல்லவர். கி.பி. 16 ஆம் நூற்றாண்டு.

வரந்தருவார் = இவர் பாரதம் பாடிய வில்லிபுத்தூரானின் திருமகனார். தம் தந்தையார் பாடிய பாரதத்திற்குச் சிறப்புப் பாயிரம் பாடியவர். கி. பி. 15 ஆம் நூற்றாண்டு.

வி

விசாகப்பெருமாள் ஐயர் = இவர் திருத்தணிகை கந்தப்பையரின் திருமகனார். சரவணப்பெருமாள் ஐயரின் உடன்பிறந்தவர். வீரசைவ மரபினர். சென்னை அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். இவர் நன்னூலுக்கு உரை எழுதியவர். யாப்பிலக்கண அணியிலக்க விளக்கம் என்னும் நூலியற்றியவர். கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

விஜ்ஞியாரண்யர் = இவர் பிராமணராவினர். விசயநகரத்தில் பிறந்தவர். இவர் மாதவர் என்றும் குறிப்பிடப்பட்டவர். விஜ்ஞியாரண்யர் என்னும் நகர் மன்னனுக்கு மந்திரியாக இருந்தவர். இவர் சிருங்கேரிசங்கராசாரியமடத்து 12 வது பட்டத்தைப் பெற்றவர். இவர் சதுர்வேத பாடியம், சங்கரர் திக்குவிஜயம், பிரமகீதை, சங்கரவிலாசம், கீதாதாற்பரியம் முதலான நூற்களைச் செய்தவர். கி.பி. 13 ஆம் நூற்றாண்டு.

விபுலாநந்தர் - இவரது இயற்பெயர் மயில்வாகனப் பிள்ளை என்பது. யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். ஆங்கிலப்பட்டம் பெற்றவர். சைவசமய நூல்களில் நல்ல பயிற்சியுடையவர். சிலகாலம் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்தவர். இராமகிருஷ்ண மடத்தைச்

சார்ந்து தொண்டாற்றிய வர். துறைக்கோலம் பூண்டவர். யாழ் நூல், மதங்க சூடாமணி எனும் நூல்களை இயற்றியவர். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

வில்லிபுத்தூரார் = இவர் நடு நாட்டில் திருமுனைப்பாடியைச் சார்ந்த சனியூரில் பிறந்த வைணவ அந்தணர். சந்தக்கவி பாடுவதில் வல்லவர். தம்மோடு வாதம் செய்து தோற்றவர் காதை அறுத்துவந்தவர். இதனால்தான் "குறும் பியனாகக் காதைத் தேடாண்டி, எட்டினாலும் அறுப்பதற்கு இங்கு வில்லி இல்லை" என்று ஒரு புலவரும் பாடினர். இவர் அருணகிரிநாதர் பாடிய கந்தர் அந்தாதிக்கு உரை கூறியவர். அதில் 34-வது கவிக்கு மட்டும் உரை கூறத் தெரியாது தொற்றவர் என்று கூறுவர். சிறந்த ஆழ்ந்த வைணவப் பற்றுடையவராயினும், சிவபாதத்துவம் கூறுவதில் சிறிதும் பின் வாங்காதவர். இதனை இவர் பாடிய பாரதத்தில் வரும் அருச்சுனன் தவசிலர் சருக்கத்தில் நன்கு காணலாம். இவர் வைணவராகவிருந்தும் திருமாலைப் பன்றியாக வடிவு பூண்டு சிவபெருமான் திருவடிகளைக் காணச்சென்றதைப் பாடியிருப்பது கொண்டு உண்மையினை ஒளிக்காமல் கூறும் உத்தமர் என்பது தெரிகிறது. இவர் பாடிய நூல் பாரதம் என்பது. கி. பி. 15 ஆம் நூற்றாண்டு. வக்கபாகை வரபதியாட் கொண்டானால் ஆதரிக்கப்பட்டு அவன் வேண்டுகோளுக்கு இணங்கிப் பாரதம் பாடியவர்.

வீ

வீரகவிராயர் = இவர் பெற்கொல்லர் மரபைச்சார்ந்தவர். பாண்டிய நாட்டு நல்லூரில் பிறந்தவர். அதனால் இவரை நல்லூர் வீர கவிராயர் என்றும் கூறுபவர். அரிச்சந்திர புராணம் இவர் பாடியதே. காலம் கி. பி. 16 ஆம் நூற்றாண்டு.

வீரமாமுனிவர் = இவர் இத்தாலிய நாட்டுப் பாதிரியார். நம்நாடு வந்துற்றுத் தாது இயற் பெயராகிய தெவசண்ட் பெஸ்கி என் பதையும் மாற்றி வீரமாமுனிவர் என்று சூட்டிக் கொண்டவர். காவியுடுத்தும், புலால் புசியாதி

ருந்து பல்லக்கில்சென்றும் கட்டை மிதியடி அணிந்தும் சைவத் துறவிபோல் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர். தமிழ் மொழியில் அளவு கடந்த பற்றுடையவர். இவர் பல நூல்களைத் தமிழில் செய்துள்ளார். அவை தோமபாவணி, வேதியர் ஒழுக்கம், சதுர அகராதி, தொன்னூல்விளக்கம், அதிசயமாலை, பூரணகுருகதை, திருக்காவலூர் கலம்பகம் முதலியன. இவரைத் தையிய நாதர் என்றும் கூறுவர். கி. பி. 18 ஆம் நூற்றாண்டு.

வெ

வெள்ளியம்பலத்தம்பிரான் = இவர் சிறந்த புலவர். தஞ்சைமாமணிக்கலம் சிவப்பிரகாசரின் ஆசிரியர். திருமடுர ஆதினத்தைச் சார்ந்தவர். இவர் தமிழில் உள்ள சிறந்த நூற்களிலில் இடையிடையேதாம் சில பாடல்களைப் பாடிச் சேர்த்தவர் என்றும் கூறுவர். அப்பாடல்களை 'இடைச் செருகல்' என்றும், "வெள்ளிப் பாடல்கள்" என்றும் கூறிவருகின்றனர். இவர் பூத்தி கிரியப, சிவஞான சித்தியார், திருக்கேந்திர ஆகாம முதலியவற்றிற்கு உரை எழுதினார். கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

வே

வேங்கடசாமி நாட்டார் = இவர் சிறந்த சொற்பொழிவாற்றும் புலவர். ஆராய்ச்சி உரை நடை எழுதும் ஆற்றலும் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகத் திகழ்ந்தவர். "நாட்டார் ஐயா" என்று அழைக்கப்பட்டவர். திரிபுரத்தில் திகழ்ந்தவர். திருவிளையாடற் புராணம், சிலப்பதிகாரம், அகநானூறு முதலான நூற்களுக்கு உரை எழுதியவர். கபிலர், நக்கீரர், முதலான உரை நடை நூல்களை எழுதியவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

வேணாட்டடிகள் - வேணாட்டு மன்னர். வேணாடு என்பது தென் திருவிதாங்கூர் எனக் கருதப்படுகிறது. இவர் பாடிய பாடல் திருவிசைப்பாவில் உள்ளது. கி. பி. 10 ஆம் நூற்றாண்டு.

வேதநாயகம் பிள்ளை = இவர் மாயவரத்தில் முன்சீப்பாக

முன்சிபாக இருந்தவர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மாணவர் கததோலிக்கக் கிறித்தவர். திருவாவடுதுறை ஆதின மடாதிபதிகளிடத்தும் போன்பு காட்டியவர். திரிசிரபுரத்தில் பிறந்தவர். இவர் பெண்புத்திமாலை, நீதி நூல், சர்வசாரசங்கிரகம், பிரதாப முதலியார் சரித்திரம் முதலான நூல்களைச் செய்தவர். பல தனிப் பாடல்களையும் பாடியவர். கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

வேதாந்த தேசிகர் = காஞ்சிபுரத்தில் பிறந்த வைஷ்ணவ சமயத்தினர். இவர் திருவேங்கடமுடையார் என்ற இயற்பெயரை முன்னர் பெற்றிருந்தவர். வடகலை மரபினர்களுக்குரிய மதாசாரியர். பல நூல்களைத் தென் மொழியிலும் வட மொழியிலும் இயற்றியவர். அத்திகிரி மான்மியம் இவரால் இயற்றப்பட்டது. நவரத்தின மாலை, பிரபந்த சாரம், பன்னிரு நாமம் முதலான வை இவர் இயற்றியவை. கி.பி. 14 ஆம் நூற்றாண்டு.

வேலாயுத முதலியார் = இவரைத் தொழுவூர் வேலாயுத முதலியார் என்றும் கூறுவர். இலக்கண இலக்கியம் நன்கு பயின்றவர். இராமலிங்க அடிகளாரை அடுத்து அவருக்குத் தொண்டு செய்தவர். சென்னை இராஜதானிக் கல்லூரியில் தமிழ்ப்போராசிரியராக இருந்தவர். திருவருட்பாவைத் தொகுத்தவர் இவர் என்பர். திருவெண்காட்டடிகள் வரலாறு, வேளாண் மரபியல், முதலியன இவர் எழுதியநூற்கள். கி.பி.19 ஆம் நூற்றாண்டு.

வேலைய தேசிகர் = இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர். வீரசைவ மரபினர். துறைமங்கலம் சிவப்பிரகாசரின் சகோதரர். வெள்ளியம்பலத் தம்பிரானிடம் கல்வி பயின்றவர். காளத்திப் புராணத்தின் இறுதிப்பகுதியின் ஆசிரியர். இவர் நல்லூர்ப் புராணம், மயிலை இரட்டைமணிமாலை, மயிலத்துலா முதலான நூற்களைப் பாடியுள்ளார். கி.பி. 12 ஆம் நூற்றாண்டு.

வை

வைத்தியநாத தேசிகர் = இவரை வைத்தியநாத நாவலர் என்றும் கூறு

வர். இவரே இலக்கண விளக்கம் என்னும் நூலை இயற்றியவர். படிக்காசுப் புலவரின் ஆசிரியர். சைவ மரபினர் இவர் எழுதிய பிறநூல்கள் திருவாரூர்ப் பன்மணிமாலை. மயிலம் அம்மைப் பிள்ளைத் தமிழ் முதலியன. இ. பி. 17 ஆம் நூற்றாண்டு.

புலவர் அகராதி முற்றிற்று.

நிற்சங்கை

ஙஈ

ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் - இதுபோது காஞ்சி காம கோடி பீட ஆசாரிய சுவாமிகளாக விளங்குபவர். அரியதிலர். வட மொழியும் மதன் மொழியும் நன்கு அறிந்தவர். பல இடங்கட்குக் கால் நடையாகவே செல்லும் தூயதுறவு ஒழுக்கம் மேற் கொண்டவர். இவரது அரும் பெரும் கருணையினால் தான் சைவர்களும் வைஷ்ணவர்களும் ஒன்று சேர்ந்து திருவெம்பாவையையும் திருப்பாவையையும் பற்றி எங்கும் பேசவும், மாநாடுகளைக் கூட்டவும நேர்ந்தது. இந்த அரிய செயலை எவரும் இதற்கு முன் செயததில்லை. எவர்க்கும் தாசனம தந்து தண்ணருள சுரப்பவர். காலம கி. பி. 20 ஆம் நூற்றாண்டு

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் = இவர் திருவாடுதுறை ஆதின குருமகா சந்நிதானமாக இருந்து அடியார்கட்கு அருள் புரிந்து வருபவர். சைவ நூற் புலமையும் தமிழ் அறிவும் மிக்கவர். இவர்கள் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பலவற்றையும உரையுடன் வெளியிட்டு அவற்றை இலவசமாகத் தக்கார்க்கு ஈந்து சைவ சமயத்தைப் பரப்பி வருபவர். திரு மந்திர மாநாட்டை ஆண்டுதோறும கூட்டித் திருமந்திரக் கருத்துக்களைப் பேசுமாறு செய்து திருமந்திரநூற் கருத்துக்களை யடுத்துமாறு செய்து அவற்றை வெளியிட்டு உபகரித்து வருபவர். புலவர்கட்குத் தகுதி அறிந்து ஈயும் மாபெரும் கொடையாளி யாவார். ஆண்மையில் இவர்களின் உத்தரவுப்படி வெளிவந்துள்ள கணபதியைப் பற்றிய நூல் கண்ணனையும் கருத்தையும் கவரும் ஒரு சிறந்த நூல். பல பெயர்களைப் பெற்ற விநாயகப் பெருமானின திருவுருவங்கள இந்நூலில் அழகுடன் திகழ்கின்றன. அந்தந்த விநாயகரைப் பூசிக்கும் முறை அதனால் அடையும் பயன் முதலியன அழகுற இதில் எழுதப்பட்டுளளன. கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக குருமகா சன்னிதான பரமாசாரிய சுவாமிகள் — இவர்கள் திருத்தருமை ஆதினத்து 25-வது குருமகா சன்னிதானமாக இருந்து கொண்டு அருட் செங்கோல் செலுத்தி வருபவர். இவர் ஆட்சியை மேற் கொண்ட பிறகு சமயப் பிரசாரத்திற்காகப் பல தொண்டுகளைச் செய்து வருபவர். சென்னையில் இதற்காகப் பெருங்கட்டடம் ஒன்றை அமைத்து நூல்நிலையம், சமயவகுப்பு வித்துவான் வகுப்புச் சமயச் சொற்பொழிவு முதலானவைகளை நடத்தி ஏற்பாடு செய்துவருபவர். மாநாடு, நடத்தி அதன் மூலம் சமயச் சொற்பொழிகள் இலக்கியச் சொற்பொழிவுகள் முதலானவற்றைத் தக்க அறிஞர்களைக் கொண்டு நடத்தித் சன்மானங்களை கந்து வருபவர். இவரது ஆட்சிக் காலத்தில் வெளிவந்த நூற்கள் பல. அவற்றுள் சிறப்பு முறையில் குறிப்பிடத் தக்கவை திருக்குறள் வளம், முதல் மூன்று திருமுறைகளின் குறிப்புரைகள் என்பன. இவர் அவ்வப்போது ஆற்றிய ஆசி உரைகள் இது போது "செந்தமிழ்ச் செல்வம்" என்ற பெயரால் வெளிவந்துள்ளது. இந்நூல் வாயிலாகக் குருமகாசந்நிதானம் அவர்கள் சைவ சித்தாந்தக் கருத்துக்களை வாரி வழங்கி இருக்கிறார். இதன் மூலம் குருமகா சந்நிதானத்தின் பரந்த நூற்புலமையை நன்கு அறிந்து கொள்ளலாம். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணாசல தம்பிரான் சுவாமிகள் — இவரே திருப்பனந்தாள் திருமடத்து ஏழாம் சுவாமிகள். தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் நல்ல அறிவு பெற்றவர். தமிழ் மொழியும் சைவ இலக்கியங்களும் நாட்டில் பரவ வாரி இறைத்திருக்கும் தொண்டுகளுக்கு அளவில்லை. இவர்களின் திருவருள் காரணமாகச் சைவத் திருமுறைகளும் மற்றும் பல நூல்களும் வெளிவந்துள்ளன. அவற்றைத் தக்கார்க்கு இலவசமாக வழங்கிக் கொண்டு வருகிறார். இவர் செய்துவரும் அரும் பெருந்தொண்டு

களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை பெருங் கோவில்களில் சிவசிவ என்னும் மந்திரத்தை மின் ஒளி மூலமாக யாவரும் கண்டு கூறிப் பயனடையுமாறு செய்திருப்பதும், அத்தலத்துத் தேவாரத் திருவாசகப் பதிகங்களைச் சலவைக் கற்களில் பொறித்துச் சுவரில் பதியவைத்திருப்பதும் ஆகும். "சமய வளர்ச்சிக்கு இன்னும் என்னசெய்யலாம்?" என்பதைத் தினமும் சிந்தித்துச் செய்து வருபவர். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் = இவர்கள் திருப்பனந்தாள் திருமடத்து இளவரசுப் பட்டம் பெற்றுத் திகழ்பவர். வித்துவான் பட்டம் பெற்றவர். நல்ல எழுத்தாளர். பேச்சாளர். பல தலங்களைப் பற்றிய வரலாறுகளைத் தக்க கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு எழுதி வருபவர். இந்த முறையில் எழுதப்பட்ட காஞ்சித் தலத்தைப்பற்றியும், திருவாலவாய்த் தலத்தைப் பற்றியும் எழுதியுள்ள நூற்களில் காணலாம். இவ்ரது திருமடத்தின் சார்பில் வெளிவரும் நூற்களுக்கு எழுதிவரும் முகவுரைகள் இவரது புலமையை வெளியாக்குவன. கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

ஸ்ரீலஸ்ரீ பாலய்ய சுவாமிகள் - இவர்கள் திருமயிலம் திருமடத்துத் தலைவர். இவர் தமிழ்மொழி ஆக்கம் பெற வேண்டுமென்ற கருத்துடன் வித்துவான் பட்டம் பெறத்தக்க கல்லூரியினை நடத்தி வருபவர். சிவப்பிரகாச சுவாமிகளின் பிரபந்தங்களை ஒன்று சேர்த்து வெளியிட்டவர். பிரபுலிங்கலீலையில் ஒரு பகுதிக்கு உரை எழுதுமாறு செய்து வெளிவரச் செய்தவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

ஸ்ரீலஸ்ரீ மதுரைச் சோமசுந்தர தேசிகப் பரமாசாரிய சுவாமிகள் = இவர் மதுரைத் திருஞான சம்பந்தர் திருமடத்தின் ஆதினகர்த்தராக இருந்து கொண்டு சைவத்திற்கும் தமிழுக்கும் பெருந் தொண்டு செய்து வருபவர். இவர் பற்பல சமய மாநாடுகளுக்கும் சங்கங்களுக்கும்

தலைமைபூண்டு அவற்றின்வாயிலாகத் தலைமையுரைகளை ஆற்றிச் சமயத் தொண்டுபுரிந்து வருபவர். அவைகள் அச்சிடப்பட்டும்வழங்கப்பட்டு வருகின்றன. இவர் பலருக்குச் சிவதீட்சை செய்து, அவர்களைச் சிவபூசை செய்யுமாறு செய்து வருபவர். இறந்தவர்களோடு பேச முடியும் என்பதைக் குறித்து எண்ணமுடையவர். அது சம்பந்தமான கருத்துக்களைப் பேசியும் நடத்திக் காட்டியும் வருபவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார் = இவர் வித்துவான் பட்டம் பெற்ற சைவத் துறவியார். நல்ல பேச்சாளர். சிவதிருத்தக் கருத்துக் கொண்டவர். தேவார திருவாசக, திருவாய் மொழிகளின் மூலம் தேவாலயங்களில் அர்ச்சனை நடைபெற வேண்டுமென்ற கருத்துக் கொண்டவர். அக் கருத்தை எங்கும் பரப்பி வருபவர். இராமநாதபுரத்தைச் சார்ந்த குன்றக்குடித் திருமடத்துக்குத் தலைவர். மலேயா, சிங்கப்பூர் முதலான இடங்கட்குச் சென்று இந்துமத சார்பான சொற்பொழிவுகளை நடத்தியவர். பிறமதத்தார்கள் செய்வது போல பிறமதத்தினரையும் சேரியில் உள்ளவர்களையும் சிவதிருத்தி இந்து மதத்தில் சேர்த்து மதத்தை வளம்படுத்த வேண்டுமென்ற எண்ணங் கொண்டு உழைப்பவர். இவர் அவ்வப்போது பேசிய பேச்சுக்கள் அச்சு வடிவில் வந்துள்ளன. அவற்றுள் ஒன்று தமிழ் இசைச் சங்க ஆண்டுவிழாவில் தலைமை வகித்தபோது பேசிய தலைமைப் பேச்சு அடங்கிய நூலாகும். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

ஸ்ரீலஸ்ரீ ரமணரிஷி = இவர் இளமையிலேயே வைராக்கியம் கொண்டு துறவினை மேற் கொண்டவர். திருவண்ணாமலையில் வந்து தங்கி ஓர் ஆஸ்ரமத்தை உண்டாக்கிப் பல அன்பர்களை நன்னெறிபடுத்தியவர். துறவியே ஆனாலும் தாயார் மீது பற்றுக் கொண்டு தம் ஆஸ்ரமத்திலேயே அவர்கட்குச் சமாதி அமைத்துப் பூசித்தவர். ஒரு சமயம் இவரது திருமடத்தில் பல பரதேசிகள் வந்து கூடி

உணவு கேட்ட போது, "பரதேசிகளுக்கு உணவு இடும் ஆஸ்ரமம் இது அன்று" என்று கூறி விரட்டஇதனை உணர்ந்த ஸ்ரீ ராணாவினை எவரும் அறியாது ஆஸ்ரமத்தை விட்டு வெளியே போய் ஒரு மரத்தடியில் அமர்ந்துவிட ஆஸ்ரமத்து அன்பர்கள் ஓடிச்சென்று அவரை அழைத்தபோது, "நானும் ஒரு பரதேசி. எனக்குமாட்டும் ஆஸ்ரமத்தில் எப்படி உணவு கொடுக்கலாம்? ஆகவே நான் வெளியேவந்துவிட்டேன்" என்று கூறி ஆஸ்ரமத்தார் போக்கைக் கண்டித்துப் புத்திவரச்செய்த புண்ணியவான். இவரது அனுபவ உபதேசங்களை திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இவைப்பற்றி எழுதியுள்ள நூலில் காணலாம். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

அ

அண்ணுதுரை = இவரை அறிஞர் அண்ணு என்றும், அடுக்கு மொழி அண்ணுதுரை என்றும் கூறுவர். நல்ல எழுத்தாளரும், பேச்சாளரும் ஆவார். ஆங்கிலத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். வள்ளுவர் கூறிய "கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்பதற்கு இணங்கப் பேசும் பேராற்றல் படைத்தவர். பல நூல்களைத் தமிழில் எழுதியுள்ளார். சீர்திருத்த நோக்குடையவர். கி.பி. 20 ஆம்நூற்றாண்டு.

அரங்காசாரியார் = இவர் தூத்துக்குடி வா. வு. சிதம்பரம்பிள்ளை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதல்வராக இருந்து வருபவர். எம். ஏ. பட்டம் பெற்றவர். உள நூல் புலமை வாய்ந்தவர். அது சம்பந்தமாக பல நூல்களைத் தமிழில் எழுதியவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

அருணகிரிநாதர் எஸ். எஸ். = இவர் சென்னைத் தொண்டை மண்டல உயர்நிலைப் பள்ளியில் தலைமைத்தமிழாசிரியராக இருந்தவர். பல ஆங்கில நூல்களைத் தமிழ்ப்படுத்தியவர். எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். சிறுவர்கட்கேற்ற சிறுகதைகளை எழுதுவதில் வல்லுநர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

அ

ஆறுமுக முதலியார் = இவர் திருப்பராய்த் துறையில் உள்ள ஆரியர் பயிற்சிக் கல்லூரியின் முதல்வராக இருந்து வருபவர். எம். எ., எம். ஓ., எல். எல். டி., பட்டம் பெற்றவர். தமிழ் மொழியினை எப்படிக் கற்பிப்பது என்னும் அரிய நூலை எழுதியவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு. சிறந்த எழுத்தாளரும் பேச்சாளரும் ஆவார்.

இ

ராமானுஜம் பிள்ளை, மு. = இவர் குரிழில் டாக்டர் பட்டம் பெற்றவர். இவர் எம்.ஓ.எல்., எம்.எ., விக்துவான், எல். டி. ஆகிய பட்டங்களையும் பெற்றுத் திகழ்பவர். ஆராய்ச்சி செய்வதில் பற்றுக் கொண்டு அதன் காரணமாகப் பல நூல்களை எழுதியவர். மதுரைத் தியாகராயர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராக இருந்து வருபவர் நல்ல பேச்சாளரும் ஆவார். இவருக்குச் சேக்கிழார் மீது அளவுகடந்த அன்பு உண்டு. அதன் காரணமாகப் பெரிய புராணத்தை நன்கு ஆராய்ந்து அந் நூல் ஒரு சிறந்த வரலாற்று நூல் என்பதை நிறுவி எழுதியவர். இவர் இளைஞர் முதல் முதியர் வரை பயிலத் தக்க நூல்களை எழுதி வருபவர். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளின் ஆசிரியர். மொகஞ்சதாரோ என்ற நூலும் இவரால் எழுதப் பட்டது. கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

இராஜேஸ்வரி அம்மையார் = இவர் செங்கோட்டை ஸ்ரீமான் கோலஞ்சில் விஞ்ஞானப் போதினியாக இருந்தவர். எம். எ. பட்டம் பெற்றவர். தமிழ் மொழியில் உயர்ந்த விஞ்ஞானக் கருத்துக்களை எழுதி வெளியிட்டவர். பேசும் திறனும் படைத்தவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

இராமச்சந்திரஞ் செட்டியார் = இவர் பி. எ. பி. எல். பட்டம் பெற்றவர். ராவ் பகதூர் பட்டமும் பெற்றுச் சைவசமயத்தில் அறநிலை பாதுகாப்புக் கழகக் கமிஷனராக இருந்தவர். இவரது அரிய தொண்டின் காரணமாகக் அவ்வக் கோவில்களின் பண்கள் சுவர்களை அலங்கரிப்பன

ஆயின. அவ்வக் கோயில்களின் வரலாறுகள் வெளிவருவன ஆயின. ஆராய்ச்சியில் வல்லவர். பல ஆராய்ச்சி நூற்களையும் கட்டுரைகளையும் எழுதியவர். கொங்கு நாட்டைப்பற்றி அவர் எழுதியுள்ள நூல் படித்து அறிதற்குரியது. கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

இராஜகோபாலாசாரியார் = இவரை ராஜாஜி என்றும் அழைப்பர். சிறந்த அரசியல் அறிஞர். கவர்னர் ஜனரல் பதவியினை முதல் முதல் ஏற்ற அறிஞர் இவரே. சென்னையில் முதல் அமைச்சராகவும் இருந்து தொண்டாற்றியவர். இவரது பேச்சில் உவமைகள் மலிந்து காணப்படும். அவைகள் நூலாகவும் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன. இவர் பலப்பல நூல்கள் எழுதியுள்ளார். அவை அனைத்தும். வெளியாகியுள்ளன. கல்கியில் இவர் எழுதிய கட்டுரைகள் அனந்தம். அண்மையில் வெளிவந்த வியாசர் விருந்து எல்லாருடைய உள்ளத்தையும் கவர்ந்துள்ளது. கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

இராமநாதஞ் செட்டியார் = இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ்த் துறைத் தலைவராகவும் இருப்பவர். பண்டிதபரீட்சையிலும், வித்துவான் தேர்தலிலும் தேர்ந்தவர். மத்திய அரசாங்கத்தாரால் நிறுவப்பட்ட சாகித்திய அகடெமியின் சார்பில், இதுவரையிலுள்ள தமிழ் இலக்கியங்களையும், ஆசிரியர்களையும் அறிவிக்கக் கூடிய நூலினைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர். கல்லூரி மாணவர்கட்குரிய உரைநடை நூல்களை எழுதியவர். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

இலக்குமணப் பிள்ளை = இவர் திருவனந்தபுரத்தைச் சார்ந்தவர். திருவாங்கூரில் மொழிபெயர்ப்பாளராக அலுவல் பார்த்து வந்தவர். இவர் தமிழ்க் கீர்த்தனை பாடவேண்டும் என்ற நோக்கத்துடன் தியாகையர் தெலுங்கு கீர்த்தனைகளைப் போலத் தமிழில் கீர்த்தனைகளைப் பாடியவர், சங்கீதம் பயின்றவர். கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

இலட்சுமணசாமி முதலியார் - இவரை டாக்டர் ஏ. எல். முதலியார் என்று எவரும் புகழ்வர். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்துத் துணைவேந்தர். இவர் இந்தியாவின் ஒப்புயர்வற்ற அறிஞர் பெருமக்களில் ஒருவர். இவரது அரிய முயற்சியினால் சென்னைப் பல்கலைக் கழகம் பல துறையில் முன்னேறி நூற்றுண்டு விழாவினைச் சிறப்புறக் கொண்டாடிப் பெரும் புகழுடன் திகழ்கிறது. இவரது பேச்சாற்றல் உலகமுழுமையும் பரவியுள்ளது தமிழ் மொழிக்கும் தமிழ் அறிஞர்க்கும் பெருந்துணையாய் இருந்து ஆக்கம் தேடுபவர். மருந்துவத்துறையிலும் ஒப்புயர்வற்றவர். இவர் பெற்றுள்ள பட்டங்கள் பிகபிகப் பல. காலம். கி. பி. 20 ஆம் நூற்றுண்டு. திரு. ஏ. எல். முதலியாரின் தலையாய உறவினர் டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் அவரும் பேசும் திறன் படைத்தவர். திருவிதாங்கூரில் பல்கலைக் கழகத்துணை வேந்தராக இருந்து வருகிறார். இவரும் உலகப் புகழ்வந்த பேச்சாளர். கடல் கடந்து சென்று தம் அரிய கருத்துக்களைப் பேச்சின் மூலம் வெளியிட்டவர். ஆகவே, ராமசாமி முதலியாரும், லட்சுமணசாமி முதலியாரும் இராம இலக்குமணர்களாகவே இருந்து வருபவர்கள். இருவரும் வைஷ்ணவமரபினர். அக்காலத்தில் "பாண்டியில் இருவர்" என்றும், இரட்டைப் புலவர்கள் என்றும் திகழ்ந்ததை அறிந்தோம். இதுபோது இவ் விருவர் குறித்தும் "சென்னையில் இருவர்" என்று கூறத்தக்க மாட்சிமை யுடையவர்.

உ

உமாமகேஸ்வரம் பிள்ளை = இவர் தஞ்சையில் வாழ்ந்த பிரபல வழக்கறிஞர். சிறந்த சைவப் பற்றுடையவர். பி. ஏ. பி. எல். பட்டம்பெற்றவர். தஞ்சையில் உள்ள கருந்தட்டான்குடி என்னும் கரந்தையில் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவித் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். தமிழ்ப்பூம் பொழில் என்றும் பத்திரிகையை நடத்தியவர். கி.பி. 20 ஆம் நூற்றுண்டு.

ஐ

ஐயம்பெருமாள் கோனார் = இவர் திருச்சி நேஷனல் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்து வருபவர். இவர் தமிழ் மொழியில் இண்டர் எஸ்.எல்.எஸ். பி.ஏ. வகுப்புக்களுக்கு நோட்ஸ் எழுதி வருபவர். கி.பி. 20ம நூற்றாண்டு. இவர் அகராதி ஒன்றை தொகுத்துள்ளார்

ஒள

ஒளவை துரைசாமிப் பிள்ளை– இவர் வித்துவான் பட்டம் பெற்றவர். சுவைபடப் பேசும் ஆற்றலும் எழுதும் திறனும் அமையப் பெற்றவர். திறந்த சைவ சித்தாந்த புலமை மிக்கவர். இவரது சைவ நூற் புலமைக்குச் சான்றாக இவர் பதிப்பித்துள்ள ஞானமிர்தம் என னும் நூல்கொண்டு அறியலாம். இவர், சிந்தாமணி, மணி மேகலை போன்ற நூல் களுக்குச் சிறந்த முறையில் ஆய்வுக்கருத்துக்கள அடங்கிய நூல்கள வெளியிட்டுள்ளார். பண்டார மும்மணிக் கோவைக்கு ஒரு சிறந்த விளக்கம எழுதியுள்ளார். கி. பி. 20 ஆம நூற்றாண்டு.

க

கண்ணப்ப முதலியார்.பாலூர் = இவர் சென்னைப் புதுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ்த் துறைத் தலைவராகவும் இருந்து வருபவர். பி. ஓ. எல். வித்துவான் பட்டம் பெற்றவர். பேச்சுத் திறனும் எழுதும் ஆற்றலும் பெற்றவர். இவர் கிழவகுப்பு இளைஞர் கட்கும் கல்லூரி வகுப்பு மாணவர்கட்கும் நூற்கள் பலவற்றை எழுதி யுள்ளார். இவர் எழுதியுள்ள நூற்களுள் பொய்யடிமை இல்லாத புலவர் யார்? எனனும அரிய ஆராய்ச்சி நூலும, திருமணம என்னும நாடக நூலும், வையம போற்றும் வணிதையர் என்னும உயரிய செந்தமிழ் நடையில் அமைந்த நூலும், வள்ளுவர் கண்ட அரசியல் என்னும் நூலும் திருவெம்பாவை, திருப்பாவை திருப்பள்ளி எழுச்சி ஆராய்ச்சிக் கட்டுரை நூலும குறிப்பிடத் தக்கவை. இவர் பல அரியகட்டுரைகளை வாரத் தாள்கட்கு எழுதியுள்ளார். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

கதிரேசஞ் செட்டியார் = இவர் மகாமகோபாத்தியாய பட்டமும் பண்டித பட்டமும் பெற்றவர். வடமொழி தென்மொழி அறிந்தவர். நகைச்சுவை ததும்பப் பேச வல்லவர். அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். திருவாசகத்தில் நீத்தல்விண்ணப்பம் திருச்சதகம் ஆகிய இவற்றிற்கு உரை எழுதியவர். சுக்ர நீதியைத் தமிழ் மொழியில் பெயர்த்து வெளியிட்டவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

கந்தையா பிள்ளை = இவர் சிறந்த ஆராய்ச்சியாளர். சைவசமயத்தவர். ஓயாது படித்துக் கொண்டிருப்பவர். சங்க நூற்களுள் பலவற்றை உரை நடையில் எழுதியவர். இவர் எழுதியுள்ள நூற்கள்பல. அவற்றுள் மறைந்த நகரங்கள், திருவள்ளுவர் அறிவுரைக் கோவை, அறிவுரைமாலை, ஆரிய வேதங்கள், ஆதிமனிதன், ஆதி உயிர்கள் திருமணம் முதலானவற்றைக் குறிப்பிடலாம். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

கா

காமேசுவர்நாயர் = இவர் அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து இது போது ஓய்வு பெற்று விளங்கும் தமிழ் அறிஞர். தூய தமிழில் உயர்ந்த நடையில் பேசவும் எழுதவும் ஆற்றல் மிக்கவர். இவர்பால் அமைந்த இத் தன்மைகளை இவர் எழுதிய நல்லிசைப் புலவர் என்னும் நூலில் காணலாம். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

கி

கிருஷ்ணமூர்த்தி = இவரைக் கல்கி என்றதும் எவரும் அறிந்து கொள்வர். இவர் தமிழ் மொழிக்குச்செய்துள்ள தொண்டு அனந்தம். இவரது உரைநடை எளிய நடையில் அமைந்து அரிய பொருளினைக் கொண்டு திகழும். இவர் சிறுகதை எழுதுவதில் தலை சிறந்த ஆசிரியர். இவர் எழுதிய நூல்கள் பல வெளிவந்துள்ளன. தமிழ் இசை வளரவும், பாரதியார் பாடல் பரவவும், பெரிதும் பாடுபட்டவர். ஸ்மார்த்த பிராமண

மரபினர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

கோ

கோவிந்தராஜ முதலியார் கா.ரா. = வைஷ்ணவ மரபினர். சென்னைப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தவர். இலக்கண அறிவுமிக்கவர். பல உரை நடை நூல்களை எழுதியவர். பதினெண் கீழ்க்கணக்கு நூற்களில் சிலவற்றிற்கு உரை எழுதியவர். உரை நடையில் எழுதியுள்ள நூற்களுள் சங்க நூற்கள் என்னும் நூல் ஆராய்ச்சிக்குத் துணை செய்யவல்லது. கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

சு

சகந்நாதய்யர் கி. வா. = இவர் டாக்டர் சுவாமிநாதய்யரின் தலை சிறந்த மாணவர். வித்துவான், எம். ஏ. பட்டங்களைப் பெற்றவர். நல்ல பேச்சாளர். சங்க இலக்கியச் சார்பாகவும் சைவத் திருமுறைகளின் சார்பாகவும் உரை நடை நூல்கள் பல எழுதியவர். கலைமகள் என்னும் பத்திரிகையின் தலைமை பத்திராதிபராக இன்றும் இருந்து வருபவர். அவ்வப்போது பல பத்திரிகைகளில் சுவைமிக்க கட்டுரைகளை எழுதிவருபவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

சகவீர பாண்டியர் = இவர் தூத்துக்குடியைச் சார்ந்தவர். திருக்குறட் பாக்களை இணைத்துக் குமரேச வெண்பா என்னும் நூலை எழுதியவர் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

சச்சிதானந்தம் பிள்ளை, எஸ் - இவர்சென்னைக் கல்வித்துறை அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்று இருப்பவர். பி.ஏ. எல்.டி. பட்டம் பெற்றவர். இவர் தொழிலில் ஈடுபட்டிருந்தபோதே சமய வளர்ச்சிக்கரகமும் பாடுபட்டு ஆங்காங்குச் சொற்பொழிவு ஆற்றியவர். இப்போது அங்காங்கு நடைபெற்று வரும் வார வழிபாட்டிற்கு வழி காட்டியாய் நின்றவர் இவரே. இவர் எழுதிய நூல்களுள் சிவ சின்னங்கள் அணிவதேன்? என்பதும் ஒன்று. கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

சண்முகஞ் செட்டியார் = சர். ஆர். கே. என்றதும் இவரை நன்கு அறிவர்,

பெற்றவர். பெரிய புராணத்தில் மிகுதியும் ஈடுபாடு உடையவர். அந்நூலைப்பற்றி ஒரு சிறந்த முறையில் ஓர் ஆராய்ச்சி நூல் எழுதியுள்ளார். அதுவே சேக்கிழார் என்பது. பெரிய புராணத்திற்கு ஈடும் எடுப்பும் இல்லாத உரையையும் எழுதியுள்ளார். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

சுப்பிரமணிய முதலியார் = இவர் வெள்ளக்கால் என்னும் ஊரினர். மருத்துவர் தொழில் மேற்கொண்டவர். ஆங்கிலமும் அருந்தமிழும் அறிந்தவர். கம்பராமாயணத்தில் மிகப்பற்றுக்கொண்டவர். இவர் இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும் என்னும் நூல் இயற்றியவர். இதுவே அன்றி, அகிலை வெண்பா கோம்பி விருத்தம் போன்ற நூல்களையும் செய்துள்ளார். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

செ

செங்கல்வராய பிள்ளை = இவர் சைவ மரபினர். எம்.ஏ. பட்டம் பெற்றவர். அமைதியாக இருந்து நூல் ஆராய்ச்சி செய்பவர் பல கட்டுரைகளை எழுதியவர். இவரது நுண்ணிய அறிவுத்திறனைத் திருப்பனந்தாள் திருமடத்தார் வெளியிட்டுள்ள கந்த புராண நூலின் முகப்பில் இவர் கந்தபுராணத்தைப் பற்றி எழுதியுள்ள குறிப்புக்களைக்கொண்டு உணரலாம். காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

சே

சேதுப்பிள்ளை ரா. பி. = இவர் டாக்டர் பட்டம் பெற்றவர். பி. ஏ. பி. எல். பட்டமும் உடையவர். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக இருப்பவர். சைவ சமயத்தவர். இவரது பேசுந்திறன் அறிந்த தமிழ் நாட்டு நல்லறிஞர் இவரைச் சொல்லின் செல்வர் என்று சொல்லி மகிழ்வர். இவரது பேச்சிலும் எழுத்திலும் செந்தமிழ் நடை சிறந்து விளங்கும். இவரது எழுத்தாற்றலைப் பாராட்டி டில்லி அரசாங்கம் இவரது கட்டுரைத் தொகுதிகள் அடங்கிய தமிழ் இன்பம் என்னும் நூலுக்கு ரூ. 5000 பரிசு அளித்திருக்கின்றது. இவர் பல அரிய நூல்களை

எழுதியுள்ளார். பேரும் ஊரும், வில்லும் வேலும், முதலான நூற்கள் இவர் எழுதியவைகளே. இவர் தமிழ் மொழியினிடத்துக் கொண்ட ஆர்வத்தினை இவர் 25000 ரூபாய் அம் மொழி வளர்ச்சியின் பொருட்டு நன்கொடை அளித்ததிலிருந்து அறிந்து கொள்ளலாம். காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

சேஷாசல அய்யர் டி. என். = இவர் சைவ சமயத்தவர். பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றவர். தமிழில் நல்ல அறிவு படைத்தவர். கலா நிலையம் எனும் பத்திரிகையில் இவர் எழுதிய கட்டுரைகள் அறிஞர் கட்கு நல்ல விருந்தாகும். பிஜாரோ என்னும் நாடக நூலையும் ஜூலியஸ்ஸீசர் என்னும் நாடக நூலையும் ஏமாங்கத நாட்டு இளவரசன் என்னும் நூலையும் எழுதியவர் ஆங்கிலத்திலும் கம்பரைப்பற்றி நூல் எழுதியுள்ளார். ஏமாங்கத நாட்டு இளவரசன் என்னும் உரை நடை நூல் உயர்ந்த செந்தமிழ் நடையால் ஆனது. கம்பராமாயணத்தில் அதிக ஈடுபாடு உடையவர். அது பற்றிப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். ஆங்கில வகுப்புக்களையும் தமிழ் வகுப்புக்களையும் நடத்திப் பலரை அறிஞர் ஆக்கினவர். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

சோ

சோமசுந்தர பாரதியார் = இவர் ஒரு வழக்கறிஞர். பசுமலையில் வாழ்பவர். எம். ஏ. பி. எல். பட்டம் பெற்றவர். இவர் தமிழிலும் நல்ல அறிவு பெற்றிருந்த காரணத்தால், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகப் பல்லாண்டு இருந்து தொண்டாற்றியவர். நல்ல பேசுந்திறன் பெற்றவர். ஆழ்ந்த தமிழ்ப்பற்று உடையவர். இவர் எழுதிய கட்டுரைகள் அரிய கருத்துக்களையுடையன வாய் இலங்கும். அவைகள் ஒன்றுசார்ந்து நூலாகவும் வெளிவந்துள்ளன. இவரது ஆராய்ச்சித் திறனை திருவள்ளுவர் என்னும் நூலால் நன்கு அறியலாம். செய்யுள் இயற்றுவதிலும் வல்லுநர். காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

சோமசுந்தரம்பிள்ளை = இவர் பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றவர். இவர் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் பதிப்பாசிரியராக இருந்துவருபவர். தமிழ்ப் புலமை மிக்கவர். இவர் தேவாலயங்கட்கு ஆட்சித் தலைவராக இருந்தபோது, அவ்வத்தலங்களைப்பற்றி நூல்களை எழுதி வெளியிட்டவர். கல்வெட்டுக்களை ஆய்வதில் பெரு விருப்புடையவர். தஞ்சைப்பெருடையார் ஆலயத்தைப்பற்றிச் சிறந்த முறையில் நூல் எழுதியவர். அண்மையில் நல்லசாமிப்பிள்ளை எழுதிய ஆங்கிலப் பெரிய புராணத்தைச் சிறிய முறையில் பதிப்பித்து வெளியிட்டவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு. தமிழ் இசைச் சங்கத்திலும் தொண்டு புரிந்தவர்.

ஞா

ஞானசம்பந்தம், சா. = இவர் சென்னையில் உள்ள அகில இந்திய ஒலிபரப்பும் நிலையத்தில் நாடகங்களை ஒழுங்குபடுத்தி ஒலிபரப்புதல் மூலம் வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளார். எம். ஏ. பட்டம் பெற்றவர். உரை நடை எழுதும் வன்மை வாய்ந்தவர். அவர்கள் எழுதிய நூற்களுள் ராவணன் மாட்சியும் வீட்சியும் என்பதும் ஒன்று. கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

த

தண்டபாணிதேசிகர் = இவர் வித்துவான் பட்டம் பெற்றவர். இவர் தருமை ஆதினத் தொடர்பும் திருவாடுதுறை ஆதினத் தொடர்பும் பெற்றுத் திகழ்பவர். இவர் தருமபுர ஆதினத் தொடர்பில் நெருங்கித் தொண்டாற்றிய போது, திருக்குறள் வளம் என்னும் நூலையும் சம்பந்தரது முதல் திருமுறைக்குக்குறிப்புரையையும் அரிதின் முயன்று எழுதி குருமகா சந்நிதானத்தின் திருவருள் பெற்றுப் பதிப்பித்தவர். திருவாவடுதுறை ஆதினத் தொடர்பு பெற்ற பின் விநாயகரைப் பற்றிய அரிய நூலை எழுதித் திருவாவடுதுறை ஆதின குருமகா சந்நிதானத்தின் திருவருள் துணையால் பதிப்பித்தவர். இது போது அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்

சித்துறை அலுவலகத்தில் தமிழ்ப் பணி செய்து வருபவர். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

தா

தாண்டவராய முதலியார் = இவர் பஞ்சதந்திரக் கதையினை உரைநடையில் எழுதியவர். இவரதுநடையில் ஒரு தந்திரத்தைப்படித்து முடித்த தந்திரத்தை வாசிக்கத் தொடங்கும் போது முன்னைய நடையினைவிடச் சிறிது தரம் உயர்ந்து காணப்படுதலை அறியலாம். இவர் சிறுவர்கட்காக இலக்கண விளக்கவிடை, கதாமஞ்சரி என்னும் நூற்களையும் எழுதியுள்ளார். கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

தி

தியாகராய செட்டியார் = இவர் ஒரு பெருஞ் செல்வர். இவரது பார்வையில்தான் மதுரைத் தியாகராயர் கல்லூரி நடைபெற்று வருகிறது. இவர் சமய நூல்களில் பெரிதும் ஈடுபாடுடைய வர். தக்க அறிஞர்களைக் கொண்டு சமய நூல்களைத் தமக்கும் தம் குடும்பத்தாருக்கும் போதிக்குமாறு செய்து கேட்டு இன்புறுபவர். தகுதி வாய்ந்தவர்கட்கு உதவும் உதார குணமுடையவர். இவர் தமிழ்க் கலைவளரத் தமிழ்நாடு என்னும் பத்திரிகை நடந்து வருதற்கு முதற் காரணராய்த் திகழ்பவர். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு. தம் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் நல்ல அறிவு பெற வேண்டித் தக்க பேராசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் உளம் மகிழும் வண்ணம் ஊதியத்தினையும் தந்து களிப்பவர்.

திருநாகேசுர முதலியார் மணி = இவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்தவர். பேசுந் திறனும் எழுதும் திறனும் படைத்தவர். தமிழ்ப் புலவர்களைப்பற்றி உரைநடை நூல்களை விரிவான முறையில் எழுதியவர். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

திருவேங்கடாசாரியார் - இவர் வைஷ்ணவ அய்யங்கார் மரபினர். வடமொழியில் நல்ல பயிற்சி பெற்றவர். எம்.ஏ. எல்.டி. பட்டம் பெற்றவர். சென்னை

அரசாங்கத்தைச் சார்ந்த கல்லூரிகளில் கணிதப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்று, இப்போது புதுக்கோட்டை கல்லூரியில் பிரின்ஸ்பாலாக இருந்து தொண்டு செய்பவர். சோதிடப் புலமைமிக்கவர். சோதிட சம்பந்தமான நூலையும் எழுதியவர். கட்டுரைகளையும் எழுதியவர். வடமொழியில் உள்ள எழுத்துக்களும் தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களும் ஒலி வடிவில் மட்டும் இன்றி வரிவடிவிலும் ஒற்றுமை யுடையன என்பதை வற்புறுத்தி வருபவர். நம் முனிவர்களும் ரிஷிகளும் வாழ்ந்த காலங்களை வானநூல் ஆராய்ச்சி முறைப்படி நிலைநிறுத்திக் காட்டுபவர். காலம். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

தே

தேவநேயப்பாவாணர் = இவர் சேலம் முனிசிபல் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து வருபவர். கிறித்தவச் சமயத்தவர். எம்.ஏ. பட்டம் பெற்றவர். இலக்கண இலக்கிய அறிவில் சிறந்தவர். தமிழ் நாட்டுச் சரித்திரங்களை நன்கு பயின்றவர். தனித் தமிழ் ஆர்வம் படைத்தவர். தருக்கம் உளநூல் போன்ற கலைகளும் தமிழில் உண்டு என்பதை நன்கு எடுத்துக் காட்டும் அறிவு படைத்தவர். பல கட்டுரைகளை வரைந்தவர். இவரது ஆராய்ச்சி வன்மையையும் தமிழ்ப் பற்றையும், பன்னூல் புலமையையும் இவர் எழுதியுள்ள ஒப்பியல் மொழி நூலில் நன்கு காணலாம். காலம். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

ந

நமச்சிவாய முதலியார்- இவர் சென்னை அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். இவர் இளஞ்சிறார் முதல் கல்லூரி மாணவர்கள் வரை பயிலுதற்கு ஏற்ற நூல்களை எழுதியவர். பிருதுவிராஜன் என்னும் நாடக நூலை இயற்றியவர். தனித் தமிழ் வித்துவான் பட்டத்திற்கு மன்றாடி வெற்றிகண்டவர். உபகாரச் சிந்தையுள்ளவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

நா

நாராயணசாமிப் பிள்ளை = இவர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக (வைஸ் சான்ஸலர்) இருந்து அரிய தொண்டினைச் செய்து வருபவர். தமிழ் இசைச் சங்கத் தலைவராக இருந்து வருபவர். இவர் இந்துரிலிஜியஸ் எண்டோமண்ட் போர்ட் தலைவராக இருந்த போது கோவில்களின் ஆட்சி முறைகள் பல ஒழுங்கு செய்யப்பட்டன. தமிழ் நூல்களையும் சமய நூல்களையும் படிப்பதில் ஆர்வம் மிக்கவர். இவரது சமயம் வைஷ்ணவம், என்றாலும், சைவப் பற்று மிகுதியும் உடையவர். தமிழிலும், ஆங்கிலத்தில் நன்கு பேசவல்லவர். பல மாநாடுகட்கும் ஆண்டுவிழாக் கூட்டங்கட்கும், தலைமை பூண்டு தமிழ் அறிஞர்கள் எழுதிய நூற்களுக்குச் சிறந்த முகவுரைகளைத் தமிழில் எழுதி அவர்களை ஊக்கி வருபவர். தமிழில் பல அரிய சொற்பொழிவுகளைச் செய்தவர். காலம். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

நீ

நீலாம்பிகை அம்மையார் = இவர் மறைமலையடிகளாரின் திரு மகளார். வடமொழிச் சொற்களுக்கு நேரான தமிழ் மொழிகளை அகராதி முறையில் எழுதி உதவிய பெருமாட்டியாவார். கி. பி. 20 நூற்றாண்டு.

ப

பட்டுச்சாமி ஓதுவார் = இவர் வித்துவான் பட்டம் பெற்றவர். பள்ளிக்கூட மாணவர்கட்கு நூல் எழுதுபவர், இவர் திருப்னந்தாள் திருமடத்தின் கூட்டளை பெற்று, கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், ஆகிய புராணங்களை உரை நடைப்படுத்தி எழுதியவர். சைவத் திருமுறைகளையும் ஷி திருமடத்தின் உத்தரவுப்படி பதிப்பித்தவர். கந்தர் கலிவெண்பாவிற்கு உரை எழுதியவர். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

பரந்தாமனார் = இவர் மதுரைத் தியாகராயர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்து வருபவர்.

எம்.ஏ. பட்டம் பெற்றவர் பேசுந்திறனும் எழுதும் திறனும் வாய்ந்தவர். சீர் திருத்தக் கருத்து உடையவர். இவர் எழுதிய நூற்களுள், நல்ல தமிழ் வேண்டுமா? என்பது படித்து இன்புறுதற் குரியது. கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

பா

பாலசுப்பிரமணிய ஐயர் = இவர் சைவசமயத்தவர். பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றவர். சட்ட சபை அங்கத்தினர். சமயப் பற்றில் தலை சிறந்தவர். தர்மரட்சாமணி என்னும் பட்டத்தினைச் சங்கராசாரிய சுவாமிகளால் கொடுக்கப் பெற்றவர். வடமொழியிலும் சைவத் திருமுறைகளிலும் நல்ல பயிற்சி பெற்றவர். ஆங்கிலத்திலும், தமிழிலும், நன்கு பேச வல்லவர். பேசுந் தொண்டின் வாயிலாகச் சமயத்திற்கும் தமிழுக்கும் ஆக்கம் தேடித் தருபவர். சிறந்த அறிஞர்கள் எழுதியுள்ள நூற்களுக்குத் தமிழில் முகவுரை எழுதி ஊக்கி வருபவர். காலம் கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

பாலசுப்பிரமணிய முதலியார் = இவர் ஒரு வழக்கறிஞர் பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றவர். சைவ சமய நூல்களிலும் சித்தாந்த சாத்திரங்களிலும், தமிழ் இலக்கியங்களிலும நல்ல பயிற்சியுடையவர். இவரது அரிய முயற்சியினால் சைவ சித்தாந்த சமாஜ வெளியீடாகப் பன்னிரு திருமுறைகளும் வெளிவந்தன. அவற்றின் வெளியீடே ஒரு தனிமதிப்புடையது. சங்க நூல் தொகுப்பும், தொல் காப்பியப் பதிப்பும் இவரது முயற்சியினால் வெளிவந்தனவே. ஆங்கிலத்திலும் தமிழிலும் சைவ சமயக் கருத்துக்களை எழுதியும் பேசியும் வருபவர். மூவர் தேவார அடங்கன் முறையினை இவர் பதிப்பித்து வெளியிட்டுள்ளதன்மூலம் இவருக்கு அத்தேவாரத்தில் உள்ள பரந்த அறிவைப் புலப்படுத்தியுள்ளார். நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தையும் இவர் பதிப்பித்துள்ளார். அதுபோது தம்மை மயிலை மாதவதாஸன் என்று குறிப்பிட்டுக் கொண்டவர். இவர் உள்ளதை

உள்ளபடி கூறுபவர் என் பதை இவரது அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நடந்த நாளில் இவரால் எழுதி வெளியிடப்பட்ட இவரது வாழ்க்கை வர லாற்றுத்தனி நூலால் நன்கு உணரலாம். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

பூ

பூரணலிங்கம் பிள்ளை எம். எஸ். = திருநெல்வேலி யைச் சார்ந்தவர். எம். ஏ. பி. எல். பட்டம் பெற் றவர். ஞான போதினி என்னும் பத்திரிகையின் கூலவராக இருந்தவர். ஆங்கிலத்தில் தமிழ் இலக்கியங்களைப் பற்றி யும் புலவர்களைப் பற்றி யும் ஒரு நூல் எழுதிய வர். கி.பி. 20 ஆம் நூற் றாண்டு.

பெ

பெரியசாமித்தூரன் = இவர் பி. ஏ. எல். டி. பட்டம் பெற்றவர். சைவசமயத் தினர். நன்கு எழுதும் திற னும் பேசும் திறனும் பெற்றவர். சென்னைப் பல்கலைக் கழகத் தொ டர்பு கொண்டு, கலைக் களஞ்சியம் என் னும் நூலை வெளியிடுவதில் தலைமைபூண்டு அதனைச் செவ்வனே நடத்தி வருப வர். இதுவரையில் நான்கு வால்யூம்களை வெளியிட் டுள்ளார். இவர் சுப்பிர மணிய பாரதியார் சுதேச மித்திரனில் எழுதிய கட் டுரைகளை ஒருங்கு சேர்த்து வெளியிட்டிருப் பது தமிழ் மொழிக்கு ஆக்கம் தருவதாகும். இவர் ஆண்டுமலர்களி லும் திங்கள் தாள்களி லும் பல கட்டுரைகளை யும், தமிழ் இசைச் சங்கச் சார்பில் பண்ணைப்பற்றி ஆய்ந்து எழுதிய கட்டு ரையும் எழுதியுள்ளவர். பல உரைநடை நூற்க ளின் ஆசிரியர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

ம

மஜீத் எம். எஸ். ஏ. = இவரை அப்துல் மஜீத் என்று அனைவரும் அழைப்பர். இவர் பி ஏ. பட்டம் பெற் றவர். முஸ்லீம் மரபினர். தமிழிலும் ஆங்கிலத்தி லும் அழகாகப் பேசும் திறன் படைத்தவர். இது போது தென்னிந் திய முஸ்லீம் கல்விச் சங் கச் செயலாளராக இருந்து சிறப்பாக முஸ் லீம் இனத்தவருக்கும், பொதுவாகத் தமிழிக்

கும், கல்விக்கும் அரிய சேவை செய்து வருபவர். மூ. சங்கத்தின் சார்பில் நடைபெறும் புதுக் கல்லூரியின் முன்னேற்றம் கருதித் தம் மனைவி மக்களையும் பிரிந்து ஓராண்டுகளுக் மேல் பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலான இடங்களுக்குச் சென்று பணத்தினைத் திரட்டிக் கொணர்ந்தவர். பின்னரும் ஆறு மாத காலம் கடல் கடந்து சென்று பணம் திரட்டி வந்தவர். மணிவிளக்கு என்னும் நூலில் அரிய தமிழ்க் கட்டுரைகளை எழுதி வருபவர். தமிழ் மொழி எங்கும் பரவ வேண்டும் என்ற தணியா வேட்கையுடையவர். தமிழ் மாநாடுகட்குத் தலைமை பூண்டு அரிய தலைமைப் பேருரைகளைப் பேசியவர். ஏழை எளிய வர்கட்கு தம்மாலான உதவிகளைப் புரிய முன் வருபவர். காலம் கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

மீ

மீனாட்சிசுந்தரம் பிள்ளை தே. ப. இவர் சென்னை அரசினர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராக இருந்து வருபவர். மைலாடுதுறையினர். எம். ஏ., பி. எல்., வித்துவான் எம். ஓ. எல். முதலான பட்டங்களைப் பெற்றவர். ஆங்கில மொழியிலும் மற்றும் பல மொழிகளிலும் நல்ல புலமை பெற்றவர், என்ற இடத்தில் இந்து மத பாடசாலை என்ற பெயருடன் ஒரு பாட சாலையை அமைத்துத் திறம்பட நடத்திவருபவர். அதன் மூலம் கல்வி கற்பதற்கு மட்டும் பயிற்சி அளிக்காமல், கைத்தொழில் பயிற்சிகள் பலவற்றையும் கற்பதற் குரிய வசதிகளையும் செய்து வருபவர். அப் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உடல் பொருள் அனைத்தையும் தத்தம் செய்து ஓயாமல் உழைத்து வருபவர். இவரது அயராமுயற்சியினால் இப் பாடசாலை நாளும் நாளும் வளர்ந்து கொண்டே வருகிறது. கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

மீ

மீனாட்சிசுந்தரம் பிள்ளை தே. ப. இவர் சென்னை அரசினர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராக இருந்து வருபவர். மைலாடுதுறையினர். எம். ஏ., பி. எல்., வித்துவான் எம். ஓ. எல். முதலான பட்டங்களைப் பெற்றவர். ஆங்கில மொழியிலும் மற்றும் பல மொழிகளிலும் நல்ல புலமை பெற்றவர்,

வேதாந்த சித்தாந்த தருக்கங்களில் அறிவு வாய்ந்தவர். பாடஞ் சொல்வதே பெரும் தொண்டாகக் கொண்டவர். இக் காலத்தில் இவரது அரும் தொண்டிலால் எம்.ஏ. பட்டமும், வித்துவான் பட்டமும் பெற்றுத் திகழ்பவர் பலர். பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். இவர் எழுதிய கட்டுரைகள் பல நூல் வடிவமாக வந்துள்ளன. அவற்றுள் சேக்கிழாரும் கண்ணப்பரும், நாடும் காமமும், ஒப்பிலக்கணம் முதலானவை. குறிப்பிடத்தக்கன. கி.பி. 20ஆம் நூற்றாண்டு.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை தா.சு. = இவர் வித்துவான் பட்டம் பெற்றவர். சமய நூல்களை நன்கு கற்றவர். இது போது திருவாவடுதுறை ஆதினவித்துவானாக இருந்து கொண்டு, அவ்வாதீன வெளியீடாக வெளிவரும் நூற்கள் யாவற்றையும் நன்கு பரிசோதித்துத் தக்க முகவுரைகளை எழுதி வெளியிட்டு வருபவர். விநாயகர் அகவலுக்கு உரையும் எழுதியவர். கி.பி. 20ஆம் நூற்றாண்டு.

மு

முத்துக்குமாரசாமி முதலியார் = இவரை மயிலை சிவமுத்து என்றால் எவரும் அறிவர். இவர் தமிழ் ஆசிரியர் பணியைப் பல்லாண்டு மேற்கொண்டு, இது போது ஓய்வு பெற்றுள்ளவர். தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் ஓயாமல் உழைத்து வருபவர். மாணவர் மன்றத்தின் உயிர் நாடி இவரே ஆவர். சைவ சமயத்தவர். சீர்திருத்தக்காரர். நல்ல கூரிய அறிவு படைத்தவர். உரைநடை எழுதுவதில் வல்லவர். கற்பனைகளும் நல்ல கருத்துக்களும் அடங்கிய சிறுகதைகளையும் உடை நடை நூல்களையும் பல எழுதியுள்ளவர். நல்ல எழுத்து, திருமணம், முதலானவை இவர் எழுதிய நூற்கள். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

முத்து சு. மாணிக்கவாசக முதலியார் = இவர் வித்துவான் பட்டம் பெற்றவர். சைவ சித்தாந்த ரத்னகரம் என்ற பட்டமும் பெற்றவர். சிறந்த சைவ சித்தாந்த சாத்திரப்

புலமை மிக்கவர். சொல்லாராய்ச்சி செய்வதில் பெருவிருப்பம் உடையவர். நல்ல தமிழ்ப் புலமை மிக்கவர். இது போது தருமை ஆதினத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து வருபவர். இவரது அறிவு நுட்பத்தை இவர் எழுதியுள்ள இரண்டாம் திருமுறைக் குறிப்புரையில் காணலாம். நல்ல பேச்சாளர். சித்தாந்த கட்டுரைகள் பலவற்றை எழுதி வருபவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

முத்தையப்ப செட்டியார் = இவர் ராஜா அண்ணாமலை செட்டியாரின் திருமகனார். இவருக்கும் ராஜா என்ற பட்டமும் சர் என்ற பட்டமும் உண்டு. எம். ஏ. பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் நன்கு பேச வல்லவர். தமிழ்மொழி வளர்ச்சிக்கும், தமிழ் இசை வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபட்டு வருபவர். பொதுநல ஊழியராகவும் உழைத்து வருபவர். திருச்சி ஒலிபரப்பும் நிலையத்தில் பெரிதும் தமிழ்ப் பாடல்களே பாடுதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து வருபவர். கி.பி. 20ஆம் நூற்றாண்டு.

வ

வடிவேல் முதலியார் = இவர் சைவ சமயத்தவர். பி. ஏ. பி. எல். பட்டம் பெற்றவர். கணிதஆசிரியராகக் காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் பணி புரிபவர். இவர் இத்துடன் சைவ சித்தாந்த நூற்களை நன்கு பயின்று நல்ல புலமை பெற்று அதன் சார்பில் பல அரிய சொற்பொழிவுகளை அருந் தமிழிலும், ஆங்கிலத்திலும் செய்து வருபவர். திருவள்ளுவரைப்பற்றிய ஒரு நூல் இவரால் எழுதப்பட்டுத் திருவள்ளுவர் சிறந்த சைவ சித்தாந்தியாவார் என்பதை நிலைநாட்டியுள்ளார். சைவ சம்பந்தமான கட்டுரைகள் பலவற்றையும் எழுதியுள்ளவர். வட மொழியும் அறிந்தவர். கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

வடிவேல் செட்டியார், கோ. இவர் வேதாந்தத்தில் ஒப்புயர்வற்ற ஆற்றலுடையவர். இலக்கண அறிவில் தலை சிறந்தவர். சென்னை இந்து தியாலா

ஜிகல் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழ் ஆசிரியராக இருந்தவர். சைவ சமயத்தவர். இவருக்கு இருக்கும் பரந்த அறிவு ஆராய்ச்சியினை இவர் பதிப்பித்து வெளியிட்டுள்ள திருக்குறள் பரிமேலழகர் உரையால் அறியலாம். சிவஞான போதத்தையும் பதிப்பித்து வெளியிட்டவர். கி.பி. 20ஆம் நூற்றாண்டு.

வரதராஜனர். மு. = இவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராக இருந்து தொண்டு புரிபவர். டாக்டர், எம்.ஓ.எல். எம். ஏ. வித்துவான முதலான பட்டங்களைப் பெற்றவர். மூ. வ. என்றதும் எவரும் அறிந்து கொள்ளத் தக்க முறையில் புகழ் பெற்றவர். நவீன முறையில் நூல்களை எழுதும் ஆற்றல் படைத்தவர். கள்ளோ காவியமோ, தமிழர் நெஞ்சம் என்பன அவற்றுள் சில. கி. பி. இருபதாம் நூற்றாண்டு.

வன்மீகநாதப்பிள்ளை = இவர் திருச்சிராப்பள்ளியில் பிறந்து வளர்ந்து புது டில்லியில் மத்திய அரசாங்க அலுவலகத்தில் பல்லாண்டு தொண்டு புரிந்து உபகாரச் சம்பளம்பெற்று இது போது டெல்லி கிளாத்மில்லில் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசராக இருந்து கொண்டு சிறந்த முறையில் வாழ்ந்து வருபவர். பி.ஏ. பட்டமும் ராவ்சாகிப் பட்டமும் பெற்றவர். ஜி. வி. பிள்ளை என்றதும் புதுடெல்லியில் இவரை அறியாதவர் இலர். தமிழ் மொழியில் நல்ல அறிவு படைத்தவர். டில்லியில் ஓய்ந்த நேரங்களில் தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லி வருபவர். தென்னாட்டிலிருந்து டெல்லிக்குச்செல்லும் தமிழர்கட்கு வேண்டிய அளவுக்கு உபசாரம் செய்து அனுப்புபவர். பூசைக்குரிய பாடல்கள் அடங்கிய நூலைப் புற்றன் என்ற பெயரால் வெளியிட்டவர். பல கட்டுரைகளை எழுதியும் வெளியிட்டுள்ளார். அவை தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன. இவர் மாணிக்கவாசகரைப் பற்றியும் திருவாசகத்தைப் பற்றியும், கம்பராமாயணத்தைப் பற்றியும் எழுதியுள்ள கட்டுரைகள் சிறப்புவகையில் குறிப்பிடத்தக்கவை.

இவர் தேவி உபாசகர். கி.பி. 20ஆம் நூற்றாண்டு.

வெ

வெங்கட்ராமய்யர் = இவர் வித்துவான் பட்டமும் எம். ஏ. பட்டமும் பெற்றவர். திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வராக இருந்து தொண்டாற்றி வருபவர். நல்ல பேச்சாளர். கல்வெட்டுக்களை ஆய்வதில் கருத்துடையவர். இது சம்பந்தமாகப் பல கட்டுரைக்களை எழுதிக் கொண்டு வருபவர். கி.பி. 20ஆம் நூற்றாண்டு.

வே

வேங்கடசாமி நாட்டார் = பண்டிதர் என்றும் நாவலர் என்றும் பட்டம் பெற்றவர். பேசும் திறனும் எழுதும் திறனும் வாய்ந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். ஆராய்ச்சியில் வல்லவர். இவரது ஆராய்ச்சி வன்மையினை அகத்தியர், நக்கீரர், கபிலர் என்ற பெயரில் எழுதியநூற்களில் காணலாம். திருவிளையாடற் புராணத்திற்கு உரை எழுதியுள்ளார். கி. பி. 20ஆம் நூற்றாண்டு.

வேங்கடராஜுலு ரெட்டியார் = இவர் வைணவ சமயத்தவர். தமிழில் வித்துவான் பட்டம் பெற்றவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் துணைத் தமிழ் விரிவுரையாளராக இருந்து இது பேர்து ஓய்வு பெற்றுள்ளவர். தெலுங்கு மொழியிலும் புலமை படைத்தவர். இவர் பன்மொழிப் புலவர் என்னும் சிறப்பும் உடையவர். இவர் திருமை ஆதீனத்தின் சார்பில் வரும் ஞான சம்பந்தன் என்னும் பத்திரிகை வாயிலாக இலக்கனைச் சம்பந்தமான பல அரிய கட்டுரைகளை எழுதி வருகிறார். பரணர் என்னும் நூலால் இவரது ஆராய்ச்சித் திறனை உணரலாம். கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.

வேணுகோபாலப்பிள்ளை மே. வி. = இவர் ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர்களுள் ஒருவர். மகாவித்துவான், சிந்தாமணிச் செல்வர் என்ற பட்டம் பெற்றுள்ளவர். நூல்களைக் கூர்ந்து கவனித்துப் பிழையறப் பதிப்

பித்து வெளியிடுவதில் வல்லுநர். இவர் நச்சி னார்க்கினியம் சொல்லதி காரம், இலையனார்களவி யல் போன்ற நூல்களைப் பதிப்பித்து வெளியிட் டுள்ளார். அம்பலவா னன் என்னும் கவிஞனை யும், எழுதியவர். மாணவ உலகிற்குப் பல உரை நடை நூல்களை எழுதியுள்ளார். அவற் றுள் துருவன், நிருக் கண்ணபிரானர் குறிப்பி டத்தக்கவை. கி. பி. 20 ஆம் நூற்றாண்டு.

வேலாயுத முதலியார் — தொழுவூரைச் சேர்ந்த வரி னர். இவர் சென்னை அரசி னர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த வர். இராமலிங்கசுவாமி களின் மாணவராகத் திகழ்ந்தவர். அவரது வரலாற்றையும் எழுதிய வர். சிறந்த இலக்கணப் புலவர். திருவெண்காட் டடிகள் வரலாற்றை எழு தியவர். கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.

—:o:—